முன்னுரை

சாலொமோனின் உன்னதப்பாட்டு ஆவிக்குரிய சத்தியங்களை தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்து சபைக்குத் தலையாகயிருக்கிறார். கிறிஸ்துவுக்கும் விசுவாசிகளுக்கும் இடையேயுள்ள நெருங்கிய ஐக்கியத்தை உன்னதப்பாட்டு புஸ்தகம் விரிவாக விவரிக்கிறது. சாலொமோனுடைய தகப்பனாராகிய தாவீது ராஜாவும் அநேகப் பாடல்களை இயற்றியிருக்கிறார். ஆனாலும் சாலொமோனின் பாடலுக்கும், தாவீது ராஜாவின் பாடலுக்கும் வித்தியாசமிருக்கிறது.

சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் தேவனுடைய பெயர் ஒரு தடவைகூட குறிப்பிடப்படவில்லை. புதிய ஏற்பாட்டு புஸ்தகங்களில், உன்னதப்பாட்டிலுள்ள வசனங்களில் ஒன்றுகூட மேற்கோளாகச் சொல்லப்படவில்லை. உன்னதப்பாட்டில் ஆவிக்குரிய தியானமுமில்லை. இதிலுள்ள வசனங்கள் தேவனுடைய வெளிப்பாட்டை நேரடியாகச் சொல்லவுமில்லை. உன்னதப்பாட்டு புஸ்தகத்திலுள்ள வசனங்களில் தேவனுடைய சத்தியம் மறைபொருளாயிருக்கிறது.

உன்னதப்பாட்டிலுள்ள வசனங்களை கவனமாய்த் தியானிக்கவேண்டும். அப்போதுதான் இந்த வசனங்கள் நம்முடைய ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகயிருக்கும். உன்னதப்பாட்டு வசனங்களை ஆவிக்குரிய சிந்தையோடு தியானிக்கவேண்டும். வாசிக்கும்போது நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். உலகப்பிரகாரமான சிந்தையோடு உன்னதப்பாட்டின் வசனங்களை வாசித்தால், இவை நமக்கு மரணத்திற்கேதுவான மரணவாசனையாக மாறிவிடும் ஆபத்து உள்ளது.

உன்னதப்பாட்டில் மரணவாசனையும் ஜீவவாசனையும் வெளிப்படுவதற்கு வாய்ப்புள்ளதினால், யூதமார்க்கத்து ரபீமார்கள் இந்தப் புஸ்தகத்தை முப்பது வயதிற்குட்பட்ட வாலிபர்கள் வாசிப்பதை ஆதரிப்பதில்லை. வசனங்கள் பரிசுத்தமாகவும் பக்திவிருத்திக்கேதுவானதாகவும் இருக்கிறது. ஆனால் வாலிபர்கள் அதன் பரிசுத்தத்தைப் புரிந்துகொள்ளாமல், தங்கள் ஜீவியத்தை கறைப்படுத்திக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது. வாசிக்கும்போது அவர்களுடைய மாம்ச இச்சைகள் தூண்டப்படலாம். இப்படிப்பட்ட ஆபத்துக்கள் இருப்பதினால், யூதமார்க்கத்து ரபீமார்கள் சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகத்தை வாலிபர்களிடம் வாசிக்கக் கொடுப்பதில்லை.

உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் ஆவிக்குரிய சத்தியங்கள் புதைந்திருக்கிறது. அவையெல்லாமே மறைவாயிருக்கிற பொக்கிஷங்களைப் போன்றவை. தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கு இந்த வசனங்கள் நமக்கு உதவியாயிருக்கும். இந்த வசனங்களிலிருந்து நம்மால் வசனத்தின் அர்த்தத்தை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியாது. இவை உருவக நடையிலும், உவமை நடையிலும் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் வசனங்களின் அர்த்தம் மறைபொருளாயுள்ளது. சத்திய வசனங்களை நேசிக்காதவர்களால் இதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது. பயபக்தியோடு வாசித்தால் மாத்திரமே, வசனங்களைப் புரிந்துகொள்வதற்கு, பரிசுத்த ஆவியானவரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உன்னதப்பாட்டு ஒரு நேசப்பாடலாகும். எபிரெய மொழியில் இதை "எப்பிதலமியம்" என்று சொல்லுகிறார்கள். மணவாளனுக்கும், அவருடைய மணவாட்டிக்கும் இடையேயுள்ள அன்பும் நேசமும் இந்தப் பாடலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்கும் தேவனுடைய ஜனத்திற்கும் இடையேயுள்ள நேசத்தை இதன் மூலமாக நாம் புரிந்துகொள்ளலாம்.

சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகம் ஒரு போதக ஆகமமாகவும் இருக்கிறது. மணவாளன் நல்ல மேய்ப்பராக சொல்லப்பட்டிருக்கிறார். யூதருடைய ஜெபாலயங்களில் உன்னதப்பாட்டு புஸ்தகத்தின் ஆவிக்குரிய அர்த்தத்தை விளக்கிச் சொல்லுகிறார்கள். ஆதியிலே இந்தப் புஸ்தகம் யூதருடைய சபையாருக்காகவே இயற்றப்பட்டது. தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்களை, தமக்காகத் தெரிந்துகொண்டார். அவர்களைத் தம்முடைய மணவாட்டியாக நிச்சயம் செய்து கொண்டார்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இந்த உடன்படிக்கை ஒரு விவாக உடன்படிக்கையாகும். தேவன் இஸ்ரவேல் ஜனத்தார்மீது அன்பாகயிருப்பதை நிரூபிப்பதற்கு அநேக எடுத்துக்காட்டுக்களையும், சம்பவங்களையும் சாலொமோன் விரிவாகச் சொல்லுகிறார். தேவன் தம்முடைய ஜனங்கள்மீது அன்பாகயிருக்கும்போது, அவர்களும் தங்கள் தேவன்மீது அன்பாகயிருக்கவேண்டும். அவரை முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் நேசிக்கவேண்டும்.

விக்கிரகாராதனை ஆவிக்குரிய விபசாரத்திற்கு ஒப்புமையாகச் சொல்லப்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் விக்கிரகாராதனை இருக்கக்கூடாது. உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் கர்த்தருடைய ஜனங்கள், கர்த்தரை மாத்திரமே நேசிக்கவேண்டும் என்றும், அவர்களுடைய நேசம் வேறு யார்மீதும் இருக்கக்கூடாது என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மணவாட்டி என்னும் வார்த்தை கிறிஸ்துவின் சபையைக் குறிக்கிற வார்த்தை. இதுவே உன்னதப்பாட்டு புஸ்தகத்தின் ஆவிக்குரிய வியாக்கியானம். தேவனே தம்முடைய மணவாட்டியாகிய சபைக்கு மணவாளனாகயிருக்கிறார். தேவன் தம்முடைய தெய்வீக அன்பை தம்முடைய சபையாருக்கு வெளிப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் கீழிருந்தபோது அநேக கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருந்தார்கள். ஆனால் இப்போதோ கர்த்தருடைய பிள்ளைகள் சுவிசேஷத்தின் கீழிருக்கிறார்கள். நமக்கு சுவிசேஷத்தின் மூலமாய் தேவனிடத்தில் தைரியமாய்க் கிட்டிச் சேரும் சிலாக்கியம் உண்டாயிருக்கிறது.

தேவன் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது, தம்மை யூதருடைய சபையின் மணவாளராக பலவசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

"உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார்" *(ஏசா 54:5).*

"அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார். நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்" *(ஓசி 2:16,19).*

கர்த்தர் தம்முடைய மணவாட்டியிடம் பிரியமாயிருக்கிறார். "நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும். வாலிபன் கன்னிகையை விவாகம் பண்ணுவதுபோல, உன் மக்கள் உன்னை விவாகம் பண்ணுவார்கள்; மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்" *(ஏசா 62:4,5).*

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையின் மணவாளராகயிருக்கிறார். "அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்" *(மத் 25:1).*

"அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (ரோம 7:4).

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்" (2கொரி 11:2).

"இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப்பற்றியும் சொல்கிறேன்" (எபே 5:32).

சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாகயிருக்கிறது. சபையின் விசுவாசிகள் ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியாக இருக்கிறார்கள்.

"நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது." (வெளி 19:7).

"யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது". " பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்" (வெளி 21:2,9).

சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகத்திற்கு 45-ஆவது சங்கீதம் ஆதாரமாயிருக்கிறது. இந்த சங்கீதத்தில் புதிய ஏற்பாட்டு சபைக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள ஐக்கியமும் உறவும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

உன்னதப்பாட்டு புஸ்தகத்தின் வசனங்களைப் புரிந்துகொள்ளவும், அதன் அர்த்தத்தைத் தியானிக்கவும் நமக்கு பரிசுத்த ஆவியானவரின் உதவியும் ஒத்தாசையும் தேவை. தாவீதின் சங்கீதங்கள் சாதாரண ஜனங்களுக்கும் எளிமையாகப் புரியும். சாலொமோனுடைய உன்னதப்பாட்டு புஸ்தகமமோ கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்கிற அறிஞர்களுக்கும் புரிந்துகொள்ள கடினமாயிருக்கும். சாலொமோன் இந்தப் புஸ்தகத்தில் ஆவிக்குரிய சத்தியங்களை புதைந்திருக்கிற பொக்கிஷங்களைப்போல எழுதியிருக்கிறார். கர்த்தருடைய கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவருடைய உதவியினாலும், கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைத் தியானித்து, அதன் அர்த்தத்தையும், தாற்பரியத்தையும் புரிந்துகொண்டு, தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1 அதிகாரம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு என்று இந்தப் புஸ்தகத்திற்கு தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது (உன் 1:1). கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையிலுள்ள ஐக்கியம் இந்தப் புஸ்தகத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவரும் ஒரு விசுவாசியும் தங்களுக்கு இடையேயுள்ள அன்பையும், நேசத்தையும், ஐக்கியத்தையும் விரிவாகப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

மணவாட்டியாகிய சபை தன்னுடைய மணவாளனிடம் பேசுகிற சம்பவம் (உன் 1:2-4). மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளோடு பேசுகிற சம்பவம் (உன் 1:5,6). மணவாட்டி தன் மணவாளனோடு பேசுகிற சம்பவம்.

கிறிஸ்துவானவர் மணவாளனாக சொல்லப்பட்டிருக்கிறார். அவர் தம்முடைய மணவாட்டியாகிய சபையிடம் சொல்லுகிற சம்பவம் (உன் 1:8-11).

மணவாட்டியாகிய சபை, மணவாளனாகிய கிறிஸ்துவின்மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தி சொல்லுகிற சம்பவம் (உன் 1:12-14).

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையின் அழகை வர்ணிக்கிறார் (உன் 1:15). மணவாட்டியாகிய சபை, மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தி பேசுகிற சம்பவம் (உன் 1:16,17).

உன்னதப்பாட்டு
உன் 1:1

உன் 1:1. சாலொமோன் பாடின உன்னதப்பாட்டு.

உன்னதப்பாட்டு புஸ்தகம் கிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கும் அன்பையும், நேசத்தையும், பக்தியையும் உற்சாகப்படுத்துகிறது. இந்தப் புஸ்தகம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கிற புஸ்தகமாகும். சுவிசேஷத்தின் காலம் சந்தோஷத்தின் காலம். தேவனுடைய கிருபையினால் நமக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. நமக்குள் இரட்சிப்பின் சந்தோஷம் நிரம்பி வழியும்போது நம்முடைய வாயில் புதுப்பாட்டுக்கள் புறப்பட்டு வருகிறது. "கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்" (சங் 98:1) என்று சங்கீதக்காரர் பாடுகிறார்.

உன்னதப்பாட்டு புஸ்தகத்தை பாடியவர் சாலொமோன் ராஜா. உன்னதப்பாடல்கள் மதியீனமானவர்களின் பாடல்களல்ல. பொதுவாக நேசப்பாடல்களை உலகப்பிரகாரமான ஜனங்கள் பாடியிருப்பார்கள். அதில் மெய்யான அன்பு இருக்காது. பாடல்களின் வார்த்தைகளில் நல்ல அர்த்தமும் இருக்காது. ஆனால் சாலொமோன் பாடின உன்னதப்பாட்டோ ஞானமுள்ளது. பக்தியுள்ளது. மெய்யான அன்பை வெளிப்படுத்துகிறது. சாலொமோன் உன்னதப்பாட்டை ஞானத்தில் சிறந்து விளங்குகிற ஞானிகளுக்காகவே பாடியிருக்கிறார்.

ஞானப்பாட்டு புஸ்தகத்தில் பாடப்பட்டிருக்கிற ஒவ்வொரு வாக்கியமும் சாலொமோனுடைய ஞானத்திற்குச் சாட்சி பகருகிறது. தேவன் மனுக்குலத்தின்மீது வைத்திருக்கும் அன்பையும், நேசத்தையும் சாலொமோன் பாடல் வடிவில் எழுதியிருக்கிறார். சாலொமோனுடைய பாட்டுக்கள் ஆயிரத்து ஐந்து (1இராஜா 4:32). சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகம் மாத்திரமே நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர் பாடிய மற்ற பாடல்களெல்லாம் நமக்குக் கிடைக்கவில்லை. அவை சரித்திரத்தில் காணாமல் போயிற்று.

சாலொமோன் தன்னுடைய தகப்பனார் தாவீது ராஜாவைப்போல பாடல்களில் பிரியமுள்ளவர். நேர்த்தியான இசையோடு பாடல்களை இயற்றக்கூடியவர். ஒரு மனுஷன் எப்படிப்பட்ட பாடல்களை எழுதுகிறார் என்பதை வைத்து, அவருடைய அறிவையும் ஞானத்தையும் அளந்து பார்க்கலாம். சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் அவருடைய ஞானம் ஒவ்வொரு வார்த்தையிலும் பிரதிபலிக்கிறது. சாலொமோன் இந்தப் புஸ்தகத்தில் தேவனைக் கனப்படுத்துகிறார். தேவனைப்பற்றிய சத்தியங்களை தெளிவுபடுத்துகிறார். உன்னதப்பாட்டு புஸ்தகத்தைத் தியானித்துப் புரிந்துகொள்வது சபையின் பக்திவிருத்திக்கு பிரயோஜனமாயிருக்கும்.

சாலொமோன் தன்னுடைய ஜீவியகாலத்தின் எந்தப் பகுதியில் உன்னதப்பாட்டு புஸ்தகத்தை எழுதினார் என்று தெரியவில்லை. சாலொமோன் ஒரு காலத்தில் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போய்விட்டார். ஆனாலும் தேவனுடைய கிருபையினால் அவர் மறுபடியுமாய் கர்த்தருடைய சமுகத்தில் கிட்டிச் சேர்ந்துகொண்டார். அதன்பின்பு சாலொமோன் உன்னதப்பாட்டு புஸ்தகத்தை எழுதினார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

சாலொமோன் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போவதற்கு முன்பு, கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார். தேவனிடத்தில் பயபக்தியாயிருந்தார். அவருடைய ஆவிக்குரிய ஜீவியம் பரிசுத்தமாயிருந்தது. இந்தக் காலத்தின் ஆரம்பத்தில், சாலொமோன் உன்னதப்பாட்டு புஸ்தகத்தை எழுதியிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் பொதுவான கருத்தை சொல்லுகிறார்கள். இக்காலத்தில் சாலொமோன் தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார்.

சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகம் பரிசுத்த வேதாகமத்தில் பிரசங்கி புஸ்தகத்திற்கு அடுத்ததாக கோர்க்கப்பட்டிருக்கிறது. பிரசங்கி புஸ்தகத்தில் "எல்லாம் மாயை" என்று சாலொமோன் சொல்லுகிறார். உலகத்தின் காரியங்கள் நமக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது. அவற்றால் நம்முடைய ஆத்துமாவுக்குத் திருப்தி உண்டாகாது. நமக்கு மெய்யான ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் வேண்டுமென்றால் தேவனிடத்தில் மாத்திரமே அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்துவினுடைய தூய்மையான அன்பில்தான் நாம் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் தேவனோடு ஐக்கியமாயிருக்கும்போது, அவர் மூலமாய் நம்முடைய ஆத்துமாவிற்கு சந்தோஷமும் சமாதானமும், ஆறுதலும் உண்டாகிறது.

உமது நேசம்
உன் 1:2

உன் 1:2. அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக: உமது நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது.

சாலொமோன் உன்னதப்பாட்டு புஸ்தகத்தில், கிறிஸ்துவை மணவாளனாகவும், கிறிஸ்துவின் சபையை மணவாட்டியாகவும் வருணித்து எழுதுகிறார். முதலாவதாக கிறிஸ்துவின் சபையாகிய மணவாட்டி, தன்னுடைய மணவாளனாகிய கிறிஸ்துவிடம் தன்னைப்பற்றிச் சொல்லுகிறாள். அதன்பின்பு அவள் எருசலேம் குமாரத்திகளிடம் தன்னைப்பற்றி விவரிக்கிறாள்.

மணவாளனுக்கு பெயர் எதுவும் கொடுக்கப்படவில்லை. அவரை எந்தவொரு பட்டப்பெயரினாலோ, காரணப்பெயரினாலோ மணவாட்டி அழைக்கவில்லை. மணவாட்டி மணவாளனின் பெயரைக் குறிப்பிடாமலேயே "அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக" என்று சொல்லுகிறாள். மணவாட்டி மணவாளனிடமிருந்து இரண்டு காரியங்களை எதிர்பார்க்கிறாள். அவையாவன: 1. மணவாளனுடைய நேசம். 2. மணவாளனுடைய ஐக்கியம்.

மணவாளன் தன்னோடு ஒப்புரவாகி, தன்னிடத்தில் அன்பாயிருக்கவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள். இதற்கு அடையாளமாக "அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக" என்று சொல்லுகிறாள். மணவாளன் மணவாட்டியை முத்தமிடுவது, அவர் மணவாட்டியோடு ஒப்புரவாகி, அன்போடிருக்கிறார் என்பதற்கு அடையாளம். இது தேவனுடைய கிருபையையும், நேசத்தையும், சிலாக்கியத்தையும் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாயிருக்கிறது.

கிறிஸ்து தம்மை மாம்சத்தில் வெளிப்படுத்தவேண்டும் என்று பழைய ஏற்பாட்டு சபை ஆசையாய் எதிர்பார்த்தது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தேவனாகிய கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை தம்முடைய சார்பாக, தம்முடைய சபையார் மத்தியில் அனுப்பினார். தேவதூதர்களையும் அனுப்பினார். தேவன் இனிமேல் தீர்க்கதரிசிகளையும், தேவதூதர்களையும் அனுப்பாமல், தாமே தம்மை மாம்சத்தில் வெளிப்படுத்தி, தங்கள் மத்தியில் பிரத்தியட்சமாய் வரவேண்டும் என்பது, பழைய ஏற்பாட்டுக்காலத்து சபையாரின் விருப்பம். இதுவே அவர்களுடைய எதிர்பார்ப்பு.

தேவன் இனிமேல் தம்முடைய தூதர்கள் மூலமாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் பேசாமல், தம்முடைய கிருபையுள்ள வார்த்தைகளை, தம்முடைய வாயின் மூலமாக தங்களோடு பேசவேண்டும் என்று கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எதிர்பார்த்தார்கள்.

"அப்பொழுது அவர் (இயேசுகிறிஸ்து) அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று என்றார். எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்" (லூக் 4:21,22).

தேவனுடைய கிருபையுள்ள வார்த்தைகளை, சாலொமோன் இங்கு மணவாளனுடைய வாயின் முத்தங்கள் என்று வர்ணிக்கிறார். மணவாட்டி தன்னுடைய மணவாளனிடம், "அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக" என்று சொல்லுகிறாள். முத்தம் ஒப்புரவாதலுக்கு அடையாளம். மணவாளன் மணவாட்டியின்மீது கோபமாயிராமல், மறுபடியும் அன்பாயிருக்கிறார் என்பதற்கு அடையாளம். ஏசா தன் சகோதரன் யாக்கோபை, முத்தமிட்டு, தன்னுடைய அன்பை வெளிப்படுத்தினார். தேவன் தம்முடைய சபையாரை, தம்முடைய வாயின் முத்தங்களால் முத்தமிடும்போது, அவர் தம்முடைய தெய்வீக அன்பை, தம்முடைய சபையாருக்கு வெளிப்படுத்துகிறார்.

சுவிசேஷத்தின் கிருபை முத்தங்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கெட்ட குமாரன் புத்திதெளிந்து, மனந்திருந்தி தன்னுடைய தகப்பனிடம் திரும்பி வந்தான். தகப்பன் மிகுந்த சந்தோஷமடைந்து, தன்னுடைய குமாரனை கட்டிப்பிடித்து, முத்தம் செய்தார். இது சமாதானத்தின் முத்தம். அதுபோலவே தேவன் தம்முடைய சபையை முத்தமிடும்போது, அவர் நம்மோடு சமாதானமாயிருக்கிறார் என்பதற்கும், நம்முடைய பாவங்களை மன்னித்து, நம்மோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கும் அடையாளமாயிருக்கிறது.

மணவாளன் தமது வாயின் முத்தங்களால் தன்னை முத்தமிடுவதற்கான காரணங்களையும் மணவாட்டி சொல்லுகிறாள். மணவாட்டி தன் மணவாளனிடத்தில் அதிகமாய் அன்பு கூருகிறாள். அவருடைய அன்பை மேன்மைப்படுத்துகிறாள். அவருடைய அன்பை நேசிக்கிறாள். மணவாட்டி மணவாளனுடைய அன்பைப்பற்றிச் சொல்லும்போது, "உமது நேசம் திராட்சரசத்தைப்பார்க்கிலும் இன்பமானது" என்று அன்பான வார்த்தைகளை பயன்படுத்துகிறாள்.

நம்முடைய ஆத்துமா கிருபையுள்ளதாகயிருக்கும்போது, அது கிறிஸ்துவின் அன்பில் பிரியமாயிருக்கும். அது கிறிஸ்துவின் அன்பை நேசிக்கும். கிறிஸ்துவின் அன்பை நாடும். கிறிஸ்துவின் அன்பினால் உண்டாகும் ஈவுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வாஞ்சையோடிருக்கும். கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டிருக்கிற ஆத்துமாவுக்கு, உலகப்பிரகாரமான சந்தோஷத்தைவிட கிறிஸ்துவின் நேசமே இன்பமானது.

உமது நாமம்
உன் 1:3

உன் 1:3. உமது பரிமளதைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலமாயிருக்கிறது; ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்.

மணவாட்டி கிறிஸ்துவின் அன்பை தன்னுடைய பிரியமான வார்த்தைகளினால் விவரிக்கிறாள். கிறிஸ்துவின் அன்பு இன்பமான வாசனையுள்ளவைகள். அவை பரிமள தைலங்களைப்போல திவ்விய வாசனையுள்ளவை. அவருடைய நேசத்தின் கனிகள் இன்பமானவை. மணவாட்டி மணவாளனுடைய அன்பைப்பற்றிச் சொல்லும்போது, "உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்" என்று சொல்லுகிறாள்.

இன்பமான வாசனையை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அந்த வாசனையானது எல்லோருக்கும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆறுதலையும் கொடுக்கும். கிறிஸ்துவின் அன்பும் நேசமும் எல்லோருக்கும் ஆறுதலைக் கொடுக்கிறது. கிறிஸ்துவின் அன்பை நாம் ருசிபார்க்கவேண்டுமென்றால், நாம் கிறிஸ்துவையும், கிறிஸ்து நமக்காக செய்திருக்கிற தியாகங்களையும் தியானித்துப் பார்க்கவேண்டும். அவருடைய கிருபைகளைப் புரிந்துகொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது. கிறிஸ்துவின் நாமமே பரிசுத்தமானது. எல்லா பரிசுத்தவான்களும் கிறிஸ்துவின் நாமத்தை நேசிக்கிறார்கள். அவருடைய பரிமள தைலம் எல்லோருடைய இருதயத்திற்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பரிசுத்தமான ஆத்துமாக்கள் கிறிஸ்துவின்மீது அன்பாகயிருக்கும். பரிசுத்தவான்கள் எல்லோருமே கிறிஸ்துவின் பரிமளதைலங்களுடைய இன்பமான வாசனைகளை நேசிப்பார்கள். எல்லா பரிசுத்தவான்களுக்கும் கிறிஸ்து பிரியமானவர். அவரே அவர்களுடைய ஆத்தும நேசர். மணவாட்டி இதைப்பற்றிச் சொல்லும்போது, "ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்" என்று சொல்லுகிறாள்.

கிறிஸ்துவுக்குள் அவருடைய அன்பு நம்முடைய இருதயத்திற்குள் ஊற்றப்படுகிறது. கிறிஸ்துவின் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம். நம்முடைய இயல்பான சுபாவத்தில் பாவமும் சாபமும் இருக்கிறது. நம்முடைய இருதயம் பாவத்தினால் கறைபடிந்திருக்கிறது. பாவத்தின் துர்நாற்றத்தினால் நம்முடைய இருதயம் கெட்டுப்போயிருக்கிறது. அசுத்தமாகயிருக்கும் நம்முடைய இருதயத்தின்மீது, கிறிஸ்துவின் பரிமள தைலம் தாராளமாய் ஊற்றப்படுகிறது. இதனால் நம்முடைய பாவசுபாவத்தின் துர்நாற்றம் நீங்கி, கிறிஸ்துவினுடைய பரிமள தைலத்தின் இன்பமான வாசனை நமது இருதயத்தில் நிரம்புகிறது.

கிறிஸ்துவின் மீது அன்பாகயிருக்கிறவர்களை மணவாட்டி "கன்னியர்கள்" என்று சொல்லுகிறாள். மணவாளன் எங்கே போனாலும், இவர்கள் அவரைப் பின்பற்றிப் போகிறவர்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் எல்லோருக்கும் கிறிஸ்துவானவர் அவர்களுடைய ஆத்தும நேசராகயிருக்கிறார்.

"ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்" (வெளி 14:4).

ராஜா
உன் 1:4

உன் 1:4. என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்; ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டுவந்தார்; நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்; திராட்சரசத்தைப்பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம்; உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்.

மணவாட்டி மணவாளனுடைய ஐக்கியத்திற்காக விண்ணப்பம்பண்ணுகிறாள். தனக்கு மணவாளனுடைய தெய்வீக கிருபை கிடைக்கவேண்டுமென்று மன்றாடுகிறாள். தன்னுடைய விண்ணத்தை வெளிப்படுத்தும் வண்ணமாய், "என்னை இழுத்துக்கொள்ளும்" என்று சொல்லுகிறாள். இந்த வாக்கியத்திற்கு, "என்னை உம்மிடமாய் இழுத்துக்கொள்ளும், உமக்கு அருகாமையில் இழுத்துக்கொள்ளும், உம்முடைய வாசஸ்தலத்திற்குள் என்னை இழுத்துக்கொள்ளும்" என்று பொருளாகும்.

கிறிஸ்துவானவரும் "இழுத்துக்கொள்வதைப்பற்றி" இவ்வாறு உபதேசம் செய்திருக்கிறார். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" (யோவா 6:44) என்று கிறிஸ்துவானவரும் சொல்லுகிறார்.

மணவாளன் தன்னை இழுத்துக்கொள்ளும்போது, "உமக்குப் பின்னே ஓடிவருவோம்" என்று மணவாட்டி சொல்லுகிறாள். மணவாளன் தம்முடைய அன்பை தனக்குக் காண்பிக்கும்போது, மணவாட்டி மணவாளனுடைய கிருபையிலும், நேசத்திலும் வளர்ச்சி பெறுவதாகவும், முன்னேறி வருவதாகவும் வாக்குப்பண்ணுகிறாள். நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவின் பின்னே ஓடிவரவேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லவேண்டும். கிறிஸ்து நம்மை இழுத்துக்கொள்ளும்போது, நாம் அவர் பின்னே போகாமல் முரண்டுபிடிக்கக்கூடாது.

கிறிஸ்துவானவர் தம்முடைய அன்பை நம்மீது காண்பிக்கும்போது, நாம் அவருடைய அன்புக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும். கிறிஸ்துவின் கிருபையை அற்பமாய் நினைத்துவிடக்கூடாது. அதைப் புறக்கணித்துவிடக்கூடாது. மணவாட்டி மணவாளனிடம், "என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்" என்று வாக்குப்பண்ணுவது போல, நாமும் கிறிஸ்துவிடம் வாக்குப்பண்ணி ஒப்புரவாகவேண்டும்.

"ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது. நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம். எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்" (2கொரி 3:3-6).

"தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4:12,13).

கிறிஸ்துவானவர் தம்முடைய ஆவியை, தம்முடைய சபையின்மீது ஊற்றும்போது, சபையானது புதிய பெலனைப் பெற்றுக்கொள்கிறது. சபையே கிறிஸ்துவின் மணவாட்டி. சபையிலுள்ள விசுவாசிகள்மீது, கிறிஸ்துவின் ஆவியானவர் ஊற்றப்படும்போது, விசுவாசிகளெல்லோரும் புதுபெலனடைந்து, கர்த்தருக்கு பக்தி வைராக்கியமுள்ள சாட்சிகளாயிருப்பார்கள். கர்த்தர் தம்முடைய மணவாட்டியாகிய சபையை இழுத்துக்கொள்ளும்போது, சபையானது கர்த்தருக்குப் பின்னே ஓடிவரும்.

மணவாட்டியின் விண்ணப்பத்திற்கு மணவாளன் உடனே பதில் கொடுத்துவிடுகிறார். மணவாட்டி இதுபற்றிச் சொல்லும்போது "ராஜா என்னை தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வந்தார்" என்று சொல்லுகிறாள். மணவாட்டியின் விண்ணப்பத்திற்கு பிரத்தியட்சமான பிரதியுத்தரம் மணவாளனிடமிருந்து வருகிறது. தேவனுடைய கிருபை அவருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்கிறோம். இங்கு மணவாளனின் வாக்குத்தத்தம், பிரத்தியட்சமாக நிறைவேறுகிறது.

"என்னை இழுத்துக்கொள்ளும்" என்று விசுவாசிகள் ஜெபிக்கும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்மை தம்முடைய அன்பினாலும், நேசத்தினாலும் இழுத்துக்கொள்வார். தம்மிடத்தில் வருகிறவர்களை அவர் புறம்பே தள்ளமாட்டார் என்பது வாக்குத்தத்தம். நாம் இந்த வாக்குத்தத்தத்தை நம்பி கிறிஸ்துவிடம் வரும்போது, கிறிஸ்துவானவர் நம்மை புறம்பே தள்ளிவிடாமல், நம்மை தம்மிடமாகச் சேர்த்துக்கொள்கிறார்.

கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறுவதை நம்மால் அனுபவிக்க முடியும். மணவாட்டி மணவாளினிடம், "என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்" என்று விண்ணப்பம்பண்ணினாள். மணவாளன், மணவாட்டியினுடைய விண்ணப்பத்தைக் கேட்டு, அவளை தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வருகிறார்.

கிறிஸ்துவினிடத்தில் இழுத்துக் கொள்ளப்படுகிறவர்கள், அவருடைய அறைகளில் அழைத்துக்கொண்டு வரப்படுகிறார்கள். அறைகளில் மாத்திரமல்ல ராஜாவின் அரமனைக்குள்ளும் அவர்கள் பிரவேசிப்பார்கள். சங்கீதக்காரர் இது பற்றிச் சொல்லும்போது "சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்; அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக் கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்" (சங் 45:14,15) என்று சொல்லி பாடுகிறார். தம்மிடத்தில் வருகிறவர்களை, கர்த்தர் தம்முடைய பரிசுத்த பிரசன்னம் தங்கியிருக்கும் பரிசுத்த வாசஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறார்.

ராஜா மணவாட்டியை தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வருகிறார். நமக்கு என்ன கிடைக்கவேண்டுமோ அது கிடைக்கிறது. நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது குறைவில்லாமல் கிடைக்கிறது. நம்முடைய விருப்பங்களும், விண்ணப்பங்களும், நம்முடைய இருதயத்தில் நிறைவான சந்தோஷம் உண்டாகுமாறு நிறைவேறுகிறது. நம்முடைய துக்கங்கள் கவலைகள் எல்லாம் நம்மைவிட்டு நீங்கிப்போகிறது. நாம் ராஜாவின் அறைக்குள் வரும்போது நம்முடைய இருதயத்தில் சந்தோஷம் நிரம்பி வழிகிறது. மணவாட்டி இதைப்பற்றிச் சொல்லும்போது "ராஜா என்னை தமது அறைகளில் அழைத்துக்கொண்டு வந்தார். நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்" என்று சொல்லுகிறாள்.

நம்முடைய சந்தோஷம் எல்லாமே தேவனிடத்திலிருக்கிறது. நம்முடைய சந்தோஷம் பரிமள தைலங்களில் இல்லை. ராஜாவின் அறைகளில் இல்லை. நம்முடைய மெய்யான சந்தோஷம் தேவனிடத்தில் மாத்திரமே இருக்கிறது. மணவாட்டி இதைச் சொல்லும்போது, "நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்" என்று சொல்லுகிறாள்.

நமக்கு கிறிஸ்துவில் மாத்திரமே மெய்யான சந்தோஷமுண்டு. சங்கீதக்காரர் தன்னுடைய மகிழ்ச்சியைப்பற்றிச் சொல்லும்போது "நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும் எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன்" (சங் 43:4) என்று சொல்லுகிறார். தேவனே நமக்கு மெய்யான சந்தோஷம். அவரிடத்தில் மாத்திரமே நமக்கு ஆனந்த சந்தோஷம் கிடைக்கும். கிறிஸ்துவில்லாமல், நமக்கு மெய்யான சந்தோஷம் வேறு எங்கும், எதிலும் கிடைக்காது.

ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்கிறார். விசுவாசியின் ஆத்துமா பரிசுத்தமுள்ளதாகவும், கிருபையுள்ளதாகவும் இருக்கும்போது, அவர் மற்ற விசுவாசிகளோடு, தன்னுடைய சந்தோஷத்தையும், ஆறுதலையும் பகிர்ந்துகொள்வார். கிறிஸ்துவிடத்தில் ஐக்கியமாகயிருப்பது போல மற்ற பரிசுத்தவான்களிடத்திலும் ஐக்கியமாகயிருப்பார். நாம் ராஜாவின் அறைகளில் பிரவேசிக்கும்போது, அங்கு கிறிஸ்துவையும் சந்திப்போம், மற்ற பரிசுத்தவான்களையும் சந்திப்போம். தேவனுடைய பிரசன்னத்தில், கிறிஸ்துவை முகமுகமாய்த் தரிசிப்பதுபோல, கிறிஸ்துவினுடைய பரிசுத்தவான்களையும் முகமுகமாய்த் தரிசிப்போம்.

விசுவாசிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். விசுவாசிகளுடைய விசுவாசத்தில் ஏற்ற தாழ்வுகளும், குறைபாடுகளும் இருக்கலாம். விசுவாசிகள் ஒரு சில காரியங்களைக் குறித்து ஒத்துப்போகாமலிருக்கலாம். நமக்குள் எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கிறிஸ்துவின் சமுகத்திற்கு முன்பாக வரும்போது, நம்முடைய வேறுபாடுகள் நீங்கவேண்டும். விசுவாசிகளுக்குள் ஒற்றுமை காணப்படவேண்டும். கிறிஸ்துவே நமக்குப் பிரதானம். கிறிஸ்துவைவிட நம்முடைய சுயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. விசுவாசிகளெல்லோருமே கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாயிருக்கவேண்டும்.

மணவாட்டி இதைப்பற்றிச் சொல்லும்போது, "திராட்சரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம்" என்று சொல்லுகிறாள். திராட்சரசம் ஒவ்வொரு தனிநபருக்கும் இன்பத்தைத் தரும். ஆனால் கிறிஸ்துவின் நேசமோ, பரிசுத்தவான்கள் எல்லோருக்கும் இன்பத்தைத் தரும். கிறிஸ்துவின் சமுகத்திற்கு முன்பாக, அவருடைய பரிசுத்தவான்கள் கூடிவரும்போது, தங்களுடைய சுயத்திற்கு எது இன்பமாயிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கக்கூடாது. அதற்குப் பதிலாக கிறிஸ்துவின் நேசத்தை மாத்திரமே நினைக்கவேண்டும்.

கிறிஸ்துவின் நேசம் அற்புதமானது. அது எல்லா பரிசுத்தவான்களுக்கும் பொதுவானது. அதுவே மேன்மையானது. மணவாட்டி மணவாளனுடைய நேசத்தைப்பற்றி மேலும் விரிவாகச் சொல்லும்போது, "உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்" என்று சொல்லுகிறாள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள், மெய்யாகவே, தங்களை நேசிப்பதைவிட, தங்களுடைய ஆத்தும நேசராகிய கர்த்தரையே, அதிகமாய் நேசிக்கிறார்கள்.

நான் கறுப்பாயிருக்கிறேன்
உன் 1:5

உன் 1:5 எருசலேமின் குமாரத்திகளே! கேதாரின் கூடாரங்களைப்போலவும், சாலொமோனின் திரைகளைப்போலவும் நான் கறுப்பாயிருந்தாலும், அழகாயிருக்கிறேன்.

மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளோடு பேசுகிறாள். இந்த வாக்கியம் ஒரு விசுவாசி, சபையிலுள்ள மற்ற விசுவாசிகளோடு பேசுவதற்கு ஒப்புமையாக எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றவர்களல்ல. விசுவாசத்தில் பலவீனமானவர்கள். இவர்கள் கிறிஸ்துவுக்குள் சிறுகுழந்தைகளாக இருக்கிறவர்கள். தங்களுக்கு தேவனுடைய சத்தியங்களைப்பற்றி உற்தேசம்பண்ண வேண்டுமென்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மணவாட்டி கறுப்பாகயிருக்கிறாள். எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியைப் பார்க்கும்போது முகம் சுளிக்கிறார்கள். மணவாட்டியின் கறுப்பு நிறம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவளை ஏளனமாய்ப் பார்க்கிறார்கள். இதுபோலவே ஒரு விசுவாசியை மற்ற விசுவாசிகளும் ஏளனமாய்ப் பார்க்கிறார்கள். அந்த விசுவாசியினிடத்தில் பாவமும், பாடுகளும் இருக்கும்போது, மற்ற விசுவாசிகள் அவருக்கு மதிப்பு கொடுப்பதில்லை. பாவத்தின் விளைவினால் சாபம் வந்திருக்கிறது என்றும், இப்படிப்பட்ட விசுவாசியால் தேவனுடைய சமுகத்தில் நெருங்கிச் சேரமுடியாது என்றும் மற்ற விசுவாசிகள் நினைக்கிறார்கள்.

எருசலேமின் குமாரத்திகளும் மணவாட்டியின் நிறத்தைப் பார்க்கிறார்கள். அவள் கறுப்பு நிறமாகயிருப்பதினால், மணவாளன் அவருடைய வாயின் முத்தங்களால், கறுப்பான மணவாட்டியை முத்தமிடமாட்டார் என்று நினைக்கிறார்கள். இதனால் மணவாட்டிக்கு சந்தோஷமுண்டாகாது என்றும், அவளுடைய சந்தோஷத்தில் பங்குபெறுவது தங்களுக்கு வாய்ப்பு இருக்காது என்றும் ஏமாற்றத்தோடு நினைக்கிறார்கள். மணவாட்டி கறுப்பாகயிருப்பதினால் அவள், மணவாளனுக்குள் களிகூர்ந்து மகிழமாட்டாள் என்று எருசலேமின் குமாரத்திகள் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

தான் கறுப்பாயிருப்பதை மணவாட்டியும் மறைக்கவில்லை. மறுக்கவில்லை. அதை அங்கீரிக்கிறாள். நம்முடைய குற்றவுணர்வு கறுப்பு நிறத்திற்கு ஒப்புமையாயிருக்கிறது. சபையில் காணப்படக் கூடிய துர்உபதேசங்களும், தேவனுக்கு விரோதமான காரியங்களும், மனுஷருக்கு விரோதமான குற்றங்களும், மணவாட்டியை கறுப்பு நிறத்திற்கு மாற்றியிருக்கிறது.

எல்லா விசுவாசிகளிடமும் ஏதாவது குறைபாடுகள் இருக்கும். தன்னிடத்தில் ஒரு பாவமும் இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது. மணவாட்டியின் பார்வையில், அவள் மாத்திரமல்ல, எருசலேமின் குமாரத்திகளாகிய, சபையிலுள்ள எல்லா விசுவாசிகளுமே, கறுப்பாகத்தான் இருக்கிறார்கள். வருத்தம் நமக்கு கறுப்பு நிறத்தைக் கொடுக்கிறது. நம்முடைய பாவங்களை நாம் நினைத்துப் பார்க்கும்போது, நம்முடைய குற்றவுணர்வு நம்மை கறுப்பு நிறத்திற்கு மாற்றும்.

ஒரு விசுவாசி பாவம் செய்து மனந்திரும்பும்போது, கர்த்தர் அந்த விசுவாசியை மன்னிக்கிறார். அவருடைய பழைய பாவங்களை மன்னித்து மறந்துவிடுகிறார். கர்த்தர் மன்னித்தாலும் சபையிலுள்ள விசுவாசிகள், மற்ற விசுவாசியின் பாவங்களை மன்னிப்பதுமில்லை. மறப்பதுமில்லை. சபையில் ஆவிக்குரிய முதிர்ச்சியில்லை. புதிய விசுவாசிகளுக்கு ஆதரவு கொடுப்பதில்லை. அவர்களுக்கு உபகாரம் செய்வதில்லை. உபகாரம் செய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்கிறார்கள்.

மணவாட்டி தன்னுடைய கறுப்பு நிறத்தைப் பார்க்கிறாள். எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியை அழவைக்கும் விதமாகப் பேசுகிறார்கள். ஆனால் மணவாட்டியோ தன் அழகில் நம்பிக்கையோடிருக்கிறாள். "நான் கறுப்பாயிருந்தாலும், அழகாயிருக்கிறேன்" என்று தெளிவாகவும், உறுதியாகவும் சொல்லுகிறாள். மணவாட்டி கேதாரின் கூடாரங்களைப்போல கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறாள். இந்தக் கூடாரங்களில் இஸ்ரவேலின் மேய்ப்பர்கள் தங்கியிருப்பார்கள். அவர்கள் வனாந்தரப்பகுதியில் கூடாரம் போட்டு தங்கும்போது, மணல் காற்று அதன்மேல் பட்டு, கூடாரம் கறுப்பாயிருக்கும். கேதாரின் கூடாரங்களை வனாந்தரத்தில் வெண்மையாக்குவதற்கு வாய்ப்பில்லை. இந்தக் கூடாரங்கள் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வருவதினால், இவற்றின் நிறம் மங்கிப்போயிற்று. இவை கறுப்பு நிறத்திற்கு மாறிற்று.

தான் சாலொமோனின் திரைகளைப்போல அழகாகயிருப்பதாக மணவாட்டி சொல்லுகிறாள். சபையில் பாடுகளும் உபத்திரவங்களும் வரும்போது, அது கறுப்பு நிறமாயிருக்கிறது. நீடிய பொறுமையே சபைக்கு அழகு. சபைக்கு உபத்திரவம் வந்தாலும், அது நீடிய பொறுமையினால் தன்னுடைய அழகைக் காத்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தையினால் ஆதரவு பெறவேண்டும். உபத்திரவத்திலும் விசுவாசத்தில் நிலைத்து நிற்கவேண்டும். இதுவே சபைக்கு அழகு. நீடிய பொறுமையைக் காத்துக்கொண்டு, விசுவாசத்தில் நிலைத்திருக்கிற சபை, கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கும்.

உண்மையான விசுவாசிகள் தங்களுக்குள் கறுப்பாகவே இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் அழகாகயிருக்கிறார்கள். கிறிஸ்து தம்முடைய அழகை, தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறார். நாம் வெளித்தோற்றத்தில் கறுப்பாகயிருந்தாலும், உள்தோற்றத்தில் அழகாகயிருக்கிறோம். இந்த உலகத்தாருக்கு நம்முடைய மெய்யான அழகு தெரியாது. அவர்கள் நம்முடைய வெளித்தோற்றத்தை மாத்திரமே பார்ப்பார்கள். நம்முடைய உள்ளான அழகை அவர்களால் பார்க்க முடியாது. "ராஜகுமாரத்தி உள்ளாக பூர்ண மகிமையுள்ளவள்" *(சங் 45:13)* என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார்.

என் தாயின் பிள்ளைகளே உன் 1:6

உன் 1:6 நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்; வெய்யில் என்மேற்பட்டது; என் தாயின் பிள்ளைகள் என்மேல் கோபமாயிருந்து, என்னைத் திராட்சத்தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள்; என் சொந்தத் திராட்சத்தோட்டத்தையோ நான் காக்கவில்லை.

கேதாரின் கூடாரங்கள் ஆரம்பத்தில் கறுப்பாகயிருக்கவில்லை. கறுப்பு அதன் இயல்பான நிறமுமல்ல. ஆனாலும் வனாந்தரத்தில் அந்தக் கூடாரங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதினால், அதன் உண்மையான நிறம் மங்கிப்போய், அது கறுப்பு நிறமாய் மாறிற்று. மணவாட்டி தன்னுடைய நிறத்தைப்பற்றிச் சொல்லும் "நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்" என்று சொல்லுகிறாள்.

தான் கறுப்பாயிருப்பதற்கான காரணத்தையும் மணவாட்டி விவரிக்கிறாள். "வெயில் என் மேல் பட்டது". இதுவே அவளுடைய கறுப்பு நிறத்திற்கான காரணம். அவள் ஆரம்பத்தில் நல்ல நிறத்தோடும் அழகோடும் இருந்தாள். அவள் வெண்மையாகயிருந்தாள். ஆனாலும் அவள்மீது வெயில் பட்டதினாலும், கடின வேலைகளும், பாரங்களும் அவள்மேல் சுமத்தப்பட்டதினாலும் அவளுடைய வெண்மை நிறம் கறுப்பாக மாறிற்று. அவளைக் கட்டாயப்படுத்தி அவள்மீது பாரமான சுமையை ஏற்றினார்கள்.

மணவாட்டியின் வீட்டாரே அவள்மீது கோபமாயிருந்தார்கள். "என் தாயின் பிள்ளைகள் என்மேல் கோபமாயிருந்து, என்னை திராட்சத்தோட்டங்களுக்கு காவல்காரியாக வைத்தார்கள்" என்று மணவாட்டி வேதனையோடு சொல்லுகிறாள். அவளுடைய தாயின் பிள்ளைகள், அவளுக்கு மெய்யான சகோதரர்களல்ல. அவர்கள் சமாரியர்கள். சமாரியர்கள் யூதருக்கு உறவின் முறையார் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் யூதருக்கும் சமாரியருக்கு இரத்த சம்பந்தம் எதுவுமில்லை. சமாரியர்கள் யூதருடைய நன்மையை விரும்புவதுமில்லை.

அர்த்தசஷ்டா ராஜாவின் காலத்தில் நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டியபோது சன்பல்லாத்தும், தொபியாவும் நெகேமியாவின்மீது கோபமாயிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்க ஒருவன் வந்தான் என்பது அவர்களுக்கு மிகவும் விசனமாயிருந்தது (நெகே 2:10). அதுபோலவே சமாரியருக்கு இஸ்ரவேலின் நன்மை விசனமாயிருக்கிறது.

அவர்கள் மணவாட்டியை திராட்சத்தோட்டங்களுக்கு காவற்காரியாக வைத்தார்கள். அவளை பாவத்திற்கு நேராக வழிநடத்தினார்கள். விக்கிரகாராதனையை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்யுமாறு அவளைக் கட்டாயப்படுத்தினார்கள். அவர்களுடைய திராட்சத்தோட்டங்களுக்கு காவற்காரியாக வைப்பது என்பதற்கு, அவர்களுடைய பாவங்களில் பங்கு பெற வைப்பது என்று பொருளாகும்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர், தங்களுக்கு சோதனையான காலங்கள் வரும்போது, மணவாட்டி இங்கு புலம்புவது போல புலம்புகிறார்கள். மற்றவர்கள் தங்களுக்கு இந்தத் துன்பத்தைக் கொடுத்திருப்பதாகவும், மற்றவர்கள் தங்கள்மீது கோபமாயிருப்பதாகவும், மற்றவர்கள் மூலமாய் தங்களுக்கு இந்த வேதனையும், சோதனையும் வந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

திராட்சத்தோட்டத்தை காவல் காப்பது சாதாரண வேலையல்ல. இது மிகவும் கடினமான வேலை. முழுஊடுபாட்டோடு திராட்சத்தோட்டத்தைக் காவல்புரியவேண்டும். தங்களுடைய குடும்பத்தில் எந்த வேலை கடினமான வேலையோ, அந்த வேலையை மணவாட்டியினுடைய தாயின் பிள்ளைகள், மணவாட்டிக்கு கொடுத்திருக்கிறார்கள்.

தான் கறுப்பாயிருப்பதற்கு தானே காரணம் என்று மணவாட்டி அங்கீகரிக்கிறாள். மணவாட்டி தன்னுடைய தாயின் பிள்ளைகளுடைய திராட்சத்தோட்டங்களுக்கு காவற்காரியாக காவல் காத்தாள். ஆனால் அவள் தன் சொந்த திராட்சத்தோட்டத்தைக் காக்கவில்லை. அவள் தன்னைப் பராமரிக்கவில்லை. மற்றவர்களுடைய காரியங்களைப் பராமரித்தாள். மணவாட்டி தன்னைப் பராமரியாமல் போனதினால், அவளுடைய நிறம் மங்கிப்போயிற்று. அவள் மற்றவர்களுக்கு கடினமாக உழைத்தாள். அவளால் தன்னுடைய நன்மையைக் காத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் அவளுடைய நிறம் கறுப்பாயிற்று.

என் ஆத்தும நேசர்
உன் 1:7

உன் 1:7. என் ஆத்தும நேசரே! உமது மந்தையை எங்கே மேய்த்து, அதை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர்? எனக்குச் சொல்லும்; உமது தோழரின் மந்தைகள் அருகே அலைந்துதிரிகிறவளைப் போல நான் இருக்கவேண்டியதென்ன?

மணவாட்டி தனக்கு நேசமானவரிடம் தன்னுடைய குறைகளை விண்ணப்பம்பண்ணுகிறாள். மணவாளனே மணவாட்டியின் ஆத்தும நேசர். மணவாளன் மந்தையின் மேய்ப்பராகயிருக்கிறார். மணவாட்டியும் மந்தையை மேய்க்கும் பெண் மேய்ப்பராகயிருக்கிறாள். சபையிலுள்ள எல்லா விசுவாசிகளும், பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவிடம் அந்நியோன்னிய ஐக்கியத்திலிருக்கவேண்டும். தங்களுடைய துக்கங்களையும், சந்தோஷங்களையும் மேய்ப்பரிடம் பகிர்ந்து சொல்லவேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் மாத்திரமே நமக்கு மெய்யான ஆறுதல் உண்டு.

மணவாட்டி இதுவரையிலும் தன்னுடைய வேதனைகளை எருசலேமின் குமாரத்திகளிடம் சொன்னாள். இப்போதோ அவர்களை விட்டுத் திரும்பி, வானத்திற்கு நேராக தன்னுடைய கண்களை ஏறெடுத்து, தன்னுடைய பிரதான மேய்ப்பரிடம், தன்னுடைய வருத்தங்களையும் வேதனைகளையும் சொல்லுகிறாள்.

மணவாட்டி தன்னுடைய மேய்ப்பரை, "என் ஆத்தும நேசரே" என்று அழைக்கிறாள். இதுவே கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்படும் பெயர். மணவாட்டி கிறிஸ்துவை நல்ல மேய்ப்பராகப் பார்க்கிறாள். நல்ல மேய்ப்பர் தம்முடைய மந்தையை நன்றாய் மேய்த்து, அதை மத்தியானத்தில், நல்ல இடத்தில் அடக்குகிறார். மணவாட்டி மேய்ப்பரைப்பற்றி சந்தேகப்படவில்லை. மேய்ப்பரின் கரிசனையைப்பற்றியும், கடமையைப்பற்றியும் நன்றாய் அறிந்து வைத்திருக்கிறாள்.

நம்முடைய மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஆடுகளுக்காக நல்ல மேய்ச்சலையும் கொடுக்கிறார், நல்ல ஓய்வையும் கொடுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உள்ளான போராட்டங்கள் இருக்கலாம். வெளிப்படையான வேதனைகள் இருக்கலாம். இவையெல்லாவற்றிற்கும் மத்தியான பொழுதில் இடைவேளை தேவைப்படுகிறது. நமக்கு துன்பங்களுக்குமேல் துன்பங்களும், வேதனைகளுக்குமேல் வேதனைகளும் வரும்போது, அவற்றை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. நமக்கு ஓய்வு தேவை. நமக்கு மெய்யான ஓய்வும், ஆறுதலும், சமாதானமும் நம்முடைய மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலுள்ளது.

மணவாளன் தன்னை தம்மிடமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மணவாட்டி விரும்புகிறாள். மேய்ப்பரிடம், "உமது மந்தையை எங்கே மேய்த்து, அதை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர், எனக்குச் சொல்லும்" என்று மணவாட்டி கேட்கிறாள். மணவாளனை எங்கே கண்டுபிடிக்க முடியும் என்று அவரிடத்திலேயே கேட்கிறாள். அவரோடு எங்கே ஐக்கியமாகயிருக்க முடியும் என்றும், தன்னுடைய உள்ளத்திலுள்ள பாரங்களையும் வேதனைகளையும், அவரோடு எங்கே பகிர்ந்து சொல்ல முடியும் என்றும் கேட்கிறாள். மேய்ப்பர் தன்னுடைய மந்தையை மேய்க்கும் இடத்தில், தனக்கும் மேய்ச்சல் கிடைக்கும் என்று மணவாட்டி எதிர்பார்க்கிறாள். மேய்ப்பர் தன்னுடைய மந்தையை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறாரோ, அங்கே தனக்கும் ஒய்வு கிடைக்கும் என்று மணவாட்டி வாஞ்சையோடு எதிர்பார்க்கிறாள். மணவாட்டி மணவாளனோடு சேர்ந்து கொள்ள விரும்புகிறாள்.

மணவாட்டி மேய்ப்பரிடம் பணிவோடும், உரிமையோடும் பேசுகிறாள். "உமது தோழரின் மந்தைகள் அருகே அலைந்து திரிகிறவர்களைப்போல நான் இருக்கவேண்டியதென்ன" என்று கேட்கிறாள். அவர்கள் மேய்ப்பரின் தோழரைப்போல வேஷம் போடுகிறார்கள். ஆனால் அவர்கள் மெய்யாகவே மேய்ப்பரின் தோழர்களல்ல. மேய்ப்பரின் சத்துருக்கள். மேய்ப்பருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்கள்.

விசுவாசிகள் கர்த்தரை மாத்திரமே நேசிக்கவேண்டும். நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுபலத்தோடும் கர்த்தர்மீது அன்புகூரவேண்டும். கர்த்தர்மீது அன்புகூராமல், உலகக்காரியங்கள்மீது அன்புகூருகிறவர்களோடு நம்மால் ஐக்கியமாயிருக்க முடியாது. அவர்களுடைய ஐக்கியம் நம்முடைய ஆத்துமாவுக்குப் பாரமாயிருக்கும். விசுவாசிகளாகிய நம்முடைய விசுவாசம் பரிசுத்தமானது. நாம் கிறிஸ்துவின்மீது வைத்திருக்கிற அன்பும் பரிசுத்தமானது. இந்த அன்பில் சந்தேகத்திற்கு இடமில்லை. இது பூரணமான அன்பு. கிறிஸ்துவை மெய்யாகவே நேசிக்கிறவர்கள், தங்கள் ஆத்தும நேசர்மீது, தாங்கள் வைத்திருக்கிற அன்பைக் கறைப்படுத்த அனுமதிக்கமாட்டார்கள்.

ஸ்திரீகளில் ரூபவதியே
உன் 1:8

உன் 1:8. ஸ்திரீகளில் ரூபவதியே! அதை நீ அறியாயாகில், மந்தையின் காலடிகளைத் தொடர்ந்து போய், மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக்குட்டிகளை மேயவிடு.

மணவாட்டியின் விண்ணப்பத்திற்கு மணவாளன் கிருபை நிறைந்த வாக்கியங்களால் பதில் சொல்லுகிறார். நம்முடைய விண்ணப்பத்திற்குப் பதில் கொடுக்க தேவன் எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார். மணவாளனுடைய வார்த்தையில் அன்பும் நேசமும் நிரம்பியிருக்கிறது. அவர் மணவாட்டியை, "ஸ்திரீகளில் ரூபவதியே" என்று அழைக்கிறார். கர்த்தரை விசுவாசிக்கிற ஆத்துமாக்கள் அழகானது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பார்வையில், மற்ற எல்லாவற்றையும்விட, தம்மை நேசிக்கிற ஆத்துமாக்களே, மிகுந்த அழகுள்ளவையாயிருக்கிறது.

மணவாட்டி தன் அறியாமையினால், மேய்ப்பர் தம்முடைய மந்தையை எங்கே மேய்க்கிறார் என்றும், அதை எங்கே மடக்குகிறார் என்றும் கேட்கிறாள். மணவாளனோ மென்மையான வார்த்தைகளினால், மணவாட்டியின் அறியாமையைக் கடிந்துகொள்கிறார். "அதை நீ அறியாயாகில்" என்று கேட்கிறார். இந்த வாக்கியத்திற்கு, என்னையும், என்னுடைய மந்தையையும் எங்கே கண்டுபிடிப்பது என்பதை நீ அறியாதிருக்கிறாயே என்பது பொருளாகும்.

பிலிப்பு ஒரு சமயம் இயேசுகிறிஸ்துவிடம், "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்" என்று சொன்னார். அதற்கு இயேசு, "பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூடயிருந்தும் நீ அறியவில்லையா" (யோவா 14:8,9) என்று அன்போடு அவரைக் கடிந்து கொள்கிறார்.

தம்மை எங்கே கண்டுபிடிக்கலாம் என்பதை மணவாளன் அன்பான வார்த்தைகளினால் அறிவிக்கிறார். "மந்தையின் காலடிகளை தொடர்ந்து போய் பார்" என்பதே மணவாளன் மணவாட்டிக்கு சொல்லுகிற பிரதியுத்தரம். கர்த்தர் எங்கேயிருக்கிறார் என்பதை நாம் தேடிப் பார்க்கவேண்டும். கர்த்தரிடத்திற்குப் போகும் பெரும்பாதையை பிறரிடத்தில் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும். அந்தப் பாதை பழைய பாதையாகயிருந்தாலும், பூர்வகாலத்திலிருந்து அதுவே நல்ல பாதையாகயிருக்கிறது.

கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் அவருடைய ஊழியக்காரர்களின் உபதேசங்களைக் கேட்கவேண்டும். அவர்களோடு ஐக்கியமாகயிருந்து, தேவனைப்பற்றிய சத்தியங்களைப் புரிந்துகொள்ளவேண்டும். "மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக்குட்டிகளை மேயவிடு" என்று மணவாளன் சொல்லுகிறார். மணவாட்டி தன்னோடு கூடயிருக்கிற எல்லோரையும் மணவாளனிடம் அழைத்து வரலாம். மணவாளன் தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளாமல் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார்.

மந்தையின் மேய்ப்பர்கள் உதவிபுரிகிற இருதயமுள்ளவர்கள். தங்களுடைய கூடாரங்களில் மற்றவர்களையும் சேர்த்துக்கொள்வார்கள். அவர்களுடைய கூடாரங்களண்டையில், மற்றவர்களுடைய ஆட்டுக்குட்டிகளையும் மேயவிடும்போது, அவற்றையும் பாதுகாப்பாக கவனித்துக் கொள்வார்கள்.

கர்த்தரோடு ஐக்கியமாகயிருக்கிற விசுவாசிகள், அவருடைய பரிசுத்தவான்களோடும் ஐக்கியமாயிருக்க வேண்டும். குடும்பத்திற்குத் தலைவராகயிருக்கிறவர்கள், தங்கள் குடும்பத்தாரை கர்த்தருடைய ஆலயத்திற்கு அழைத்து வரவேண்டும். தங்களுடைய பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், வேலைக்காரர்கள் எல்லோரையுமே கர்த்தருடைய ஆலயத்திற்கு அழைத்து வரவேண்டும். கர்த்தருடைய ஆலயம் மேய்ப்பர்களுடைய கூடாரங்களைப்போல இருக்கிறது. இங்கு நமக்குத் தேவையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

என் பிரியமே
உன் 1:9-11

உன் 1:9. என் பிரியமே! பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன்.

உன் 1:10. ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாயிருக்கிறது.

உன் 1:11. வெள்ளிப் பொட்டுகளுள்ள பொன் ஆபரணங்களை உனக்குப் பண்ணுவோம்.

மணவாளன் தன் மணவாட்டியை பிரியமுள்ள வார்த்தைகளினால் அழைக்கிறார். அவளை, "என் பிரியமே" என்று கூப்பிடுகிறார். இந்த வார்த்தை சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் பல வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "என் பிரியமே" என்னும் வார்த்தைக்கு, "என் சிநேகிதியே, என் தோழியே, எனக்கு அதிகப்பிரியமுள்ளவளே" என்று பொருள் சொல்லலாம். மணவாளன் தன்னுடைய மணவாட்டியை பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு ஒப்பிடுகிறார். இந்தக் குதிரைகளின் கூட்டம் மிகவும் வலுவானவைகள். பாதுகாப்பாக ஓடக்கூடியவைகள். பூர்வகாலத்தில் எகிப்து தேசத்தில் நேர்த்தியான ஜாதிக்குதிரைகள் ஏராளமாயிருந்தன.

சபையோ சத்துருக்களுக்கு முன்பாக பலவீனமாயிருக்கிறது. சபையின் பலவீனத்திற்கு சபையாரின் பாவங்களே காரணம். சத்துருவோ யாரை விழுங்கலாமென்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றி அலைந்துகொண்டிருக்கிறான். சபையார் தங்களுடைய பலவீனத்தினால் சாத்தானுக்கு இரையாகிவிடும் ஆபத்திலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிறிஸ்துவானவர் தம்முடைய சபையைப் பார்த்து, "பயப்படாதேயுங்கள்" என்றும், "நான் உங்களை குதிரைகளின் கூட்டத்திற்கு ஒப்பாக மாற்றியிருக்கிறேன்" என்றும் ஆறுதலாகச் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "நான் உங்களுக்கு பெலத்தையும், வல்லமையையும் கொடுத்திருக்கிறேன்" என்பது பொருளாகும்.

கர்த்தருடைய சபையார் பெலமுள்ளவர்களாக இருப்பதினால், இனிமேல் அவர்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படவேண்டிய அவசியமில்லை. அவர்கள் பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தமான தூதர்கள் அக்கினி ரதங்களுக்கும், அக்கினி குதிரைகளுக்கும் ஒப்பாயிருக்கிறார்கள்.

மணவாளன் மணவாட்டியினுடைய ஆபரணங்களின் அழகை புகழ்ந்து கூறுகிறார். அவளுடைய கழுத்து ஆரங்கள் பூட்டப்பட்டு அழகாயிருக்கிறது. அவளுடைய கன்னங்களிலும் ஆபரணாதிகள் பூட்டப்பட்டிருக்கிறது. அவளுடைய கழுத்துக்களைப்போலவே கன்னங்களும் அழகாயிருக்கிறது. மணவாட்டியின் தலையும், சுருள் முடியும் நேர்த்தியான ஆபரணங்களைப்போல மிகுந்த அழகாயிருக்கிறது. ஆரங்கள், ஆபரணாதிகள் ஆகியவற்றை சமுதாயத்தில் உயர்ந்திருப்பவர்கள் மாத்திரமே அணிந்திருப்பார்கள். இவை பசும்பொன்னால் செய்யப்பட்டது.

கிறிஸ்துவின் பிரமாணங்கள் சபைக்கு ஆபரணாதிகள் போலவும், ஆரங்கள் போலவும் அழகாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளும், ஆறுதல்களும், வரங்களும் விசுவாசிகளுக்கு பொன்னாபரணங்களைப் போன்றது. விசுவாசிகள் இந்த ஆபரணாதிகளை தங்கள் இருதயத்தில் அணிந்துகொண்டு, ஆவிக்குரிய அழகோடு இருக்கவேண்டும்.

மணவாளன் மணவாட்டிக்கு இந்த ஆபரணங்களையெல்லாம் பண்ணி, அவளுக்கு அணிவித்து, அழகு பார்க்கிறார். மணவாட்டி ஏற்கெனவே அழகாகயிருக்கிறாள். அவளுடைய ஆரங்கள், அவளுடைய அழகுக்கு அழகு சேர்க்கிறது. தேவன் யாருக்கு கிருபை கொடுக்கிறாரோ, அவர்களுக்கு இன்னும் அதிகமான கிருபையைக் கொடுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் அவரிடமிருந்து, கிருபையின்மேல் கிருபையைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

"வெள்ளிப் பொட்டுகளுள்ள பொன்னாபரணங்களை உனக்குப் பண்ணுவோம்" என்று மணவாளன் சொல்லுகிறார். நமக்குள் நற்கிரியைகளைத் துவக்கியிருக்கிறவர், அவற்றை முடிப்பதற்கும் வல்லவராகயிருக்கிறார். நாம் கர்த்தருடைய கரங்களின் கிரியைகளாகயிருக்கிறோம். அவருடைய கிரியைகளில் மாசு எதுவும் இருக்காது. குறைபாடுகள் இருக்காது. எல்லாம் நேர்த்தியாயிருக்கும்.

ராஜாவின் பந்தி
உன் 1:12

உன் 1:12. ராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளதைலம் தன் வாசனையை வீசும்.

கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் ஒருவருக்கொருவர் அன்பான வார்த்தைகளைப் பரிமாறிக்கொள்கிறார்கள். விசுவாசிகள் கிறிஸ்துவில் ஐக்கியமாயிருக்கிறார்கள். விசுவாசிகள் கிறிஸ்துவானவரை தங்களுடைய ராஜாவாக அங்கீகரித்து, அவருடைய ஆளுகைக்குத் தங்களைக் கீழ்ப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகளோடு ஐக்கியமாகயிருக்கிறார். அவர்களில் பிரியமாகயிருக்கிறார். அவர்களுடைய ஐக்கியத்தில் சந்தோஷப்படுகிறார். தம்முடைய விசுவாசிகளை வரவேற்கும் வண்ணமாய், கிறிஸ்துவாகிய ராஜா தமது பந்தியில் அமர்ந்திருக்கிறார்.

நாம் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்போது, கர்த்தருடைய பந்தியில் அவரோடுகூட அமர்ந்து போஜனம் பண்ணும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தருடைய பந்தியில், ராஜாதி ராஜாவாகிய கிறிஸ்துவும், நம்மோடு பந்தியில் அமர்ந்து, நம்மோடுகூட போஜனம்பண்ணுவார். இது நம்முடைய ராஜாவுக்குப் பிரியமானது. இந்தப் பந்தி ராஜாவின் பந்தி.

நாம் ராஜாவோடு அவருடைய பந்தியில் அமர்ந்திருக்க வேண்டுமென்றால், நாம் தேவனுடைய கிருபைகளைப் பெற்றவர்களாகயிருக்க வேண்டும். தேவனுடைய கிருபைகளை அனுபவித்திருக்கவேண்டும். நம்முடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, நம்முடைய இருதயம் உடைந்திருக்கவேண்டும். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால், நம்முடைய உடைந்துபோன இருதயம் காயம் கட்டப்பட்டு, குணப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய இருதயம் பரிசுத்தமான அன்பினால் பற்றியெறியவேண்டும். அப்போது நம்மிடத்திலுள்ள நளததைலம் தன்னுடைய வாசனையை வீசும். பந்தியில் ராஜாவும் வீற்றிருக்கிறார். நாமும் வீற்றிருக்கிறோம். அது ராஜாவின் பந்தி. அங்கு நளததைலம் நறுமணமாக வீசுகிறது.

என் நேசர்
உன் 1:13,14

உன் 1:13. என் நேசர் எனக்கு என் ஸ்தனங்களின் நடுவில் தங்கும் வெள்ளைப்போளச் செண்டு.

உன் 1:14. என் நேசர் எனக்கு எங்கேதி ஊர் திராட்சத்தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றிப் பூங்கொத்து.

விசுவாசிகள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது மிகவும் பிரியமாயிருக்கிறார்கள். அவரை "என் நேசர்" என்று அன்போடு அழைக்கிறார்கள். கிறிஸ்துவானவர் நமக்கு பிரியமுள்ள நேசராகயிருக்கிறார். கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லா ஆத்துமாக்களுக்கும், கிறிஸ்துவானவர் பிரியமுள்ள நேசராகயிருக்கிறார். கிறிஸ்து மாத்திரமே அவர்களுக்கு நேசர். விசுவாசிகளுக்கு கிறிஸ்துவைத்தவிர வேறு நேசர் யாருமில்லை.

கிறிஸ்துவைப்பற்றி இங்கு சொல்லும்போது, அவரை வெள்ளைப்போளச்செண்டு என்றும், மறுதோன்றிப் பூங்கொத்து என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே பார்ப்பதற்கு அழகானவை. நறுமணம் கொடுப்பவை. மனதிற்கு ஆறுதலாகயிருப்பவை. உள்ளத்திற்கு சந்தோஷத்தைக் கொடுப்பவை. சுவிசேஷத்தின் உபதேசமும், ஆவியானவரின் ஆறுதல்களும் நம்முடைய ஆத்துமாவுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. நாம் கிறிஸ்துவானவருடைய அன்பில் இளைப்பாறுகிறோம்.

"வெள்ளைப்போளச்செண்டு" என்னும் வார்த்தைக்கு பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல்லுக்கு, "பாவநிவாரணம்" என்றும் பொருள் சொல்லலாம். கிறிஸ்துவானவர் எல்லா விசுவாசிகளுக்கும் நீதியாகயிருக்கிறார். அவரே நமக்கு நீதியான வெள்ளைப்போளச் செண்டாகயிருக்கிறார். நம்முடைய எல்லா பாவங்களுக்கும் அவரே பரிகாரமாகயிருக்கிறார். கிறிஸ்துவானவரே நம்முடைய பாவங்களைப் போக்கும் பாவநிவாரணமாகவும் இருக்கிறார்.

மணவாட்டி தன் நேசரைப்பற்றிச் சொல்லும்போது, "என் நேசர் எனக்கு என் ஸ்தனங்களின் நடுவில் தங்கியிருக்கிறார்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு அவர் என்னுடைய இருதயத்திற்கு அருகாமையிலிருக்கிறார் என்பது பொருள். கிறிஸ்துவுக்கு அன்பான சீஷர்கள் அவருடைய மடியில் தங்கி இளைப்பாறுதலடைவார்கள். நாம் கிறிஸ்துவின் மடியில் தங்கியிருக்கும்போது, கிறிஸ்துவானவரும் நம்முடைய இருதயத்தில் தங்கியிருக்கவேண்டுமென்று விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களில் தங்கி வாசம்பண்ணவேண்டும் என்று வாஞ்சையோடிருக்கிறார்.

நீ ரூபவதி
உன் 1:15

உன் 1:15. என் பிரியமே! நீ ரூபவதி; நீ ரூபவதி; உன் கண்கள் புறாக்கண்கள்.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையின்மீது மிகுந்த அன்பாகயிருக்கிறார். தம்மை உண்மையாய் விசுவாசிக்கிற ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும் அவர் பிரியமாயிருக்கிறார். நாம் கர்த்தருக்கு அவருடைய கண்ணின் மணிகளாகயிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்மைக் கூப்பிடும்போது, "என் பிரியமே, நீ ரூபவதி, நீ ரூபவதி" என்று சொல்லுகிறார். நம்மை ரூபவதி என்று ஒரு தரம் அழைப்பதற்குப் பதிலாக, "நீ ரூபவதி" என்று இரண்டுதரம் அழைக்கிறார். நாம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் அழகுள்ளவர்களாகயிருக்கிறோம்.

மெய்யான அழகு பரிசுத்தத்திலிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களிடத்தில் அந்த அழகைப் பார்க்கிறார். யாரெல்லாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறார்களோ, அவர்களெல்லோருமே கிறிஸ்துவின் பார்வையில் அழகுள்ளவர்கள். தம்முடைய பரிசுத்தவான்களின் அழகை வர்ணிக்கும் வண்ணமாய், "நீ ரூபவதி" என்று கர்த்தர் சந்தோஷமாய்ச் சொல்லுகிறார்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியின் அழகை வர்ணிப்பதற்கு, இங்கு ஒரு சம்பவத்தை மாத்திரம் சொல்லுகிறார். மணவாட்டியின் கண்கள் புறாக்கண்களைப்போல அழகாகயிருக்கிறது. இதே வாக்கியத்தை மணவாளன் மறுபடியுமாக சொல்லி மணவாட்டியின் அழகை வர்ணிக்கிறார். "நீ ரூபவதி, என் பிரியமே! நீ ரூபவதி; உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக்கண்களாயிருக்கிறது" (உன் 4:1).

கிறிஸ்துவின் பார்வையில் கழுகின் கூர்மையான கண்களைவிட, புறாவின் கண்களே அழகாகயிருக்கிறது. புறாவின் கண்கள் சுத்தமானது. பிறருக்கு தீங்கு நினைக்காதது. தாழ்மையானது. எளிமையானது. கள்ளம் கபடமில்லாதது. கழுகின் கண்களோ எப்போதுமே இரையின்மீது நோக்கமாயிருக்கும். தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக கூர்மையாகப் பார்க்கும். புறாவின் கண்களோ பிறருக்குத் தீங்கு நினையாது. பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவர்கள் புறாவைப்போல கள்ளம் கபடமில்லாதவர்களாகவும், மென்மையான மனதுடையவர்களாகவும் இருப்பார்கள்.

நீர் ரூபமுள்ளவர்
உன் 1:16,17

உன் 1:16. நீர் ரூபமுள்ளவர்; என் நேசரே! நீர் இன்பமானவர்; நம்முடைய மஞ்சம் பசுமையானது.

உன் 1:17. நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுருமரம், நம்முடைய மச்சு தேவதாருமரம்.

கிறிஸ்துவானவர் சபையின்மீது அன்பாகயிருப்பதுபோல, சபையும் கிறிஸ்துவின்மீது அன்பாகயிருக்கவேண்டும். கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை "நீ ரூபவதி" என்று சொல்லுகிறார். மணவாட்டி மணவாளனுடைய அன்பான வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அவரை "நீர் ரூபமுள்ளவர்" என்று சொல்லுகிறாள். கிறிஸ்துவின் சாயல் நம்மிடத்தில் இருப்பதினால் நாம் அழகுள்ளவர்களாகயிருக்கிறோம். நாம் கிறிஸ்துவை, "நீர் ரூபமுள்ளவர்" என்று சொல்லும்போது, நாம் கிறிஸ்துவின் அன்புக்கு பாத்திரமுள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் நாமம் நம்மூலமாய் மகிமைப்படவேண்டும். அவருடைய நாமம் தூஷிக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் காரணமாகிவிடக்கூடாது.

மணவாட்டி தன்னுடைய மணவாளனின் அழகைப் புகழ்ந்து கூறும்போது, "என் நேசரே, நீர் இன்பமானவர்" என்று சொல்லுகிறாள். அதன் பின்பு அவள் தன்னுடைய மஞ்சத்தைப்பற்றிப் பேசுகிறாள். "நம்முடைய மஞ்சம் பசுமையானது" என்று சொல்லுகிறாள். மஞ்சம் என்பது மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் இடையிலுள்ள நெருங்கிய ஐக்கியத்தைக் குறிக்கிற வார்த்தை. மஞ்சம் பரிசுத்தமானது. இது பரிசுத்த பிரமாணத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் தங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு பரிசுத்த பிரமாணத்தினால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரமாணத்தின்படி கிறிஸ்து நம்மீது அன்பாயிருக்கிறார். நாமும் கிறிஸ்துவின்மீது அன்பாயிருக்கிறோம்.

மணவாட்டி மஞ்சத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நம்முடைய மஞ்சம்" என்று சொல்லுகிறாள். இந்த மஞ்சத்தில் மணவாட்டிக்கு பங்கு இருப்பதுபோல, மணவாளனுக்கும் பங்கு இருக்கிறது. கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும், ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறிக்கொள்வதில் பங்கு இருக்கிறது. இந்த அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. தேவனுடைய தெய்வீக அன்பு விசுவாசிகளுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இந்த அன்பில்தான் கிறிஸ்துவும், அவருடைய விசுவாசிகளும் சங்கமமாகிறார்கள்.

கிறிஸ்து நம்முடையவராக இருப்பாரென்றால், அவருக்குரியதெல்லாமே நம்முடையதாயிருக்கும். மணவாட்டி மஞ்சத்தைப்பற்றிச் சொல்லும்போது, அதன் நிறத்தைப்பற்றியும் சொல்லுகிறாள். "நம்முடைய மஞ்சம் பசுமையானது" என்று வர்ணிக்கிறாள்.

மஞ்சம் பசுமையானது. அது பச்சை நிறத்திலிருக்கிறது. மற்ற எல்லா நிறங்களைவிட பச்சை நிறம் கண்களுக்குப் பசுமையாகயிருக்கும். இதுவே மேய்ப்பரின் நிறம். வயல் நிலம் பசுமையாகயிருக்கும். வனாந்தரமும் பசுமையாகயிருக்கும். பசுமை நிறம் மனதிற்கு இன்பத்தையும், ஆறுதலையும் கொடுக்கும்.

வீட்டின் உத்திரங்கள் கேதுருமரத்தால் செய்யப்பட்டிருக்கிறது என்றும், மச்சு தேவதாரு மரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லுகிறாள். வீட்டையும், மச்சையும் பற்றிச் சொல்லும்போது, அவற்றை, "நம்முடைய வீடு, நம்முடைய மச்சு" என்றே சொல்லுகிறாள்.

சாலொமோன் ராஜா தேவாலயத்தை கேதுரு மரங்களினால் கட்டினார். தேவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் ஐக்கியம் உண்டாயிருப்பதற்காக தேவாலயத்தைக் கட்டினார். கேதுரு மரம் வலுவானது. நறுமணமுள்ளது. நீடித்து உழைக்கக்கூடியது. உறுதியானது. அது சீக்கிரத்தில் பலவீனமடையாது. சபை உறுதியாயிருக்கவேண்டும். தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டும். இதை மனதில் கொண்டுதான் சாலொமோன் ராஜா தேவாலயத்தின் உத்திரங்களை கேதுரு மரத்தினால் கட்டினார்.

தேவாலயத்தில் நடைமேடையாக பயன்படும் மச்சு தேவதாருமரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மரமும் பார்வைக்கு அழகாயிருக்கும். நறுமணம் வீசும். பரிசுத்தவான்கள் இந்த மச்சில் கிறிஸ்துவோடு நடக்கும்போது, அவர்களுடைய மனதிற்கு ரம்மியமாயிருக்கும். ஆறுதலாயும் இருக்கும். கிருபையின் உடன்படிக்கையில் இடம் பெற்றிருப்பது எல்லாமே உறுதியானது. அவை எளிதாக அசைக்கப்படுவதில்லை. நேர்த்தியானது. மனதிற்கு ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுக்கக்கூடியது.

மணவாட்டி மணவாளனை சந்திக்கும் வீட்டைப்பற்றிச் சொல்லும்போது, அதன் உத்திரங்களைப்பற்றியும், மச்சைப்பற்றியும் அன்பாய் வர்ணிக்கிறாள். கர்த்தரோடு நம்முடைய ஐக்கியத்தை வெளிப்படுத்துகிற பரிசுத்த ஸ்தலம் மிகவும் பரிசுத்தமானது. அது உறுதியானது. அழகானது. மனதிற்கு இனிமையானது. இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில்தான் மணவாளனாகிய கிறிஸ்துவும், மணவாட்டியாகிய அவருடைய சபையாரும் சந்திக்கிறார்கள். தங்களுடைய அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கிறார்கள்.

2 அதிகாரம்

கிறிஸ்துவானவர் தம்மைப்பற்றியும் தம்முடைய சபையைப்பற்றியும் பேசுகிறார் (உன் 2:1,2). கிறிஸ்துவின் சபையாகிய மணவாட்டி பேசுகிறாள். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருந்த போது தனக்கு உண்டாயிருந்த சந்தோஷத்தையும், ஆத்தும திருப்தியையும் நினைவுகூருகிறாள் (உன் 2:3,4). மணவாட்டி கிறிஸ்துவின் அன்பை அன்போடு அங்கீகரிக்கிறாள். மணவாளனுடைய அன்பையும், கிருபையையும் பகிர்ந்து சொல்லுகிறாள் (உன் 2:5-7). மணவாளன் மணவாட்டியிடம் நெருங்கி வருகிறார் (உன் 2:8,9).

மணவாளன் மணவாட்டியிடம் மறுபடியும் பேசுகிறார். அவளை அன்போடு அழைக்கிறார். வசந்தகாலம் மறுபடியும் வந்திருப்பதாகச் சொல்லி, அந்தக் காலத்தில் தம்மோடு அன்பாயிருக்குமாறு அழைக்கிறார் (உன் 2:10-13). மணவாட்டியின் முகரூபம் அழகாயிருக்கிறதாக மணவாளன் சொல்லுகிறார் (உன் 2:14).

திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளுக்கும் சிறுநரிகளுக்கும் தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் இடமில்லை (உன் 2:15). மணவாட்டி மணவாளனோடு ஐக்கியமாயிருப்பதில் சந்தோஷமாயிருக்கிறாள் (உன் 2:16). மணவாளனுடைய வருகைக்காக ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கிறாள். நம்முடைய இருதயத்தில் கிறிஸ்துவின் அன்பு நிரம்பியிருக்கவேண்டும். பரலோகத்தை வாஞ்சையாய் எதிர்பார்க்கவேண்டும். இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியங்கள், கிறிஸ்துவின் அன்பையும், நேசத்தையும் நமக்கு விரிவாக தெளிவுபடுத்துகிறது.

சாரோனின் ரோஜா
உன் 2:1

உன் 2:1. நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலி புஷ்பமுமாயிருக்கிறேன்.

கிறிஸ்துவானவர் உன்னதமான தேவனுடைய குமாரனாயிருக்கிறார். அவர் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது, தாம் சாரோனின் ரோஜாவாகவும், பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமாகவும் இருப்பதாகச் சொல்லுகிறார். இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்துவானவருடைய பிரசன்னம் அவருடைய பிள்ளைகள் மத்தியிலிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் சமுகத்திற்கு எளிதாகவும், தைரியமாகவும் கிட்டிச் சேரலாம். விசுவாசிகள் கிறிஸ்துவை தரிசிக்கும்போது, அவருடைய இனிமையையும், அழகையும் அவரில் காணலாம்.

ரோஜா அழகான மலர். அது நறுமணம் வீசுகிற மலர். எல்லா மலர்களிலும் ரோஜா மலரே உயர்ந்தது. அதுவே பிரதானமானது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்மைப்பற்றிச் சொல்லும்போது தம்மை சாரோனின் ரோஜா என்று சொல்லுகிறார். சாரோனில்தான் நல்ல ஜாதியான ரோஜாக்கள் பூக்கும். சாரோனின் நிலமெல்லாம் ரோஜா மலர்களால் நிரம்பியிருக்கும். சாரோனுடைய ரோஜாவின் அழகை எல்லாரும் பார்த்து ரசிக்கலாம். அதை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ளலாம். அதுபோலவே கிறிஸ்துவின் சுவிசேஷமும், எல்லோருக்கும் பொதுவாயிருக்கிறது. அதை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சாரோன் என்பது ஒரு தோட்டமல்ல. இது ஒரு விளைச்சல் நிலம். தோட்டத்தில் ரோஜா மலர்களைப் பயரிட்டு, அதை வேலியடைத்துப் பாதுகாப்பார்கள். அந்நியர்கள் யாரும் அதற்கு உள்ளே பிரவேசிக்க முடியாது. ரோஜாவின் அழகை அனுபவிக்க முடியாது. சாரோனின் ரோஜாவோ, வேலியடைத்து பூட்டப்பட்டிருக்கிற தோட்டத்திற்குள் மலர்ந்திருக்கிற ரோஜா மலரல்ல. இது வெளிப்படையான விளைச்சல் நிலத்தில், எல்லோருக்கும் பொதுவாக மலர்ந்திருக்கிறது. இதை எல்லோரும் பார்த்து ரசிக்கலாம். இதன் நறுமணத்தை நுகர்ந்து சந்தோஷமாயிருக்கலாம்.

கிறிஸ்துவானவர் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும்போது தாம் பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பமாகயிருப்பதாகச் சொல்லுகிறார். சாலொமோன் தன்னுடைய மகிமையில் தன்னை வெளிப்படுத்திக் காண்பித்ததைவிட, பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பம் மிகுந்த அழகுள்ளதாகயிருக்கிறது. பள்ளத்தாக்கு முழுவதுமே லீலிபுஷ்பத்தை வஸ்திரமாக அணிந்து, அழகாக தோற்றமளிப்பதுபோல இருக்கிறது.

லீலிபுஷ்பம் வெண்மை நிறத்திலிருக்கும். பள்ளத்தாக்குகளில் மலர்ந்திருக்கிற லீலிபுஷ்பங்கள் பார்ப்பதற்கும் அழகாகயிருக்கும். நுகருவதற்கும் நறுமணமுள்ளதாகயிருக்கும். கிறிஸ்துவானவர் தம்மை லீலிபுஷ்பம் என்று சாதாரணமாகச் சொல்லாமல், "பள்ளத்தாக்குகளின் லீலிபுஷ்பம்" என்று சொல்லுகிறார். பள்ளத்தாக்கு என்பது தாழ்வான பகுதி. இது கிறிஸ்துவானவரின் தாழ்மையைக் குறிக்கிறது. கிறிஸ்து தம்மை மலையின்மேல், உயரத்தில் மலர்ந்திருக்கிற லீலிபுஷ்பமாக வெளிப்படுத்தாமல், பள்ளத்தாக்குகளில், தாழ்வான பகுதிகளில், மலர்ந்திருக்கிற லீலிபுஷ்பங்களாக வெளிப்படுத்துகிறார். மனத்தாழ்மையுள்ள ஆத்துமா தனக்குள்ளே அதிக அழகுள்ளதாகயிருக்கும். யாரெல்லாம் பள்ளத்தாக்குகளிலிருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் கிறிஸ்துவானவர் லீலிபுஷ்பமாகயிருக்கிறார். தாழ்மையிலிருக்கிற ஆத்துமாக்களிடத்தில், அவர் அழகான லீலிபுஷ்பமாக மலர்ந்திருக்கிறார்.

முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் உன் 2:2

உன் 2:2. முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்.

கிறிஸ்துவானவர் முள்ளுகளுக்குள்ளே இருக்கிற லீலிபுஷ்பத்தைப்போல இருக்கிறார். கிறிஸ்துவின் சபையாரும் லீலிபுஷ்பமாகயிருக்கிறார்கள். ஆனாலும் கிறிஸ்துவானவர் மாத்திரமே மெய்யான லீலிபுஷ்பம். நாம் கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்ளும்போது, கிறிஸ்துவின் அழகு நம்மிடத்தில் வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் மணவாட்டியானவள் குமாரத்திகளுக்குள்ளே அவருக்கு பிரியமானவளாயிருக்கிறாள். கிறிஸ்துவானவர் லீலிபுஷ்பமாகயிருப்பதுபோல அவருடைய மணவாட்டியும், அப்படியே லீலிபுஷ்பமாயிருக்கிறாள்.

நம்முடைய ஜீவியம் கிறிஸ்துவின் ஜீவியத்தைப்போல மாறவேண்டும். நம்முடைய இருதயத்தில் கிறிஸ்துவின் சிந்தை நிரம்பியிருக்கவேண்டும். கிறிஸ்துவின்மீதுள்ள நம்முடைய அன்பு, நம்முடைய ஆத்துமாவில் நிரம்பி வழியவேண்டும். அப்போது நாமும் கிறிஸ்துவைப்போல லீலிபுஷ்பமாகயிருப்போம். இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்துவின் சபையார் முள்ளுகளுக்குள்ளே இருக்கிற லீலிபுஷ்பங்களைப்போல இருக்கிறார்கள். லீலிபுஷ்பத்தைச் சுற்றிலும் முட்கள் இருக்கும். முட்கள் மத்தியில்தான் லீலிபுஷ்பம் மலரும்.

இந்தப் பிரபஞ்சத்தில் அநேகர் கிறிஸ்துவின் அன்பை ருசி பார்க்காதவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் கிறிஸ்துவின் சிந்தையிருக்காது. அவர்களுடைய ஆத்துமா கிறிஸ்துவை நேசிக்காது. இவர்கள் முட்களைப் போன்றவர்கள். யாருக்கும் பிரயோஜனமில்லாதவர்கள். நறுமணமில்லாதவர்கள். முள் பிறருக்கு தீங்கு செய்வதுபோல இவர்களும் மற்றவர்களுக்கு தீங்கு மாத்திரமே செய்கிறார்கள்.

தேவனுடைய ஜனமோ முள்ளுகளைப்போல இருக்கிற புறஜாதியார் மத்தியில் மலர்ந்திருக்கிறார்கள். முள்ளுகள் மலர்களை குத்தும். மலர்களைக் கிழிக்கும். மலர்களின் அழகை மறைக்கும். முள்ளுகளால் மலருக்கு தீமைதான் உண்டாகும். முள்ளுகளுக்கு மத்தியிலும் லீலிபுஷ்பம் அழகாகயிருக்கும். அதுபோலவே விசுவாசிகளும், உலகப்பிரகாரமான ஜனங்கள் மத்தியில் துன்பங்களையும், வேதனைகளையும், பாடுகளையும் அனுபவித்தாலும், அவர்கள் லீலிபுஷ்பங்களைப் போல அழகாகயிருக்கிறார்கள். இவர்களே கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்கள். அநேக பிரச்சனைகள் தங்களைச் சூழ்ந்திருந்தாலும், விசுவாசிகள் கிறிஸ்துவின் அன்பையும் அழகையும் வெளிப்படுத்துகிறார்கள். வேதனைகளைச் சகித்துக்கொண்டு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக ஜீவிக்கிறார்கள்.

கிச்சிலி மரம்
உன் 2:3

உன் 2:3. காட்டுமரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார்; அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன், அதின் கனி என்வாய்க்கு மதுரமாயிருக்கிறது.

மணவாட்டி தன்னுடைய மணவாளன்மீது தனக்கு இருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறாள். மற்ற எல்லோரையும்விட, தன்னுடைய மணவாளரே அழகானவர் என்றும், தனக்குப் பிரியமானவர் என்றும் சாட்சியாக அறிவிக்கிறாள். காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார் என்று சொல்லுகிறாள். கிச்சிலி மரம் மனுஷருக்குப் பிரயோஜனமுள்ளது. கிச்சிலி மரத்தில் கிச்சிலி பழங்கள் பழுக்கும். கிச்சிலி கனியின் சுவை மதுரமாயிருக்கும். மற்ற மரங்கள் கிச்சிலி மரத்தைப்போல விசேஷித்தவையல்ல.

மற்ற மரங்களால் கிச்சிலி மரத்தைப்போல பயன்தரமுடியாது. கேதுரு மரம்கூட கிச்சிலி மரத்தைப்போல பிரயோஜனமாயிராது. கேதுரு மரத்தை வெட்டினால்தான் அது பயன்படும். கிச்சிலி மரமோ, அது மரமாகத் தழைத்திருக்கும் போதே பிரயோஜனமுள்ளதாயிருக்கும். அதின் நிழலில் வாஞ்சையாய் உட்காரலாம். அதின் கனி நம்முடைய வாய்க்கு மதுரமாயிருக்கும்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனைப்பற்றிச் சொல்லும்போது குமாரருக்குள்ளே என் நேசர் காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ, அப்படி உயர்ந்திருக்கிறார், அழகாயிருக்கிறார், தனக்குப் பிரயோஜனமாயிருக்கிறார் என்று சொல்லுகிறாள்.

மணவாட்டி மணவாளனோடு ஐக்கியமாயிருக்கிறாள். அந்த ஐக்கியத்தில் தனக்குக் கிடைத்த ஆறுதலையும், சந்தோஷத்தையும் இங்கு விரிவாகச் சொல்லுகிறாள். மணவாட்டி தன்னுடைய மணவாளனின் நிழலிலே வாஞ்சையாய் உட்கார்ந்திருக்கிறாள். கிச்சிலி மரத்தின் நிழலில் வாஞ்சையாய் உட்கார்ந்திருப்பதுபோல, மணவாட்டியும் தன் மணவாளனுடைய நிழலில் வாஞ்சையாய் உட்கார்ந்திருக்கிறாள். மேய்ப்பர்கள் மத்தியான வெயிலில் ஆடுகளை மேய்க்கும்போது, கிச்சிலி மரத்தின் நிழலில் வாஞ்சையாய் உட்காருவார்கள்.

கிறிஸ்துவின் நிழலில் உட்காருகிற நமக்கு அநேக ஆசீர்வாதங்கள் உண்டு. நாம் கிறிஸ்துவின் சமுகத்தை கிட்டிச் சேரும்போது, அவருடைய நன்மையை அனுபவிக்கிறோம். முதலாவதாக கிறிஸ்துவின் நிழல் நமக்கு இன்பமாயிருக்கிறது. இதமாயிருக்கிறது. மணவாட்டி இதைச் சொல்லும்போது "அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்காருகிறேன்" என்று சொல்லுகிறாள். கிறிஸ்துவானவர் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு கிச்சிலி மரத்தின் நிழலைப்போல இருக்கிறார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள் எல்லோரும் கிறிஸ்துவினிடத்தில் இளைப்பாறுதல் பெறலாம். நாம் கிறிஸ்துவின் சமுகத்தில் வாஞ்சையாய் அமர்ந்து நன்றாய் இளைப்பாறவேண்டும். நம்முடைய கவலைகள், துக்கங்கள், பாரங்கள் எல்லாவற்றையும் கிறிஸ்துவின் சமுகத்தில் இறக்கி வைத்துவிடவேண்டும். கர்த்தர்மேல் நம்முடைய பாரத்தை வைத்துவிடும்போது அவருடைய ஆதரவு நமக்குக் கிடைக்கும்.

கிச்சிலி மரத்தில் ஏராளமான கனிகள் இருக்கும். அவை சுவை மிகுந்தவை. அவை நம்முடைய வாய்க்கு மதுரமாயிருக்கும். கிச்சிலி மரத்தின் நிழலில் உட்கார்ந்திருக்கும்போது, மரத்திலிருந்து கிச்சிலி பழங்கள் கீழே விழும். நாம் அந்த மரத்தின்மீது ஏறி, அதன் கனிகளை பறிக்கும் முன்பாகவே, அந்தக் கனிகள் தானாகவே நம்மீது கீழே விழும். அவை நம்முடைய வாய்க்கு மதுரமாயிருக்கும்.

கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்கள் அதை விசுவாசிக்கிறவர்களுக்கு மதுரமானது. நமக்கு பாவமன்னிப்பு மதுரமானது. நம்முடைய மனச்சாட்சியில் கிறிஸ்துவானவர் கொடுத்திருக்கிற சமாதானமும் மதுரமானது. தேவனுடைய அன்பைப்பற்றிய நிச்சயங்கள் நமக்கு மதுரமானது. அதுபோலவே பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷங்களும், நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கைகளும், இம்மையிலேயே மறுமையின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதும் நமக்கு மதுரமானது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வரும்போது, அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியமும் கர்த்தருக்கு நேராக வளரும். ஆவிக்குரிய அனுபவங்கள் எல்லாமே, கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கு, கிறிஸ்துவுக்குள் மதுரமாயிருக்கும்.

விருந்துசாலை
உன் 2:4

உன் 2:4. என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே.

கிறிஸ்துவானவர் தனக்குக் கொடுக்கிற எல்லா நன்மைகளுக்காகவும், மணவாட்டி கிறிஸ்துவுக்கு நன்றியுள்ளவளாகயிருக்கிறாள். கிறிஸ்துவின் மூலமாகவே தனக்கு எல்லா நன்மையும் வந்திருப்பதாக அங்கீகரிக்கிறாள். கிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருப்பதினால் மணவாட்டிக்கு ஆறுதலும் ஆசீர்வாதமும் உண்டாயிருக்கிறது. மணவாட்டி கிச்சிலி மரத்தின் நிழலிலே வாஞ்சையாய் உட்கார்ந்திருக்கிறாள். கிறிஸ்துவோ தம்முடைய மரத்தின் நிழலில் உட்கார்ந்திருக்கிற மணவாட்டியை, விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டு போகிறார். மணவாட்டி கிறிஸ்துவோடு ஓரளவு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறாள். கிறிஸ்துவோ அவளை இன்னும் அதிக நெருக்கமாய், தம்மோடு கிட்டிச் சேர்த்துக் கொள்கிறார்.

விருந்துசாலை என்பது இஸ்ரவேல் புத்திரரின் ஆசரிப்புக்கூடாரத்தைக் குறிப்பிடுகிற வார்த்தை. கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் நாம் அவருடைய பிரசன்னத்தை உணரமுடியும். தேவனுடைய ஷேக்கைனா மகிமையை அனுபவிக்க முடியும். அங்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும். சுவிசேஷத்தின் பிரமாணங்களுக்கு வியாக்கியானம் சொல்லப்படும். கர்த்தருடைய நியமங்கள் அனுசரிக்கப்படும். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தருடைய பந்தி பரிமாறப்படும். மணவாட்டி இதைப்பற்றிச் சொல்லும்போது, தன்னுடைய நேசர் தன்னை, விருந்து சாலைக்கு அழைத்துக்கொண்டு போவதாக சொல்லுகிறாள்.

கிறிஸ்துவானவர் நம்மை தம்முடைய விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டு போகவில்லையென்றால், நமக்கு அங்கே பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைக்காது. விருந்துசாலையில் பரிமாறப்படும் திராட்சரசத்தை நம்மால் பானம்பண்ணவும் முடியாது. விருந்துசாலை சந்தோஷமாயிருக்கிற இடம். கிறிஸ்துவின் பிரசன்னத்தில் நமக்கு ஆவிக்குரிய சந்தோஷமுண்டு. கிறிஸ்து நம்மை தம்மிடத்தில் அழைத்துக் கொள்ளவில்லையென்றால், நம்முடைய சுயமுயற்சியினால் ஆவிக்குரிய சந்தோஷங்களை அனுபவிக்கமுடியாது.

மணவாட்டியின்மீது கிறிஸ்துவின் கொடி ஏற்றப்படுகிறது. மணவாட்டி அந்தக் கொடியைப்பற்றிச் சொல்லும்போது, "என் மேல் பறந்த அவருடைய கொடி நேசமே" என்று சொல்லுகிறாள். கிறிஸ்துவின் சுவிசேஷம் ஒரு கொடிக்கு ஒப்புமையாக சொல்லப்பட்டிருக்கிறது. "ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்" (ஏசா 11:12). இங்கு சொல்லப்பட்டிருக்கிற கொடி அன்பின் கொடி. இது நேசத்தின் கொடி. கர்த்தரோடு நாம் விருந்துசாலையில் அமர்ந்திருக்கும்போது, நமக்கு கிறிஸ்துவின் அன்பும், நேசமும் பரிமாறப்படும். கிறிஸ்துவுக்குள் நமக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும்.

நேசத்தால் சோகம்
உன் 2:5

உன் 2:5. திராட்சரசத்தால் என்னைத் தேற்றுங்கள், கிச்சிலிப்பழங்களால் என்னை ஆற்றுங்கள்; நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்.

மணவாட்டி தன் மணவாளனாகிய கிறிஸ்துவின்மீது அதிக அன்பாகயிருப்பதையும், நேசமாகயிருப்பதையும் அறிக்கை செய்கிறாள். அவள் நேசத்தால் சோகமடைந்திருக்கிறாள். கிறிஸ்துவின் நேசம் அவளை ஆளுகை செய்கிறது. அது அவளை மேற்கொள்கிறது. தன்னுடைய நேசத்தின் சோகத்தினால், “திராட்சரசத்தால் என்னைத் தேற்றுங்கள்” என்றும், “கிச்சிலி பழங்களால் என்னை ஆற்றுங்கள்” என்றும் சொல்லுகிறாள். கிறிஸ்துவானவரே காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரத்தைப்போல இருக்கிறார். கிறிஸ்துவைப்பற்றிய தியானத்தினாலும், அவருடைய ஐக்கியத்தினாலும் நம்முடைய ஆத்துமா தேற்றப்படவேண்டும். கிறிஸ்து நம்மீது நேசமாகயிருக்கிறார் என்பதும், அவருடைய அன்பு நம்முடைய ஆத்துமாவில் நிரம்பியிருக்கிறது என்பதும் நமக்கு ஆறுதலான சத்தியம்.

இடதுகையும் வலதுகையும்
உன் 2:6

உன் 2:6. அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது; அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளுகிறது.

தேவனுடைய தெய்வீக கிருபையின் வல்லமையையும், மென்மையையும் மணவாட்டி அனுபவிக்கிறாள். அவள் இதுவரையிலும் நேசர்மீது இருந்த தன்னுடைய நேசத்தினால் சோகமடைந்திருந்தாள். இப்போது தன்னுடைய சோகத்திலிருந்து மீண்டு, தேவனுடைய தெய்வீக கிருபைக்குள் பிரவேசித்திருக்கிறாள். கிறிஸ்துவானவர் தன் மணவாட்டியைவிட்டு சிறிதுகாலம் பிரிந்திருப்பதுபோல இருந்தாலும், தன்னுடைய மணவாட்டிக்கு உதவி தேவைப்படும்போது, அவர் உடனே அங்கு வந்துவிடுகிறார். கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிற எல்லோருக்கும் அவர் சமீபமாயிருக்கிறார்.

மணவாளனுடைய இடதுகை மணவாட்டியின் தலையின்கீழிருக்கிறது. அவளுடைய தலையைத் தாங்கிப் பிடித்துக்கொள்வது போல இருக்கிறது. மணவாட்டி ஆறுதலாகப் படுத்திருப்பதற்கு வசதியாக, மணவாளனுடைய இடதுகை அவளுக்கு தலையின் கீழிருக்கிற தலையணையைப்போல இருக்கிறது.

மணவாளனுடைய இடதுகை, மணவாட்டியின் தலையின் கீழிருக்கும்போது, அவருடைய வலதுகை அவளை அணைத்துக்கொள்கிறது. கிறிஸ்துவின் மாசில்லாத அன்பு அவருடைய விசுவாசிகளுக்கு தாராளமாய்க் கிடைக்கிறது. கிறிஸ்து நம்மீது அன்பாயிருக்கிறார் என்னும் நிச்சயம் நமக்கு உண்டாயிருப்பதற்காக, கிறிஸ்துவானவர் தம்முடைய அன்பை நமக்கு உறுதிபண்ணுகிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு கிறிஸ்துவின் அன்பே ஆறுதலையும், தேறுதலையும் தருகிறது. கிறிஸ்துவின் ஆதரவே நமக்கு பெலன். கிறிஸ்துவின் இடதுகை நமக்கு ஆதரவாயிருக்கவேண்டும். அவருடைய வலதுகை நம்மை தாங்கி அணைத்துக்கொண்டு, வழிநடத்தவேண்டும். கிறிஸ்துவின் அன்பும் ஆதரவும் இல்லாமல், நம்மால் இந்தப்பிரபஞ்சத்தில் சந்தோஷமாகவோ, சமாதானமாகவோ ஜீவிக்க முடியாது.

எருசலேமின் குமாரத்திகளே
உன் 2:7

உன் 2:7. எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும், நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலுமிருக்கும்படி, வெளிமான்கள்மேலும் வெளியின் மரைகள்மேலும் உங்களை ஆணையிடுகிறேன்.

மணவாளன் தனக்கு அருகாமையிலிருப்பதையும், அவருடைய அன்பு தனக்கு உறுதிபண்ணப்பட்டிருப்பதையும் மணவாட்டி அறிந்துகொள்கிறாள். தனக்கும், தன்னுடைய மணவாளனுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தை யாரும் கெடுத்துப்போடக்கூடாது என்றும், தங்களுக்கு இடையில் யாரும் தொந்தரவாயிருக்கக்கூடாது என்றும் மணவாட்டி விரும்புகிறாள். கிறிஸ்துவோடு நாம் வைத்திருக்கிற ஐக்கியத்திற்கு இடையூறாக, நாம் எந்தக் காரியத்தையும் அனுமதிக்கக்கூடாது. கிறிஸ்துவின் ஐக்கியத்தில் நாம் மிகுந்த கவனமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

மணவாளனோடு தனக்கு உண்டாயிருக்கிற நெருக்கமான ஐக்கியத்தைக் காத்துகொள்ளும் வண்ணமாய், மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளுக்கு ஆணையிடுகிறாள். "எருசலேமின் குமாரத்திகளே, உங்களை ஆணையிடுகிறேன்'' என்று தெளிவான வார்த்தைகளினால் பேசுகிறாள். அவர்களை வெளிமான்கள் மேலும் வெளியின் மரைகள் மேலும் ஆணையிடுகிறாள். இந்த வாக்கியத்திற்கு, "கண்களால் காண்கிற எல்லாவற்றின்மீதும் ஆணையிடுகிறேன்'' என்பது பொருளாகும்.

கிறிஸ்துவின் அன்பை ருசிபார்த்திருக்கிறவர்கள், அந்த அன்பில் நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். கிறிஸ்துவின் அன்பு தங்களுக்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள். மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளுக்கு ஆணையிடும்போது, "எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகும் மட்டும், நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருங்கள்'' என்று சொல்லுகிறாள். இந்த வாக்கியத்திற்கு கிறிஸ்துவின் ஐக்கியத்திலிருந்து நாம் பிரிந்துவிடக்கூடாது என்பது பொருள். மேலும் கிறிஸ்துவுக்கும் நமக்கும் இடையிலுள்ள ஐக்கியத்திற்கு எதுவும் தடையாகயிருக்கக்கூடாது என்பதும் இதன் பொருளாகும்.

என் நேசர்
உன் 2:8

உன் 2:8. இது என் நேசருடைய சத்தம்! இதோ, அவர் மலைகள்மேல் குதித்தும் மேடுகள் மேல் துள்ளியும் வருகிறார்.

கிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருப்பதே சபையின் சந்தோஷம். அவரோடு இன்னும் நெருக்கமான ஐக்கியத்திலிருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதை நினைத்து சபை அதிகமாய்ச் சந்தோஷப்படும். கிறிஸ்துவானவர் தங்களை கிட்டிச் சேருவதை உணரும்போது விசுவாசிகளுக்கு மிகுந்த சந்தோஷமும், ஆறுதலும் உண்டாகும்.

மணவாளன் மணவாட்டிக்கு அருகாமையில் வருகிறார். அவளுடைய செவிகளில் நேசருடைய சத்தம், தொனிக்கிறது. அதை அவள் உணர்ந்து "இது என் நேசருடைய சத்தம்'' என்று சந்தோஷமாய்ச் சொல்லுகிறாள். கிறிஸ்துவானவர் தாம் வருவதை அறிவிக்கிறார். மணவாட்டி கிறிஸ்துவின் வருகையைக் கேட்பது மாத்திரமல்ல, அவருடைய வருகையை காணவும் செய்கிறாள். தன்னுடைய நேசர் மலைகள்மேல் குதித்தும், மேடுகள் மேலும் துள்ளியும் வருகிறதை மணவாட்டி காண்கிறாள்.

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் வருகைக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவானவர் மாம்சத்தில் வெளிப்படுவார் என்று நம்பினார்கள். ஆபிரகாம் கிறிஸ்துவின் வருகையை, தன்னுடைய காலத்தில் தூரத்திலிருந்து தரிசித்தார். அதை நினைத்து சந்தோஷப்பட்டார். இஸ்ரவேலின் ஆறுதலுக்காகக் காத்திருந்தவர்கள் எல்லோருமே, தங்கள் விசுவாச கண்களால் கிறிஸ்துவின் வருகையைப் பார்த்தார்கள். அந்தக் காட்சியில் சந்தோஷப்பட்டார்கள்.

கிறிஸ்துவானவர் சந்தோஷத்தோடு வருகிறார். அவர் வெளிமானைப்போலவும், மரைக்குட்டியைப்போலவும் குதித்து ஓடிவருகிறார். மனுபுத்திரரை காணவேண்டுமென்று சந்தோஷமாய் வருகிறார். நாம் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்கிறோம். கிறிஸ்து தமக்குப் பிரியமானவர்களைத் தேடி ஓடிவருகிறார்.

கிறிஸ்து வரும்போது, அவர் வரும் பாதையில் பல இடறல்களும், தடங்கல்களும் இருக்கும். அவரோ எல்லா தடைகளையும் மேற்கொண்டு அவற்றைத் தாண்டி வருகிறார். கிறிஸ்துவானவர் மலைகள்மேல் குதித்தும், மேடுகள் மேல் துள்ளியும் வருகிறார். மலைகளாலும் மேடுகளாலும் கிறிஸ்துவின் வருகையைத் தடைபண்ண முடியவில்லை. கிறிஸ்துவானவர் மலைகளையும் மேடுகளையும் பார்த்து சோர்ந்துபோய்விடவில்லை. உற்சாகம் குறையாதவராக துள்ளியும் குதித்தும் வருகிறார்.

கிறிஸ்து வரும் பாதையில் நியாயப்பிரமாணத்தின் சாபங்கள் இருக்கிறது. கிறிஸ்துவுக்கு சிலுவை மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றையும் சந்திப்பதற்கு கிறிஸ்துவானவர் ஆயத்தமாய், சந்தோஷமாய் வருகிறார். ஜெயகிறிஸ்துவாக வருகிறார். கிறிஸ்து வரும்போது மலைகளும் மேடுகளும் சமபூமிகளாகும். கிறிஸ்துவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிற எதிர்ப்புக்களெல்லாம் நிர்மூலமாகும். கிறிஸ்து சத்துருவின் கைகளிலிருந்து தம்முடைய சபையை மீட்பதற்காக வருகிறார். சத்துரு கிறிஸ்துவுக்கு விரோதமாய் எத்தனை கோட்டைகளைக் கட்டியிருந்தாலும், அவைகளை நிர்மூலமாக்கும் வல்லமையோடு வருகிறார். கிறிஸ்துவின் வருகை தாமதமாகும் என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் அவரோ தாமதிக்காமல் சீக்கிரத்திலேயே வருகிறார். அவர் வெளிமானுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாக வேகமாய் ஓடிவருகிறார்.

என் நேசர் முகத்தைக் காண்பிக்கிறார் உன் 2:9

உன் 2:9. என் நேசர் வெளிமானுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறார்; இதோ, அவர் எங்கள் மதிலுக்குப் புறம்பே நின்று, பலகணி வழியாய்ப் பார்த்து, கிராதியின் வழியாய்த் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார்.

மணவாட்டி மணவாளனுடைய முகத்தைப் பார்க்கிறாள். இதனால் அவளுடைய சந்தோஷம் அதிகரிக்கிறது. "அவர் எங்கள் மதிலுக்கு புறம்பே நிற்கிறார்" என்று மணவாட்டி சொல்லுகிறாள். மணவாளன் தனக்கு அருகாமையிலிருப்பதை மணவாட்டி அறிந்துகொள்கிறாள். ஆனால் அவர் உள்ளே பிரவேசியாமல், அவர்களுடைய மதிலுக்குப் புறம்பே நிற்கிறார். பலகணி வழியாய்ப் பார்க்கிறார். கிராதியின் வழியாய் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மேசியாவின் வருகையைப்பற்றி இவ்வாறுதான் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் வருகையை அவர்கள் ஆவலாய் எதிர்பார்த்தார்கள். அவர் தங்களுக்கு சமீபமாய் வந்துவிட்டார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆனாலும் அவர்களால் மேசியாவைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. தங்களுக்கு அருகாமையிலிருக்கிறார் என்னும் நிச்சயம் அவர்களிடத்தில் இருந்தது. ஆனாலும் அவர்களால் அவரை பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியவில்லை. கிறிஸ்துவானவர் பலகணி வழியாகவும், கிராதியின் வழியாகவும் தமது முகத்தைக் காண்பிப்பதை மாத்திரமே அவர்களால் பார்க்க முடிந்தது.

பலகணிகள், கிராதிகள் ஆகியவை யூதமார்க்கத்து சடாங்காச்சாரங்களைக் குறிப்பிடுகிற வாக்கியம். யூதர்களுடைய பலிமுறைமைகளிலும் சுத்திகரிப்புக்களிலும் அவர்கள் மேசியாவைப் பார்த்தார்கள். தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டார்கள். கிறிஸ்துவின் நியமங்களில் மேசியாவின் பிரசன்னத்தை உணர்ந்தார்கள். நியமங்களில் மேசியாவைப் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியாது. அவரை பலகணி வழியாகவும், கிராதியின் வழியாகவும் பார்ப்பது போலவே பார்க்க முடியும்.

நியமங்களில் கிறிஸ்துவானவர் நமக்கு அருகாமையிலிருக்கிறார். ஆனாலும் அவர் நம்மோடு கூடயிராமல், நம்முடைய மதிலுக்குப் புறம்பே நிற்கிறார். நியமங்கள் புறம்பான அடையாளங்கள். நாம் இப்போது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை பலகணி வழியாகவும், கிராதியின் வழியாகவும் பார்ப்பதுபோலவே பார்க்கிறோம். சீக்கிரத்தில், நம்முடைய கர்த்தரை, அவர் இருக்கும் வண்ணமாய், முகமுகமாய்த் தரிசிப்போம்.

மாரிகாலம்
உன் 2:10-13

உன் 2:10. என் நேசர் என்னோடே பேசி: என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்துவா.

உன் 2:11. இதோ, மாரிகாலம் சென்றது, மழைபெய்து ஒழிந்தது.

உன் 2:12. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது; குருவிகள் பாடுங்காலம் வந்தது, காட்டுப்புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது.

உன் 2:13. அத்திமரம் காய்காய்த்தது; திராட்சக்கொடிகள் பூப்பூத்து வாசனையும் பரிமளிக்கிறது; என் பிரியமே! என் ரூபவதியே! நீ எழுந்துவா.

மணவாளன் மணவாட்டியை, "என் பிரியமே, என் ரூபவதியே" என்று அழைக்கிறார். மணவாளன் மணவாட்டியை அன்போடு அழைக்கும் அழைப்பு இரண்டு முறை சொல்லப்பட்டிருக்கிறது. மணவாட்டி, மணவாளனோடு கூட நடக்கவேண்டும். இதுவே மணவாளனின் விருப்பம். நாம் கிறிஸ்துவை நமக்குப் பிரியமானவராக ஏற்றுக்கொள்ளும்போது, நாமும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்கிறோம். கிறிஸ்து நமக்கு பிரியமானவராகயிருக்கும்போது, நாம் அவருக்கு சொந்தமானவராக இருக்கிறோம். கிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கிற அன்பு ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. நம்முடைய அன்பு காணாமல்போவதுமில்லை. நாம் கிறிஸ்துவின்மீது அன்புகூரும்போது, அவர் நம்மீது அன்புகூருகிறார்.

கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியைப் பார்த்து, "என் பிரியமே, என் ரூபவதியே, எழுந்துவா" என்று அழைக்கிறார். இதே வாக்கியத்தை மறுபடியுமாக சொல்லி அழைக்கிறார் (உன் 2:13). மணவாட்டி தன்னிடத்தில் திரும்பி வரவேண்டும் என்பதற்கான காரணத்தையும் மணவாளன் சொல்லுகிறார். வசந்தகாலம் வந்திருக்கிறது. வசந்தத்தின் சந்தோஷம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. மாரிகாலம் முடிந்துவிட்டது. மழை பெய்து ஒழிந்துவிட்டது. வசந்தகாலம் வந்திருக்கிறது. வசந்தத்தின் இனிமையை அனுபவிப்பதற்காக, மணவாட்டியை எழுந்து வருமாறு மணவாளன் அழைக்கிறார்.

மாரிகாலம் என்பது இருளான காலம். குளிர்மிகுந்த காலம். குளிர்காலத்தில் எல்லாம் பட்டுப்போகும். அதிகமான குளிரை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. குளிர்காலத்திற்குப் பின்புதான் வசந்த காலம் வரும். குளிர்காலத்தில் கஷ்டப்பட்டவர்கள் தான் வசந்தகாலத்தின் இனிமையைப் பூரணமாய் அனுபவிப்பார்கள். குளிர்காலம் இல்லையென்றால் வசந்தகாலத்தின் இனிமை நமக்குத் தெரியாது.

"வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வுகாலத்தில் சிந்தனைசெய்; மனுஷன் தனக்குப்பின் வருவதொன்றையும் கண்டுபிடியாதபடிக்கு தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்" (பிர 7:14).

மழை பெய்து ஒழிந்தது. இது குளிர்காலத்து மழை. இது புயற்காற்றோடு வரும். சீதோஷ்ணம் மிகவும் குளிர்ச்சியாகயிருக்கும். அப்படிப்பட்ட மழைகாலம் முடிந்துவிட்டது. இப்போது வசந்தகாலம் ஆரம்பமாயிருக்கிறது. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது. பயிர்கள் எல்லாம் பசுமையாயிருக்கிறது. பசும்புல்லின் மீது பனித்துளிகள் பெய்திருக்கிறது. மாரிகாலம் முழுவதிலும் செடிகள் பட்டுப்போயிருந்தன. அவை மரித்துப்போனது போன்று இருந்தன. அவற்றின் வேர்களும் கிழங்குகளும் பூமிக்கடியில் புதைந்து கிடந்தன. அவை இருப்பதற்கான அடையாளம்கூட வெளியே தெரியவில்லை. வசந்தகாலத்திலோ அவை மறுபடியும் முளைத்து எழும்புகின்றன. பூமியிலே மறுபடியும் புஷ்பங்கள் காணப்படுகிறது. அவை பார்ப்பதற்கு அழகாகயிருக்கிறது. மனதிற்கு ரம்மியமாகயிருக்கிறது.

குருவிகள் பாடும் காலம் வந்தது. இவையெல்லாம் சிறிய பறவைகள். குளிர்காலத்தின் குளிரை தாங்க முடியாமல் இந்தக் குருவிகள் எங்கேயோ ஒழிந்து ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தது. குளிர் அதிகமாயிருந்ததினால், குருவிகளால் தங்கள் வாயைத் திறக்க முடியவில்லை. பாடமுடியவில்லை. இப்போதோ வசந்த காலம் வந்திருக்கிறது. மாரிகாலம் சென்றது. மழை பெய்து ஒழிந்தது. வசந்தகாலத்தின் இனிமையில், குருவிகள் மாரிகாலத்தின் குளிரை மறந்து, இப்போது சந்தோஷமாய்ப் பாடுகிறது. குருவிகளும் தங்களுடைய சிருஷ்டிகரை நன்றியோடு துதிக்கிறது.

"அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்" (சங் 147:9). "அவைகளின் ஓரமாய் ஆகாயத்துப்பறவைகள் சஞ்சரித்து, கிளைகள்மேலிருந்து பாடும்" (சங் 104:12). "ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த்தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்" (எரே 8:7).

சாதாரண குருவிகளுக்குக்கூட வசந்தகாலம் வருவது தெரிகிறது. தாங்கள் பாடும் காலத்தை அவை அறிந்திருக்கிறது. மனுபுத்திரராகிய நாமோ காலத்தை அறியாதவர்களாயிருக்கிறோம். கர்த்தரைத் துதித்து பாடவேண்டிய காலத்தில், பாடாமல் மௌனமாயிருக்கிறோம். பாடும் காலம் குருவிகளுக்குத் தெரிவதுபோல காட்டுப்புறாக்களுக்கும் தெரிகிறது. வசந்தகாலத்தில் காட்டுப்புறாவின் சத்தம் தேசத்தில் கேட்கப்படுகிறது.

அத்திமரம் காய் காய்த்தது. கோடைகாலத்தில் அத்திமரம் காய் காய்க்கும். அத்திமரம் காய் காய்க்கும்போது கோடைகாலம் வரப்போகிறது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். தேவனுடைய ஜனங்களுக்கு பழைய ஏற்பாட்டுக்காலம் மாரிகாலத்தைப்போல குளிர்காலமாகவும், மழைபெய்கிற காலமாகவும் இருந்தது. கிறிஸ்துவின் வருகையோ அவருடைய ஜனங்களுக்கு வசந்தகாலமாயிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் மாரிகாலத்தின் குளிரை நீக்கிப்போடுகிறது. நமது ஆத்துமாவிற்குள் அக்கினி தழலை அனுப்பி அனல் மூட்டுகிறது.

கிறிஸ்துவின் சுவிசேஷம் நமக்குள் வரும்போது, இதுவரையிலும் கனிகொடாதிருந்த நம்முடைய ஜீவியம், இப்போது கனிகொடுக்க ஆரம்பிக்கிறது. இதுவரையிலும் புஷ்பங்கள் இல்லாமல், அழகில்லாமல் இருந்த நம்முடைய ஜீவியம் இப்போது புஷ்பங்களோடு அழகாகயிருக்கிறது. மரித்துப்போயிருந்த நம்முடைய ஜீவியம் இப்போது மறுபடியும் உயிர்பெற்றிருக்கிறது. கிறிஸ்து எங்கே இருக்கிறாரோ அங்கே ஜீவனிருக்கும்.

"எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டான படியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே. ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?" (2கொரி 3:7,8).

வசந்தகாலம் சந்தோஷமான காலம். இது ஆனந்தமான காலம். சுவிசேஷ காலமும் வசந்தகாலத்தைப்போலவே இன்பமான காலம். சத்துரு கிறிஸ்துவின் சபையைத் துன்புறுத்துகிறான். விசுவாசிகளுக்கு பாடுகளையும் வேதனையையும் கொடுக்கிறான். சாத்தானுடைய ஆளுகையின் காலம் மாரிகாலம்போல இருக்கிறது. மாரிகாலத்திற்குப் பின்பு வசந்தகாலம் வருவதுபோல, சத்துருவினுடைய சோதனையைத் தொடர்ந்து, கிறிஸ்துவில் நமக்கு ஜெயம் கிடைக்கும். நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறும். நம்முடைய கவலைகள், கண்ணீர்கள் எல்லாம் நம்மைவிட்டு நீங்கும்.

நம்முடைய துன்பங்களும், வேதனைகளும், வருத்தங்களும், நம்மைவிட்டு நீங்கிப்போனபின்பு நம்முடைய பாடல், காட்டுப்புறாவின் சத்தத்தைப்போல, நம்முடைய தேசத்தில் கேட்கப்படவேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷம் சந்தோஷமான சத்தம். இதை நாம் திரும்பத் திரும்பக் கேட்கலாம். கிறிஸ்துவின் பிரமாணத்தில் அடிமைத்தனமில்லை. சந்தோஷமான சுவிசேஷத்தைப் பாடுவதற்கு, "என் பிரியமே, என் ரூபவதியே, நீ எழுந்து வா" என்று மணவாளன் தம்முடைய மணவாட்டியை அழைக்கிறார்.

நாம் கர்த்தருக்குப் புதுபாட்டை பாட எழுந்துவரவேண்டும். கர்த்தருடைய வழிகளில் நடந்துசென்று, சுவிசேஷத்தின் கீதங்களை சந்தோஷமாய்ப் பாடவேண்டும். திருச்சபை ஒய்ந்திருக்கும்போது, அதற்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கவேண்டும். "அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப் 9:31).

பாவிகள் மனந்திரும்புவது, மாரிகாலம் சென்று, மழை பெய்து ஒய்ந்து, வசந்தகாலம் வருவதற்கு ஒப்பாயிருக்கிறது. வசந்தகாலத்திற்கும் மாரிகாலத்திற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளது. வசந்தகாலத்தில் எல்லாம் புதிதாயிருக்கும். ஒருவர் கிறிஸ்துவுக்குள் வரும்போது அவருக்கு எல்லாம் புதிதாயிருக்கும். பழையவையெல்லாம் ஒழிந்துபோகும். இரட்சிக்கப்படுகிறவர் மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக ஒருவருடைய ஆத்துமா, மாரிகாலத்தைப்போல கடினமாக இருக்கும். அதிக குளிராகயிருக்கும். பனியில் உறைந்து போயிருக்கும். பிரயோஜனமற்றதாக இருக்கும். குளிர்காலத்து பூமியைப்போல அதில் ஒன்றும் முளைத்து எழும்பாது. அவர் இரட்சிக்கப்பட்ட பின்போ, அவருடைய ஆத்துமா வசந்தகாலம் போல கனிகொடுக்கும். பூமியில் புல் முளைத்து பசுமையாயிருப்பதுபோல அவருடைய ஆத்துமாவும் பசுமையாயிருக்கும். இரட்சிக்கப்பட்டவர் தன் ஜீவியத்தில் ஆவியின் கனிகளைக் கொடுப்பார்.

ஆத்துமாவில் மாற்றமுண்டாவதற்கு நீதியின் சூரியனாகிய தேவனே காரணராகயிருக்கிறார். அவரால் மாத்திரமே மனுஷருடைய ஆத்துமாவிற்குள் மாற்றத்தை உண்டுபண்ண முடியும். தேவனுடைய அநுக்கிரகமில்லாமல், நம்முடைய சுயமுயற்சியினால், நமக்குள் ஒரு மாற்றமும் உண்டாகாது.

ஒருவர் சந்தேகத்திலும், பயத்திலும் இருக்கும்போது அவர் மாரிகாலத்திலிருக்கிற பூமியைப்போல இருக்கிறார். மாரிகாலத்தில் சூரியவெளிச்சம் அதிக நேரம் இருக்காது. மேகமும், மப்பும், மந்தாரமும், இருளும் அதிகநேரம் இருக்கும். அதுபோலவே அவிசுவாசியின் இருதயத்தில், பயமும் கவலைகளும், நெருக்கங்களும் வேதனைகளும் அதிகமாயிருக்கும். நாம் இப்போது மாரிகாலத்திலிருந்தாலும், நமக்கு வசந்தகாலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நியமித்திருக்கிற வசந்தகாலம் நம்முடைய ஜீவியத்தில் சீக்கிரமாய் வரப்போகிறது. அப்போது நாம் இழந்துபோன சந்தோஷத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம். நம்மைவிட்டு விலகிப்போன ஆறுதல் நமக்குத் திரும்பக் கிடைக்கும்.

வசந்தகாலத்தில் குருவிகள் மறுபடியும் பாடும். காட்டுப்புறாவின் சத்தம் மறுபடியும் கேட்கப்படும். பூமியிலே புஷ்பங்கள் காணப்படும். அத்திமரத்தில் காய் காய்க்கும். திராட்சக்கொடிகள் பூ பூக்கும். அதன் வாசனை பரிமளமாயிருக்கும். வசந்தகாலத்தின்தான் இந்த மேன்மையான ஆசீர்வாதங்களை நாம் காணமுடியும். நாம் கிறிஸ்துவின் சமுகத்தில் வரும் காலமே நமக்கு வசந்தகாலம். கிறிஸ்துவைவிட்டு நாம் விலகி ஜீவிக்கிற காலம் நம்முடைய மாரிகாலம். கர்த்தர் தம்முடைய வசந்தகாலத்திற்கு வருமாறு நம்மை அழைக்கிறார். "என் பிரியமே, என் ரூபவதியே, நீ எழுந்து வா" என்று நம்மை அன்போடு அழைக்கிறார்.

நாம் கர்த்தருடைய அழைப்பை ஏற்று, கர்த்தரிடத்தில் எழும்பிப்போகவேண்டும். நம்முடைய ஆத்துமா வேதனையிலும், வியாகுலத்திலும் இருந்தாலும், கர்த்தருடைய அழைப்பை ஏற்று, அவரிடத்திற்குப் போகும்போது, நம்முடைய ஆத்துமாவுக்கு ஆறுதலும், சமாதானமும் கிடைக்கும். கர்த்தரிடத்தில் வருகிற உலர்ந்த எலும்புகள் உயிரடையும். பூமிக்கடியில் பட்டுப்போயிருக்கிற தாவரங்கள் வசந்தகாலத்தில் மறுபடியும் முளைத்து எழும்புவதுபோல, நாம் கர்த்தருக்குள் வரும்போது, நமக்கு புதிய ஜீவன் கிடைக்கும். பழையவை ஒழிந்துபோகும்.

"நீங்கள் அதைக் காணும்போது, உங்கள் இருதயம் மகிழ்ந்து, உங்கள் எலும்புகள் பசும்புல்லைப்போலச் செழிக்கும்; அப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும்" (ஏசா 66:14).

"மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின் மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்" (ஏசா 26:19).

இயற்கையில் மாரிகாலமும் வசந்தகாலமும் மாறி மாறி வரும். மழை பெய்து ஒழிந்தால் வசந்தகாலம் வரும். வசந்தகாலம் முடிந்தால் மறுபடியும் மாரிகாலம் வரும். ஆனால் நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது நமக்கு மறுபடியும் மாரிகாலமும், மழைகாலமும் வரப்போவதில்லை. நமக்கு நித்திய வசந்தகாலம் உண்டாயிருக்கும். இன்று காணும் எகிப்தியனை நீ இனிமேல் காணமாட்டாய் என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். நாம் இப்போது அனுபவிக்கிற மாரிகாலத்தையும், மழைகாலத்தையும் இனிமேல் அனுபவிக்கமாட்டோம்.

தேவனுடைய வசந்தகாலத்தில் பிரவேசித்திருக்கிற நாம், நித்தியகாலமாய் வசந்தத்தில் தங்கியிருப்போம். தேவனுடைய வசந்தகாலம் நித்திய வசந்தகாலமாயிருக்கிறது. கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்திருக்கிற நமக்கு என்றும் ஆனந்தம். இந்த ஆனந்தத்தை, சந்தோஷத்தை, ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, நம்முடைய ஆத்தும நேசர், நம்மை, "நீ எழுந்து வா" என்று அன்போடு அழைக்கிறார்.

என் புறாவே
உன் 2:14

உன் 2:14. கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே! உன் முகரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்பமும், உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது என்றார்.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபைக்கு, தம்முடைய அன்பான அழைப்பைக் கொடுக்கிறார். கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் இந்த அழைப்பு கொடுக்கப்படுகிறது. விசுவாசிகளெல்லோருமே கிறிஸ்துவினிடத்தில் ஐக்கியமாகயிருப்பதற்கு அழைக்கப்படுகிறார்கள். தாவீது கிறிஸ்துவின் சபையை "காட்டுப்புறா" என்று அழைக்கிறார் (சங் 74:19). இதே வார்த்தையே இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

புறா அழகானது. அது பிறருக்குத் தீங்கு நினையாது. புறாவினிடத்தில் கள்ளம் கபடம் எதுவும் இருக்காது. கிருபையுள்ள ஆவி புறாவைப்போன்ற ஆவியாகயிருக்கிறது. புறா சுத்தமாகயிருக்கும். அமைதியாகயிருக்கும். ஆரவாரம்பண்ணாது. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் புறாவைப்போல கள்ளம் கபடமற்றவர்களாகயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவானவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறினபோது ஆவியானவர் புறாவின் ரூபங்கொண்டு அவர்மீது வந்திறங்கினார். அதுபோலவே இப்போது எல்லா விசுவாசிகள்மீதும் வந்து இறங்குகிறார். நம்முடைய ஆவியை அமைதலான ஆவியாகவும் மனத்தாழ்மையுள்ள ஆவியாகவும் மாற்றுகிறார்.

புறா கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்கியிருக்கும். கிறிஸ்துவே கன்மலையாகயிருக்கிறார். அந்தக் கன்மலையினிடத்திற்கு மணவாட்டியானவள் அடைக்கலம் பெறுவதற்காக பறந்துபோகிறாள். ஒரு புறா கன்மலையின் வெடிப்புகளில் தங்குவதுபோல, கிறிஸ்துவின் சபையார் கன்மலையாகிய கிறிஸ்துவிடம் அடைக்கலம் தேடி தங்குவதற்காகப் போகிறார்கள். புறாவுக்குப் பாதுகாப்பு தேவை. சிகரங்களின் மறைவிடங்களில் தங்கியிருக்கும்போது புறாவுக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

"மோவாப் தேசத்தின் குடிகளே, நீங்கள் பட்டணங்களை விட்டுப்போய், கன்மலையில் தங்கி, குகையின் வாய் ஓரங்களில் கூடுகட்டுகிற புறாவுக்கு ஒப்பாயிருங்கள்" (எரே 48:28). புறா தனிமையாகயிருக்கும்போது, தன்னுடைய இருதயத்தோடு, தனக்குத்தானே பேசிக்கொள்ளும். கிறிஸ்துவானவர் பல சமயங்களில் வனாந்தரமான இடத்திற்கு ஜெபம்பண்ணுவதற்காக தனியே போனார். புறாவும் சிகரங்களின் மறைவிடங்களில் தனியாகத் தங்கியிருக்கும். விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருடைய பரிசுத்த சமுகத்தில் தனிமையாகத் தங்கியிருப்பதை நாடவேண்டும்.

கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியிடம் "உன் முகரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்" என்று சொல்லுகிறார். மணவாட்டியின் சத்தம் இன்பமாயிருக்கிறது என்றும், அவளுடைய முகரூபம் அழகாயிருக்கிறது என்றும் மணவாளன் வர்ணிக்கிறார். விசுவாசிகளுடைய ஜெபதொனியும், துதியின் சத்தமும் கர்த்தருடைய செவிக்கு இன்பமாயிருக்கிறது.

குழிநரிகளும் சிறுநரிகளும்
உன் 2:15

உன் 2:15. திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே.

கிறிஸ்துவின் சபைக்கு விரோதமாக சில தீயசக்திகள் எழும்பியிருக்கின்றன. அவை சபையை பயமுறுத்துகிறது. அவற்றைப் பிடித்து அடக்கி ஒடுக்கவேண்டுமென்று கிறிஸ்து தம்முடைய ஊழியக்காரருக்குக் கட்டளை கொடுக்கிறார். திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள் என்று சொல்லுகிறார். இவை தேவனுடைய திராட்சத்தோட்டத்திற்குள் அனுமதியில்லாமல் பிரவேசித்தவை. இவற்றிற்கு நல்ல நோக்கமில்லை. இவை சிறுநரிகளாகயிருந்தாலும், உருவத்தில் சிறியவையாகயிருந்தாலும், திராட்சக்கொடிக்கு பாதிப்பு உண்டுபண்ணும்.

கர்த்தருடைய திராட்சத்தோட்டங்கள் இப்போது பூவும் பிஞ்சுமாகயிருக்கிறது. இவற்றை அதிகமாய் பாதுகாத்து பராமரிக்கவேண்டும். பூவையும் பிஞ்சையும் சரியாக பராமரிக்கவில்லையென்றால் அவை கனிதராது. நரிகள் அவற்றைத் தின்றுபோடும். விசுவாசிகள் திராட்சக்கொடிகளைப்போல இருக்கிறார்கள். அவர்களுடைய கனிகள் ஆரம்பத்தில் பூவும் பிஞ்சுமாகயிருக்கிறது. இவை வளர்ந்து முதிர்ச்சி பெறுவதற்கு சற்று காலமாகும். அது வரையிலும் நாம் திராட்சத்தோட்டத்தைப் பாதுகாக்கவேண்டும்.

குழிநரிகளையும் சிறுநரிகளையும் பிடியுங்கள் என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவையாவன:

1. கர்த்தர் தம்முடைய விசுவாசிகளுக்கு இந்தக் கட்டளையைக் கொடுகிறார். விசுவாசிகள் தங்களுடைய பாவமான இச்சைகளையும், பாவமான ஆசைகளையும், பாவமான கிரியைகளையும் சிலுவையில் அறையவேண்டும். அவை சிறுநரிகளைப் போலவும், குழிநரிகளைப்போலவும் இருக்கிறது. இந்தப் பாவமான இச்சைகள் விசுவாசிகளுடைய ஆவிக்குரிய ஜீவியத்தையே கெடுத்துப்போடும். தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற கிருபைகளை அளித்துப்போடும். நல்ல ஆரம்பத்தை அடியோடு நாசம்பண்ணிவிடும். அவர்கள் விசுவாசத்தில் வளர்ந்து பூரணமாவதை தடைபண்ணிப்போடும்.

சிறுநரிகளைப் பிடிக்கவேண்டும். பாவமான சிந்தனை மனதில் தோன்றும்போதே அவற்றை சிலுவையில் அறைந்துவிடவேண்டும். அந்தப் பாவம் சிறுநரிகளைப்போல ஆரம்பத்தில் சிறியதாகயிருக்கும். அவற்றை ஆரம்பத்திலேயே பிடிக்கவில்லையென்றால், சிறுநரி பெருநரியாக வளர்ந்துவிடும். பெரிய நரியைப் பிடிப்பது கடினம். பெரியநரியினால் உண்டாகும் ஆபத்து மிகவும் அதிகமாயிருக்கும்.

2. கிறிஸ்துவின் சத்தியத்திற்கு விரோதமாக, மாறுபாடான உபதேசங்களைப் போதிக்கிறவர்கள் சிறுநரிகளாகவும், குழிநரிகளாகவும் இருக்கிறார்கள். இவர்கள் கள்ளக்கிறிஸ்துக்களாகவும், கள்ளத்தீர்க்கதரிசிகளாகவும் கிறிஸ்துவின் சபையில் பிரவேசித்திருக்கிறார்கள். இவர்களுக்கு எதிர்த்து நிற்கவேண்டும் என்றும், இவர்களுடைய கள்ள உபதேசங்கள் விசுவாசிகள் மத்தியில் பரவாதபடி தடைபண்ணவேண்டும் என்றும் கிறிஸ்துவானவர் எல்லா விசுவாசிகளுக்கும் கட்டளை கொடுக்கிறார்.

கள்ளக்கிறிஸ்துக்கள் விசுவாசிகளின் நல்மனச்சாட்சியைக் கெடுத்துப் போடுகிறார்கள். அவர்களுடைய மனதின் சிந்தனைகளைக் கறைப்படுத்திவிடுகிறார்கள். அவர்களுடைய விசுவாசத்தைப் பலவீனப்படுத்துகிறார்கள். விசுவாசிகள் கர்த்தரைப் பின்பற்றி, ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியடையாதபடி அவர்களுக்கு தடைக்கற்களைப்போல இருக்கிறார்கள். விசுவாசிகளைத் துன்பப்படுத்துகிறவர்கள் நரிகளைப் போன்றவர்கள் (லூக் 13:32). கள்ளத்தீர்க்கதரிசிகளும் நரிகளைப் போன்றவர்களே (எசே 13:4).

இவர்கள் தேவதூஷணத்தைப் பரப்புகிறார்கள். நல்ல விதைகளுக்கு மத்தியில் களைகளை விதைக்கிறார்கள். மனுஷருடைய உபதேசங்களை தேவனுடைய உபதேசங்களாக திரித்து சொல்லுகிறார்கள். சுவிசேஷத்தின் முன்னேற்றத்திற்கு தடைபண்ணுகிறார்கள். இவர்கள் சிறுநரிகளும், குழிநரிகளுமாக திராட்சத்தோட்டத்திற்கு சேதம் விளைவிக்கிறார்கள். இப்படிப்பட்ட நரிகளைப் பிடிக்கவேண்டும். இவை திராட்சத்தோட்டத்தை அழித்துப்போடாதவாறு, ஆரம்பத்திலேயே இவற்றைப் பிடித்து அழித்துப்போட வேண்டும். இவற்றை நாம் அழித்துப்போடவில்லையென்றால், இவை நம்மை அழித்துப்போடும்.

என் நேசர் என்னுடையவர் உன் 2:16

உன் 2:16. என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள். அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்.

கிறிஸ்துவுக்கும் தனக்குமுள்ள உறவை சபையாகிய மணவாட்டி சாட்சியாக அறிவிக்கிறாள். சபை கிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருக்க விரும்புகிறது. கிறிஸ்துவைத் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள வாஞ்சையாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியைப் பார்த்து, "என் பிரியமே, என் ரூபவதியே, நீ எழுந்து வா" என்று அழைத்தார். கிறிஸ்துவின் அழைப்புக்கு பிரதியுத்தரம் சொல்லும் வண்ணமாக மணவாட்டி இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறாள். தனக்கும் தன்னுடைய ஆத்தும நேசருக்கும் இடையேயுள்ள ஐக்கியத்தை நினைவுகூர்ந்து, மணவாட்டி தன்னுடைய இருதயத்தில் ஆறுதலடைகிறாள். "என் நேசர் என்னுடையவர்" என்றும், "நான் அவருடையவள்" என்றும் சந்தோஷமாய்ச் சொல்லுகிறாள்.

விசுவாசிகள் கிறிஸ்துவுக்குரியவர்கள். கிறிஸ்துவோடுகூட அவருடைய சுதந்தரத்திற்கு பாத்திரமானவர்கள். நாம் கிறிஸ்துவோடுகூட உடன்படிக்கையில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவரோடு ஐக்கியமாயிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவானவர் சுவிசேஷத்தில் வாக்குப்பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்களெல்லாவற்றிற்கும், அவருடைய சபையார் சுதந்தரவாளிகளாக இருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் பரலோகத்தில் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கே உரியவை. நாம் அவருடையவர்கள். அவர் நம்முடையவர்.

கிறிஸ்துவின் கிருபை அவருடைய பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் தம்முடைய விசுவாசிகளோடு ஐக்கியமாகயிருக்கிறார். கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும் இடையேயுள்ள ஐக்கியத்தை நினைவுகூர்ந்து, மணவாட்டி தன்னைத்தானே ஆறுதல் செய்துகொள்கிறாள். தன்னுடைய நேசர் லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார் என்று மணவாட்டி சொல்லுகிறாள். கிறிஸ்துவானவர் தம்முடைய விசுவாசிகளுக்குள்ளே மேய்கிறார். தம்முடைய விசுவாசிகளிடத்திலும், தம்முடைய சபையிலும் கிறிஸ்துவானவர் சந்தோஷமாயிருக்கிறார். விசுவாசிகளே கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்கள். கிறிஸ்துவின் சபையே அவருக்குப் பிரியமானது.

என் நேசர் உன் 2:17

உன் 2:17. என் நேசரே! பகல் குளிர்ச்சியாகி, நிழல் சாய்ந்துபோகும்வரைக்கும், நீர் திரும்பி, குன்றும் பிளப்புமான கன்மலைகளில் குதித்துவரும் கலைமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்.

உயிர்த்தெழுந்து வானத்திற்கு பரமேறிப்போன இயேசுகிறிஸ்து, மறுபடியும் இந்த உலகத்திற்கு வருவார். இதுவே சபையின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாயிருக்கிறது. கிறிஸ்து வருவார் என்பதில் சபையாருக்கு சிறிதும் சந்தேகமில்லை. ஆனாலும் அவருடைய வருகையின் நாள் எப்போது இருக்கும் என்பது நமக்கு பிரத்தியட்சமாய் அறிவிக்கப்படவில்லை. அந்த நாளுக்காக நாம் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்து வரும்போது நம்மைச் சுற்றிலுமிருக்கிற மேகங்களெல்லாம் நம்மை விட்டு நீங்கிப்போகும். அப்போது அனைத்தும் பிரத்தியட்சமாகவும், பிரகாசமாகவும் நமக்கு விளங்கும்.

சுவிசேஷத்தின் நாள் பகல் பொழுதைப்போல இருக்கும். அது சூரியன் உதிக்கும் காலைப்பொழுதைப்போல இருக்கும். சூரியன் உதிக்கும்போது இருள் நீங்கிப் போகிறது. அதுபோலவே கிறிஸ்துவானவர் இந்த உலகத்திற்கு மறுபடியும் வரும்போது நம்மைச் சூழ்ந்திருக்கிற சந்தேகங்களும், அவிசுவாசங்களும் நம்மை விட்டு நீங்கிப்போகும்.

கிறிஸ்துவானவர் இந்த உலகத்திற்கு மறுபடியும் வரும்போது பழைய ஏற்பாட்டு பாரம்பரிய பிரமாணங்களெல்லாம் நம்மை விட்டு நீங்கிப்போகும். இதுவே பழைய ஏற்பாட்டு சபைக்கு மிகப்பெரிய ஆறுதல். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிச்சயமாய் வரும். அது கர்த்தருடைய பரிசுத்தவான்களெல்லோருக்கும் நித்திய மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்கிற நாளாயிருக்கும்.

கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையில் வருவதற்கு முன்பாகவே, கர்த்தருடைய பிரசன்னம் தம்முடைய பிள்ளைகளோடு கூடயிருந்து, அவர்களுக்கு ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருக்கவேண்டும் என்று மணவாட்டி விரும்புகிறாள். "என் நேசரே, நீர் திரும்பி வாரும்" என்று அன்போடு கூப்பிடுகிறாள். திரும்பி வந்து தன்னைச் சந்திக்குமாறு அழைக்கிறாள். முடிவுபரியந்தம் தன்னோடு கூடயிருக்குமாறு வேண்டிக்கொள்கிறாள். "பகல் குளிர்ச்சியாகி, நிழல் சாய்ந்துபோகும் வரைக்கும்" என்னும் வார்த்தைக்கு, "நித்தியகாலம்" என்று பொருள். இந்தக் காலத்தின் முடிவு வரையிலும் தன்னுடைய நேசர் தன்னோடு கூடயிருக்க வேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள்.

குன்றும் பிளப்புமான கன்மலைகளில் கலைமானும், மரைகளின் குட்டியும் குதித்து வரும். அதுபோலவே தன்னுடைய நேசர் குதித்து வரவேண்டுமென்று கிறிஸ்துவின் சபையார் விரும்புகிறார்கள். கிறிஸ்துவின்மீது அன்பாயிருக்கிறவர்கள் அவருடைய வருகையை ஆவலாய் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். "கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று அன்போடு அழைக்கிறார்கள்.

3 அதிகாரம்

மணவாளனும் மணவாட்டியும் பிரிந்திருக்கிறார்கள். இதனால் மணவாட்டிக்கு மிகுந்த மனவேதனை உண்டாயிற்று. மணவாட்டி தன் ஆத்தும நேசரைக் தேடிக் கண்டுபிடிக்கிறாள் (உன் 3:1-5) எருசலேமின் குமாரத்திகள் சபையின் அழகையும் நேர்த்தியையும் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள் (உன் 3:6). சபையார் இயேசுகிறிஸ்துவின் அழகையும், பெலத்தையும், ஞானத்தையும் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். இதை விவரிப்பதற்கு சாலொமோனுடைய மஞ்சம், அவருடைய சவுரியவான்கள், (உன் 3:7,8) சாலொமோனுடைய இரதம் (உன் 3:9-11) ஆகியவை எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிறது.

என் ஆத்தும நேசரைத் தேடினேன்
உன் 3:1

உன் 3:1. இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை.

பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்கள் சடங்காச்சார பிரமாணங்களில் இயேசுகிறிஸ்துவைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள். அது அவர்களுக்கு மிகவும் கடினமாயிருந்தது. மேசியா வருவதற்கு முன்பாக, அவரைப்பற்றிய தியானம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலாயிருந்தது. தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட மேசியா சீக்கிரத்தில் வருவார் என்று யூதர்கள் ஆவலாய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். தங்களுடைய சடங்காச்சார பிரமாணங்கள் மூலமாய் மேசியாவைத் தேடிப் பார்த்தார்கள்.

காலம் நிறைவேறின போது இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் மனுஷராக அவதரித்தார். சிமியோன் தேவாலயத்திலிருந்த போது, இயேசுகிறிஸ்துவின் பெற்றோர், இயேசு பாலகனை தேவாலயத்திற்கு அழைத்து வந்தார்கள். சிமியோன் இயேசு பாலகனை தன்னுடைய கைகளில் ஏந்திக்கொண்டு சந்தோஷப்பட்டார். மேசியாவின் வருகை ஏற்கெனவே வாக்குப்பண்ணப்பட்டிருந்தாலும், காலம் நிறைவேறியபோதுதான் மேசியா வந்தார். மேசியாவின் வருகைக்காக இஸ்ரவேல் ஜனத்தார் நீண்டகாலமாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அதுவரையிலும் அவர் இருளில் நடந்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்களைப்போலவே, இக்காலத்திலும் ஏராளமான விசுவாசிகள், இயேசுகிறிஸ்துவைப் பார்க்க முடியாமல் இருளில் நடக்கிறார்கள். தம்மைத் தேடுகிறவர்கள் கண்டடைவார்கள் என்று இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவைக் கண்டுபிடிப்பதில் காலதாமதம் ஏற்படலாம். ஆனாலும் நாம் அவரைத் தேடுவதை நிறுத்திவிடக்கூடாது. தொடர்ந்து தேடிக்கொண்டேயிருக்கவேண்டும்.

மணவாட்டி இராக்காலங்களில், தன்னுடைய படுக்கையிலே, தன்னுடைய ஆத்தும நேசரைத் தேடுகிறாள். அவர் அங்கு இல்லை. மணவாட்டி படுக்கையில் நன்றாய்த் தேடிப்பார்க்கிறாள். தேடியும் அவள் அவரைக் காணவில்லை. மணவாட்டி மணவாளனோடு ஐக்கியமாயிருந்தாள். அந்த ஐக்கியம் தனக்கு தேவைப்படுவதை உணர்ந்து மணவாளனைத் தேடிப்பார்க்கிறாள். இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியத்திலிருந்தவர்கள், அவரோடு எப்போதும் ஐக்கியத்திலிருக்க வேண்டுமென்று விரும்புவார்கள்.

தாவீதின் ஆத்துமா தேவன்மீது தாகமாயிருந்தது. தேவனே ஜீவனுள்ளவர். அவரை நாம் வாஞ்சையோடு தேடும்போது, நிச்சயமாகவே அவரை நம்மால் கண்டுபிடிக்க முடியும். தன்னுடைய ஆத்தும நேசரை எப்படியாவது தேடிக்கண்டு பிடித்துவிடலாமென்று நினைத்து, மணவாட்டி அவரை வாஞ்சையாய்த் தேடுகிறாள். ஆத்தும நேசரின் அடையாளத்தைக்கூட மணவாட்டியால் பார்க்க முடியவில்லை. ஆனாலும் அவள் தன்னுடைய ஆத்தும நேசரை தேடுவதை நிறுத்திவிடவில்லை. தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறாள். வாஞ்சையாய்த் தேடியும் அவளால் தன்னுடைய ஆத்தும நேசரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளுடைய முயற்சிகளில் தோல்வி உண்டாயிற்று.

நான் எழுந்து தேடுவேன் உன் 3:2

உன் 3:2. நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து, என் ஆத்தும நேசரைத் தேடுவேன் என்றேன்; தேடியும் நான் அவரைக் காணவில்லை.

மணவாட்டி தன்னுடைய ஆத்தும நேசரைத் தேடியும், அவரை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. பல இடங்களிலும் அவரைத் தேடிப்பார்க்கிறாள். தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளுடைய முயற்சிகளெல்லாம் வீணாய்ப்போயிற்று. அவளுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று. மணவாட்டி ஏமாற்றத்தினால் சோர்ந்து போய்விடவில்லை. இன்னும் தேட வேண்டுமென்று தீர்மானத்தோடிருக்கிறாள். தன்னுடைய ஆத்தும நேசரைத் தேடுவதற்காக மணவாட்டி இப்போது எழும்புகிறாள்.

தன்னுடைய ஆத்தும நேசரைக் கண்டுபிடிக்கும் வரையிலும், மணவாட்டி தன்னுடைய படுக்கையில் தனிமையாகப் படுத்திருக்க விரும்பவில்லை. ஆத்தும நேசரைக் கண்டுபிடிக்காமல் தான் மாத்திரம் தன்னுடைய படுக்கையில் படுத்திருப்பது தனக்கு இன்பமானதல்ல என்பதைப் புரிந்துகொள்கிறாள். ஆத்தும நேசரை எப்படியும் கண்டுபிடித்துவிடவேண்டும் என்று தீர்மானித்து, காலதாமதம் பண்ணாமல் எழும்புகிறாள். அவரைத் தேடுவதற்காக பல இடங்களுக்கும் உடனே புறப்பட்டுப்போகிறாள். மணவாட்டி காலதாமதம் பண்ணினால், மணவாளன் அவளை விட்டு இன்னும் தூரமாய் விலகிப்போய்விடுவார்.

கிறிஸ்துவைத் தேடுகிறவர்கள் தடைகளைப் பார்த்து பயந்துவிடக்கூடாது. பிரச்சனைகளைப் பார்த்து சோர்ந்துபோய்விடக்கூடாது. மணவாட்டி சோர்ந்துபோகவில்லை. "நான் எழுந்து, நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து, என் ஆத்தும நேசரை தேடுவேன்" என்று சொல்லுகிறாள். கிறிஸ்துவானவர் ஒரு வழிப்போக்கரைப்போல, ஏதாவது ஒரு ஓரத்தில் ஒழிந்துகொண்டிருக்கமாட்டார். அவர் நம்முடைய ஆத்தும நேசர். அவர் நகரத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்துகொண்டிருப்பார். அவர் செல்லும் இடங்களிலெல்லாம் நன்மை செய்துகொண்டிருப்பார். ஜனங்கள் இருக்குமிடத்தில் இயேசுகிறிஸ்துவும் இருப்பார்.

இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறவர்கள், அவரை நகரத்தில் தேடவேண்டும். இந்த வாக்கியத்தில் "நகரம்" என்னும் வார்த்தை எருசலேம் நகரத்தைக் குறிப்பிடுகிறது. எருசலேமில் தேவாலயம் இருக்கிறது. இது சுவிசேஷ சபைக்கு அடையாளமாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. எருசலேம் சபை என்பது பரிசுத்த பிரமாணங்களினால் நிரம்பியிருக்கிற சபை என்று பொருள்.

மணவாட்டி, "நான் எழுந்து" என்று சொல்லும்போது, தன்னால் மணவாளனைத் தேடிக்கண்டுபிடிக்க முடியும் என்று உறுதியோடு சொல்லுகிறாள். அவளுடைய நோக்கம் சரியாகயிருக்கிறது. அவளுடைய முயற்சிகளும் நேர்த்தியாகயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைத் தேடுகிறவர்கள் சோர்ந்துபோகாமல் தேடவேண்டும். மணவாட்டி எழுந்து நகரத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்து, தன்னுடைய ஆத்தும நேசரைத் தேடுகிறாள். தேடியும் அவள் அவரைக் காணவில்லை. அவளுடைய முயற்சியில் மறுபடியும் தோல்வி உண்டாயிற்று.

என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா
உன் 3:3

உன் 3:3. நகரத்திலே திரிகிற காவலாளர் என்னைக் கண்டார்கள்: என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா என்று அவர்களைக் கேட்டேன்.

இரவுவேளையில், நகரத்திலே காவலாளர் சுற்றித்திரிந்து, நகரத்தைக் காவல் காப்பார்கள். அவர்கள் தன் நேசரைத் தேடுகிற மணவாட்டியைக் காண்கிறார்கள். அவள் அவர்களிடத்தில், "என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா" என்று விசாரிக்கிறாள். காவலாளர்கள் நகரத்திற்கு சமாதானத்தையும், பாதுகாப்பையும் உறுதிபண்ணுவதற்காக நகரத்தைக் காவல் காக்கிறார்கள். நகரத்தை காவல் காக்கிறவர்கள் மணவாட்டியைப் பார்க்கிறார்கள். அவள் தன்னுடைய நேசரைப்பற்றிய நற்செய்தியை காவலாளர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறாள். மணவாட்டிக்கு நகரத்தின்மீது பிரியமில்லை. அவள் தன்னுடைய ஆத்தும நேசர்மீதே பிரியமாயிருக்கிறாள்.

கிறிஸ்துவைத் தேடுகிறவர்கள் கூட்டத்திலும் புகுந்து அவரிடத்திற்கு அருகாமையில் வருவார்கள். பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஸ்திரீ, இயேசுகிறிஸ்துவின் வஸ்திரத்தையாவது தொடவேண்டுமென்று விரும்பி, கூட்டத்திற்கு நடுவே புகுந்து, கிறிஸ்துவுக்கு அருகாமையில் வந்தாள். நாம் கிறிஸ்துவைத் தேடும்போது கூட்டம் நமக்குத் தடையாகயிருக்கக்கூடாது. நம்மைச் சுற்றிலும் திரளான கூட்டம் இருக்கும்போது அவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா நிற்கக்கூடாது. நாம் கிறிஸ்துவைத் தேடுகிறவர்கள். அவரைக் கண்டுபிடிக்கிற வரையிலும் தேடிக்கொண்டேயிருக்கவேண்டும். கூட்டத்தாரின் அழகை ரசிப்பதற்குப் பதிலாக, நம்முடைய ஆத்தும நேசரைக் கண்டுபிடிப்பதற்கு அவர்கள் உதவியாயிருப்பார்களா என்று விசாரித்து அறியவேண்டும். மணவாட்டி நகரத்திலே திரிகிற காவலாளரிடம் "என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா" என்று கேட்கிறாள்.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து நம்முடைய தேவனாகிய கர்த்தரை கண்டுபிடிக்க வேண்டும். ஜெபத்தில் அதிக நேரம் தரித்திருந்து தேவனைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும். பிரமாணங்களைக் கைக்கொண்டு கர்த்தரைத் தேடவேண்டும். நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரைத் தேடவேண்டும். நாம் கர்த்தரைத் தேடினாலும், அவரைப் பார்க்க முடியாமல் போனாலும், நம்முடைய இருதயத்தில் கர்த்தர் இருக்கவேண்டும். கர்த்தருடைய நேசம் நமக்குள் நிரம்பியிருக்கவேண்டும். மணவாட்டி மணவாளனைப்பற்றி விசாரிக்கும்போது, "என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா" என்றே விசாரிக்கிறாள். அவள் அவரை கண்டுபிடித்தாலும், கண்டுபிடிக்காவிட்டாலும், அவர் அவளுடைய ஆத்துமாவிற்கு நேசராகவே இருக்கிறார்.

கிறிஸ்துவைக் கண்டவர்களால் மாத்திரமே, மற்றவர்களை கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்த முடியும். நகரத்திலே திரிகிற காவலாளர், ஆத்தும நேசரை கண்டிருந்தால் மாத்திரமே, அவர்களால் மணவாட்டியை அவளுடைய ஆத்தும நேசரிடம் வழிநடத்த முடியும். அப்போதுதான், அவர்களால் "ஆத்தும நேசரைக் கண்டோம், அவர் இங்கே இருக்கிறார்" என்று பதில் சொல்லமுடியும்.

என் ஆத்தும நேசரைக் கண்டேன்
உன் 3:4

உன் 3:4. நான் அவர்களை விட்டுக் கொஞ்சதூரம் கடந்துபோனவுடனே, என் ஆத்தும நேசரைக் கண்டேன்; அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்.

மணவாட்டி நகரத்திலே திரிகிற காவலாளரிடம், "என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா" என்று கேட்கிறாள். அவர்களிடத்தில் நல்ல செய்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறாள். ஆனால் அவர்கள் மூலமாய் மணவாட்டிக்கு நல்ல செய்தி எதுவும் கிடைக்கவில்லை. ஆத்தும நேசர் எங்கேயிருக்கிறார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் மூலமாய் தான் எதிர்பார்க்கிற உதவி தனக்குக் கிடைக்காது என்பதை மணவாட்டி புரிந்துகொள்கிறாள்.

அதன் பின்பு மணவாட்டி நகரத்திலே திரிகிற காவலாளரைவிட்டு கொஞ்சதூரம் கடந்துபோகிறாள். அப்போது அவள் தன்னுடைய ஆத்தும நேசரைக் காண்கிறாள். கிறிஸ்துவைத் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறவர்கள் அவரை நிச்சயமாகவே கண்டுபிடிப்பார்கள். தம்மைத் தேடுகிற அனைவருக்கும் அவர் சமீபமாயிருக்கிறார். நமக்கு தோல்விகளும், தடைகளும் வந்தாலும், நாம் கிறிஸ்துவைத் தேடுவதை நிறுத்திவிடக்கூடாது. தொடர்ந்து தேடவேண்டும். கண்டுபிடிக்கும் வரையிலும் தேடவேண்டும். தேடுகிறவர்கள் மாத்திரமே கண்டுபிடிப்பார்கள்.

"உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது; உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டுபோகிறது. ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார்; இராக்காலத்திலே அவரைப் பாடும்பாட்டு என் வாயிலிருக்கிறது; என் ஜீவனுடைய தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறேன்" *(சங் 42:7,8).*

"தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ? என்றேன். (சேலா.) அப்பொழுது நான்: இது என் பலவீனம்; ஆனாலும் உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன்" *(சங் 77:9,10).*

"இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன். அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்" *(ஏசா 54:7,8).*

மணவாட்டி தன்னுடைய ஆத்தும நேசரைக் கண்டவுடன், அவரிடத்தில் நெருக்கமாகக் கிட்டிச் சேருகிறாள். அவரை விடாமல் பற்றிக்கொள்கிறாள். ஏற்கெனவே தன்னுடைய ஆத்தும நேசரை விட்டுப் பிரிந்தவள். அப்படிப்பட்ட பிரிவு தனக்கு மறுபடியும் வந்துவிடக்கூடாது என்று மிகுந்த பயத்தோடிருக்கிறாள். அதிக கவனமாய் அவரை விடாமல் பற்றிக்கொள்கிறாள். தன்னைவிட்டுப் பிரிந்துபோன ஆத்தும நேசரை, மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிக்கண்டுபிடித்திருக்கிறாள்.

நாம் கர்த்தரைத் தேடிக் கண்டுபிடிக்கும்போது, நம்முடைய விசுவாசத்தின் கரங்களினால் அவரைப் பற்றிக்கொள்ளவேண்டும். அன்பின் கரங்களினால் அவரை அணைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சமுகத்தைவிட்டு அவரும் கடந்துபோய்விடக்கூடாது. நாமும் அவரை விட்டுப் பிரிந்துபோய்விடக்கூடாது. அவர் நமக்குள் வாசம்பண்ணவேண்டும். நாம் அவருக்குள் வாசம்பண்ணவேண்டும்.

மணவாட்டி தன்னுடைய நேசரை கண்டுபிடித்த பின்பு, அவரை தன்னுடைய வீட்டாருக்கு அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறாள். அவரை தன் தாயின் வீட்டிலும், தன்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டு வந்து விடுகிறாள். தன்னுடைய உற்றார் உறவினர்கள், குடும்பத்தார் எல்லாருக்கும் தன்னுடைய ஆத்தும நேசரை அறிமுகம் செய்து வைக்கிறாள். தன்னுடைய ஆத்தும நேசருடைய ஐக்கியத்தினால், தனக்குக் கிடைத்திருக்கிற ஆசீர்வாதங்களை, தன்னுடைய குடும்பத்தாரோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறாள்.

நாம் கிறிஸ்துவை எங்கே கண்டுபிடித்தாலும், அவரை நம்மோடுகூட நம்முடைய வீட்டிற்கு அழைத்து வரவேண்டும். நம்முடைய இருதயத்திற்கு அழைத்து வரவேண்டும். சபை நம்முடைய தாய்வீட்டைப்போல இருக்கிறது. சபையின் காரியங்களில் நாம் கவனம் செலுத்தவேண்டும். சபையில் கிறிஸ்துவை மேன்மைப்படுத்தி, மகிமைப்படுத்தி, சபையாருக்கு அவரை அறிமுகம் செய்து வைக்கவேண்டும். அவர் நமக்கு செய்த நன்மைகளையெல்லாம் சாட்சியாகச் சொல்லவேண்டும். கிறிஸ்துவானவர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை, நம்முடைய தாய் வீட்டைப்போல இருக்கிற சபையாரிடம் பகிர்ந்துகொடுக்கவேண்டும்.

எருசலேமின் குமாரத்திகளே உன் 3:5

உன் 3:5. எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகு மட்டும் நீங்கள் அவளை விழிக்கப் பண்ணாமலும் எழுப்பாமலுமிருக்கும்படி, வெளிமான்கள்மேலும் வெளியின் மரைகள்மேலும் உங்களை ஆணையிடுகிறேன்.

மணவாட்டி தன்னுடைய ஆத்தும நேசரை தேடிக்கண்டுபிடித்து, விடாமல் பற்றிக்கொள்கிறாள். அவரோடு ஐக்கியமாகயிருக்கிறாள். தங்களுக்கு இடையேயுள்ள ஐக்கியத்திற்கு யாரும் இடையூறாகயிருக்கக்கூடாது என்று விரும்புகிறாள். ஏற்கெனவே சொன்னதுபோல (உன் 2:7) இப்போது மறுபடியும் சொல்லுகிறாள். இந்த வாக்கியம் எருசலேமின் குமாரத்திகளிடம் சொல்லப்படுகிறது. "எனக்கு பிரியமானவளுக்கு மனதாகும் மட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்கும்படி உங்களை ஆணையிடுகிறேன்" என்று எருசலேமின் குமாரத்திகளுக்குச் சொல்லுகிறாள்.

நம்மிடத்திலுள்ள கசப்புக்கள், வெறுப்புக்கள் எல்லாம் நம்மைவிட்டு நீங்கவேண்டும். இது தேவனுடைய பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தும். தேவனோடு நாம் கொண்டிருக்கிற ஐக்கியத்திற்கு தடையாகயிருக்கிற பாவசுபாவங்களெல்லாம் நம்மை விட்டு நீங்கிப்போகவேண்டும். தீயஎண்ணங்கள் நமக்குள் பிரவேசித்துவிடாதவாறு நம்மை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும்.

"அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது" (எபே 4:30,31).

"எருசலேமின் குமாரத்திகளே" என்னும் இந்த வாக்கியத்தை மணவாளனாகிய இயேசுகிறிஸ்து சொல்லுவதாக வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தம்முடைய சபையை யாரும் தொந்தரவு பண்ணக்கூடாது, விசுவாசிகளின் மனதை யாரும் கெடுத்துப்போடக்கூடாது என்று கிறிஸ்துவானவர் கட்டளை கொடுக்கிறார்.

இவர் யார் உன் 3:6

உன் 3:6. வெள்ளைப்போளத்தினாலும் சாம்பிராணியினாலும் வர்த்தகருடைய சகலவித கந்தப்பொடியினாலும் உண்டாகிய வாசனையை வீசி, தூபஸ்தம்பங்களைப் போல் வனாந்தரத்திலிருந்து வருகிற இவர் யார்?

எருசலேமின் குமாரத்திகள் இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார்கள். மணவாட்டி கறுப்பாயிருக்கிறாள் (உன் 1:6). ஆகையினால் அவளை எருசலேமின் குமாரத்திகள் வெட்கத்தோடும் வேதனையோடும் பார்த்தார்கள். ஆனால் இப்போதோ மணவாட்டியின் அழகைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அவளுடைய அழகைப் புகழ்ந்து சொல்லுகிறார்கள். அவளுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். "வனாந்தரத்திலிருந்து வருகிற இவர் யார்" என்று மிகுந்த மரியாதையோடு கேட்கிறார்கள்.

மணவாட்டியின் ரூபம் அதிக சவுந்தரியமுள்ளதாகயிருக்கிறது. இப்படி சவுந்தரியமுள்ள ஒருவர் ராஜஅரமனையிலிருந்து வருவார். வனாந்தரத்திலிருந்து வரமாட்டார். ஆனால் மணவாட்டியோ மிகுந்த சவுரியத்தோடு வனாந்தரத்திலிருந்து வருகிறாள். இந்த வாக்கியம் யூதருடைய சபையைக் குறிக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் நாற்பது வருஷங்களாக வனாந்தரத்தில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணினார். கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்காக இஸ்ரவேல் புத்திரர்கள் வனாந்தரத்திலிருந்து வருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாளமிறங்கியிருப்பதை பிலேயாம் பார்த்து ஆச்சரியப்படுகிறார். அவரும் அவர்களைப் புகழ்ந்து சொல்லுகிறார். "கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்" (எண் 23:9). "யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்!" (எண் 24:5).

ஒரு ஆத்துமா கர்த்தருடைய சமுகத்தைவிட்டு பின்வாங்கிப்போய்விட்டு, மறுபடியும் கர்த்தருடைய சமுகத்திற்கு மனந்திரும்பி வரும்போது மிகுந்த சந்தோஷத்தோடு வரும். அப்படிப்பட்ட ஆத்துமாவை "வனாந்தரத்திலிருந்து வருகிற இவர் யார்" என்னும் வாக்கியம் வர்ணிப்பதாகவும், சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். வனாந்தரங்களில் கஷ்டங்களை அனுபவித்துவிட்டு வருவதுபோல, கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போன ஆத்துமா, வறட்சியான இடங்களில் அலைந்து திரிந்து கஷ்டப்பட்டு, வனாந்தரத்தைவிட்டு வெளியேறி வருவதுபோல வருகிறது.

மணவாட்டி வனாந்தரத்திலிருந்து வெளியேறி வருகிறாள். வனாந்தரம் பசுமையாயிராது. வறட்சியாயிருக்கும். அங்கு நீர் ஆதாரம் எதுவும் இருக்காது. வனாந்தரமானது தூபஸ்தம்பம் போல இருக்கும். பரிசுத்த பலிபீடத்திலிருந்து தூபபுகை மேலே எழும்புவதுபோல, வனாந்தர அனுபவம் இருக்கும். மணவாட்டி வனாந்தரத்திலிருந்து வரும்போது தூபஸ்தம்பங்களைப்போல் வனாந்தரத்திலிருந்து வருகிறாள்.

பலிபீடம் தேவனோடு நாம் வைத்திருக்கும் ஐக்கியத்திற்கு அடையாளம். பலிபீடத்தில் எரியும் அக்கினி, நம்முடைய ஆத்துமா தேவனோடு பயபக்தியாயிருப்பதற்கு அடையாளம். கிறிஸ்துவானவர் நம்முடைய ஆத்துமாவிற்குள் திரும்பி வரும்போது அதற்கு ஜீவனைத் தருகிறார். தேவனோடு நமக்குள்ள ஐக்கியம் புதுப்பிக்கப்படுகிறது. வனாந்தரத்திலிருந்து வெளியேறி வரும்போது, தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியம் இன்னும் அதிக நெருக்கமாயிருக்கும்.

மணவாட்டியிடமிருந்து நறுமணம் வீசுகிறது. இந்த வாசனை வெள்ளைப் போளத்தினாலும், சாம்பிராணியினாலும், வர்த்தகருடைய சகலவித கந்தப்பொடியினாலும் உண்டாகிய வாசனையாகும். மணவாட்டி தேவனுடைய ஆவியானவரின் கிருபைகளினால் நிரப்பப்பட்டிருக்கிறாள். இவை பரிசுத்தமான தூபவர்க்கம். இவை இனிமையான வாசனையைக் கொடுக்கும்.

"வனாந்தரத்திலிருந்து வருகிற இவர் யார்" என்று எருசலேமின் குமாரத்திகள் கேட்கிறார்கள். மணவாட்டி தேவனுடைய கிருபையும் இரக்கமும் நிரம்பியவளாகயிருக்கிறாள். அவளிடத்தில் தேவனுடைய ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியிருக்கிறது. இயேசுகிறிஸ்து பிறந்தபோது சாஸ்திரிகள் தூபவர்க்கங்களைத் தூரதேசத்திலிருந்து கொண்டு வந்து அவருக்குக் காணிக்கையாகச் செலுத்தினார்கள். தூபவர்க்கங்களின் கிரயம் அதிகம். கிறிஸ்துவானவர் தம்முடைய சபையாராகிய நமக்கும் வெள்ளைப்போளத்தையும், சாம்பிராணியையும் சகலவித கந்தப்பொடியையும் அன்பளிப்பாகக் கொடுக்கிறார். இந்தத் தூபவர்க்கங்களை தம்முடைய இரத்தத்தையே கிரயமாகச் செலுத்தி, நம்முடைய ஆத்தும நேசர் நமக்காக கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார்.

சாலொமோனுடைய மஞ்சம்
உன் 3:7,8

உன் 3:7. இதோ, சாலொமோனுடைய மஞ்சம்; இஸ்ரவேலின் சவுரியவான்களில் அறுபது சவுரியவான்கள் அதைச் சுற்றி நிற்கிறார்கள்.

உன் 3:8. இவர்களெல்லாரும் பட்டயம் பிடித்து, யுத்தத்துக்குப் பழகினவர்களாயிருக்கிறார்கள்; இராக்கால பயத்தினிமித்தம் அவனவனுடைய பட்டயம் அவனவன் அரையிலிருக்கிறது.

எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியை ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். அன்பான வார்த்தைகளினால் அவளைப் புகழ்ந்து பேசுகிறார்கள். மணவாட்டியோ அவர்களுடைய புகழ்ச்சியான வார்த்தைகளை தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளாமல், கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறாள். தன்னுடைய மணவாளரை மேன்மைப்படுத்துகிறாள். மணவாளருக்கு துதியும் கனமும், மகிமையும் செலுத்துகிறாள். எருசலேமின் குமாரத்திகள் தன்னைப் பார்ப்பதற்குப் பதிலாக, அவர்கள் தன்னுடைய ஆத்தும நேசரைப் பார்ப்பதற்கு வழிநடத்துகிறாள்.

ஆத்தும நேசரின் மகிமையைப்பற்றிச் சொல்லுவதற்கு சாலொமோனின் பெயர் இங்கு மூன்று வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் சாலொமோனைவிட பெரியவர். இந்த வாக்கியங்களில் "சாலொமோன்" என்னும் பெயர் இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. சாலொமோன் ஞானத்தில் சிறந்தவர். கிறிஸ்துவானவரோ சர்வஞானமுள்ளவர். சாலொமோன் தேவனுக்கு ஒரு ஆலயம் கட்டினார். கிறிஸ்து தேவாலயத்திலும் பெரியவர்.

மணவாட்டி சாலொமோனைப் புகழ்ந்து பேசுகிறாள். சாலொமோனுடைய மஞ்சம், அவருடைய சவுரியவான்கள், சாலொமோனுடைய இரதம் ஆகியவற்றைப் பார்த்து மணவாட்டி ஆச்சரியப்படுகிறாள். சாலொமோனுடைய மஞ்சம் பாதுகாப்பாயிருக்கிறது. "இதோ சாலொமோனுடைய மஞ்சம்" என்று அதை ஆச்சரியத்தோடு பார்க்கிறாள். அது மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டிருக்கிறது. சாலொமோனுடைய திரைச்சீலைகள் அவருடைய மஞ்சத்தைச் சுற்றிலும் தொங்கிக்கொண்டிருக்கிறது. தொங்கு திரைகளும், திரைச்சீலைகளும் மிகவும் நேர்த்தியாய் உள்ளது.

கிறிஸ்துவுக்கு தலை சாய்க்க இடமில்லை. ஆனாலும் கிறிஸ்துவின் மஞ்சம் சாலொமோனுடைய மஞ்சத்தைவிட மேன்மையானது. கிறிஸ்துவின் சபையே அவருடைய மஞ்சம். கிறிஸ்துவானவர் தம்முடைய சபையின் நடுவில் வாசமாயிருக்கிறார். விசுவாசிகளுடைய இருதயமே அவருடைய மஞ்சம். விசுவாசத்தினாலே கிறிஸ்து நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கிறார் (எபே 3:17).

மணவாட்டி சாலொமோனுடைய மஞ்சத்தை ஆச்சரியமாகப் பார்த்து வர்ணிப்பதுபோல, அதைச் சுற்றி நிற்கிற சவுரியவான்களையும் பார்த்து ஆச்சரியப்படுகிறாள். சாலொமோனுடைய மஞ்சத்தைச் சுற்றிலும் இஸ்ரவேலின் அறுபது சவுரியவான்கள் பாதுகாப்புக்காக நிற்கிறார்கள். கிறிஸ்துவில் இளைப்பாறுதல் பெற்றிருக்கிறவர்கள் மிகுந்த பாதுகாப்போடிருப்பார்கள். நமக்கு வெளியிலே எப்படிப்பட்ட ஆபத்துக்கள் இருந்தாலும், கிறிஸ்துவின் சமுகத்தில் வரும்போது, நமக்கு மெய்யான பாதுகாப்பு உண்டு.

சாலொமோனுடைய மஞ்சத்தைச் சுற்றிலும் நிற்கிற சவுரியவான்கள் எல்லோரும் பட்டயம் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் யுத்தத்திற்குப் பழகினவர்கள். பட்டயத்தை எப்படி பிடிக்கவேண்டும் என்பதும், எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் மஞ்சத்தைப் பாதுகாப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். சவுரியவான்களின் பட்டயம் அவனவன் அரையிலிருக்கிறது. அவர்களுடைய கைகள் பட்டயத்தின்மீது இருக்கிறது. எச்சரிப்பின் சத்தம் கேட்டவுடன், சவுரியவான்கள் பட்டயத்தை உருவுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

இரவில் எப்படிப்பட்ட ஆபத்துக்கள் வேண்டுமானாலும் வரலாம். ஆனாலும், மணவாட்டியை இரவின் பயங்கரங்கள் எதுவும் அணுகக்கூடாது என்று மணவாளன் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கிறார். இவர்களுடைய பாதுகாப்பில் மணவாட்டி திருப்தியோடிருக்கிறாள். விசுவாசிகளுக்கு அநேக ஆபத்துக்கள் வரலாம். தீங்குகள் அவர்களைச் சூழ்ந்திருக்கிறது. ஆனாலும் எந்தத் தீங்கும், எந்த ஆபத்தும் நம்மைச் சேதம்பண்ணாதவாறு, கர்த்தர் நம்மைப் பாதுகாக்கிறார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நமக்கு அநேக சத்துருக்கள் இருப்பார்கள். ஆவிக்குரிய அனுபவம் நமக்கு இரவு வேளையைப்போல, மப்பும், மந்தாரமும், மேகமும் சூழ்ந்திருப்பதுபோல இருக்கும். எதுவுமே தெளிவாகயிருக்காது. இப்படிப்பட்ட காலத்தில்கூட நம்முடைய மணவாளராகிய கிறிஸ்துவானவர் நமக்கு பாதுகாப்பாகயிருக்கிறார்.

குமாரனாகிய கிறிஸ்துவை, அவருடைய பிதாவாகிய தேவன் தம்முடைய விசேஷித்த பாதுகாப்புக்களினால் பாதுகாத்துக்கொண்டார். ஆயிரக்கணக்கான தேவதூதர்கள் கிறிஸ்துவுக்குப் பணிவிடை செய்தார்கள். கிறிஸ்து பாதுகாப்பாகயிருப்பதுபோல, அவருடைய சபையும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. சபைக்கு விரோதமாக எழும்பியிருக்கிறவர்களைவிட, சபைக்கு ஆதரவாக பாதுகாப்பாக இருப்போரின் எண்ணிக்கை அதிகம். இந்த உலகத்திலிருக்கிறவனைவிட நமக்குள் இருக்கிறவர் பெரியவர்.

தேவனுடைய குணாதிசயங்கள் எல்லாமே அவருடைய விசுவாசிகளுக்கு பாதுகாப்பாயிருக்கிறது. தேவனுடைய சமாதானம் அவருடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிறது. ஆளுகை செய்கிறவர்கள் கர்த்தருக்குப் பயந்து ஜனங்களை நீதியாகவும், நியாயமாகவும் ஆளுகை செய்கிறார்கள்.

“அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்” (பிலி 4:7).

நமக்கு இந்தப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதியிடமிருந்து ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது. நாம் ஒளியின் ஆயுதங்களைத் தரித்தவர்களாக, கர்த்தருடைய சமுகத்தில் பாதுகாப்பாகயிருக்கவேண்டும். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, சத்துருவோடு யுத்தம்பண்ணவேண்டும்.

சாலொமோனுடைய இரதம் உன் 3:9,10

உன் 3:9. சாலொமோன் ராஜா தனக்கு லீபனோனின் மரத்தினால் ஒரு இரதத்தைப் பண்ணுவித்தார்.

உன் 3:10. அதின் தூண்களை வெள்ளியினாலும், அதின் தட்டைப்பொன்னினாலும், அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார்; அதின் உட்புறத்திலே எருசலேமின் குமாரத்திகளினிமித்தம் நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருந்தது.

சாலொமோனுடைய இரதம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதில் பயன்படுத்தப்பட்டிருக்கிற பொருட்களெல்லாம் விலைமதிப்பு மிகுந்தவை. இந்த இரதத்தில் வெள்ளியும், பொன்னும், இரத்தாம்பரமும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சாலொமோன் ராஜாவே இதை வடிவமைத்திருக்கிறார். சாலொமோன் ராஜா இந்த இரதத்தை தனக்காக லீபனோன் மரத்தினால் பண்ணுவித்தார். அதின் தூண்களை வெள்ளியினாலும், அதின் தட்டை பொன்னினாலும், அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார்.

இந்த வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "இரதம்" என்னும் வார்த்தை வேதாகமத்தில் வேறு எங்கும் பயன்படுத்தப்படவில்லை. இந்த வார்த்தைக்கு "கிறிஸ்துவின் மனுஷீகம்" அல்லது கிறிஸ்துவின் "மாம்ச சரீரம்" என்று வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவின் மாம்ச சரீரத்தை, பிதாவாகிய தேவன், தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாகவும், தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும் உண்டுபண்ணியிருக்கிறார். இந்த இரதத்தின் வடிவம் நேர்த்தியாயிருக்கிறது. இந்த இரதத்தின் உட்புறத்திலே நேசம் என்னும் சமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரதத்திற்கு அன்பே ஆதாரம். கிறிஸ்துவானவர் மனுபுத்திரர்மீது மாசில்லாத அன்பு வைத்திருக்கிறார்.

இந்த இரதம் நித்திய சுவிசேஷத்தைக் குறிக்கும் என்றும் ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இந்த இரதம் அடைக்கப்படாமல், எல்லா பக்கத்திலும் திறக்கப்பட்டதாகயிருக்கிறது. கிறிஸ்துவானவர் நமக்கு மறைவாகயில்லை. அவர் தம்மை நமக்கு பிரதியட்சமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

சாலொமோனுடைய இரதத்தின் தூண்கள் வெள்ளியினால் செய்யப்பட்டிருக்கிறது. "கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது" *(சங் 12:6)*. இரதத்தின் ஆசனம் இரத்தாம்பரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. இரத்தாம்பரம் பிரபுக்களின் நிறம். இது ராஜவம்சத்து நிறம். இதன் ஆசனமும், இரதத்தின் தொங்குதிரைகளும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் சாயம் தோய்க்கப்பட்டிருக்கிறது. அது இரத்தாம்பர சிவப்பு நிறத்திலிருக்கிறது.

இந்த இரதத்தின் உட்புறத்திலே எருசலேமின் குமாரத்திகளினிமித்தம் நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருக்கிறது. இந்த இரதத்திற்கு அன்பே ஆதாரம். இந்த இரதத்தின் எல்லா பகுதிகளிலும் அன்பு இணைக்கப்பட்டிருக்கிறது. வெள்ளி கேதுரு மரத்தைவிட மேன்மையானது. பொன் வெள்ளியைவிட உயர்ந்தது. அன்போ பொன்னைவிட உயர்ந்தது. எல்லாவற்றையும்விட அன்பே பிரதானமானது.

சாலொமோன் தன்னுடைய இரதத்தை செய்யும்போது, அதில் நேசம் என்னும் சமுக்காளத்தை கடைசியாக விரிக்கிறார். அதன்பின்பு அதில் சேர்ப்பதற்கு ஒன்றுமேயில்லை. அன்பைவிட நேர்த்தியானது வேறு ஒன்றுமில்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவனுடைய அன்பு சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாலொமோனின் கலியாணநாள் உன் 3:11

உன் 3:11. சீயோன் குமாரத்திகளே! நீங்கள் புறப்பட்டுப்போய், ராஜாவாகிய சாலொமோனின் கலியாணநாளிலும், மனமகிழ்ச்சியின் நாளிலும், அவருடைய தாயார் அவருக்குச் சூட்டின முடியோடிருக்கிற அவரைப் பாருங்கள்.

மணவாளன் தம்முடைய கலியாண நாளுக்கு ஆயத்தமாயிருக்கிறார். தம்மை நேர்த்தியாய் அழகுபடுத்தியிருக்கிறார். ராஜாவின் அலங்காரத்திலிருக்கிறார். மணவாளனைப் பார்க்கும் அழைப்பு சீயோன் குமாரத்திகளுக்குக் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய சுவிசேஷத்தில் தம்மை வெளிப்படுத்திக் காண்பித்திருக்கிறார். நாம் சுவிசேஷத்திலே கிறிஸ்துவைப் பார்க்கவேண்டும். "சீயோன் குமாரத்திகளே, நீங்கள் புறப்பட்டுப்போய் அவரைப் பாருங்கள்" என்னும் கட்டளை இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ராஜாவை மகிமைப்படுத்துகிற திரளான ஜனங்களோடு நாமும் சேர்ந்துகொள்ளவேண்டும். நாமும் அவரை மகிமைப்படுத்தவேண்டும்.

கிறிஸ்துவை அவருடைய மகிமையில் பார்த்து நாம் சந்தோஷப்படவேண்டும். அவரை விசுவாசக்கண்களால் காணவேண்டும். நம்முடைய பார்வை கிறிஸ்துவின்மீது நிலைத்திருக்கவேண்டும். ராஜாவாகிய சாலொமோனின் கலியாண நாளில் அவருடைய தாயார் அவருக்கு கிரீடத்தை சூட்டியிருக்கிறார். இது ஒருவேளை பொன்னால் செய்யப்பட்ட கிரீடமாகயிருக்கலாம். இதில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருக்கலாம். சாலொமோன் ராஜாவின் பட்டத்திற்கு வந்தபோது, அவர் இந்தக் கிரீடத்தை அணிந்திருக்கலாம். சாலொமோனுடைய தாயார், சாலொமோனின் கலியாண நாளிலும், மனமகிழ்ச்சியின் நாளிலும் அவருக்கு கிரீடத்தை சூட்டினார்.

"சீயோன் குமாரத்திகளே நீங்கள் போய் சாலொமோனைப் பாருங்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "விசுவாசிகளே நீங்கள் கிறிஸ்துவைப் பாருங்கள்" என்பது பொருளாகும். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனுக்கு கிரீடத்தை சூட்டியிருக்கிறார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்று பிதாவானவர் குமாரனைப்பற்றிப் புகழ்ந்து சொல்லுகிறார். பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைத் தம்முடைய பரிசுத்தமான சீயோன் மலையிலே, ராஜாவாக அபிஷேகம் பண்ணிவைத்திருக்கிறார்.

"முடி" என்னும் வார்த்தைக்கு, "முள்முடி" என்றும் சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். சாலொமோனின் தாயார் அவருக்கு முடியைச் சூட்டினார். யூதருடைய ஆலோசனை சங்கம் இயேசுகிறிஸ்துவின் தாயாராக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு முள்முடியை சூட்டினார்கள். இயேசுகிறிஸ்து மரித்த அந்த நாளிலே, அவருக்கு முள்முடி சூட்டப்பட்டது. குமாரனாகிய கிறிஸ்து தம்முடைய சபையை அதிகமாய் நேசிக்கிறார். தம்முடைய சபைக்காக அவர் தம்முடைய ஜீவனையே கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவானவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்த நாளே, அவருடைய கலியாண நாளாகும். அந்த நாளில் கிறிஸ்துவும் அவருடைய சபையாரும் கலியாண பந்தத்தில், ஒப்பந்தத்தில், ஐக்கியத்தில் இணைக்கப்பட்டார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகளுக்காக, தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்த நாளே அவருடைய மனமகிழ்ச்சியின் நாளாகும்.

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்தார்" (எபே 5:25).

கிறிஸ்துவின் தாய் சபையாகிய யூதருடைய ஆலோசனைச்சங்கத்தார், அவரைத் துன்பப்படுத்தினார்கள். அவருடைய சுவிசேஷத்தின் சபையாராகிய நாமோ கிறிஸ்துவைக் கனப்படுத்துகிறோம். அவரோடு நித்திய உடன்படிக்கையில் இணைக்கப்பட்டிருக்கிறோம். விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் கிறிஸ்துவோடு நித்திய உடன்படிக்கையில் இணைக்கப்படுகிறார்கள். இது அவர்களுடைய ஆத்துமாக்களில் முடிசூட்டப்படும் நாளாகும். விசுவாசிகள் கிறிஸ்துவின் சமுகத்தில் ராஜாக்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். ராஜாவின் மேன்மையைச் சுதந்தரித்துக்கொள்கிறார்கள்.

விசுவாசிகள் இரட்சிக்கப்பட்ட நாளில் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டாலும், அந்த நாளிலிருந்து அவர்கள் தங்களுடைய இரட்சராகிய இயேசுகிறிஸ்துவை, ராஜாவாக அங்கீகரித்து அவரைக் கனப்படுத்துகிறார்கள். அவருக்கு விசுவாசத்தினால் கிரீடத்தைச் சூட்டுகிறார்கள். தேவனுடைய அன்பையும், கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்காக, விசுவாசிகள் கிறிஸ்துவோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். இந்த நாளே விசுவாசிகளுக்கு மனமகிழ்ச்சியின் நாளாகும். தம்முடைய பிள்ளைகள் தம்மை ராஜாவாக அங்கீகரித்து, தம்மைக் கனப்படுத்துவதைப் பார்க்கும்போது, கிறிஸ்துவானவரும் மனமகிழ்ச்சியாயிருக்கிறார். கிறிஸ்து நம்மில் பிரியமாயிருக்கிறார்.

4 அதிகாரம்

மணவாளராகிய இயேசுகிறிஸ்து, மணவாட்டியாகிய தம்முடைய சபையோடு திருமண ஒப்பந்தம் செய்து கொள்கிறார் (உன் 3:11). மணவாட்டியின் அழகை வர்ணிக்கிறார் (உன் 4:1-5). மணவாட்டியின் அழகில் பழுது ஒன்றுமில்லை (உன் 4:6-8). மணவாளன் தம்முடைய மணவாட்டியோடு நேசமாயிருப்பதை அறிக்கை செய்கிறார் (உன் 4:9-14). மணவாட்டி மணவாளனுக்கு தன்னையே பூரணமாய் அர்ப்பணிக்கிறாள் (உன் 4:15,16).

நீ ரூபவதி
உன் 4:1-5

உன் 4:1. நீ ரூபவதி, என் பிரியமே! நீ ரூபவதி; உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக்கண்களாயிருக்கிறது; உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது.

உன் 4:2. உன் பற்கள், மயிர் கத்தரிக்கப்பட்டபின் குளிப் பாட்டப்பட்டுக் கரையேறுகிறவைகளும், ஒன்றாகிலும் மலடாயிராமல் எல்லாம் இரட்டைக் குட்டியீன்றவைகளுமான ஆட்டு மந்தையைப் போலிருக்கிறது.

உன் 4:3. உன் உதடுகள் சிவப்புநூலுக்குச் சமானமும், உன் வாக்கு இன்பமுமாயிருக்கிறது; உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம் பழம்போலிருக்கிறது.

உன் 4:4. உன் கழுத்து, பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுதசாலையாக்கப்பட்ட தாவீதின் கோபுரம்போலிருக்கிறது.

உன் 4:5. உன் இரண்டு ஸ்தனங்களும் லீலிபுஷ்பங்களில் மேயும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்குச் சமானம்.

கர்த்தருடைய பார்வையில் அவருடைய சபை மிகவும் அழகாயிருக்கிறது. கர்த்தர் நம்முடைய ஆத்துமாவைப் புதுப்பிக்கும்போது, தம்முடைய சாயலாகவே புதுப்பிக்கிறார். நமக்குள் மங்கிப்போயிருக்கிற அழகு மறுபடியும் பிரகாசமாய் வெளிப்படுத்தப்படுகிறது. இது பரிசுத்தமான அழகு.

நாம் கிறிஸ்துவைக் கனப்படுத்தும்போது அவர் நம்மைக் கனப்படுத்துகிறார். "என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1சாமு 2:30).

மணவாளன் வீணான வார்த்தைகளை பேசவில்லை. அவர் உள்ளதை உள்ளது என்றே சொல்லுகிறார். மணவாட்டியின் அழகை மிகைப்படுத்தியும் சொல்லவில்லை. மணவாட்டி மெய்யாகவே பூரண அழகுள்ளவளாகயிருக்கிறாள். மணவாட்டியோ தான் கறுப்பாயிருப்பதை நினைத்து சோர்ந்துபோயிருக்கிறாள். எருசலேமின் குமாரத்திகளும் மணவாட்டியின் கறுப்பு நிறத்தைப் பார்த்து வேதனைப்படுகிறார்கள். மணவாளன் மணவாட்டியின் அழகைப் புகழ்ந்து சொல்லி, அவளை உற்சாகப்படுத்துகிறார்.

மணவாட்டி மணவாளனோடு கலியாண நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறாள். இது அவளுடைய அழகை அதிகரிக்கிறது. அவள் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறாள் என்பது மெய்தான். சபையின் அழகு இங்கு வர்ணிக்கப்படுகிறது. சபை மெய்யாகவே கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது. இப்பிரபஞ்சத்தின் மத்தியில் கர்த்தருடைய சபையார் பிரகாசமாயிருக்கிறார்கள். மணவாளன் மணவாட்டியின் அழகை ஒவ்வொரு பகுதியாக விவரிக்கிறார். அவளுடைய அழகை ஒப்பிட்டுச் சொல்லுகிறார். மணவாட்டியின் அழகு பூரணமாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சபையில் பரிசுத்த ஆவியானவரின் கிருபை நிரம்பியிருக்கிறது. தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக கிறிஸ்துவானவர் ஏழு ஆவிகளாக இருக்கிறார். இவரே மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவர். பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாயிருக்கிறவர். இயேசுகிறிஸ்துவினாலே சபைக்கு கிருபையும் சமாதானமும் உண்டாயிருக்கிறது. ஏழு ஆவியானவர் சபையின் ஏழு குணாதிசயங்களை வர்ணிக்கிறார். மணவாட்டி ஏழு அழகும் நிரம்பியவளாக, பரிபூரண அழகோடு இருக்கிறாள்.

"யோவான் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும், உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்ளுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (வெளி 1:4,5).

"நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும் சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்" (1கொரி 1:5-7).

மணவாட்டியின் கண்கள் புறாக்கண்களாகயிருக்கிறது. கண்கள் பழுதில்லாமல் இருக்கவேண்டும். கண்கள் நேர்த்தியாகவும் அழகாகவும் இருந்தால்தான் முகம் அழகாகயிருக்கும். மணவாட்டியின் கண்களோ புறாக்கண்களைப்போல அழகாயிருக்கிறது. அது தெளிவாயும் பரிசுத்தமாயும் இருக்கிறது. புறா அடிக்கடி வானத்தைப் பார்க்கும். அதுபோலவே மணவாட்டியும் தன் கண்களால் அடிக்கடி பரலோகத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். நாம் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாயிருக்கிறோம். கிறிஸ்துவைப்பற்றிய ஞானமும் அறிவும் நமக்கு கண்களைப்போல இருக்கிறது.

நம்முடைய கண்கள் தெளிவாகப் பார்க்கவேண்டும். எதையும் அவசரப்பட்டு பார்க்கக்கூடாது. விநோதமான பார்வை இருக்கக்கூடாது. உலகத்தின் ஆசாபாசங்களைக் காணும்போது, நம்முடைய கண்களின் பார்வை கட்டுப்பாடோடு இருக்கவேண்டும். எல்லாப் பொருட்களையும் பார்த்து ஆசைப்படக்கூடாது. நம்முடைய நோக்கமும் குறிக்கோளும் உண்மையுள்ளதாகவும், நேர்மையுள்ளதாகவும், கண்ணியமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அப்போது நம்முடைய கண்களும் புறா கண்களாகயிருக்கும்.

புறாவின் கண்களை அதன் இமைகள் மூடிப் பாதுகாக்கும். கண்கள்மீது தூசிபடாதவாறும், வெயில் தாக்காதவாறும் புறாவின் கண் இமைகள் அதைப் பாதுகாப்பாக வைத்திருக்கும். புறாவின் கண் இமைகள், அதன் கண்களை மூடி மறைப்பதினால், புறாவால் முழுமையாய்ப் பார்க்க முடியாது. நாமும் இந்தப் பிரபஞ்சத்திலிருக்கும் வரையிலும், நம்மாலும் பரலோகத்தின் காரியங்களை முழுமையாய்ப் பார்க்க முடியாது. அநேகக் காரியங்கள் நமக்கு இன்னும் மறைவாகவே இருக்கிறது.

மணவாட்டியின் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப்போலிருக்கிறது. இவை வெண்மை நிறத்திலிருக்கும். மலையின்மீது வெள்ளாடுகள் கூட்டமாய் மேயும்போது, அவை தலையை மூடியிருக்கிற கூந்தலைப்போல அழகாயிருக்கும். "கூந்தல்" என்னும் வார்த்தைக்கு வியாக்கியானம் சொல்லும்போது, இது விசுவாசிகள் மற்றவர்களோடு பேசுகிற சம்பாஷணையைக் குறிக்கும் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய சம்பாஷணையின் வார்த்தைகள் கண்ணியமுள்ளதாகவும், உண்மையுள்ளதாகவும், தெளிவுள்ளதாகவும் இருக்கவேண்டும். தெளிவான பேச்சே அழகான பேச்சு. நம்முடைய பேச்சுக்கும் செய்கைக்கும் ஒற்றுமையிருக்கவேண்டும். இருதயத்தின் பரிசுத்தம் நாவின் பேச்சுக்களாக வெளிப்படவேண்டும்.

மணவாட்டியின் பற்கள் ஆட்டுமந்தையைப் போலிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய சபையின் பற்களைப்போல இருக்கிறார்கள். இவர்கள் கடினமான உணவைப் புசித்து, தங்களுக்குள் ஜீரணித்து, தங்கள் பிள்ளைகளுக்கு பாலைப் பருகக்கொடுக்கும் தாயைப்போல கிறிஸ்துவின் குழந்தைகளாக இருக்கிறவர்களுக்கு, கொடுக்கிறார்கள். சிறுகுழந்தைகளுக்கு திடமான ஆகாரத்தைக் கொடுக்க முடியாது.

மணவாட்டியின் பற்கள் கத்தரிக்கப்பட்ட பின் குளிப்பாட்டப்பட்டு கரையேறுகிற ஆட்டு மந்தையைப்போலிருக்கிறது. பற்களெல்லாம் வரிசையாகயிருக்கும். ஆடுகள் கறையேறும்போது ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாய்க் கரையேறும். அவை குளிப்பாட்டப்பட்டு சுத்தமாயிருக்கிறது. அதுபோலவே மணவாட்டியின் பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கிறது.

கரையேறுகிற ஆடுகளில் ஒன்றும் மலடாயிருக்கவில்லை. எல்லாம் இரட்டைக்குட்டி ஈன்றவைகளாயிருக்கிறது. மணவாட்டியின் வாயிலும் எங்கெல்லாம் பற்கள் இருக்கவேண்டுமோ, அங்கெல்லாம் இடைவெளியில்லாமல் பற்கள் இருக்கிறது. வாயில் பற்கள் நிரம்பியிருப்பதே ஒரு அழகு. மணவாட்டிக்கு பற்களில் குறை ஏதுமில்லை.

மணவாட்டியின் உதடுகள் சிவப்பு நூலுக்கு சமானமாயிருக்கிறது. சிவப்பு நிற உதடுகள் அழகானவை. இது ஆரோக்கியத்திற்கு அடையாளம். உதட்டின் நிறம் பழுப்படைந்து இருக்கும்போது, அந்த நபர் ஆரோக்கியமில்லாமல் நோய்வாய்ப்பட்டு, பலவீனமாயிருக்கிறார் என்று பொருள். மணவாட்டியோ ஆரோக்கியத்தோடிருக்கிறாள்.

நம்முடைய உதடுகளின் கனிகளினால் கர்த்தரைத் துதிக்கவேண்டும். நம்முடைய வாயினால் கர்த்தரை அறிக்கை செய்யவேண்டும். துதிகளும் ஸ்தோத்திரங்களும் நம்முடைய வாயில் பிறக்கவேண்டும். இவையே சிவப்பு நூலுக்கு சமானமாயிருக்கிறது. நம்முடைய நற்கிரியைகளும் நல்வார்த்தைகளும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டிருக்கவேண்டும். சிவப்பு நூலைப்போல இரத்தாம்பர சிவப்பு நிறத்திலிருக்கவேண்டும். அப்போதுதான் தேவனாகிய கர்த்தர் நம்முடைய துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் அங்கீகரிப்பார். மணவாட்டியின் வாக்கு மணவாளனுக்கு இன்பமாயிருக்கிறது.

மணவாட்டியின் கன்னங்கள் முக்காட்டின் நடுவே இருக்கிறது. அவை வெடித்த மாதளம்போல இருக்கிறது. மாதளம்பழத்தை இரண்டாக வெட்டி, பிளந்து பார்த்தால், அதில் முத்துக்கள் வரிசையாயிருக்கும். சிவப்பு நிறத்திலிருக்கும். மணவாட்டியின் கன்னங்கள் வெடித்த மாதளம் பழம்போல சிவப்பாக, அழகாகயிருக்கிறது.

நம்முடைய இருதயத்தில் தாழ்மையிருக்கவேண்டும். கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மையோடு வரவேண்டும். தேவனுடைய சமுகத்திற்கு முன்பு வரும்போது நம்முடைய பாவங்களை நினைவுகூர்ந்து, நாம் பாவியென்பதை அங்கீகரித்து, மிகுந்த பணிவோடு வரவேண்டும். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நிற்பதற்குக்கூட நாம் தகுதியற்றவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். மனத்தாழ்மையை நாம் வஸ்திரமாக அணிந்துகொள்ளவேண்டும்.

நம்மை நாம் பார்க்கும்போது நமக்குள் பெருமை எதுவும் இருக்கக்கூடாது. நாம் மனத்தாழ்மையோடிருந்தாலும், நம்முடைய கர்த்தர் நம்மைப் பார்க்கும்போது, நம்முடைய அழகை அவர் காண்கிறார். நாம் கிறிஸ்துவின் பார்வையில் அழகுள்ளவர்களாகயிருக்கிறோம். நம்முடைய மனத்தாழ்மை நமக்கு அழகு சேர்க்கிறது.

மணவாட்டியின் கழுத்து தாவீதின் கோபுரம் போலிருக்கிறது. கழுத்து நம்முடைய சரீரத்தையும் தலையையும் இணைக்கிறது. அதுபோல விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவே தலையானவர். நாம் அவருடைய சரீரமாயிருக்கிறோம். விசுவாசத்தினால் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். இந்த வசனத்தில் "கழுத்து" என்று சொல்லப்பட்டிருக்கிற வார்த்தை, நாம் தேவன்மீது வைத்திருக்கிற விசுவாசத்தைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

மணவாட்டியின் கழுத்து தாவீதின் கோபுரம் போலிருக்கிறது. இந்தக் கோபுரம் ஒரு ஆயுதசாலையைப் போலிருக்கிறது. இதில் பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிறது. யுத்த ஆயுதங்களெல்லாம் இந்தக் கோபுரத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. யுத்தம் பண்ணுகிறவர்களுக்கு கேடகங்களும் பரிசைகளும் தேவை. அவர்கள் யுத்தத்திற்குப் போகும்போது தாவீதின் கோபுரத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கேடகங்களையும் பரிசைகளையும் எடுத்துச் செல்வார்கள்.

விசுவாசமே நம்முடைய கேடகம். "பொல்லாங்கன் எய்யும் அக்கினி யாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்" (எபே 6:16). நம்மிடத்தில் விசுவாசம் என்னும் கேடகம் இருக்கும்போது, கர்த்தருடைய பாதுகாப்பும் நமக்கு கிடைக்கும். தேவனே நமக்கு கேடகமாகயிருந்து நம்மைப் பாதுகாப்பார்.

மணவாட்டியின் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்கு சமானமாயிருக்கிறது. "நீங்கள் அவளுடைய ஆறுதல்களின் முலைப்பாலை உண்டு திருப்தியாகி, நீங்கள் சூப்பிக்குடித்து, அவளுடைய மகிமையின் பிரகாசத்தினால் மனமகிழ்ச்சியாகுங்கள்" (ஏசா 66:11).

மணவாட்டியின் இரண்டு ஸ்தனங்களும் பரிசுத்த வேதாகமத்திலுள்ள இரண்டு ஏற்பாடுகளை குறிப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இவை இரண்டு நியமங்களாகிய ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி ஆகியவற்றை குறிப்பதாகவும் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இவை கிருபையின் உடன்படிக்கையை முத்திரையிடுகிறது.

மணவாட்டியின் இரண்டு ஸ்தனங்கள் ஊழியக்காரரை குறிப்பதாகவும் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இவர்கள் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய தாயாரைப்போல ஊழியம் செய்து, அவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பாலைப் புருகக்கொடுக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனம் தேவை. போஜனமில்லாமல் வளரமுடியாது. கிறிஸ்துவானவர் மேயும் இடத்தில் அவருடைய பிள்ளைகளுக்கும் போஜனம் கிடைக்கும். "என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள். அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்" (உன் 2:16).

சாம்பிராணி மலை
உன் 4:6

உன் 4:6. பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்துபோகும்வரைக்கும், நான் வெள்ளைப்போள மலையிலும் சாம்பிராணி மலையிலும் போயிருப்பேன்.

மணவாளன் இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார். அவர் வெள்ளைப்போள மலையில் ஒய்வெடுக்கிறார். இதுவே அவருடைய வாசஸ்தலம். வெள்ளைப்போள மலை மோரியா மலையை குறிப்பதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த மலையின்மீது கர்த்தருடைய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது. தேவனை ஆராதிப்பதற்கு இந்த மலையில் அன்றாட தூபபலி செலுத்தப்படும்.

கிறிஸ்துவானவர் மரித்து உயிர்த்தெழுந்த பின்பு, வானத்திற்கு பரமேறிப்போனார். அவர் தம்முடைய சீஷர்களைவிட்டுக் கடந்துபோகும்போது, "இதோ, நான் உலகத்தின் கடைசிபரியந்தம் உங்களோடு கூடயிருப்பேன்" என்று வாக்குப்பண்ணினார். தேவனுடைய பிரமாணம் எங்கு முறைப்படி அனுசரிக்கப்படுகிறதோ அங்கு கிறிஸ்துவானவர் இருப்பார்.

பரிசுத்த பர்வதத்திலே கர்த்தர் இருக்கிறார். இந்த பர்வதத்தைக் குறிப்பதற்கு இரண்டு வார்த்தைகள் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று வெள்ளைப்போள மலை. மற்றொன்று சாம்பிராணி மலை. வெள்ளைப்போள மலை கசப்பானது. சாம்பிராணி மலையோ இனிமையானது. கர்த்தருடைய பர்வதத்தில் நமக்கு கண்ணீர்விட்டு புலம்புவதற்கும் வாய்ப்புண்டு. அங்கு சந்தோஷப்பட்டு களிகூருவதற்கும் வாய்ப்புண்டு.

நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவது கசப்பை இனிமையாக மாற்றும். பரலோகத்திலே வெள்ளைப்போளம் இருக்காது. வெள்ளப்போளம் வருத்தத்திற்கு அடையாளம். அங்கு சாம்பிராணி மாத்திரமே இருக்கும். சாம்பிராணி சந்தோஷத்திற்கு அடையாளம்.

நீ பூரண ரூபவதி
உன் 4:7

உன் 4:7. என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை.

மணவாளன் தம்முடைய மணவாட்டியின் அழகை மறுபடியுமாக வர்ணிக்கிறார். "என்பிரியமே, நீ பூரண ரூபவதி" என்று சொல்லுகிறார். தேவனாகிய கர்த்தர் இந்தப் பூமியிலுள்ள எல்லா காரியங்களையும் சிருஷ்டித்தார். ஒவ்வொன்றையும் சிருஷ்டித்து முடித்த பின்பு, தேவன் அது நல்லது என்று கண்டார். தேவனுடைய சிருஷ்டிப்பில் பழுது ஒன்றுமில்லை. கர்த்தருடைய மணவாட்டியினிடத்திலும் பழுது ஒன்றுமில்லை. அவள் பூரண ரூபவதியாயிருக்கிறாள். மணவாட்டியின் எல்லா அம்சங்களும் பூரணமாய் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது.

ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது, அவருக்கு எல்லாம் புதிதாயிருக்கும். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி 5:17). நம்முடைய முகமும் புதிதாயிருக்கும். நமக்கு புதிய நாமம் கொடுக்கப்படும். அது மாத்திரமல்ல நாம் புதிய மனுஷராகவும் இருப்போம். நம்முடைய சுபாவமும் புதிதாயிருக்கும்.

என் மணவாளியே
உன் 4:8

உன் 4:8. லீபனோனிலிருந்து என்னோடே வா, என் மணவாளியே! லீபனோனிலிருந்து என்னோடே வா. அமனாவின் கொடுமுடியிலிருந்தும், சேனீர் எர்மோனின் கொடு முடியிலிருந்தும், சிங்கங்களின் தாபரங்களிலிருந்தும், சிவிங்கிகளின் மலைகளிலிருந்தும் கீழே பார்.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையோடு இன்னும் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். தம்முடைய அன்பையும், நேசத்தையும் மணவாட்டிக்கு தொடர்ந்து வெளிப்படுத்துகிறார். அவர் மணவாட்டியை அழைக்கும்போது "என் மணவாளியே" என்று அன்போடு அழைக்கிறார். இந்த வார்த்தையில் மணவாளனுடைய அன்பு நிரம்பியிருக்கிறது. தம்முடைய அன்பை அவளுக்கு உறுதிபண்ணும் விதமாக, மணவாளன் மணவாட்டியை, "என் மணவாளியே" என்று அழைக்கிறார்.

"என் மணவாளியே" என்னும் வாக்கியம் இரண்டுதரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (உன் 4:8,11). கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியை, "என் சகோதரியே, என் மணவாளியே" என்றும் அழைக்கிறார். இந்த வாக்கியம் மூன்று தரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (உன் 4:9,10,12).

மணவாளனுடைய கலியாண நாளைப்பற்றியும், மனமகிழ்ச்சியின் நாளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது (உன் 3:11). மணவாளன் மணவாட்டியை கலியாண ஒப்பந்தம் செய்துகொள்கிறார். தம்முடைய மணவாட்டியாக நிச்சயம் செய்துகொள்கிறார். அதற்குப் பின்புதான் அவளை, "என் மணவாளியே" என்று அழைக்கிறார். அதற்கு முன்பு அவளை கிறிஸ்துவானவர், "என் மணவாளியே" என்று அழைக்கவில்லை.

கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் திருமண உடன்படிக்கை நடைபெற்றிருக்கிறது. இந்த உடன்படிக்கையில் கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொரு உண்மையான விசுவாசியும், கிறிஸ்துவுக்கு மணவாட்டியாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவோடு கலியாண உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். இந்த சத்தியத்தின் பிரகாரம் கிறிஸ்துவானவர், தம்முடைய சபையை, தம்முடைய மணவாட்டியாக அழைக்கிறார்.

கிறிஸ்து தம்முடைய சபையின்மீது அன்பாயிருக்கிறார். அவருடைய அன்பு பரிசுத்தமானது. மனுஷருக்குப் புரியும்விதமாக தேவன் தம்முடைய சபையின்மீது தாம் வைத்திருக்கும் ஒப்பற்ற அன்பை வெளிப்படுத்த விரும்புகிறார். கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையிலுள்ள உறவை, கலியாண உறவினால் வெளிப்படுத்துவது கிறிஸ்துவுக்குச் சித்தமாயிற்று. கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தையும், அன்பையும் வெளிப்படுத்துவதற்கு, கலியாண ஐக்கியத்தைத் தவிர வேறு ஐக்கியம் பொருத்தமாகயிருக்காது.

இந்தப் பூமியிலே மனுஷர் மத்தியிலே கலியாணம் நடைபெறுகிறது. ஒரு ஆணும் பெண்ணும் தங்களை கலியாண ஒப்பந்தத்தில் இணைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் திருமணம் செய்துகொண்டு தம்பதியராகயிருக்கிறார்கள். கிறிஸ்து தம்முடைய சபையை மணவாட்டியாக ஏற்றுக்கொள்கிறார். இது உலகப்பிரகாரமான கலியாணமல்ல. இது ஆவிக்குரிய கலியாணம். கிறிஸ்து தம்முடைய சபையை, "என் மணவாளியே" என்று அழைப்பதை, நாம் ஆவிக்குரிய ரீதியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

கிறிஸ்து மணவாட்டியை அழைக்கும்போது, "என் சகோதரியே, என் மணவாளியே" என்று அழைக்கிறார். இங்கு இரண்டு உறவுகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சபை கிறிஸ்துவுக்கு சகோதரியாகவும் இருக்கிறது, மணவாளியாகவும் இருக்கிறது. தேவனாகிய கர்த்தர் இந்தப் பூமியிலே மனுஷராக அவதரித்தார். மாம்ச சாயலைத் தெரிந்துகொண்டார். அவர் நம்மைப்போல மாம்ச சரீரத்தில் இருப்பதினால், அவர் தம்முடைய சபையை "என் சகோதரியே" என்று அழைக்கிறார்.

மணவாளன், தம்முடைய மணவாட்டியை, "என்னோடே வா" என்று அன்போடு அழைக்கிறார். மணவாட்டி தன் மணவாளனுக்கு உண்மையுள்ளவளாக இருக்கிறாள். மணவாளனை நம்புகிறாள். தம்மை நம்புகிற மணவாட்டியை, மணவாளன், தம்மிடத்தில் வருமாறு, அன்போடு அழைக்கிறார்.

எல்லா விசுவாசிகளுமே கிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தோடு வரவேண்டும். அவர்கள் கிறிஸ்துவோடு கூடவரவேண்டும். விசுவாசிகள் கிறிஸ்துவுக்குப் பரிசுத்தமாய்க் கீழ்ப்படியவேண்டும். தங்களுடைய பயபக்தியை வெளிப்படுத்தவேண்டும். நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பதினால், அவரோடுகூட நடக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவிடத்திலும் வரவேண்டும். கிறிஸ்துவோடும் வரவேண்டும். கிறிஸ்துவிடமும் நாம் நடந்து வரவேண்டும், கிறிஸ்துவோடும் கூட நாம் நடந்து வரவேண்டும்.

நம்முடைய மணவாளனாகிய கிறிஸ்துவானவர், அவருடைய விசுவாசிகளாகிய நம்மைப் பார்த்து "என் மணவாளியே, என்னோடே வா" என்று அழைக்கிறார். இது ஒரு கட்டளை. இந்தக் கட்டளை அன்றாடக கட்டளையாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விசுவாசிகளெல்லோரும், ஒவ்வொரு நாளும், கிறிஸ்துவோடு கூட நடக்கவேண்டும். நாம் குமாரனாகிய கிறிஸ்துவோடுகூட பிதாவினிடத்திற்கு நடந்து வரவேண்டும். ஒரு பிள்ளை தன் தகப்பனோடு நடந்து வருவதுபோல, நம்முடைய பரம தகப்பனாகிய கிறிஸ்துவோடுகூட நாம் நடக்கவேண்டும்.

நாம் கிறிஸ்துவோடுகூட ஒவ்வொரு நாளும் நடந்து, நம்முடைய இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும். பரலோகமே நம்முடைய இலக்கு. நாம் அனுதினமும் பரலோகத்தை நோக்கி, கிறிஸ்துவோடுகூட நடந்து, முன்னேறிச் செல்லவேண்டும்.

மணவாளன் தன் மணவாட்டியைப் பார்த்து "என் மணவாளியே, லீபனோனிலிருந்து என்னோடே வா, அமனாவின் கொடுமுடியிலிருந்தும், சேனீர் எர்மோனின் கொடுமுடியிலிருந்தும், சிங்கங்களின் தாபரங்களிலிருந்தும், சிவிங்கிகளின் மலைகளிலிருந்தும் என்னோடே வா" என்று அழைக்கிறார். இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு மலைக்கும் ஒரு ஆவிக்குரிய அர்த்தமுண்டு.

இந்தப் பர்வதங்களெல்லாமே மிகவும் அழகானது. லீபனோன் நல்ல தேசம் என்றும், நல்ல மலை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (உபா 3:25). எர்மோன் மேல் பனி இறங்கும் என்றும், அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என்றும் தாவீது சொல்லுகிறார் (சங் 133:3). எர்மோன் கர்த்தருடைய நாமம் விளங்க கெம்பீரிக்கும் (சங் 89:12).

மணவாட்டி இந்த உலகத்திலிருந்து தன்னை விடுவித்து, தம்மிடத்தில் வரவேண்டுமென்று மணவாளனாகிய கிறிஸ்து அழைக்கிறார். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. இந்தப் பிரபஞ்சத்தின் மாய்மாலங்களில் நாம் சிக்கிக்கொள்ளாதவாறு, இதிலிருந்து நம்மை விடுவித்து, கர்த்தரிடத்தில் வந்துவிடவேண்டும். இந்தப் பூமியிலுள்ள உயர்ந்த பர்வதங்கள்மீது நாம் தங்கியிருக்கும்போது, பரலோகத்திற்கு நாம் சமீபமாயிருப்போம். நம்முடைய நோக்கம் உன்னதமாயிருக்கவேண்டும். நம்முடைய தரிசனம் உன்னத தேவனையே நோக்கிப் பார்க்கவேண்டும். இந்தப் பிரபஞ்சம் நமக்கு நித்திய வாசஸ்தலமல்ல. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம்.

சேனீரின் கொடுமுடியும், எர்மோனின் கொடுமுடியும் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ளது. இங்கிருந்து பார்க்கும்போது பிஸ்கா பர்வதத்திலிருந்து பார்ப்பதுபோல இருக்கும். பிஸ்காவின் கொடுமுடியிலிருந்து கானான் தேசத்தைப் பார்க்க முடியும். நாம் இந்தப் பிரபஞ்சத்திலிருந்தாலும், நம்முடைய பரம தேசத்தையே நாம் நோக்கிப் பார்க்கவேண்டும்.

லீபனோனும், அமனாவும், சேனீரும் சந்தோஷமான ஸ்தலங்கள். ஆனாலும் இங்கு சிங்கங்களின் தாபரங்கள் இருக்கிறது. இந்த மலைகளில் சிவிங்கிகள் வாசம்பண்ணுகின்றன. சிங்கங்களும் சிவிங்கிகளும் நம்மை வேட்டையாடிக் கொன்றுபோடும். இந்தப் பர்வதங்கள் பார்ப்பதற்கு அழகாயிருந்தாலும், இங்கு ஆபத்து நிரம்பியிருக்கிறது. பர்வதங்களின் கொடுமுடியில்தான் ஏராளமான சோதனைகளும் ஆபத்துக்களும் உள்ளன.

"மகத்துவமுள்ளவரே, கொள்ளையுள்ள பர்வதங்களைப்பார்க்கிலும் நீர் பிரகாசமுள்ளவர்" (சங் 76:4) என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார். மலை உச்சிகளிலும் மேடுகளிலும் விக்கிரகாராதனைக்காரரின் விக்கிரகதோப்புக்கள் உள்ளன. துன்மார்க்கமான ஜனங்கள் இங்கே வாசம்பண்ணுகிறார்கள். நாம் விக்கிரகாராதனைக்காரரோடு ஐக்கியமாயிராமல், அவர்களை விட்டு விலகி, கர்த்தரிடத்தில் வந்துவிடவேண்டும். நம்முடைய மணவாளனாகிய கிறிஸ்துவும் நம்மை, "என் மணவாளியே, லீபனோனிலிருந்து என்னோடே வா" என்று அன்பாய் அழைக்கிறார். இந்தக் கொடுமுடிகளிலிருந்தும், மலைகளிலிருந்தும் கீழே பார் என்று நம்மிடத்தில் சொல்லுகிறார்.

நம்முடைய மாம்சத்தின் இச்சைகளிலிருந்தும், உலக சிநேகத்திலிருந்தும் நாம் விடுதலைபெற்று, கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். இச்சைகளும், பாவங்களும் சிங்கங்களைப் போலவும் சிவிங்கிகளைப்போலவும் ஆபத்தானவை. அவை நம்மைப் பட்சித்துப்போடும்.

லீபனோனில் சிங்கங்களின் தாபரங்கள் இருக்கிறது. நாம் இந்த ஸ்தலத்திலிருந்து கர்த்தரோடு வரவேண்டும். எல்லோருமே கர்த்தரிடத்தில் வரவேண்டும். எல்லா திசைகளிலுள்ளவர்களும் கர்த்தரிடத்தில் வந்து சேரவேண்டும். சபையிலுள்ள ஜீவனுள்ள ஆத்துமாக்கள் எல்லோரும் கர்த்தரிடத்தில் வந்து சேரவேண்டும். வடக்கிலே லீபனோன் இருக்கிறது. மேற்கில் அமனா உள்ளது. கிழக்கே எர்மோனும், தெற்கே சேனீரும் உள்ளன. இந்தத் திசைகள் எல்லாவற்றிலிருந்தும் கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரிடத்தில் வந்து சேரவேண்டும். அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள் (மத் 8:11). இந்தப் பந்தியில் பங்குபெற வருமாறு கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அழைக்கிறார்.

"என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த்தப்படும். இதோ, இவர்கள் தூரத்திலிருந்து வருவார்கள்; இதோ, அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள்; இவர்கள் சீனீம்தேசத்திலுமிருந்து வருவார்கள் என்கிறார்" (ஏசா 49:11,12).

என் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய்
உன் 4:9-11

உன் 4:9. என் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய்; என் சகோதரியே! என் மணவாளியே! உன் கண்களிலொன்றினாலும் உன் கழுத்திலுள்ள ஒரு சரப்பணியினாலும் என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்.

உன் 4:10. உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது; என் சகோதரியே! என் மணவாளியே! திராட்சரசத்தைப் பார்க்கிலும் உன் நேசம் எவ்வளவு மதுரமாயிருக்கிறது! சகல சுகந்தவர்க்கங்களைப்பார்க்கிலும் உன் பரிமளதைலங்கள் எவ்வளவு வாசனையாயிருக்கிறது!

உன் 4:11. என் மணவாளியே! உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது, உன் நாவின்கீழ் தேனும் பாலும் இருக்கிறது, உன் வஸ்திரங்களின் வாசனை லீபனோனின் வாசனைக்கொப்பாயிருக்கிறது.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையின்மீது பிரியமாயிருக்கிறார். தம்முடைய பிள்ளைகளை நினைத்து சந்தோஷப்படுகிறார். கிறிஸ்து தம்முடைய சபையின்மீது வைத்திருக்கும் அன்பை இங்கு விரிவாகச் சொல்லுகிறார். தம்முடைய அன்பை உறுதிபண்ணும் விதமாக, கிறிஸ்துவானவர், தம்முடைய சபைக்காக, தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவின் அன்புக்கு ஈடாக, நம்மால் எதையும் திரும்பக் கொடுக்க முடியாது. தாம் நேசிக்கிற சபைக்காக, கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தையே அன்பின் கிரயமாகச் செலுத்தினார்.

கிறிஸ்து தம்முடைய சபையாரிடத்தில் வைத்திருக்கும் அன்பைப்பற்றிச் சொல்லும்போது, "என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியம் பரிசுத்த வேதாகமத்தில் இந்த வசனத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவதற்கு வார்த்தைகள் போதாது. கிறிஸ்துவானவர் தம்முடைய தெய்வீக அன்பை இந்த வாக்கியத்தினால் வெளிப்படுத்துகிறார். புதிய வார்த்தைகளை உருவாக்கி, தம்முடைய சபையாருக்கு தம்முடைய அன்பை வெளிப்படுத்திச் சொல்லுகிறார்.

சபையானது கிறிஸ்துவின் இருதயத்தைக் கவர்ந்துகொண்டிருக்கிறது. "உன் கண்களில் ஒன்றினாலும், உன் கழுத்திலுள்ள ஒரு சரப்பணியினாலும் என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்" என்று நம்முடைய ஆத்தும நேசர் நம்மோடு அன்பான வார்த்தைகளைப் பேசுகிறார். நம்முடைய கண்கள் புறாக்கண்களைப்போல தெளிவாகவும் சுத்தமாகவும் இருக்கிறது.

விசுவாசிகளுக்கு கீழ்ப்படிதலே அலங்காரமான ஆபரணமாகயிருக்கிறது. மணவாட்டி தன்னுடைய மணவாளனுக்குக் கீழ்ப்படிந்து, தன்னை அழகுபடுத்தியிருக்கிறாள். கீழ்ப்படிதலுக்கு அடையாளமாக அவள் தன் கழுத்தில் ஒரு சரப்பணியை அணிந்திருக்கிறாள். கீழ்ப்படிதல் அவளுடைய ஆத்துமாவை அழகுபடுத்துகிறது. அவளுடைய ஆத்துமாவில் தேவனுடைய கிருபை நிரம்பியிருக்கிறது. நாம் உலகப்பிரகாரமான காரியங்களினால், இந்த உலகத்தோடு கட்டப்பட்டிருக்கக்கூடாது.

"தூசியை உதறிவிட்டு எழுந்திரு; எருசலேமே, வீற்றிரு; சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு" (ஏசா 52:2). நம்முடைய கழுத்து இந்த உலகத்தோடு கட்டப்பட்டிருக்கிறது. அந்த கட்டுகளை அவிழ்த்து நாம் இந்த உலகத்திலிருந்து வேறுபிரிந்து கர்த்தரிடத்தில் வரவேண்டும். நம்முடைய கழுத்தில் சரப்பணியை அணிந்துகொள்ளவேண்டும். உலகத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். கிறிஸ்துவின் நுகத்தை நம்மீது ஏற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் நுகம் இனிமையானது. அது மென்மையானது.

கிறிஸ்து நம்முடைய கழுத்திலுள்ள சரப்பணியைப் பார்க்கிறார். நம்மிடத்தில் காணப்படுகிற மனத்தாழ்மையையும், கீழ்ப்படிதலையும் பார்த்து கிறிஸ்துவானவர் சந்தோஷப்படுகிறார். நம்முடைய நற்குணங்கள் கர்த்தருடைய இருதயத்தைக் கவர்ந்து கொள்கிறது. கிறிஸ்துவின் அன்பு பெரியது. அவருடைய அன்பு பரிசுத்தமானது. அவருடைய அன்பு அழகானது. கிறிஸ்துவை நேசிப்பது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்மை நேசிக்கிறார். நம்முடைய கீழ்ப்படிதல் கிறிஸ்துவின் இருதயத்தைக் கவர்ந்துகொள்கிறது.

கிறிஸ்து நம்முடைய நேசத்தைப்பற்றிச் சொல்லும்போது "உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது" என்று ஆச்சரியப்பட்டு சொல்லுகிறார். கிறிஸ்துவின் பார்வைக்கு, நாம் அவர்மீது வைத்திருக்கிற அன்பும், அவருக்கு கீழ்ப்படிகிற சுபாவமும் இன்பமாயிருக்கிறது. திராட்சரசத்தைப் பார்க்கிலும் நாம் கர்த்தர்மீது வைத்திருக்கிற நேசம் கிறிஸ்துவுக்கு மதுரமாயிருக்கிறது. சகல கந்தவர்க்கங்களைப் பார்க்கிலும், நம்முடைய பரிமள தைலங்கள், கிறிஸ்துவுக்கு அதிக வாசனையாயிருக்கிறது. மணவாட்டியின்மீது பரிமள தைலங்களின் வாசனை வீசுகிறது.

சபையார் மத்தியிலே ஆவியானவருடைய வரங்களும் கிருபைகளும் அதிகமாய்க் கிரியை செய்கிறது. சபை கிறிஸ்துவுக்குள் நற்கிரியைகளைச் செய்கிறது. இதுவே கர்த்தருக்கு ஏற்ற சுகந்தவாசனை. இதுவே கர்த்தர் ஏற்றுக்கொள்கிற பலி. தேவன்மீது நாம் வைத்திருக்கிற நேசமே, அவருக்கு சுகந்தவாசனையாகவும், தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாகயிருக்கிறது. (பிலி 4:18). அன்பும் கீழ்ப்படிதலும், பலியையும் கந்தவர்க்கங்களையும்விட தேவனுக்கு மதுரமானது.

மணவாட்டியின் வஸ்திரங்களிலும் வாசனை வீசுகிறது. இந்த வாசனை லீபனோனின் வாசனைக்கு ஒப்பாயிருக்கிறது. மணவாட்டியின் வஸ்திரங்களை எல்லோரும் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியும். சபை கிறிஸ்துவைத் தன்னுடைய ஆண்டவராக ஏற்றுக்கொண்டு, ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருப்பதை நற்கிரியைகள் மூலமாக சாட்சியாய் அறிவிக்கிறது. இவையெல்லாம் லீபனோனின் வாசனைக்கு ஒப்பானவை.

மணவாட்டியின் வார்த்தைகளும் மதுரமாயிருக்கிறது. "என் மணவாளியே, உன் உதடுகளிலிருந்து தேன் ஒழுகுகிறது" என்று மணவாளன் சொல்லுகிறார். மேலும், "உன் நாவின் கீழ் தேனும் பாலும் இருக்கிறது" என்றும் மணவாளன் தன் மணவாட்டியைப் புகழ்ந்து பேசுகிறார். தேவன் நம்மோடு பேசுவதுதான் நமக்கு இனிமையானது.

"கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது" (சங் 19:9,10). ஆனால் நம்முடைய கர்த்தருக்கோ, நம்முடைய வார்த்தைகளே மதுரமாயிருக்கிறது. ஜெபத்தில் நாம் ஏறெடுக்கிற வேண்டுதலின் வார்த்தைகளும், விண்ணப்பங்களின் வார்த்தைகளும், கர்த்தரைத் துதிக்கிற துதிகளின் வார்த்தைகளும், ஸ்தோத்திர வார்த்தைகளும் கர்த்தருக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது.

நம்முடைய வார்த்தைகள் கிறிஸ்துவானவருக்கு தேன் ஒழுகுகிறதுபோலவும், தேனும் பாலும் போலவும் இருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தையில் நமக்கு ஆவிக்குரிய ஆகாரமுள்ளது. சிறு குழந்தைகள் பருகுவதற்கு பாலைப்போன்ற மென்மையான போஜனமுமுள்ளது. முதிர்ச்சி பெற்ற விசுவாசிகளுக்கு தேனைப்போன்ற சுவையான ஆகாரமுமுள்ளது. நம்முடைய நேசம் கர்த்தருக்குப் பிரியமாயிருப்பதுபோல, கர்த்தருடைய நேசமோ நமக்குப் பிரியமாயிருக்கிறது.

நாம் கர்த்தருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டபோல, அவரும் நம்முடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டார். கர்த்தர் நம்முடைய அன்பைப் புகழும்போது, நாம் கர்த்தருடைய அன்பைப் புகழ்ந்து சொல்லவேண்டும். அவருடைய அன்பை நினைத்து, அவரைப் போற்றிப் புகழவேண்டும். அவரைப் புதுப்பாடல்களால் பாடிக் கீர்த்தனம்பண்ணவேண்டும்.

சிங்காரவனம்
உன் 4:12-14

உன் 4:12. என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்.

உன் 4:13. உன் தோட்டம் மாதளஞ்செடிகளும், அருமையான கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதச் செடிகளும்,

உன் 4:14. நளதமும், குங்குமமும், வசம்பும், லவங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும், வெள்ளைப்போளச்செடிகளும், சந்தன விருட்சங்களும், சகலவித கந்தவர்க்கச் செடிகளுமுள்ள சிங்காரவனமாயிருக்கிறது.

சபையானது ஒரு தோட்டத்திற்கு ஒப்புமையாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக தோட்டத்தில் நீரூற்றும், கிணறும் இருக்கும். இந்தத் தோட்டம் அடைக்கப்பட்ட தோட்டமாகும். தேவனுடைய சபை உலகப்பிரகாரமான ஸ்தலங்களிலிருந்து, வேறுபிரிக்கப்பட்டு, ஒரு பரதீசைப்போல அழகாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதுவே தேவனுக்குப் பிரியமானது. கர்த்தர் தம்முடைய சபையைப் பார்த்து, "என் சகோதரியே, என் மணவாளியே" என்று அன்போடு அழைக்கிறார். விசுவாசிகளாகிய தோட்டம் கர்த்தருக்காகவே வேறுபிரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்காகவே அடைக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் தேவனுடைய பங்கு. இதில் தேவனுடைய பிரமாணம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய பலத்த செய்கைகள் விளங்கும்படியாக இஸ்ரவேல் தேசம் மற்ற தேசங்களிலிருந்து வேறு பிரிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் தேவனுடைய மறைவான இரகசியங்களெல்லாம் புதைந்து கிடக்கின்றன. தேவனுடைய பரிசுத்தவான்கள் அவரால் பாதுகாப்பாக மறைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய தோட்டத்தின் நடுவே உலாவுகிறார். கிறிஸ்துவின் பிரசன்னத்தை உலகப்பிரகாரமான ஜனங்களால் பிரத்தியட்சமாய்க் காணமுடியாது.

சபையின் பாதுகாப்புக்காகவே அது அடைக்கப்பட்ட தோட்டமாகயிருக்கிறது. சபையைச் சுற்றிலும் வேலியடைக்கப்பட்டிருக்கிறது. அந்தகார சக்திகள், சாத்தானின் வல்லமைகள் எதுவும் சபைக்குள் பிரவேசித்துவிடாதவாறு, சபையானது அடைக்கப்பட்ட தோட்டமாக பாதுகாக்கப்படுகிறது. கர்த்தருடைய தோட்டத்தில் நீரூற்றுள்ளது. ஒரு கிணறுமுள்ளது. இந்த நீரூற்று மறைவு கட்டப்பட்ட நீரூற்று. இந்தக் கிணறு முத்திரிக்கப்பட்ட கிணறு. நீரூற்றில் மறைவு கட்டப்பட்டிருப்பதினாலும், கிணறு முத்திரிக்கப்பட்டிருப்பதினாலும், இந்தத் தண்ணீரில் வேறு எந்த தண்ணீரையும் கலந்து கலப்படம் பண்ண முடியாது. மற்ற தண்ணீரின் அசுத்தம் இதில் கலந்து, நீரூற்றையும் கிணற்று நீரையும் கெடுத்து அசுத்தமாக்கி விடாதவாறு இது பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

விசுவாசிகளின் ஆத்துமாக்கள் அடைகட்டப்பட்ட தோட்டத்தைப் போன்றவர்கள். விசுவாசிகளுக்குள் இருக்கிற கிருபை மறைவு கட்டப்பட்ட நீரூற்றைப்போல இருக்கிறது. அவர்களுடைய இருதயத்தில் அவர்களுடைய ஆத்துமா உள்ளான மனுஷனாக மறைவாயிருக்கிறது. அந்த ஆத்துமாவுக்கு கிறிஸ்துவானவர் ஜீவத்தண்ணீரைத் தருகிறார். விசுவாசிகளுக்குள்ளே ஜீவத்தண்ணீர் நீரூற்றாக புறப்பட்டு வருகிறது.

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவா 4:14).

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" (யோவா 7:38).

பழைய ஏற்பாட்டுக்காலத்து சபையும் அடைக்கப்பட்ட தோட்டமாகயிருந்தது. சடங்காச்சார பிரமாணங்களால் அந்த சபையைச் சுற்றிலும் தடுப்பு சுவரைப்போல வேலியடைக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் பரிசுத்த வேதாகமம் மறைவு கட்டப்பட்ட நீரூற்றைப்போலவும், முத்திரிக்கப்பட்ட கிணற்றைப்போலவும் அவர்களுக்கு இருந்தது. பரிசுத்த வேதாகமம் இஸ்ரவேல் என்னும் ஒரு தேசத்திற்கு மாத்திரமே சொந்தமாயிருந்தது. ஆனால் இப்போதோ பிரிவினையாகிய நடுச்சுவர் தகர்க்கப்பட்டு விட்டது. எல்லா தேசங்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. கர்த்தராகிய கிறிஸ்துவானவர் உலக இரட்சகராகயிருக்கிறார். கிறிஸ்துவுக்குள் கிரேக்கனென்றும், யூதனென்றும் வித்தியாசமில்லை. இயேசுகிறிஸ்துவிடம் பட்சபாதமில்லை.

விசுவாசிகளின் தோட்டத்தில் மாதுளஞ்செடிகளும், அருமையான கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதச் செடிகளும் நிரம்பியிருக்கின்றன. தோட்டத்திலே கனிகள் மாத்திரமல்ல, நளதமும், குங்குமமும், வசம்பும், லவங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும் நிரம்பியிருக்கின்றன. அவற்றோடு வெள்ளைப்போளச்செடிகளும், சந்தன விருட்சங்களும், சகலவித கந்தவர்க்க செடிகளும் திரளாய் உள்ளன.

விசுவாசிகளின் தோட்டத்தில் கனிதரும் விருட்சங்களும் அதிகம். தூபவர்க்க மரங்களும் அதிகம். கந்தவர்க்க செடிகளும் அதிகம். கனிகளும் நேர்த்தியானவை. தூபவர்க்கங்களும் நேர்த்தியானவை. தூபவர்க்கங்கள் மலர்களைவிட மேன்மையானவை.

சபையிலுள்ள விசுவாசிகள் கனிகளுக்கும், தூபவர்க்கங்களுக்கும் ஒப்புமையாக சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அருமையான கனிமரங்களைப் போலவும், சகலவித தூபவர்க்க மரங்களைப்போலவும் இருக்கிறார்கள்.

"சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" (ஏசா 61:3).

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இந்தப் பூமிக்கு ஆசீர்வாதமானவர்கள். இவர்கள் சீக்கிரத்தில் அழிந்துபோகமாட்டார்கள். நீடித்த காலத்திற்கு நிலைத்திருப்பார்கள். பரிசுத்தவான்களிடத்தில் நல்ல நோக்கமும், நல்ல பேச்சும், நல்ல சித்தமும் இருக்கும். பூக்கள் உதிர்ந்துபோனால் அதன்பின்பு அது ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் சிறிதுகாலம் மலர்ந்து, அதன்பின்பு அழிந்துபோகிற பூக்களைப்போன்றவர்களல்ல. கர்த்தருடைய பிள்ளைகள் அருமையான கனிமரங்களைப் போலவும், சகலவித தூபவர்க்க மரங்களைப்போலவும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் நிரம்பியிருக்கிற சபையானது சிங்காரவனத்தைப்போல இருக்கிறது. இதில் தேவனுடைய கிருபையும் அன்பும், ஐக்கியமும் எப்போதுமே நிரம்பியிருக்கிறது. தேவனுடைய மகிமை எப்போதும் வெளிப்படுகிறது. சிங்காரவனத்தில் சகலவித கந்தவர்க்க செடிகளின் நறுமணம் எப்போதும் வீசுவதுபோல, பரிசுத்தவான்களின் நாவிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் துதி எப்போதும் வந்துகொண்டேயிருக்கிறது. சிங்காரவனத்தில் அருமையான கனிமரங்கள் எக்காலத்திலும் நற்கனிகளைக் கொடுப்பதுபோல, கர்த்தருடைய பரிசுத்தவான்களின் ஜீவியத்தில் ஆவியின் கனிகள் வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கிறது.

ஜீவதண்ணீரின் துரவு
உன் 4:15

உன் 4:15. தோட்டங்களுக்கு நீரூற்றும், ஜீவதண்ணீரின் துரவும், லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது.

இந்த வாக்கியத்தை மணவாட்டியாகிய சபை பேசுகிறாள். மணவாளனாகிய கிறிஸ்து, தம்முடைய மணவாட்டியின் அழகைப் புகழ்ந்து பேசுகிறார். "நீ என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்" என்று கிறிஸ்து தம்முடைய சபையிடம் சொல்லுகிறார். சபையானது அடைக்கப்பட்ட தோட்டத்தைப்போலவும், கனிமரங்களும் தூபவர்க்க மரங்களும் நிரம்பியுள்ள சிங்காரவனத்தைப்போலவும் இருக்கிறது. இவையெல்லாம் மணவாளன் தம்முடைய மணவாட்டியைப் புகழ்ந்து பேசுகிற வார்த்தைகளாகும்.

மணவாட்டியோ தன்னைப் புகழ்ந்து சொல்லும் மணவாளனுக்கு முன்பாக தன்னை முற்றிலுமாய்த் தாழ்த்துகிறாள். தன்னுடைய தோட்டத்தில் விருட்சங்கள் கனிதரவேண்டுமென்றால், கர்த்தர் தாமே தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். தான் கனிதருவது மணவாளனின் கிருபையைச் சார்ந்திருக்கிறது. தன்னுடைய எல்லா தேவைகளையும் மணவாளனே சந்திக்கவேண்டுமென்று, அவள் அவரையே நோக்கிப் பார்க்கிறாள்.

தோட்டங்களுக்கு நீரூற்றுக்கள் வேண்டும். ஜீவத்தண்ணீரும் துரவும் வேண்டும். லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கவேண்டும். இவையெல்லாம் கர்த்தருடைய கிருபையினால் தோட்டத்திற்கு வரும். கர்த்தருடைய கிருபையிருந்தால்தான் தோட்டம் சிங்காரவனமாகயிருக்கும். கிருபையில்லாத தோட்டம் பாலைவனம் போல வறண்டு கிடக்கும். மணவாட்டி கர்த்தருடைய கிருபையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவளாக, கர்த்தரை மகிமைப்படுத்துகிறாள். கர்த்தருடைய கிருபையில்லாமல் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை அங்கீகரிக்கிறாள். கர்த்தருடைய காருணியத்தினாலேயே தன்னுடைய தோட்டத்தில் கனிகள் உண்டாயிருப்பதாகச் சொல்லுகிறாள்.

சபையார் தாங்கள் பெற்றிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், கர்த்தரையே துதிக்கிறார்கள். எங்களுடைய நீரூற்றுக்களெல்லாம் உம்மிடத்திலிருந்து வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். "நீரே எங்களுக்கு ஜீவத்தண்ணீரின் துரவாகயிருக்கிறீர்" என்று சொல்லி கர்த்தரைப் போற்றுகிறார்கள்.

"என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்" (எரே 2:13).

கிறிஸ்துவுக்கு தோட்டமாகவும், சிங்காரவனமாகவும் இருக்கிறவர்கள், தங்கள் தோட்டத்தில் உண்டாயிருக்கிற நீரூற்றுக்களுக்காக கர்த்தரைத் துதிக்கவேண்டும். ஜீவத்தண்ணீரின் துரவுகளுக்காகவும் அவருக்கு நன்றி சொல்லவேண்டும். கர்த்தருடைய பரிபூரணமான நிறைவிலிருந்தே நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறோம். கர்த்தர் நமக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பதினால்தான் நம்முடைய ஆத்துமா செழித்திருக்கிறது. கர்த்தருடைய ஜீவித்தண்ணீர் நமக்குக் கிடைக்கவில்லையென்றால் நம்முடைய ஆத்துமா வறண்டு போகும். கர்த்தருடைய நீரூற்றுக்களினாலும், ஜீவத்தண்ணீரின் துரவுகளினாலும் கர்த்தருடைய பிள்ளைகளின் ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டங்களைப்போல இருக்கிறது.

"அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை" (எரே 31:12).

வாடையே எழும்பு
உன் 4:16

உன் 4:16. வாடையே! எழும்பு; தென்றலே! வா; கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு; என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக.

பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதத்தினால் விசுவாசிகளின் சிங்காரவனத்திலே சகலவித தூபவர்க்கங்களும் நறுமணத்தை வீசுகிறது. இதுவும் கர்த்தருடைய கிருபையே. மணவாட்டி தான் பெற்ற நன்மைகளுக்காக, தன்னுடைய மணவாளனை நன்றியோடு துதிக்கிறாள். "வாடையே எழும்பு தென்றலே வா" என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து சொல்லுகிறாள். இது சபையின் பொதுவான ஜெபமாகும். சபையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் அதிகமாய் நடைபெறுகிறது. அவருடைய அருள்மாரி தாராளமாய் ஊற்றப்படுகிறது.

சபையின் ஜெபத்திற்கு கர்த்தர் பதில் கொடுத்திருக்கிறார். பெந்தேகொஸ்தே நாளில் விசுவாசிகளெல்லோரும் ஒருமனப்பட்டு ஜெபம்பண்ணியபோது, பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி அவர்கள்மீது ஊற்றப்பட்டது. அப்போது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாயிற்று (அப் 2:1). பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கு முன்பாக அப்போஸ்தலர்கள் கட்டப்பட்டவர்களைப்போல இருந்தார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பின்போ, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள். அவர்களிடமிருந்து கிறிஸ்துவின் நற்கந்தம் வெளிப்பட்டது. ஜீவனுக்கேதுவான ஜீவவாசனை புறப்பட்டு வந்தது.

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். யுகட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?" *(2கொரி 2:14-16).*

பரிசுத்தமாக்கப்பட்ட ஆத்துமாக்கள் தோட்டங்களைப் போலவும், சிங்காரவனங்களைப்போலவும் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய தோட்டங்களாகவும், கர்த்தருக்காக அடைக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். விசுவாசிகளின் ஆத்துமாவில் நிரம்பியிருக்கிற தேவனுடைய கிருபைகள், சிங்காரவனத்தில் மணம் வீசுகிற தூபவர்க்கங்களுக்கும், கந்தவர்க்கங்களும் ஒப்பாயிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் ஆத்துமாக்களில் கிரியை நடப்பிக்கிறார். அவர் வாடையாகவும், தென்றலாகவும் சபைக்குள் வருகிறார். வாடை என்பது வடக்கு காற்றையும் தென்றல் என்பது தெற்கு காற்றையும் குறிக்கிற வார்த்தை. வடக்கு காற்று பாவத்தைக் கண்டித்து உணர்த்தும். தெற்கு காற்று ஆத்துமாவுக்கு சமாதானத்தையும் ஆறுதலையும் தரும். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை கண்டித்தும் உணர்த்துகிறார். அவர்களுக்கு ஆறுதலையும் தருகிறார்.

தோட்டத்திலே தூபவர்க்கங்களின் நறுமணம் பரவுவது ஆவியானவரின் காற்றடிக்கிற திசையைப் பொறுத்துதான் இருக்கும். ஆவியானவர் எப்படி கிரியை நடப்பிக்கிறாரோ அப்படித்தான் சபையில் கிரியை நடக்கும். மணவாட்டி இதை உணர்ந்தவளாக, "வாடையே எழும்பு, தென்றலே வா, கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்திலே வீசு" என்று பரிசுத்த ஆவியானவரிடம் விண்ணப்பம்பண்ணுகிறாள்.

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய சபையாகிய தோட்டத்திற்கு வரும்போது, நாம் ஆவியின் கனிகளை அவருக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கவேண்டும். விசுவாசிகளின் ஜீவியம் கனிகொடுக்கிற ஜீவியமாகயிருக்க வேண்டும். தோட்டத்திலுள்ள கனிகளெல்லாம் கர்த்தருக்கே உரியது. கர்த்தருடைய காருணியத்தினால்தான் அருமையான கனிமரங்களில் கனிகள் உண்டாயிருக்கிறது. இந்தக் கனிகளுக்கெல்லாம் கர்த்தரே சொந்தக்காரர்.

மணவாட்டி தன்னுடைய மணவாளரின் கிருபையை அங்கீகரித்து, "என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என்று சொல்லுகிறாள். தோட்டமும் கர்த்தருடையது. தோட்டத்திலுள்ள கனிகளும் கர்த்தருடையது. கிறிஸ்து இல்லையென்றால் தோட்டமுமில்லை. தோட்டத்தில் கனியுமில்லை. கிறிஸ்து இல்லையென்றால் நாமுமில்லை. கிறிஸ்து அல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

தோட்டத்திலுள்ள கனிகளுக்கெல்லாம் கர்த்தரே சொந்தக்காரர். சிங்காரவனத்தில் அருமையான கனிகள் அநேகம் இருந்தாலும், சகலவித தூபவர்க்கங்களும், கந்தவர்க்கங்களும் இருந்தாலும், இவற்றின் மேன்மையும் மகிமையும் கர்த்தருக்கே உரியது. நாம் கர்த்தருக்குரிய துதியையும் கனத்தையும் மகிமையையும் அவருக்கே செலுத்தவேண்டும். கர்த்தர் நம்முடைய கனிகளை அங்கீகரிப்பதே நமக்கு ஆறுதல்.

தோட்டத்தில் ஏராளமான கனிகள் இருந்தாலும், அந்தக் கனிகள் எல்லாவற்றையும் நம்முடைய ஆத்தும நேசருக்கு புசிக்கக் கொடுக்கவேண்டும். நம்முடைய கனிகள் மூலமாய் கர்த்தருக்குப் பிரயோஜனமுண்டாக வேண்டும். அதைப் பார்த்து நாம் சந்தோஷப்படவேண்டும். கர்த்தர் நம்முடைய ஆத்துமாவிற்குள் வரவில்லையென்றால், நம்முடைய ஆத்துமாவில் மெய்யான சந்தோஷம் இருக்காது. நம்முடைய கனியை கர்த்தருக்குப் படைப்பதுதான் நமக்கு மெய்யான சந்தோஷம். கர்த்தரை நேசிக்கிற ஆத்துமா தன்னையே அவருக்கு ஜீவபலியாக ஒப்புவிக்கும்.

தன்னுடைய பேச்சிலும் கிரியையிலும் கர்த்தரை மகிமைப்படுத்தும். மணவாட்டி தன்னுடைய மணவாளனிடம், "என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வருவாராக" என்று அழைப்பதுபோல, நாமும் நம்முடைய கர்த்தரை, நமக்குள் வருவாராக என்று அழைக்கவேண்டும். "என் நேசர், தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என்று மணவாட்டி சொல்லுவதுபோல, நாமும், நம்முடைய கர்த்தர் நம்மை ஆளுகை செய்வாராக, நம்மை ஆட்கொள்வாராக என்று விண்ணப்பம்பண்ணவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படவேண்டும். அவருக்கே துதியும் கனமும் உண்டாகவேண்டும். நாம் நம்மைத் தாழ்த்தவேண்டும். கர்த்தரை உயர்த்தவேண்டும். இதுவே விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியத்தில் பிரதான நோக்கமாயிருக்கவேண்டும்.

5 அதிகாரம்

மணவாட்டி தன்னுடைய தோட்டத்திற்கு வருமாறு மணவாளனை அழைக்கிறாள். மணவாளன் மணவாட்டியின் அழைப்பை கிருபையாக ஏற்றுக்கொண்டு, அவளுடைய தோட்டத்திற்கு வருகிறார். சபையிலிருந்து ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கு கர்த்தர் செவிகொடுக்கிறார் (உன் 5:1). மணவாளன் தம்முடைய தோட்டத்திற்கு வந்தாலும், மணவாட்டியோ தன்னுடைய மதியீனத்தினால் அவரை வரவேற்காமல் நித்திரைபண்ணிக் கொண்டிருக்கிறாள். இதனால் மணவாளன் தோட்டத்திற்குள் பிரவேசிக்காமல் திரும்பிப்போய்விடுகிறார். மணவாட்டிக்கு மிகுந்த மனவருத்தமுண்டாயிற்று. தான் மணவாளனை வரவேற்காததற்கான காரணங்களை மணவாட்டி சொல்லுகிறாள் (உன் 5:2-8).

எருசலேமின் குமாரத்திகளிடம் மணவாட்டி தன்னுடைய மணவாளனைப்பற்றி விசாரிக்கிறாள் (உன் 5:9). எருசலேமின் குமாரத்திகள் கேட்கும் கேள்விக்கு மணவாட்டி பதில்சொல்லுகிறாள். மணவாளனுடைய பூரண அழகை அவர்களிடம் விவரித்துச் சொல்லுகிறாள் (உன் 5:10-14). கர்த்தரை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் விசேஷித்தவராகயிருக்கிறார். கர்த்தரை விசுவாசிக்கிறவர்களும் அவருக்கு விசேஷித்தவர்களாயிருக்கிறார்கள்.

நான் என் தோட்டத்தில் வந்தேன்
உன் 5:1

உன் 5:1. என் சகோதரியே! என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன், என் வெள்ளைப் போளத்தையும் என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன்; என் தேன்கூட்டை என் தேனோடு புசித்தேன்; என் திராட்சரசத்தை என் பாலோடும் குடித்தேன்; சிநேகிதரே! புசியுங்கள்; பிரியமானவர்களே! குடியுங்கள், பூர்த்தியாய்க் குடியுங்கள்.

சபையார் ஏறெடுக்கும் விண்ணப்பத்திற்கு கிறிஸ்துவானவர் செவிகொடுத்து, பதில் கொடுக்கிறார். "என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என்று மணவாட்டி தன்னுடைய மணவாளனை அன்போடு அழைக்கிறாள். மணவாட்டியின் அன்பான அழைப்பை ஏற்றுக்கொண்டு, மணவாளன் இப்போது தோட்டத்திற்கு வந்திருக்கிறார்.

தோட்டத்திற்கு வந்திருக்கிற மணவாளன், தம்முடைய மணவாட்டியை, "என் சகோதரியே, என் மணவாளியே" என்று அன்போடு அழைக்கிறார். மெய்யாகவே மணவாளன் தம்முடைய மணவாட்டியை அன்பாய் நேசிக்கிறார். மணவாட்டியும் தன்னுடைய மணவாளனை நேசித்து, அவரை "என் நேசர்" என்று கூப்பிடுகிறாள். மணவாளனும் மணவாட்டியும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கிறார்கள். இருவரும் பரஸ்பரமாக அன்பான வார்த்தைகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள். தங்கள் அன்பை வெளிப்படுத்தும் பெயர்களினால் ஒருவரையொருவர் அழைத்துக்கொள்கிறார்கள். மணவாளன் தம் மணவாட்டியை, "என் சகோதரியே, என் மணவாளியே" என்று அன்போடு அழைக்கிறார். மணவாட்டியும் தன் மணவாளனை, "என் நேசர்" என்று அன்போடு கூப்பிடுகிறாள்.

கிறிஸ்துவானவர் நம்முடைய நேசராகயிருக்கவேண்டும். நாம் அவரை நேசிக்கவேண்டும். தம்மை நேசிக்கிறவர்களை கிறிஸ்துவானவர் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்கிறார். அவர்களை தமக்கு அருகாமையில் வைத்து, அன்பாய் நேசிக்கிறார். கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்கள் அவருக்கு நெருங்கிய சொந்தமானவர்களாகயிருக்கிறார்கள்.

ஆகையினால் கர்த்தர் தம்முடைய சபையை, "என் சகோதரியே" என்று அழைத்து, தம்முடைய சகோதர பாசத்தை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவின் சபையிலுள்ளவர்கள் அவருக்குப் பிரியமானவர்களாகவும் இருக்கிறார்கள். கிறிஸ்து தம்முடைய சபையை தமக்கு மணவாட்டியாக அங்கீகரித்திருக்கிறார். ஆகையினால் அவர் சபையாரை, "என் மணவாளியே" என்றும் அன்போடு கூப்பிடுகிறார்.

மணவாட்டி தன் மணவாளனை, "என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என்று அன்போடு அழைத்தாள். மணவாளனும் அவளுடைய அழைப்பை ஏற்று, இப்போது தோட்டத்திற்கு வந்திருக்கிறார். இந்தத் தோட்டம் கர்த்தருடைய தோட்டம். ஆகையினால் மணவாளன் தம்முடைய வருகையைப்பற்றிச் சொல்லும்போது, "நான் என் தோட்டத்தில் வந்தேன்" என்று சொல்லுகிறார்.

நம்முடைய ஆத்துமாவின் கதவுகளைக் கர்த்தருக்கு திறந்துகொடுக்கவேண்டும். கிறிஸ்துவானவர் வாசற்படியில் நின்று நம்முடைய இருதயத்தின் கதவுகளைத் தட்டிக்கொண்டிருக்கிறார். நாம் அவருக்கு நம்முடைய ஆத்தும கதவுகளைத் திறந்துகொடுத்தால், அவர் நம்குள் பிரவேசித்து, நம்முடைய இருதயத்திற்குள் வந்து வாசம்பண்ணுவார். கிறிஸ்துவானவர் நம்முடைய இருதயத்திற்குள் பிரவேசிக்க எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார். நாமும் அவரை நமக்குள் வரவேற்பதற்கு எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும்.

"நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" *(யாத் 20:24).* நாம் கர்த்தருடைய நாமத்தைத் துதிக்கவேண்டும். அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்த வேண்டும். நம்முடைய சபையில் கர்த்தரைத் துதிக்கும் துதிகளின் சத்தமும், ஸ்தோத்திர பலிகளின் சத்தமும் தொடர்ந்து கேட்கப்படவேண்டும். அங்கு நம்முடைய கர்த்தர் வந்து வாசம்பண்ணுகிறார்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனை அழைக்கும்போது, "என் நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" என்று சொன்னாள். தோட்டத்திலுள்ள கனிகளை மாத்திரம் புசிப்பதற்காக மணவாட்டி அவரை அழைத்தாள். ஆனால் மணவாளனோ, தம்முடைய தோட்டத்திற்கு வரும்போது, தம்மோடுகூட தேனையும், திராட்சரசத்தையும், பாலையும் கொண்டு வருகிறார். கனிகளைப் புசிப்பதோடு இவற்றையும் பருகவேண்டுமென்று நேசர் விரும்புகிறார். பாலும் தேனும் கானான் தேசத்தின் ஆகாரம். கர்த்தர் நம்முடைய ஆத்துமாவிற்குள் பிரவேசிக்கும்போது, தம்முடைய ஆசீர்வாதங்களையும் தம்மோடு கொண்டு வருகிறார்.

மனுஷனுடைய மீட்பு உன்னதமானது. தேவனுடைய கிருபையின் உடன்படிக்கை ஐசுவரியமுள்ளது. இவை கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, அவருடைய பந்தியில் புசிக்கும் விருந்து போஜனம் போலயிருக்கும். நாம் கர்த்தரிடத்தில் ஒன்றைக் கேட்கும்போது, அவர் அதைக் கொடுப்பதோடு, நாம் கேட்காத அநேக ஆசீர்வாதங்களையும் நமக்குக் கொடுக்கிறார்.

நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வரும்போது, தம்முடைய வெள்ளைப்போளத்தையும், தம்முடைய கந்தவர்க்கங்களையும் தம்மோடு கூட கொண்டுவருகிறார். தம்முடைய தேன்கூட்டை, தம்முடைய தேனோடு புசிக்கிறார். தம்முடைய திராட்சரசத்தை தம்முடைய பாலோடு குடிக்கிறார். இந்த விருந்தை தாம் மாத்திரம் புசிக்காமல், தம்மோடுகூட சிநேகிதரையும் பிரியமானவர்களையும் விருந்துக்கு அழைத்து வந்திருக்கிறாள்.

மணவாளன் தம்மோடுகூட வந்திருக்கிறவர்களையும் பார்த்து, "சிநேகிதரே புசியுங்கள், பிரியமானவர்களே குடியுங்கள், பூர்த்தியாய்க் குடியுங்கள்" என்று அன்போடு சொல்லுகிறார். கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறுவதுபோல, நம்மோடுகூட கர்த்தருடைய பரிசுத்தவான்களெல்லோரும் பங்குபெறுவார்கள். அவர்களும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

நான் நித்திரை பண்ணினேன்
உன் 5:2

உன் 5:2. நான் நித்திரை பண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன்: என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற; என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார்.

சாலொமோனின் உன்னதப்பாட்டு ஒரு நேசப்பாட்டு. இது ஒரு சந்தோஷமான பாட்டு. இந்த சந்தோஷத்திற்கு நடுவில் இங்கு ஒரு சோகமான சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. மணவாட்டி தன்னுடைய சோகத்தை இங்கு வெளிப்படுத்துகிறாள். அவள் மணவாளனிடம் தன்னுடைய சோகத்தைச் சொல்லவில்லை. அதை அவள் தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறாள். தன்னுடைய மதியீனத்தையும், தன்னுடைய சோம்பல்தனத்தையும் நினைத்து மணவாட்டி தனக்குள்ளே வேதனைப்படுகிறாள்.

மணவாளன் மாணவாட்டியினுடைய அழைப்பை ஏற்று, அவர் தம்முடைய தோட்டத்தில் வருகிறார். ஆனால் மணவாட்டியோ, அவரை வரவேற்காமல் நித்திரைபண்ணிக் கொண்டிருக்கிறாள். அவள் ஆவியில் அனலாயிருந்தாள். ஆனால் இப்போது அந்த அனல் அவளை விட்டு நீங்கிப்போயிற்று. குளிருமில்லாமல் அனலுமில்லாமல் வெதுவெதுப்பாக தூங்கிக்கொண்டிருக்கிறாள்.

மணவாளனை அழைத்தது மணவாட்டிதான். தன்னுடைய அழைப்பை ஏற்று மணவாளன் வருவார் என்று விசுவாசித்து, அவருடைய வருகைக்காக அவள் எதிர்பார்ப்போடு காத்திருக்க வேண்டும். ஆனால் அவளோ தன்னுடைய கடமையை சரியாக நிறைவேற்றாமல் சோம்பலாயிருக்கிறாள். தன் நேசர் தன்மீது பிரியமாகயிருப்பதினால், அவருடைய நேசத்தையே அசட்டைபண்ணுகிறாள். ஒரு சிலருக்கு சந்தோஷமும் ஆசீர்வாதமும் அதிகமாய்க் கிடைக்கும்போது, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் அனலில்லாமல் குளிர்ந்துபோகும்.

விசுவாசிகளுடைய ஆவிக்குரிய ஜீவியம் எப்போதும் ஒரே நிலமையிலிருப்பதில்லை. சில வேளைகளில் உற்சாகமாயிருப்பார்கள். சில வேளைகளில் சோர்ந்துபோய்விடுவார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் சில சந்தர்ப்பங்களில் உயர்ந்த நிலமையில் காணப்படும். வேறு சில சந்தர்ப்பங்களில் தாழ்ந்த நிலமையில் காணப்படும். ஆவிக்குரிய அனல் நம்மைவிட்டு நீங்கிப்போனாலும், தேவனுடைய கிருபை நமக்குள் இருக்கும். அது நம்மைவிட்டு நீங்கிப்போவதில்லை.

மணவாட்டி நித்திரைபண்ணிக் கொண்டிருந்தாலும் அவளுடைய இருதயம் விழித்திருக்கிறது. அவளுடைய மனச்சாட்சி அவளைத் தட்டியெழுப்பி அவளோடு பேசுகிறது. அவளுடைய சோம்பல்தனத்தையும், நித்திரையையும் அவளுக்கு கண்டித்து உணர்த்துகிறது. அவளுடைய சரீரம் நித்திரையாயிருந்தாலும், அவளுடைய இருதயமும், மனச்சாட்சியும் விழித்திருக்கிறது. மணவாட்டி நித்திரைபண்ணிக் கொண்டிருக்கிறாள். ஆனால் அது ஆழ்ந்த நித்திரையல்ல. அவள் மரித்தவளைப்போல நித்திரையாயிருக்கவில்லை.

மணவாட்டி நித்திரையாயிருக்கும் போது, அவளுக்குள் ஒரு போராட்டம் உண்டாகிறது. அது நித்திரைக்கு எதிரான போராட்டம். சரீரம் தூங்குகிறது. இருதயம் விழித்திருக்கிறது. இந்தக் குழப்பத்திற்கு நடுவில் யாருக்கும் ஆழ்ந்த நித்திரை வராது. அரைகுறை தூக்கப் போடுவார்கள். அரைகுறை துக்கம்போடுவது ஆபத்தானது. இவர்களால் தங்கள் தூக்கத்தையும் அனுபவிக்க முடியாது. தங்கள் கடமையையும் சரியாகச் செய்ய முடியாது. தங்களுடைய பொறுப்புக்களை உற்சாகமாய்ச் செய்ய முடியாமல் சோர்வடைந்து தூங்கிவிழுவார்கள். இவர்கள் சரியாகவும் தூங்கி ஓய்வெடுக்கமாட்டார்கள். தங்களுடைய பொறுப்புக்களைப்பற்றிய நினைவு இவர்களுடைய இருதயத்திலிருக்கும். தங்கள் கடமையை நிறைவேற்றவேண்டுமே என்று நினைத்துக்கொண்டே தூங்க முயற்சி செய்வார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய நிலமையைக் குறித்து நாம் மிகவும் எச்சரிப்பாயும், கவனமாயும் இருக்கவேண்டும். நமக்கு ஆவிக்குரிய தூக்கம் வந்துவிடக்கூடாது. விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். நமக்குள் ஆவிக்குரிய சோர்வு வரும்போது, அதை நீக்கிப்போடும் வழிகளை கண்டுபிடிக்கவேண்டும். சோர்வை நீக்கிவிட்டு, கர்த்தருக்குள் உற்சாகமாயிருக்க வேண்டும். உலகக்கவலைகளும், வருத்தங்களும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை சோர்வடையச் செய்யும்.

கிறிஸ்துவானவர் தம்முடைய தோட்டத்திற்கு வரும்போது, அவரை அழைத்த மணவாட்டி, இப்போது அவரை வரவேற்காமல் நித்திரைபண்ணிக் கொண்டிருக்கிறாள். கிறிஸ்துவானவரை நமக்குள் வாரும் என்று அழைக்கிறோம். அவர் வரும்போது நாம் அவரை வரவேற்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். அவரை வரவேற்காமல், நாம் ஆவிக்குரிய பிரகாரமாக நித்திரைபண்ணிக் கொண்டிருந்தால், நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமானதாகயிருக்கும்.

கிறிஸ்துவானவர் தம்முடைய தோட்டத்தில் வருகிறார். அங்கு வந்து தோட்டத்தின் கதவைத் தட்டுகிறார். மணவாட்டி நித்திரைபண்ணிக் கொண்டிருந்தாலும் கதவைத் தட்டுகிற தன் நேசரின் சத்தத்தைக் கேட்கிறாள். தன் நேசர் வருவார் என்பது மணவாட்டிக்குத் தெரியும். அந்தச் சத்தம் நேசருடைய சத்தம் தான் என்பதும் அவளுக்குத் தெரியும். அவளுடைய இருதயம் விழித்திருக்கிறது.

சாமுவேல் சிறுபிள்ளையாகயிருந்த போது, கர்த்தர் "சாமுவேலே" என்று பெயர் சொல்லி கூப்பிட்டார். கர்த்தர் முதல்தடவை கூப்பிட்டபோது, தன்னை கர்த்தர் தான் கூப்பிடுகிறார் என்பதை சாமுவேல் அறியாதிருந்தார். மணவாட்டியோ சாமுவேலைப்போல, தன் நேசருடைய சத்தத்தை அறியாதவளல்ல. அவள் தன் நேசரின் சத்தத்தைக் கேட்கிறாள். தன்னைக் கூப்பிடுவது தன்னுடைய நேசர்தான் என்பதைப் புரிந்துகொள்கிறாள்.

நேசர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து கதவைத் தட்டுகிறார். தம் மணவாட்டியைத் தட்டியெழுப்புகிறார். அவள் எழுந்து கதவைத் திறந்தால்தான், நேசர் உள்ளே பிரவேசிப்பார். அதுபோலவே இன்றும் தேவனாகிய கர்த்தர் தம்முடைய வார்த்தையினாலும், பரிசுத்த ஆவியானவர் மூலமாயும் நம்முடைய இருதயத்தின் கதவுகளைத் தட்டுகிறார். நம்முடைய பாடுகள் மூலமாகவும், நம்முடைய மனச்சாட்சி மூலமாகவும் நம்முடைய கதவுகளைத் தட்டுகிறார். கர்த்தர் நம்முடைய கதவைத் தட்டும்போது நாம் நித்திரையாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு கதவைத் திறக்காமல் அசட்டையாயிருக்கக்கூடாது.

கர்த்தர் நம்மீது மிகவும் பிரிமாயிருக்கிறார். அவர் நம்முடைய இருதயத்தின் கதவைத் தட்டியும், நாம் அவருக்கு திறக்கவில்லையென்றால், அவர் நம்மை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடமாட்டார். வேறு வழிகளில் தட்ட ஆரம்பித்துவிடுவார். நம்மை கண்டிப்பார். நம்மைத் தண்டிப்பார். கடிந்து கூறுவார். எப்படியாவது நம்மை எழுப்பி, நமக்குள் பிரவேசிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து கதவைத் தட்டுகிறார். மணவாட்டி நித்திரையாயிருக்கிறாள். அவளுடைய இருதயம் விழித்திருக்கிறது. கதவைத் தட்டுகிற தன் நேசரின் சத்தத்தைக் கேட்கிறாள். ஆனாலும் மணவாட்டி நித்திரை மயக்கத்திலிருப்பதினால், அவள் எழுந்து வந்து, தன் மணவாளனுக்கு கதவைத் திறக்கவில்லை. கதவைத் திறக்காவிட்டாலும் மணவாளன் அங்கேயிருந்து உடனே போய்விடவில்லை. தம்முடைய அன்பான வார்த்தைகளினால் மணவாட்டியை எழுப்புகிறார். "என் சகோதரியே, என் பிரியமே, என் புறாவே, என் உத்தமியே, கதவைத் திற" என்று அன்போடு சொல்லுகிறார்.

மணவாளனுக்கு தம்முடைய தோட்டத்தில் உரிமையுள்ளது. அவர் கதவைத் தட்டுகிறார். கதவு திறக்கப்படவில்லையென்றால், அவரால் அந்தக் கதவை கழற்றி, தூக்கி வெளியே எறிந்துவிட முடியும். தம்முடைய சத்தத்திற்கு செவிகொடுத்து, மணவாட்டி கதவைத் திறக்காவிட்டால், அவரால் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே பிரவேசிக்க முடியும். நேசர் தமக்கு சொந்தமான தோட்டத்திற்குள் வருகிறார். தமக்குச் சொந்தமானதில் வருவதற்கு அவருக்கு வேறு யாருடைய அனுமதியும் தேவையில்லை. ஆனாலும் தேவன் தமது கிருபையினாலும் அன்பினாலும், அன்பான வார்த்தைகளையே பேசுகிறார். தம்முடைய தோட்டத்திற்கோ, தோட்டத்திலிருக்கிற மணவாட்டிக்கோ எந்தவிதமான சேதமும் உண்டுபண்ணவில்லை.

மணவாட்டி கதவைத் திறக்காவிட்டாலும், நேசர் அவள்மீது வைத்திருக்கிற அன்பு குறைந்துபோகவில்லை. தம்முடைய மணவாட்டியை எப்படியெல்லாம் அன்பான பெயர்களினால் அழைக்கலாமோ அப்படியெல்லாம் அழைக்கிறார். "என் சகோதரியே, என் பிரியமே, என் புறாவே, என் உத்தமியே" என்று அன்பாய்க் கூப்பிடுகிறார். கடினமான வார்த்தைகள் ஒன்றையும் பயன்படுத்தவில்லை. தேவனுடைய அன்பு ஒருபோதும் மாறுவதுமில்லை. அது ஒரு காலத்திலும் குறைந்துபோவதுமில்லை. தேவன் தம்முடைய பிள்ளைகள்மீது எப்போதுமே பூரண அன்புள்ளவர்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியை அன்பான பெயர்களினால் அழைத்து, "கதவைத் திற" என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட அன்பான வார்த்தைகளைப் பேசும் நேசருக்கு, நம்முடைய இருதயத்தின் கதவைத் திறவாமல் அமைதியாயிருக்கக்கூடாது. நம்முடைய நேசர் நமக்கு விசேஷித்த விருந்தினர். அவரே நம்முடைய ஆத்துமாவின் சொந்தக்காரர். அவரே நமக்கு சரீரத்தையும், ஆத்துமாவையும், ஆவியையும், ஜீவனையும் கொடுத்திருக்கிறவர். இந்த ஜீவன் கர்த்தருக்கே உரியது. ஆனாலும் நம்முடைய இருதயத்திற்குள் பிரவேசிக்க, நம்முடைய ஆத்தும நேசர், நம்முடைய அனுமதியை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார். கதவைத் திறக்குமாறு நம்மோடு அன்போடு கேட்டுக்கொள்கிறார்.

ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு பிரயாணம்பண்ணுகிறவர்கள், வழியில் தங்குவதற்காக, அந்த ஊரிலுள்ள வீட்டாரிடம் தங்களுடைய நிலமையை எடுத்துச் சொல்லுவார்கள். அவர்கள் வீட்டிற்குள் பிரவேசித்து தங்குவதற்கு அனுமதி கேட்பார்கள். நம்முடைய கர்த்தரோ, சர்வலோகத்திற்கும் அதிபதியாகயிருந்தாலும், தம்முடைய தோட்டத்திற்குள் வருவதற்கு, தம்முடைய பிள்ளைகளிடம் அனுமதி கேட்கிறார். தம்முடைய நிலமையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். "என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் நமக்கு இரட்சிப்பை உண்டுபண்ணுவதற்காக, தம்முடைய ஜீவனையே கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக, கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தையே, மீட்பின் கிரயமாகச் செலுத்தினார். நமக்காக பல பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தார். அவருடைய தலையில் முள்முடியை சூட்டினார்கள். அவருடைய சிரசிலிருந்து இரத்தம் வடிந்தது.

கிறிஸ்துவானவர் தம்முடைய இரத்தம் வடிகிற தலையைப்பற்றிச் சொல்லும்போது, "என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவானவர் தம்முடைய தோட்டத்தின் வாசலில் நின்றுகொண்டு, நமக்காக தாம் அனுபவித்த பாடுகளையெல்லாம் விவரித்துச் சொல்லுகிறார். கர்த்தர் நமக்காக இவ்வளவு பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்திருக்கும்போது, அவருடைய அழைப்பை ஏற்று, நம்முடைய இருதயத்தின் கதவைத் திறக்காமல், நித்திரைபண்ணிக் கொண்டிருக்கக்கூடாது.

என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன்
உன் 5:3

உன் 5:3. என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன்; நான் எப்படி அதைத் திரும்பவும் உடுப்பேன்; என் பாதங்களைக் கழுவினேன், நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் என்றேன்.

மணவாளன் தம்முடைய தோட்டத்திற்கு வந்து, அதன் கதவைத் தட்டினார். மணவாட்டியை அன்போடு கூப்பிட்டார். கதவைத் திறக்குமாறு சொன்னார். தம்முடைய தலை பனியினாலும் தூறலினாலும் நனைத்திருப்பதையும் சொன்னார். ஆனால் மணவாட்டியோ மணவாளனுக்குக் கதவைத் திறக்கவில்லை. கதவைத் திறக்க வருவதற்குப் பதிலாக, கதவைத் திறக்காமலிருப்பதற்கான சாக்குப்போக்குகளைச் சொல்லுகிறாள்.

"என் வஸ்திரத்தைக் கழற்றிப்போட்டேன். நாம் எப்படி அதை திரும்பவும் உடுப்பேன்" என்று சொல்லுகிறாள். மணவாட்டி அரைத்தூக்கத்திலிருக்கிறாள். அவளுக்கு நேசரின் சத்தம் கேட்கிறது. ஆனால் அவருக்குக் கதவைத் திறந்துகொடுக்க அவளுடைய இருதயத்தில் விருப்பமில்லை. ஆகையினால் சாக்குப்போக்குகளைச் சொல்ல ஆரம்பிக்கிறாள்.

"என் பாதங்களைக் கழுவினேன், எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன்" என்று இரண்டாவது சாக்குப்போக்கைச் சொல்லுகிறாள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சோம்பல்தனம் வந்துவிட்டால், இதைப்போன்ற சாக்குப்போக்குகளை நாம் ஏராளமாய்ச் சொல்லுவோம்.

கிறிஸ்து நம்முடைய இருதயத்தின் கதவைத் தட்டுகிறார். ஆனால் நாமோ இருதயத்தின் கதவைத் திறக்க மனதில்லாதவர்களாக, அவரிடத்தில் பல சாக்குப்போக்குகளைச் சொல்லுகிறோம். நமக்கு நேரமில்லை என்கிறோம். நமக்கு பெலமில்லை என்கிறோம். மனமில்லை என்பதுதான் காரணம். மனமிருந்தால் மார்க்கம் இருக்கும். நம்முடைய படுக்கை வெதுவெதுப்பாகயிருக்கலாம். நமக்கு தூக்கத்தின்மீது பிரியம் இருக்கலாம். நாம் என்ன நிலமையிலிருந்தாலும் நம்முடைய கர்த்தரை நாம் மறந்துவிடக்கூடாது. அவர் நமக்காகப் பட்ட பாடுகளையும், வேதனைகளையும் மறந்துவிடக்கூடாது. நம்முடைய நேசரின் தலை பனியினாலும், அவருடைய தலை மயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைத்திருக்கிறது என்பதை நாம் எப்போதும் நினைவுகூரவேண்டும். நாம் கிறிஸ்துவைப் பார்க்கும்போது, அவருடைய சிரசின்மீது சூட்டப்பட்ட முள்முடியையும், அவருடைய சிரசிலிருந்து வடிந்த, அவருடைய திருஇரத்தத்தையும் நினைவுகூரவேண்டும்.

என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார்
உன் 5:4

உன் 5:4. என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார், அப்பொழுது என் உள்ளம் அவர்நிமித்தம் பொங்கினது.

தேவனுடைய கிருபை அன்புள்ளது. அது பெலமுள்ளது. மணவாட்டி நித்திரையிலிருந்தாலும், தேவனுடைய வல்லமையான கிருபை அவளை எழுப்புகிறது. முதலில் தூங்கினவள், பின்பு சாக்குப்போக்குகளைச் சொன்னவள், இப்போது தன்னுடைய நேசருக்கு கதவைத் திறக்க ஆயத்தமாயிருக்கிறாள். மணவாளன் கதவைத் தட்டிப்பார்த்தார். அன்பான வார்த்தைகளைச் சொன்னார். தம்முடைய வேதனைகளையும் அவளுக்குத் தெளிவுபடுத்தினார். ஆனால் மணவாட்டியோ எழுந்து வந்து கதவைத் திறக்கவில்லை. மணவாளன் தம்முடைய முயற்சிகளை அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல், தமது கையை கதவு துவாரத்தின் வழியாக நீட்டுகிறார். கதவின் தாள்பாள்களை தாமாகவே திறப்பதற்காக, கதவு துவாரத்தின் வழியாக தம்முடைய கையை நீட்டுகிறார். அவர் இனிமேலும் பொறுமையோடு காத்திருக்க ஆயத்தமாயில்லை.

பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளும் நம்முடைய ஆத்துமாவில் இப்படித்தான் நடைபெறுகிறது. லீதியாள் பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளை கவனிக்கும்போது கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தருளினார் (அப் 16:14). ஆவியானவர் நம்முடைய இருதயத்தின் கதவைத் தட்டுகிறார். நம்முடைய கதவை நாம் அவருக்காகத் திறக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நாம் திறக்காமல் சோம்பலாகயிருந்தால், அவரே நம்முடைய இருதயத்தைத் திறந்துகொள்வார். தேவனுடைய கிருபையில் அன்புமுள்ளது. வல்லமையுமுள்ளது.

மணவாட்டி மணவாளனுடைய கிருபைகளை நினைத்துப் பார்க்கிறாள். அவை பரிசுத்தமாயிருக்கிறது. தெய்வீக கிருபைகளாக இருக்கிறது. தான் கதவைத் திறக்காமல், நித்திரையாயிருந்தாலும், சாக்குப்போக்குகளைச் சொன்னாலும், தன்னுடைய நேசர் தமது கையை கதவு துவாரத்தின் வழியாய் நீட்டுவதைப் பார்க்கிறாள். அப்பொழுது மணவாட்டியின் உள்ளம் மணவாளனின் நிமித்தம் பொங்கிற்று. தன்னுடைய நேரின் அன்பை நினைத்து மணவாட்டி சந்தோஷப்படுகிறாள். மணவாளரின் தலை பனியினால் நனைந்திருப்பதை நினைத்துப் பார்க்கிறாள்.

கிறிஸ்து நம்மீது இரக்கம் காண்பித்து, நமக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். நாமும் கிறிஸ்துவின் பாடுகளையும், வேதனைகளையும் நினைவுகூர்ந்து, அவர்மீது இரக்கப்பட்டாகிலும், நம்முடைய இருதயத்தின் கதவுகளை அவருக்காகத் திறந்துகொடுக்கவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குரியவர்கள். கிறிஸ்து நமக்குரியவர். நாம் துன்பப்படும் வேளையின் போதெல்லாம், கிறிஸ்துவானவரே நம்மைத் தேடி வந்து விசாரிக்கிறவர். கிறிஸ்துவின் அன்பை நாம் நினைத்துப் பார்க்கும்போது, நம்முடைய உள்ளமும் அவர் நிமித்தம் பொங்கும்.

என் நேசருக்குக் கதவைத்திறக்க நான் எழுந்தேன் உன் 5:5

உன் 5:5. என் நேசருக்குக் கதவைத்திறக்க நான் எழுந்தேன்; பூட்டின கைப்பிடிகள்மேல் என் கைகளிலிருந்து வெள்ளைப்போளமும், என் விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப்போளமும் வடிந்தது.

மணவாட்டி தன்னுடைய சோம்பல்தனத்தை நினைத்துப் பார்க்கிறாள். அவளுக்கு வெட்கமும் வேதனையும் உண்டாயிற்று. அவள் இனிமேலும் நித்திரையாயிருக்க விரும்பவில்லை. இப்போது தன் நேசருக்கு கதவைத் திறக்க அவள் எழும்புகிறாள். மணவாட்டிதான் தன்னுடைய நித்திரையை விட்டு எழுந்திருக்கவேண்டும். அவளுக்குப் பதிலாக வேறு யாரும் எழும்ப முடியாது. கிறிஸ்துவானவர் நம்முடைய இருதயத்தின் கதவைத் தட்டும்போது, நாம் தான் நம்முடைய கதவை அவருக்குத் திறந்துகொடுக்க வேண்டும். நம்முடைய கதவை நமக்குப் பதிலாக வேறு யாரும் திறக்க முடியாது. நம்முடைய பாவங்களுக்கு நாம் தான் மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நமக்குப் பதிலாக வேறு யாரும் நமக்காக மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது.

மணவாட்டி தன் நேசருக்கு கதவைத் திறக்க எழும்பியபோது, பூட்டின கைப்பிடிகள்மேல் அவள் கைகளிலிருந்து வெள்ளைப்போளம் வடிந்தது. அவளுடைய விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப்போளமும் வடிந்தது. இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவையாவன :

1. மணவாட்டி தன் நித்திரையிலிருந்து எழும்பி, பூட்டின கைப்பிடிகள்மேல் தன் கையை வைக்கிறாள். கதவைத் திறப்பதற்காக அவளுடைய கை கைப்பிடிகள் மேல்படுகிறது. அந்தக் கைப்பிடியில் வாசனையுள்ள வெள்ளைப்போளம் வடிந்து கொண்டிருக்கிறது. மணவாளன் தம் தோட்டத்திற்கு வந்து, தம்முடைய கையை கதவு துவாரத்தின் வழியாக நீட்டியபோது, தாம் வந்ததற்கு அடையாளமாக, கதவு கைப்பிடிகள்மேல் வாசனையுள்ள வெள்ளைப்போளத்தை வடிய விட்டிருக்கிறார். அது கிறிஸ்துவானவர் கதவைத் தட்டியதற்கு அடையாளம். அதுபோலவே நம்முடைய மீட்பராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாவின் கதவைத் தட்டும்போது, நம்முடைய ஆத்துமாவில் தம்முடைய ஆசீர்வாதத்தின் மகிமையையும், மேன்மையையும், மகத்துவத்தையும் அடையாளமாக விட்டுச் செல்லுகிறார்.

2. மணவாட்டி தன்னுடைய நேசருக்காக கதவைத் திறக்க எழும்புகிறாள். பூட்டின கைப்பிடிகள்மேல் தன்னுடைய கைகளை வைக்கிறாள். வாசனையுள்ள வெள்ளைப்போளத்தை மணவாட்டியே தயாரித்துக்கொண்டு வந்திருக்கலாம். மணவாளனுடைய தலையை அபிஷேகம்பண்ணுவதற்காக அவள் வெள்ளைப்போளத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இந்த வெள்ளைப்போளம் மணவாளனை சந்தோஷப்படுத்தும், ஆறுதல்படுத்தும், அவளுடைய மனதிற்கு ரம்மியமாகயிருக்கும் என்று நினைத்து, மணவாட்டியே வாசனையுள்ள வெள்ளைப்போளத்தைக் கொண்டு வந்திருக்கலாம்.

வெள்ளைப்போளத்தை முறைப்படி கலப்பதற்கு அதிக நேரமாகும். அதுவரையிலும் மணவாளன் கதவின் அருகில் நின்றுகொண்டிருப்பாரா என்னும் நிச்சயம் அவளுக்கு இல்லை. ஆகையினால் மணவாட்டி வாசனையுள்ள வெள்ளைப்போளத்தை அவசரம் அவசரமாகக் கலக்குகிறாள். தன்னுடைய கைகளையும், கைகளின் விரல்களையும் வெள்ளைப்போளத்து பெட்டியில் தோய்க்கிறாள். இப்போது வெள்ளைப்போளம் தோய்க்கப்பட்ட கைகளோடும், கைவிரல்களோடும், தன்னுடைய நேசரின் தலையை அபிஷேகம்பண்ணுவதற்காக வருகிறாள். தன்னுடைய கைகளை பூட்டின கைப்பிடிகள் மேல் வைக்கிறாள். அப்போது அவளுடைய கைகளிலிருந்து வெள்ளைப்போளமும், அவளுடைய விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப்போளமும், பூட்டின கைப்பிடிகள்மேல் வடிகிறது.

கிறிஸ்துவுக்காக தங்களுடைய இருதயத்தின் கதவுகளைத் திறக்கிறவர்கள், அவரை விசுவாசம் என்னும் வாசனையுள்ள வெள்ளைப்போளத்தோடு சந்திக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரை விசுவாசித்து நற்கிரியைகளைச் செய்யவேண்டும். நம்முடைய ஆவியின் கனிகளினாலும், நற்கிரியைகளினாலும், நாம் கர்த்தரை அபிஷேகம்பண்ணுவதற்கு ஆயத்தமாய் வரவேண்டும். தேவனுடைய ஆலயத்திற்கு வருகிறவர்கள் வெறுங்கையோடு வரக்கூடாது. அபிஷேக தைலத்தோடுதான் வரவேண்டும். கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், கர்த்தரை நம்பி நாம் செய்கிற நற்கிரியைகளும், கர்த்தரை அபிஷேகம்பண்ணும் அபிஷேக தைலமாகயிருக்கிறது.

என் நேசருக்குக் கதவைத் திறந்தேன்
உன் 5:6

உன் 5:6. என் நேசருக்குக் கதவைத் திறந்தேன்; என் நேசரோ இல்லை, போய்விட்டார்; அவர் சொன்ன வார்த்தையால், என் ஆத்துமா சோர்ந்துபோயிற்று. அவரைத் தேடினேன், அவரைக் காணவில்லை; அவரைக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை.

மணவாட்டி தன்னுடைய நேசருக்கு கதவைத் திறக்கிறாள். அங்கு அவர் தனக்காகக் காத்துக்கொண்டிருப்பார் என்று எதிர்பார்க்கிறாள். ஆனால் அவளுடைய நேசரோ அங்கு இல்லை. அவர் அந்த இடத்தைவிட்டுப்போய்விட்டார். மணவாளன் கதவைத் தட்டியவுடனே மணவாட்டி கதவைத் திறக்கவில்லை. அவள் காலதாமதம் பண்ணினாள். மணவாளனும் அவளை பெயர் சொல்லி கூப்பிட்டார். தன்னுடைய வேதனைகளையும் சொல்லிப் பார்த்தார். ஆனால் அவளோ கதவைத் திறக்காமலிருப்பதற்கு சாக்குப்போக்குகளைச் சொன்னாள்.

அதன் பின்பு மணவாட்டி தமக்கு சித்தமான நேரத்தில் கதவைத் திறக்க வருகிறாள். மணவாளனோ அங்கு இல்லை. அவர் போய்விட்டார். மணவாளனுக்கு சித்தமான நேரத்தில் அவள் கதவைத் திறக்க வரவேண்டும். தனக்குச் சித்தமான நேரம் வரைக்கும் மணவாளன் தனக்காகக் காத்திருப்பார் என்று மணவாட்டி நினைக்கக்கூடாது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தரைக் கண்டுபிடிக்கக்கூடிய நேரமும், சமயமும், வாய்ப்பும் இருக்கும்போதே அவரைக் கண்டுபிடிக்கவேண்டும். அவரைத் தேடவேண்டிய காலத்தில் தேடவேண்டும். அவரைப் பிடிக்க வேண்டிய காலத்தில் பிடிக்கவேண்டும். நம்முடைய காலத்தை நாம் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய காலத்தில் நாம் அசட்டையாகயிருந்தால், நம்முடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது. நமக்கு ஏமாற்றமும் ஆத்தும நஷ்டமும் உண்டாகும். நாம் கர்த்தரை அசட்டைபண்ணினால் அவரும் நம்மை அசட்டை பண்ணிவிடுவார். நாம் கர்த்தரைப் புறக்கணித்தால் அவரும் நம்மைப் புறக்கணித்துவிடுவார்.

நம்முடைய வேதனைகளுக்கும், துன்பங்களுக்கும் நாமே காரணமாகயிருப்போம். நம்முடைய காலதாமதமும், நம்முடைய தூக்கமும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தடையாயிருக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் விழித்திருக்கவேண்டும். விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். கர்த்தரை நம்பி எப்போதும் நன்மை செய்யவேண்டும்.

மணவாட்டி தன் நேசருக்கு கதவைத் திறந்தபோது அவர் அங்கு இல்லை. அந்த வேளையிலும் மணவாட்டி தன்னுடைய மணவாளனை, "என் நேசர்" என்றே அழைக்கிறாள். சூழ்நிலை வேதனை கொடுக்கக் கூடியதாகயிருந்தாலும், மணவாளன் அங்கே இல்லாவிட்டாலும், மணவாட்டி தன் மணவாளன்மீது வைத்திருக்கிற அன்பு மாறவில்லை. மணவாளனோடு தனக்கிருக்கிற ஐக்கியத்தை அவள் விட்டு விலகிப்போய்விடவில்லை. நம்முடைய ஜீவியத்திலும் சூழ்நிலைகளுக்கேற்ப கர்த்தரிடத்தில் பிரியமாயிருக்கலாம் என்று நினைக்கக்கூடாது. நாம் எக்காலத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தர்மீது அன்பாயிருக்கவேண்டும்.

மணவாட்டி தன் நேசருக்கு கதவைத் திறந்தபோது, அங்கு அவர் இல்லை. அவர் போய்விட்டார். அப்போது மணவாளன் சொன்ன வார்த்தையினால் மணவாட்டியின் ஆத்துமா சோர்ந்துபோயிற்று. மணவாளன் கதவைத் தட்டிக்கொண்டு, "என் தலை பனியினாலும், என் தலை மயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது" என்று வேதனையோடு சொன்னார். அந்த வார்த்தைகள், மணவாட்டியின் இருதயத்தில் பதிந்திருக்கிறது. அவளுடைய இருதயம் அந்த வார்த்தைகளினிமித்தம் உருகுகிறது. மணவாளன் தன்னுடைய நிலமையைச் சொன்ன பின்பு, மணவாட்டி தன் நேசருக்கு கதவைத் திறக்காமல், சாக்குப்போக்குகளைச் சொன்னாள். மணவாளனோ அங்கு இல்லை. போய்விட்டார்.

மணவாளன் அங்கு இல்லாவிட்டாலும், மணவாட்டி அவரைத் தேடுகிறாள். ஆனாலும் அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிடுகிறாள். அவர் அவளுக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை. கர்த்தரைத் தேடுகிறவர்கள் கண்டுபிடிப்பார்கள். கர்த்தர்மீது அன்பாயிருக்கிறவர்கள், அவரைக் கண்டுபிடிக்கும் வரையிலும் தேடிக்கொண்டேயிருப்பார்கள். தங்களுடைய ஜெபத்திற்கு பதில் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும், தொடர்ந்து ஜெபித்துக்கொண்டேயிருப்பார்கள். கர்த்தரே நம்மைப் பெலப்படுத்துகிறவர். தம்மைத் தொடர்ந்து தேடுவதற்கும், தம்முடைய சமுகத்தில் பொறுமையோடு காத்திருப்பதற்கும், கர்த்தரே நம்மை ஆயத்தப்படுத்துகிறவர்.

"நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்;" (சங் 138:3). அப்போஸ்தலர் பவுலுடைய சரீரத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அது தன்னைவிட்டு நீங்கவேண்டுமென்று பவுல் மூன்று தரம் ஜெபம்பண்ணினார். கர்த்தரோ அந்த முள்ளை அவருடைய சரீரத்திலிருந்து எடுத்துப்போடவில்லை. அதற்குப் பதிலாக, "என் கிருபை உனக்குப் போதும், உன் பலவீனத்திலே என் பலன் பூரணமாய் உன்னைத் தாங்கும்" என்று சொல்லிவிட்டார்.

நகரத்தில் திரிகிற காவலாளர் உன் 5:7

உன் 5:7. நகரத்தில் திரிகிற காவலாளர் என்னைக் கண்டு, என்னை அடித்து, என்னைக் காயப்படுத்தினார்கள்; அலங்கத்தின் காவற்காரர் என்மேலிருந்த என் போர்வையை எடுத்துக்கொண்டார்கள்.

நகரத்தில் காவலாளர் திரிந்துகொண்டிருக்கிறார்கள். மணவாட்டி அவர்களிடத்தில் ஏற்கெனவே, "என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா" (உன் 3:3) என்று கேட்டிருக்கிறாள். அப்போது அவர்கள் அவளைக் கண்டும் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் இப்போதோ அவர்கள் மணவாட்டியைக் கண்டு, அவளை அடித்து, அவளைக் காயப்படுத்துகிறார்கள். மணவாட்டியை ஒழுக்கமுள்ள ஸ்திரீயாகப் பார்க்காமல், அவளை ஒரு வேசியைப்போலவும், விபசாரியைப்போலவும், திருடுகிற ஸ்திரீயைப்போலவும் பார்த்து, அதற்குரிய தண்டனையைக் கொடுக்கிறார்கள்.

அலங்கத்தின்மேலும் காவற்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மணவாட்டியின் மேலிருந்த, அவளுடைய போர்வையை எடுத்துக்கொள்கிறார்கள். நம்முடைய ஆத்துமா கர்த்தரிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். அது நிலையில்லாமல் அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்தால், சத்துரு நம்மைப் பிடித்துக்கொள்வான். அவன் மூலமாய் நமக்கும், நம்முடைய உடமைகளுக்கும் சேதமுண்டாகும். கர்த்தரை விட்டுப் பிரிந்துபோய்விட்டால் நமக்குப் பாதுகாப்பு இல்லை.

எருசலேமின் குமாரத்திகளே
உன் 5:8

உன் 5:8. எருசலேமின் குமாரத்திகளே! என் நேசரைக் கண்டீர்களானால், நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுகிறேன்.

மணவாட்டி தன் மணவாளனைத் தேடிக்கொண்டிருக்கிறாள். அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிட்டும், அவர் அவளுக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை. நகரத்தில் திரிகிற காவலாளர் மூலமாய் அவளுக்குத் தண்டனை கிடைத்தது. அலங்கத்தின் காவற்காரர் மூலமாய் அவளுடைய உடமைகளுக்கு சேதமுண்டாயிற்று. மணவாட்டியின் ஆத்துமாவும் சோர்ந்துபோயிருக்கிறது. தன்னுடைய சுயமுயற்சியினால், சுயபிரயாசத்தினால் மணவாட்டியால் மணவாளனைத் தேடமுடியவில்லை. இப்போது மணவாட்டி மற்றவர்களுடைய உதவியை நாடுகிறாள். எருசலேமின் குமாரத்திகளைப் பார்த்து, தன்னுடைய மணவாளனைத் தேடுவதற்கு உதவி புரியுமாறு விண்ணப்பம்பண்ணுகிறாள்.

அவர்கள் மணவாளனைக் காணும்போது, தன்னைப்பற்றி அவரிடம் நல்ல வார்த்தைகளைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறாள். தான் நேசத்தால் சோகமடைந்திருப்பதை அவருக்குச் சொல்லும்படியாகவும் கேட்கிறாள். இந்த உலகசிநேகத்தினால் ஆரோக்கியமாயிருப்பதைவிட, கிறிஸ்துவின் மீதுள்ள நேசத்தால் சோகமடைந்திருப்பதும், வியாதியாயிருப்பதும் நமக்கு நல்லது.

உன் நேசர் எதினால் விசேஷித்தவர்
உன் 5:9

உன் 5:9. ஸ்திரீகளுக்குள் ரூபவதியே! மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்? நீ இப்படி எங்களை ஆணையிட, மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்?

மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளிடம், தன் நேசரைக் காணும்போது, தன்னுடைய அன்பை அவரிடத்தில் சொல்லுமாறு அவர்களை ஆணையிடுகிறாள். எருசலேமின் குமாரத்திகளும், தங்களுக்கு இட்ட ஆணைக்கு மறுமொழியாக, மணவாட்டியிடம் சில கேள்விகளைக் கேட்கிறார்கள். அவர்கள் மணவாட்டியை மிகுந்த மரியாதையோடு அழைக்கிறார்கள். "ஸ்திரீகளுக்குள் ரூபவதியே" என்று கூப்பிடுகிறார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்துவின் சபையே மிகவும் அழகானது. தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தின் அழகு, அதைச் சுற்றிலும் பிரகாசமாயிருக்கும். விசுவாசிகளின் பரிசுத்தமே சபையின் அழகு.

நம்முடைய ஆத்துமாவில் பரிசுத்தமிருக்கவேண்டும். இதுவே நமக்கும் அழகாகயிருக்கும். பிறருடைய கண்களுக்கும் அழகாகயிருக்கும். நாம் கிறிஸ்துவைப்பற்றி ஓரளவு தெரிந்திருந்தாலும், நம்முடைய ஜீவியத்தில் கிறிஸ்துவின் அழகு வெளிப்படவேண்டும். எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியைப் பார்க்கும்போது, "ஸ்திரீகளுக்குள் ரூபவதியே" என்று கூப்பிடுகிறார்கள். மணவாட்டியின் ஆத்துமா சோர்ந்துபோயிருந்தாலும், நகரத்தில் திரிகிற காவலாளர்களால் அடிக்கப்பட்டிருந்தாலும், அவள்மேலிருந்த அவளுடைய போர்வையை அலங்கத்தின் காவல்காரர் எடுத்துக் கொண்டிருந்தாலும், மணவாட்டி இன்னும் எருசலேமின் குமாரத்திகளுடைய பார்வையில் ஸ்திரீகளுக்குள் ரூபவதியாகவே இருக்கிறாள். அதுபோலவே நம்மிடத்தில் ஐசுவரியம் இல்லாவிட்டாலும், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் இல்லாவிட்டாலும், கிறிஸ்துவின் சாயல் நம்மிடத்தில் இருக்கவேண்டும். அதை மற்றவர்கள் காணவேண்டும். இதுவே நமக்கு மெய்யான அழகு.

எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியிடம், "மற்ற நேசரைப் பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்" என்று கேட்கிறார்கள். இதே கேள்வியை மறுபடியும் கேட்கிறார்கள். மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளிடம் என் நேசரைக் கண்டீர்களானால், நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லும்படி அவர்களை ஆணையிட்டாள். எருசலேமின் குமாரத்திகளோ மணவாட்டியிடம், "நீ இப்படி எங்களை ஆணையிட, மற்ற நேசரைப் பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்" என்று கேள்வி கேட்கிறார்கள்.

எருசலேமின் குமாரத்திகளுடைய கேள்விக்கு வேதபண்டிதர்கள் இரண்டு விதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவர்களுடைய கேள்வி மணவாட்டியை வேதனைப்படுத்தும் கேள்வி என்றும், அவரை அவள் ஏன் இப்படி தேடி அலையவேண்டும் என்றும் ஏளனமாய்க் கேட்பதுபோல உள்ளது என்று சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

இந்த உலகத்தில் இருக்கிறவனிலும் நமக்குள் இருக்கிறவர் பெரியவர். நமக்குள்ளிருக்கிற பெரியவரை உலகப்பிரகாரமான ஜனங்களால் பார்க்க முடியாது. அவர் எவ்வளவு பெரியவர் என்றும், அவர் எதினால் பெரியவர் என்றும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அழகும், மேன்மையும், மகத்துவமும் உலகப்பிரகாரமான ஜனங்களுக்குத் தெரியாது. எருசலேமின் குமாரத்திகளும் உலகப்பிரகாரமாக சிந்தித்துப் பார்க்கிறார்கள். மணவாட்டியோ ஸ்திரீகளுக்குள் ரூபவதியாயிருக்கிறாள். அவள் ஏன் தன் ஆத்துமாவில் சோர்ந்துபோய், காணாமல் போய்விட்ட மணவாளனை அக்கறையோடு தேடவேண்டும் என்று ஏளனமாய்ப் பேசுகிறார்கள்.

எருசலேமின் குமாரத்திகளுடைய வார்த்தைகள் மணவாட்டியை மெய்யாகவே ஆறுதல் பண்ணும் விதமாகயிருக்கிறது என்று மற்றொரு வியாக்கியானமும் உள்ளது. மணவாட்டியின் ஆத்துமா சோர்ந்துபோயிருக்கிறது. அவள் தன் நேசர் மேலுள்ள நேசத்தால் சோகமடைந்திருக்கிறாள். மணவாளனைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறாள். காவலாளர்களால் அடிக்கப் பட்டவளாகயிருக்கிறாள். மணவாளனைத் தேடும்போது அவள் தன் போர்வையையும் இழந்துவிட்டாள். மிகுந்த சோகத்தோடிருக்கும் அவளுக்கு ஆறுதல் சொல்லும் வண்ணமாக, எருசலேமின் குமாரத்திகள் அவளோடு ஆறுதலாகப் பேசுகிறார்கள்.

மணவாட்டிக்கு ஆறுதல் சொல்லும் வண்ணமாக, அவளை அன்போடு, "ஸ்திரீகளுக்குள் ரூபவதியே" என்று அழைக்கிறார்கள். மணவாட்டி தன் நேசர் மீது மிகுந்த அன்போடிருப்பதைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஆகையினால் அவளுடைய நேசர் மற்ற நேசர்களைவிட விசேஷித்தவராக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அந்த விசேஷத்தை அவர்களும் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். அந்த ஆர்வத்தில் அவர்கள் மணவாட்டியிடம், "உன் நேசர் எதினால் விசேஷித்தவர்" என்று கேட்கிறார்கள்.

இக்காலத்திலும் விசுவாசிகளாகிய நம்மையும், நம்முடைய விசுவாசத்தையும் உலகப்பிரகாரமான ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். கர்த்தரைப்பற்றி அவர்களுக்கு அதிகமாகத் தெரியாது. நாமோ கர்த்தர்மீது பூரண விசுவாசம் வைத்திருக்கிறோம். நாம் அவர்மீது விசுவாசம் வைத்திருப்பதற்கு, அவர் எதினால் விசேஷித்தவர், என்பதை அறிந்துகொள்ள, உலகப்பிரகாரமான ஜனங்களும் ஆவலாயிருக்கிறார்கள். நம்முடைய ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிடும்.

"உங்கள் மனவிருப்பத்தை அறிந்திருக்கிறேன்; அகாயாவிலுள்ளவர்கள் ஒருவருஷமாக ஆயத்தமாயிருக்கிறார்களென்று, நான் மக்கெதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தேனே; உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு" *(2கொரி 9:2).*

என் நேசர் சிறந்தவர்
உன் 5:10

உன் 5:10. என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினாயிரம்பேர்களில் சிறந்தவர்.

எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியிடம், "உன் நேசர் எதினால் விசேஷித்தவர்" என்னும் கேள்வியைக் கேட்டபோது, மணவாட்டி அவர்களுக்கு தன்னுடைய நேசரைப்பற்றிச் சொல்லுகிறாள். மணவாட்டியின் வார்த்தை பொதுவான வார்த்தையாகவே இருக்கிறது. ஆயினும் அவளுடைய வார்த்தையில், அவள் நேசர்மீது வைத்திருக்கும் அன்பும் பாசமும் வெளிப்படுகிறது. எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியிடம், "மற்ற நேசரைப் பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்" என்று கேட்டார்கள். மணவாட்டியோ, தன்னுடைய நேசரை யாரோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு அவர் சிறந்தவர் என்று சொல்லிவிடுகிறாள். மணவாட்டியின் நேசருக்கு இணையாக வேறு எந்த நேசரும் இல்லை.

மணவாளனிடம் எல்லா நற்குணங்களும் இருக்கிறது. அவர் சவுந்தரியத்தில் பரிபூரணமுள்ளவர். "என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்" என்று மணவாட்டி தன் நேசரைப்பற்றிப் பெருமையாய்ச் சொல்லுகிறாள். இந்த வாக்கியம் கிறிஸ்துவானவருடைய சரீரப்பிரகாரமான அழகை விவரிக்கவில்லை. இது அவருடைய தெய்வீக மகிமையை விவரிக்கிறது. ஆவிக்குரிய காரியங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்று ஆராய்ந்து பார்க்கிறவர்களுடைய கண்களுக்கு, கிறிஸ்துவானவர் வெண்மையும் சிவப்புமாயிருக்கிறார்.

கிறிஸ்துவில்தான் கர்த்தருடைய அழகை நம்மால் பார்க்க முடியும். அவர் தேவனுடைய பரிசுத்தமான குழந்தை இயேசுவாகயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமே அவருடைய அழகு. கிறிஸ்துவானவர் நம்மீது வைத்திருக்கும் அன்பினால், அவருடைய அழகு அதிகரிக்கிறது.

நேசருடைய வெண்மை நிறம் அவருடைய ஜீவியத்தில் பாவத்தின் கறை எதுவும் இல்லை என்பதைக் காண்பிக்கிறது. அவருடைய சிவப்புநிறம், கல்வாரி சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தையும், அவர் அனுபவித்த பாடுகளையும் விவரிக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய மகிமையில் தேவனாகயிருக்கிறார். அதுவே அவருடைய வெண்மை நிறம். அவர் மனுஷரூபமெடுத்து மானிடராக அவதரித்திருக்கிறார். அதுவே அவருடைய சிவப்பு நிறம். ஆதாம் என்னும் பெயருக்கு சிவப்பு மண் என்று பொருள். கிறிஸ்துவானவரே நமக்கு பிந்தின ஆதாமாக இந்தப் பூமியில் அவதரித்திருக்கிறார்.

கிறிஸ்துவினிடத்தில் ஏராளமான விசேஷித்த குணாதிசயங்கள் காணப்படுகிறது. இந்தக் குணாதிசயங்கள் வேறு யாரிடத்திலும் காணப்படவில்லை. ஆகையினால் அவர் பதினாயிரம்பேர்களிலும் சிறந்தவராயிருக்கிறார். மணவாட்டி தன்னுடைய நேசரின் அழகை விரிவாக வர்ணித்துக் கூறுகிறாள். அவருடைய வல்லமை மாத்திரமல்ல, அவர் முழுவதுமாகவே அழகாகயிருக்கிறார். அவருக்குப் பூரணமகிமையும் பூரண அழகுமுள்ளது.

அவர் ரூபம்
உன் 5:11-16

உன் 5:11. அவர் தலை தங்கமயமாயிருக்கிறது; அவர் தலைமயிர் சுருள் சுருளாயும், காகத்தைப் போல் கருமையாயுமிருக்கிறது.

உன் 5:12. அவருடைய கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் புறாக்கண்களுக்கு ஒப்பானவைகளும், பாலில் கழுவப்பட்டவைகளும், நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது.

உன் 5:13. அவர் கன்னங்கள் கந்தவர்க்கப்பாத்திகளைப் போலவும், வாசனையுள்ள புஷ்பங்களைப் போலவுமிருக்கிறது; அவர் உதடுகள் லீலிபுஷ்பங்களைப் போன்றது, வாசனையுள்ள வெள்ளைப்போளம் அதிலிருந்து வடிகிறது.

உன் 5:14. அவர் கரங்கள் படிகப்பச்சை பதித்த பொன்வளையல்களைப் போலிருக்கிறது; அவர் அங்கம் இந்திரநீல இரத்தினங்கள் இழைத்த பிரகாசமான யானைத் தந்தத்தைப் போலிருக்கிறது.

உன் 5:15. அவர் கால்கள் பசும்பொன் ஆதாரங்களின்மேல் நிற்கிற வெள்ளைக்கல் தூண்களைப் போலிருக்கிறது; அவர் ரூபம் லீபனோனைப்போலவும் கேதுருக்களைப் போலவும் சிறப்பாயிருக்கிறது.

உன் 5:16. அவர் வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது; அவர் முற்றிலும் அழகுள்ளவர். இவரே என் நேசர்; எருசலேமின் குமாரத்திகளே! இவரே என் சிநேகிதர்.

மணவாட்டி எருசலேமின் குமாரத்திகளிடம் தன் நேசரின் விசேஷித்த அழகைப்பற்றிச் சொல்லும்போது, அவர் பதினாயிரம் பேர்களில் சிறந்தவர் என்று சொல்லுகிறாள். நேசரின் பத்துவிதமான விசேஷித்த அம்சங்களை ஒவ்வொன்றாக விவரிக்கிறாள். மணவாளன் பரிபூரண அழகுள்ளவர். அவரிடத்தில் விசேஷித்த குணாதிசயங்கள் எல்லாமே இருக்கிறது. ஆகையினால்தான் மணவாட்டி அவரைத் தேடிக்கொண்டிருக்கிறாள். மணவாட்டி மணவாளனைப்பற்றிச் சொல்லும்போது, அவர் முற்றிலும் அழகுள்ளவர் என்றும், அவரே தன் நேசர் என்றும், தன் சிநேகிதர் என்றும் சொல்லி முடிக்கிறாள்.

யோவான் பத்மு தீவிலிருந்தபோது, கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானார். அப்போது கர்த்தரைத் தரிசித்தார் (வெளி 1:13). அவருடைய தரிசனமும், மணவாட்டி தன் நேசரைப்பற்றி விவரிப்பதும் ஓரளவு ஒன்றுபோல் உள்ளது. கிறிஸ்துவின் அழகை வர்ணிக்கும்போது அவருடைய மகிமையும், மகத்துவமும் வர்ணிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் பரிசுத்தமே அவருடைய அழகு. அவருடைய அழகே அவருடைய மகிமை.

நேசருடைய தலை தங்கமயமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் (1கொரி 11:3). கிறிஸ்துவின் தலை அவருடைய தெய்வீக ஆளுகையையும், அவருடைய மகத்துவத்தையும் விவரிக்கிறது. அவருக்கு சர்வசிருஷ்டிகளின்மீது ஆளுகையுள்ளது. கிறிஸ்துவே தமது சபைக்குத் தலையாயிருக்கிறார். சபையிலுள்ள எல்லா விசுவாசிகளுக்கும் அவரே தலையாகயிருக்கிறார்.

நேசருடைய தலைமயிர் சுருள் சுருளாயிருக்கிறது. அது காகத்தைப்போல் கருமையாயிருக்கிறது. தலை மயிருக்கு கருப்பே அழகு. தலைமயிர் கறுப்பாகவும் இருக்கவேண்டும். சுருள் சுருளாகவும் இருக்கவேண்டும். கறுப்பு நிற தலைமயிர் வாலிப வயதைக் குறிக்கும். வெண்மை நிறத்தில் நரை விழுந்துவிட்டால் அது முதுமையைக் குறிக்கும். நேசர் எப்போதும் தம்முடைய வாலிபபிரயாத்திலிருக்கிறார். அவரில் ஒன்றும் பழையதாய்ப் போவதுமில்லை. முதுமையடைவதுமில்லை.

நேசருடைய கண்கள் புறாக்கண்களுக்கு ஒப்பாயிருக்கிறது. இந்தப் புறாக்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் புறாக்கள். இவை தெளிவாகவும் சுத்தமாகவும் இருக்கிறது. நேசருடைய கண்கள் பாலில் கழுவப்பட்டதுபோல வெண்மையாயிருக்கிறது. இந்தக் கண்கள் அவருடைய முகத்தில் நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய கண்களில் பழுது ஒன்றுமில்லை. அவருடைய பார்வையில் பட்சபாதம் எதுவுமில்லை.

நேசருடைய கன்னங்கள் கந்தவர்க்கப் பாத்திகளைப்போலவும், வாசனையுள்ள புஷ்பங்களைப்போலவும் இருக்கிறது. கந்தவர்க்கப் பாத்திகள் இனிமையான கோபுரங்களைப் போன்றவை. கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவைப் புதுப்பிக்கிறார். ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் தருகிறார். வாசனையுள்ள புஷ்பங்கள் நறுமணம் வீசும்போது நம்முடைய இருதயத்திற்கு இதமாகயிருக்கும். அதுபோல, கிறிஸ்துவானவரும் நம்முடைய ஆத்துமாவுக்கு இதமாகயிருக்கிறார். அவருடைய வாசனை கந்தவர்க்கப் பாத்திகளின் வாசனையைவிட மேலானது. கிறிஸ்துவின் வாசனை வாசனையுள்ள புஷ்பங்களைவிடவும் மேன்மையானது.

நேசரின் உதடுகள் லீலிபுஷ்பங்களைப் போன்றது. அவை இனிமையானது. மதுரமானது. நேசரின் வார்த்தைகள் பரிசுத்தமானது. அவர் பரிசுத்தமான வார்த்தைகளையே பேசுகிறார். நேசருடைய உதடுகளிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப்போளம் வடிவதுபோல, நேசரின் வாயிலிருந்து பரிசுத்தமான வார்த்தைகள் புறப்பட்டு வருகிறது. கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேள்விப்பட்ட யாவரும், அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளுக்காக மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

நேசரின் கரங்கள் படிகப்பச்சை பதிந்த பொன்வளையல்களைப்போல இருக்கிறது. படிகப்பச்சை விலையுயர்ந்த கல். சமுதாயத்தில் பிரபுக்களாகயிருக்கிறவர்கள் தங்கள் விரல்களில் மோதிரங்களை அணிந்துகொள்வார்கள். மோதிரங்களில் விலையுயர்ந்த கற்களைப் பதித்துக்கொள்வார்கள். ஆனால் நேசரோ மோதிரம் அணியவில்லை. அவருடைய கைகளே படிகப்பச்சை பதிந்த பொன்வளையல்களைப்போல இருக்கிறது. அவருடைய கைக்கு ஆபரணம் தேவையில்லை. அவருடைய கையே ஆபரணம் போல இருக்கிறது.

கர்த்தருடைய கரங்கள் வல்லமையானவை. அவை பலத்த கிரியைகளைச் செய்யும். கர்த்தர் தம்முடைய ஓங்கிய புயத்தினால் செங்கடலை இரண்டாகப் பிளந்து, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனங்களை விடுவித்து அழைத்துக்கொண்டு வந்தார். கர்த்தருடைய கரத்தில் கிருபையும் இருக்கிறது. பாதுகாப்பும் இருக்கிறது. பராமரிப்பும் இருக்கிறது. இவையெல்லாமே பொன்னைப்போன்று விலைமதிப்பு மிகுந்தவை. இவையெல்லாம் படிகப்பச்சை பதிந்த பொன்வளையல்களைப்போல மேலானவை. கர்த்தருடைய கரங்கள் அழகானவை. அதே வேளையில் அவருடைய கரங்கள் வல்லமை மிகுந்தவை.

நேசரின் அங்கம் இந்திரநீல இரத்தினங்கள் இணைத்த பிரகாசமான யானைத்தந்தத்தைப்போல இருக்கிறது. இது அவருடைய கிருபையையும், இரக்கத்தையும், மனதுருக்கத்தையும் காண்பிக்கிறது. மணவாளன் தம்முடைய மணவாட்டியின்மீது அன்பாகவும் நேசமாகவும் இருக்கிறார். அவருடைய அன்பு பிரகாசமான யானைத்தந்தத்தைப்போல இருக்கிறது. நன்றாய் இழைக்கப்பட்டு மழுமழுப்பாகயிருக்கிறது. நன்றாய் இழைக்கப்பட்ட தந்தம் மாத்திரமல்ல அந்தத் தந்தத்தில் இந்திரநீல இரத்தினங்களும் பதிக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் அன்பு வலுவானது. அது உறுதியானது. அது பிரகாசமானது.

நேசரின் கால்கள் பசும்பொன் ஆதாரங்களின்மேல் நிற்கிற வெள்ளைக்கல் தூண்களைப்போல இருக்கிறது. அவருடைய கால்கள் உறுதியானது. நிலைத்து நிற்கக்கூடியது. அவர் எல்லா பாரங்களையும் சுமக்கக்கூடியவர். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களெல்லோரும் தங்கள் பாரத்தை கிறிஸ்துவின்மீது இறக்கி வைத்துவிடலாம். அவர் எல்லோருடைய பாரங்களையும் சுமப்பதற்கு வல்லமையுள்ளவர். பெலமுள்ளவர். ராஜ்யத்தின் எல்லா பாரங்களும் அவருடைய தோளின்மீது இருக்கிறது.

நேசருடைய ரூபம் லீபனோனைப் போலவும், கேதுருக்களைப்போலவும் சிறப்பாயிருக்கிறது. லீபனோனும் கேதுருவும் அழகானது. வலிமையானது. நற்குணமுள்ளது. நேசரின் ரூபம் அழகானது மாத்திரமல்ல அது சிறப்பானதாகவும் இருக்கிறது.

நேசருடைய வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது. அவருடைய வாயின் வார்த்தைகள் அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு இன்பமானவை, இனியவை. அவருடைய வார்த்தையில் அவருடைய அன்பு நிரம்பியிருக்கும். கிறிஸ்துவிடமிருந்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறவர்களுக்கு, அவருடைய வார்த்தைகள் எல்லாமே ஆரோக்கியமானவை. ஆச்சரியமானவை. தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் விசேஷித்தவராகயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவர் முற்றிலும் அழகுள்ளவர்.

மணவாட்டி தன்னுடைய நேசரைத் தேடிக்கொண்டிருக்கிறாள். அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிடுகிறாள். ஆனால் அவரோ அவளுக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை. ஆனாலும் நேசர் தன்மீது அன்பாகயிருக்கிறார் என்பதில் மணவாட்டி பூரணநிச்சயத்தோடிருக்கிறாள். ஆகையினால் அவர் முற்றிலும் அழகுள்ளவர் என்றும், இவரே தன்னுடைய நேசர் என்றும், மணவாட்டி, தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து, அதிக நிச்சயத்தோடு சொல்லுகிறாள். ஆகையினால்தான் மணவாட்டி தன் மணவாளனை தேடிக்கொண்டிருக்கிறாள். அவர்மீது இன்னும் பிரியமாகயிருக்கிறாள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அவர் தோமாவுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார். அவரிடத்தில், "அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்று சொல்லுகிறார். அப்பொழுது தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக, "என் ஆண்டவரே, என் தேவனே" (யோவா 20:28) என்று தன்னுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து சொல்லுகிறார். கிறிஸ்துவானவர் தோமாவுக்கு ஆண்டவராகவும் தேவனாகவும் இருக்கிறார். சுவிசேஷத்தின் பிரகாரமாக கிறிஸ்துவானவர் தம்மை விசுவாசிக்கிற எல்லோருக்கும் ஆண்டவராகவும் தேவனாகவும் இருக்கிறார். நமக்கு கிறிஸ்து தேவை. நம்முடைய ஆத்துமாவுக்கு கிறிஸ்துவின் அன்பும், ஆறுதலும், ஆதரவும், இளைப்பாறுதலும் தேவை.

மணவாட்டி தன்னுடைய மணவாளன்மீது நம்பிக்கையாயிருக்கிறாள். அவளுடைய நம்பிக்கை சிறிதும் குறைந்துபோகவில்லை. அவள் தன்னுடைய நேசருக்கு தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்திருக்கிறாள். தன்னுடைய நேசரைத் தேடி எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்லுவதற்கு ஆயத்தமாயிருக்கிறாள். தன் நேசருக்காக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பொறுமையோடு காத்திருப்பதற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறாள். மணவாட்டி தன்னுடைய மணவாளனைக் கண்டுபிடிக்கும் வரையிலும் தேடுகிறாள். தேடுகிறவர்கள் கண்டுபிடிப்பார்கள். கர்த்தர்மீது அன்பாயிருக்கிறவர்கள் அவரைக் கண்டுபிடிக்கும் வரையிலும் தேடுவார்கள்.

மணவாட்டியின் இருதயத்தில் அவளுடைய நேசரே நிரம்பியிருக்கிறார். விசுவாசியின் இருதயத்தில் கிறிஸ்துவுக்கு மாத்திரமே இடம் இருக்கவேண்டும். அங்கு கிறிஸ்துவைத் தவிர வேறு யாரும் வாசம்பண்ணக்கூடாது. அப்போதுதான் மணவாட்டியைப்போல நம்மாலும், "கிறிஸ்துவே என் நேசர், அவரே என் சிநேகிதர்" என்று மனப்பூர்வமாய்ச் சொல்ல முடியும். மணவாட்டி தன் மணவாளனுக்கு தன்னைப் பூரணமாய் ஒப்புக்கொடுத்திருக்கிறாள். தன்னுடைய ஆசீர்வாதங்கள், சமாதானங்கள், ஆறுதல்கள் எல்லாமே தன் நேசரிடத்திலிருந்தே தனக்கு வரும் என்று எதிர்பார்த்து, அவரையே சார்ந்திருக்கிறாள்.

6 அதிகாரம்

சபையாகிய மணவாட்டி தன் மணவாளனாகிய கிறிஸ்துவைத் தேடி விசாரிக்கிறாள். எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியின் வார்த்தைகளைக் கேட்டு, அவளுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். தாங்களும் அவளோடுகூட சேர்ந்து மணவாளனைத் தேடுவதாக வாக்குப்பண்ணுகிறார்கள் (உன் 6:1). தன் மணவாளனை எங்கே காணலாம் என்று மணவாட்டி எருசலேம் குமாரத்திகளிடம் சொல்லி அவர்களை வழிநடத்துகிறாள் (உன் 6:2,3).

கிறிஸ்துவைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிக்கிறார்கள். மணவாளன் தம்முடைய மணவாட்டியின் அழகைப் புகழ்ந்து பேசுகிறார் (உன் 6:4-7). மற்ற எல்லோருக்கும் முன்பாக மணவாளன் தம் மணவாட்டியைப் புகழ்ச்சியாகச் சொல்லுகிறார் (உன் 6:8,9). மணவாட்டியின் உற்றார் உறவினர்கள் அநேகர் இருந்தாலும் மணவாட்டியே மிகுந்த சவுந்தரியமுள்ளவளாயிருக்கிறாள் (உன் 6:10). மணவாளன் தன்னுடைய மணவாட்டியின் அழகைப் புகழ்ந்துசொல்லி, அவளைத் தம்மிடமாக அழைக்கிறார் (உன் 6:10-11).

நாங்களும் அவரைத் தேடுவோம் உன் 6:1

உன் 6:1. நாங்களும் அவரைத் தேடுவோம் உன் நேசர் எங்கே போனார்? ஸ்திரீகளில் ரூபவதியே! உன் நேசர் எவ்விடம் போய்விட்டார்? உன்னோடே கூட நாங்களும் அவரைத் தேடுவோம்.

எருசலேமின் குமாரத்திகள் கிறிஸ்துவைப்பற்றி விசாரிக்கிறார்கள். அவர்கள் சபையைக் குறித்து உயர்வான சிந்தனை வைத்திருக்கிறார்கள். மணவாட்டியை மிகுந்த அன்போடு, "ஸ்திரீகளில் ரூபவதியே" என்று அழைக்கிறார்கள். இதற்கு முன்பும் அவர்கள் இதே வார்த்தையினாலேயே மணவாட்டியை அழைத்தார்கள். இப்போதும் அவளை அழைப்பதற்கு இதே வார்த்தையையே பயன்படுத்துகிறார்கள். எருசேலமின் குமாரத்திகளுக்கு மணவாட்டியின் மீதுள்ள அன்பு மாறாமல் அப்படியே இருக்கிறது. அன்பு குறையவில்லை.

எருசலேமின் குமாரத்திகள் இப்போது கிறிஸ்துவைக் குறித்து விசாரிக்கிறார்கள். "உன் நேசர் எங்கே போனார்" என்று மணவாட்டியிடம் கேட்கிறார்கள். சாலொமோனின் உன்னதப்பாட்டு புஸ்தகம் உலகப்பிரகாரமான காதல் காவியமல்ல. இது ஒரு ஆவிக்குரிய புஸ்தகம். இதில் எழுதப்பட்டிருக்கிற ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆவிக்குரிய அர்த்தம் உண்டு.

எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியிடம் "உன் நேசர் எங்கே போனார்" என்று மணவாளனைக் குறித்து விசாரிக்கிறார்கள். உலகப்பிரகாரமான ஸ்திரீகள், தங்கள் மணவாளனைக் குறித்து, மற்ற ஸ்திரீகள் விசாரிப்பதை விரும்பமாட்டார்கள். பொறாமைப்படுவார்கள். ஆனால் உன்னதப்பாட்டு புஸ்தகமோ ஒரு ஆவிக்குரிய புஸ்தகம். இதில் பொறாமைக்கு இடமில்லை. மணவாட்டி மணவாளன்மீது வைத்திருக்கும் அன்பு பரிசுத்தமானது.

நாம் கிறிஸ்துவை நேசிக்கும்போது, மற்றவர்களும் அவரை நேசிக்கவேண்டும் என்று விரும்புவோம். கிறிஸ்து நமக்கு மாத்திரம் சொந்தமென்று உரிமை கொண்டாடமாட்டோம். கிறிஸ்துவின்மீது மற்றவர்கள் அன்புகூரும்போது அவர்கள்மீது பொறாமைப்படமாட்டோம்.

மணவாட்டி தன் மணவாளனைப்பற்றி எருசலேமின் ஸ்திரீகளிடம் புகழ்ந்து சொல்லுகிறாள். அவரே தன்னுடைய நேசர் என்றும், அவரே தன்னுடைய சிநேகிதர் என்றும் தன் மணவாளனைப்பற்றி பெருமையாகச் சொல்லுகிறாள். மணவாளன்மீது மணவாட்டி வைத்திருக்கும் அன்பை அவளால் அவளுக்குள் அடக்கி வைத்திருக்க முடியவில்லை. தன்னுடைய அன்பை எருசலேமின் குமாரத்திகளிடம் பகிர்ந்து சொல்லுகிறாள்.

உலகப்பிரகாரமான அன்பு பாவமான இச்சைகளை தூண்டும். மாம்சத்தின் இச்சைகள் பாவமானவை. நாம் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றும்போது நம்முடைய சரீரத்தைத் தீட்டுப்படுத்துகிறோம். பிறருடைய சரீரத்தையும் தீட்டுப்படுத்திவிடுவோம். ஆவிக்குரிய அன்போ பரிசுத்தமானது. நாம் தேவனிடத்தில் ஆவிக்குரிய ரீதியாக அன்புகூரும்போது, நமக்கும் ஆசீர்வாதமுண்டாகும். தேவன்மீது அன்புகூருகிற மற்ற எல்லோருக்கும் ஆசீர்வாதமுண்டாகும்.

"உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு" *(2கொரி 9:2)* என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார். கிறிஸ்துவின்மீது நாம் வைத்திருக்கிற பக்திவைராக்கியத்தினால், அநேகர் அவர்மீது அன்புகூருவார்கள். தேவனுடைய தெய்வீக அன்பில் பொறாமையில்லை. நாம் நம்மை நேசிப்பதுபோல பிறரையும் நேசிக்கவேண்டும். நமக்குரியதை நாம் தேடுவதுபோல பிறருக்குரியதையும் தேடவேண்டும். கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பதுபோல, அவர் பிறரையும் ஆசீர்வதிக்கவேண்டுமென்று வாஞ்சையாயிருக்கவேண்டும்.

என் நேசர் தமது தோட்டத்துக்குப் போனார் உன் 6:2,3

உன் 6:2. தோட்டங்களில் மேயவும், லீலிபுஷ்பங்களைக் கொய்யவும், என் நேசர் தமது தோட்டத்துக்கும் கந்தவர்க்கப்பாத்திகளுக்கும் போனார்.

உன் 6:3. நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்; அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்.

எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியிடம், "உன் நேசர் எங்கே போனார்" என்று கேட்கிறார்கள். அவர்களுடைய கேள்விக்கு மணவாட்டி பதில் சொல்லுகிறாள். மணவாளன் எங்கே இருக்கிறார் என்பது இப்போது மணவாட்டிக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. மணவாட்டி ஆரம்பத்தில் மணவாளனைத் தேடி நகரத்து வீதிகளுக்குப் போனாள். அதன்பின்பு அலங்கத்திற்குப் போனாள். அங்கு அவளால் நேசரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நகரத்தின் வீதிகளில் நேசர் இல்லை. அங்கு ஜனக்கூட்டமும், ஆரவாரமும், மனுஷருடைய சந்தடியும்தான் இருக்கிறது.

தன்னுடைய நேசர், தமது தோட்டத்திற்குப் போனார் என்று மணவாட்டி சொல்லுகிறாள். அங்கு அவளுடைய நேசர் ஓய்வெடுப்பதற்காகப் போயிருக்கிறார். தம்மைப் புதுப்பித்துக்கொள்வதற்காக தோட்டத்திற்குப் போயிருக்கிறார். இந்தப் பிரபஞ்சம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்காவிட்டால், இந்த உலகம் போகிற வேகத்தில் அது நம்மையும் அடித்துக்கொண்டு போய்விடும். நாம் கர்த்தருடைய சமுகத்தில் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், இப்பிரபஞ்சத்தின் சந்தடிகளிலிருந்து சற்று ஒதுங்கி, அமைதியான தோட்டத்திற்குப் போகவேண்டும். அமைதியான சூழ்நிலையில் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருப்பதற்கு நமக்கு வாய்ப்பு கிடைக்கும்.

கிறிஸ்துவானவர் இந்த உலகத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்த காலத்தில், ஜெபம் பண்ணுவதற்காக பல சமயங்களில் மலைப்பாங்கான பகுதிக்குச் சென்றார். பல சமயங்களில் அவர் தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு கெத்சமனே தோட்டத்திற்கு, தம் பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணுவதற்காகப் போனார். இந்தத் தோட்டத்தில்தான் இயேசுகிறிஸ்து வியாகுலத்தோடு ஜெபம்பண்ணினார்.

கிறிஸ்துவின் சபையும் ஒரு தோட்டம் போலவே இருக்கிறது. இது வேலியடைக்கப்பட்ட தோட்டம். கிறிஸ்து தம்முடைய தோட்டத்தில் தம்முடைய பிள்ளைகளை நாட்டியிருக்கிறார். கிறிஸ்துவைத் தேடுகிறவர்கள், அவரை அவருடைய தோட்டமாகிய சபையில் காணலாம். கிறிஸ்துவின் வார்த்தையிலும், அவரோடு ஜெபம்பண்ணுவதிலும் நாம் கர்த்தரைக் கண்டுபிடிக்கலாம். கிறிஸ்துவானவர் நியமித்திருக்கிற பரிசுத்தமான நியமங்களாகிய, கர்த்தருடைய பந்தியிலும், ஞானஸ்நானத்திலும் அவரைக் காணலாம்.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையில், இந்த உலகத்தின் முடிவுபரியந்தம் பிரசன்னமாயிருப்பார். தம்முடைய பிள்ளைகளோடு எப்போதும் கூடவே இருப்பார். கிறிஸ்து தம்முடைய சபைக்கு வரும்போது, அவர் தம்முடைய மந்தையை மேய்க்கிறார். உலகப்பிரகாரமான மேய்ப்பர்கள் தங்களுடைய மந்தைகளை திறந்த வெளிகளில் மேயவிடுவார்கள். கிறிஸ்துவானவரோ நம்மைத் திறந்த வெளியில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல், வேலியடைக்கப்பட்டுள்ள தம்முடைய தோட்டமாகிய சபையில், நமக்கு ஆவிக்குரிய போஜனம் கொடுக்கிறார்.

நாம் கிறிஸ்துவுக்கு சிநேகிதர்களாகவும் இருக்கிறோம். அவர் நம்மைப் பராமரிக்கிறார். நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறார். அவர் நம்மில் சந்தோஷமாயிருக்கிறார். கிறிஸ்துவுக்கு பயந்து, பயபக்தியோடு ஜீவிக்கிற எல்லோருமே அவருக்குப் பிரியமானவர்கள். கிறிஸ்துவானவருக்கு ஏராளமான தோட்டங்கள் உண்டு. அவை ஒவ்வொன்றுக்கும் அளவில் வித்தியாசமாயிருக்கலாம். இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்துவுக்கு ஏராளமான சபைகள் உண்டு. எல்லா சபையிலும் விசுவாசிகளின் எண்ணிக்கை ஒன்றுபோல் இருப்பதில்லை. சில சபைகள் சிறியதாகயிருக்கும். சில சபைகள் பெரியதாகயிருக்கும். இவையெல்லாமே கிறிஸ்துவின் சபைகள்தான். இவை அனைத்துமே கிறிஸ்துவின் தோட்டம் தான்.

கிறிஸ்து தம்முடைய சபையில் தம்மை வெளிப்படுத்துகிறார். தம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்துகிற எல்லா சபைகளிலும் கிறிஸ்துவானவரின் பிரசன்னம் பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது. கிறிஸ்து தம்முடைய சபைக்கு வரும்போது, தம்முடைய பிள்ளைகளைப் பார்த்து மிகுந்த சந்தோஷப்படுகிறார். அவர் தோட்டங்களில் மேயவும், லீலிபுஷ்பங்களை கொய்யவும் தோட்டத்திற்கு வருகிறார். தோட்டத்திலுள்ள மலர்களின் அழகைப் பார்த்து சந்தோஷப்படுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் லீலிபுஷ்பத்தைப்போல இருக்கிறார்கள். தோட்டத்திற்கு வருகிற ஆத்தும நேசர் ஒவ்வொரு லீலி புஷ்பத்தையும் கொய்கிறார். ஒவ்வொரு விசுவாசியையும் தமக்கென்று தெரிந்துகொண்டு, அவர்களைத் தம்மிடமாகச் சேர்த்துக் கொள்கிறார். மகாநாளின்போது மிகப்பெரிய அறுவடை நடைபெறும்.

மணவாட்டியோ தன்னுடைய நேசர்மீது உண்மையான அன்பு காண்பிக்கவில்லை. நேசர் வந்து தம்முடைய மணவாட்டியிடம், கதவைத் திறக்குமாறு சொன்னபோது, அவளோ நித்திரையாகயிருந்தாள். தன்னுடைய நேசருக்கு கதவைத் திறக்காமல் அவரை அசட்டைபண்ணினாள். நேசருக்குக் கொடுக்கவேண்டிய கனத்தையும், மகிமையையும், மரியாதையையும் கொடுக்கவில்லை. ஆகையினால் நேசர் அவளைவிட்டுப்போய்விட்டார்.

மணவாட்டி காலதாமதமாக தன் தூக்கத்தைவிட்டு எழுந்து, கதவைத் திறந்தாள். ஆனால் அவளுடைய நேசர் அங்கே இல்லை. அவர் அவளை விட்டுப்போய்விட்டார். இதனால் மணவாளன் மணவாட்டியோடு ஏற்கெனவே செய்திருந்த உடன்படிக்கை முறிந்துபோயிற்று. அவர்கள் இருவருக்கும் இடையில் புதிய உடன்படிக்கை உண்டுபண்ண வேண்டியதாயிற்று. இந்த புதிய உடன்படிக்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் இடையே உறுதியாயிருக்கும். விசுவாசிகள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய்விட்டாலும், பாவத்தில் விழுந்துவிட்டாலும், கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத உடன்படிக்கையாயிருக்கும்.

“அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல், என் வேதத்தை விட்டு விலகி; என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், என் நியமங்களை மீறிநடந்தால்; அவர்கள் மீறுதலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன். ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன். என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன். ஒருவிசை என் பரிசுத்தத்தின் பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன்” (சங் 89:30-35).

கிறிஸ்துவானவர் தம்முடைய தோட்டத்திற்கு வரும்போது தோட்டத்திலுள்ள மலர்களைப் பார்த்து ரசிப்பதோடு நின்றுவிடவில்லை. அவர் தோட்டத்தில் மேயவிரும்புகிறார். தோட்டத்திலுள்ள லீலிபுஷ்பங்களை கொய்யவிரும்புகிறார். இதனால் தோட்டத்திற்கு வருகிற நேசர் கந்தவர்க்கப் பாத்திகளுக்குப் போகிறார். அந்தப் பாத்திகளில்தான் லீலிபுஷ்பங்கள் ஏராளமாய் மலர்ந்திருக்கிறது.

மணவாட்டி மணவாளனுக்கு கதவைத் திறவாமல் தவறு செய்து விட்டதை நினைத்து வேதனைப்படுகிறாள். அவள் தன் கடமையைச் செய்யவில்லை. அவளுக்கு மணவாளன் மீதிருந்த அன்பு குறைந்துபோயிற்று. தன்னுடைய நேசரை விட்டு தான் பின்வாங்கிப்போய்விட்டதை மணவாட்டி இப்போது உணருகிறாள். வேதனைப்படுகிறாள். ஆயினும் அவள் மணவாளனோடு தன்னுடைய அன்பைப் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறாள். “நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்” என்று தன்னுடைய அன்பை வெளிப்படுத்துகிறாள்.

மணவாளன் தன் கதவைத் தட்டியபோது, தான் திறவாமல் இருந்ததால்தான், அவர் தன்னை விட்டுப்போய்விட்டார் என்பதை மணவாட்டி புரிந்துகொள்கிறாள். தப்பிதம் தன்னிடத்திலுள்ளது என்பதையும், நீதி மணவாளனிடமுள்ளது என்பதையும் புரிந்துகொள்கிறாள். ஆனாலும் தன்னுடைய நேசர் இன்னும் தன்னுடையவர் என்றும், தான் இன்னும் தன்னுடைய நேசருடையவள் என்றும் இருதயத்தில் விசுவாசிக்கிறாள். அதை விசுவாச வார்த்தைகளால் அறிக்கை செய்கிறாள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், சில சமயங்களில் கிறிஸ்துவின் அன்பைக் குறித்த நிச்சயம் நமக்கு இல்லாமல் போகலாம். அந்த சூழ்நிலையிலும் நாம் கர்த்தரை விசுவாசத்தோடு பற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்கவேண்டும். அவர் நம்மீது இன்னும் அன்பாகயிருக்கிறார் என்பதை விசுவாசிக்கவேண்டும். இந்த விசுவாசத்தோடு நம்மைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஆரம்பத்தில் மணவாட்டி தன் மணவாளனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தாள். அவர்மீது அதிகமான அன்பு கொண்டிருந்தாள். அந்த அன்பு இப்போது குறைந்துவிட்டது. மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் இடையே இருந்த நெருக்கம் குறைந்துபோயிற்று. இடைவெளி அதிகரித்துவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் “நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்” என்று விசுவாசத்தோடு சொல்லுகிறாள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் ஏற்ற தாழ்வுகள் வரலாம். நாம் சில சமயங்களில் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கலாம். அந்த சூழ்நிலையில் கூட நாம் கர்த்தரை விசுவாசத்தோடு பற்றிக்கொள்ளவேண்டும். “கிறிஸ்து என்னுடையவர்” என்றும், “நாம் கிறிஸ்துவுடையவர்கள்” என்றும் விசுவாசத்தோடு அறிக்கை செய்யவேண்டும். கிறிஸ்து நம்மோடு கூடயிருப்பதுதான் நமக்கு ஆறுதல். நாம் கிறிஸ்துவுக்குரியவர்களாகவும், கிறிஸ்து நமக்குரியவராகவும் இருப்பதுதான் நமக்கு ஆசீர்வாதம்.

என் பிரியமே
உன் 6:4

உன் 6:4. என் பிரியமே! நீ திர்சாவைப் போல் சௌந்தரியமும், எருசலேமைப் போல் வடிவமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமானவள்.

கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியிடம் திரும்பி வருகிறார். அவளிடத்தில் கிருபையுள்ள வார்த்தைகளைப் பேசுகிறார். தாம் கதவைத் தட்டியபோது, மணவாட்டி கதவைத் திறக்காமல் தூங்கிய தப்பிதத்தை கிறிஸ்துவானவர் கிருபையாய் மன்னிக்கிறார். அவளுடைய தப்பிதத்தை மன்னிப்பதோடு அதை மறந்தும் விடுகிறார். மணவாளனிடத்தில் கோபம் எதுவுமில்லை. மணவாட்டியினிடத்தில் மிகுந்த அன்பாகவும், நேசமாகவும், பிரியமாகவும் பேசுகிறார்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியை, "என் பிரியமே, நீ திர்சாவைப்போல் சௌந்தரிமுள்ளவள்" என்று அன்பான வார்த்தைகளைச் சொல்லுகிறார். திர்சா என்பது மனாசே கோத்திரத்திலுள்ள ஒரு பட்டணம். இந்தப் பெயருக்கு சந்தோஷம், நேர்த்தியானது, பேரின்பம் என்று பொருள் சொல்லலாம்.

மணவாளன் மணவாட்டியை திர்சாவைப்போன்றவள் என்று சொன்னபின்பு, நீ எருசலேமைப்போல் வடிவமுள்ளவள்" என்றும் சொல்லுகிறார். எருசலேம் இசைவிணைப்பான நகரமாக கட்டப்பட்டிருக்கிறது (சங் 122:3). சாலொமோன் இந்த நகரத்தைக் கட்டி அதை அழகுபடுத்தியிருக்கிறார். இசைவாகவும், இணைப்பாகவும், நேர்த்தியாகவும் இந்தப் பட்டணத்தைக் கட்டியிருக்கிறார். எருசலேம் தேவனுடைய பரிசுத்தமான நகரம். இதன் பரிசுத்தமே அந்த நகரத்திற்குப் பிரதான அழகு. தேவனாகிய கர்த்தர் தம்முடைய சபையை எருசலேம் நகரத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார்.

சுவிசேஷ சபையானது மேலான எருசலேமைப்போலவும், பரமஎருசலேமைப் போலவும் இருக்கிறது. "மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்" (கலா 4:26). "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்.... வந்து சேர்ந்தீர்கள்" (எபி 12:22).

எருசலேம் நகரத்தில் தேவனுடைய பரிசுத்த ஆலயமுள்ளது. மணவாட்டி எருசலேமைப்போல் வடிவமுள்ளவளாக அழகாகயிருக்கிறாள். மணவாட்டி ஒரு புறத்தில் அழகாகயிருந்தாலும், மற்றொரு புறத்தில் கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமாயிருக்கிறாள். சேனைகள் கொடிகளோடு படையெடுத்து வருவதுபோல பார்வைக்கு பயங்கரமாகவும் இருக்கிறாள்.

மணவாட்டியின் அழகு
உன் 6:5-7

உன் 6:5. உன் கண்களை என்னைவிட்டுத் திருப்பு, அவைகள் என்னை வென்றது; உன் அளகபாரம் கீலேயாத் மலையிலே தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது.

உன் 6:6. உன் பற்கள் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறு கிறவைகளும், ஒன்றானாலும் மலடாயிராமல் இரட்டைக் குட்டியீன்றவைகளுமான ஆட்டு மந்தையைப் போலிருக்கிறது.

உன் 6:7. உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம் போலிருக்கிறது.

மணவாளன் தம்முடைய மணவாட்டியின்மீது பிரியமாயிருப்பதை உறுதிபண்ணுகிறார். சிறிதுகாலம் மணவாளன் மணவாட்டியிடமிருந்து தம்முடைய முகத்தை மறைத்துக்கொண்டார். "உன் கண்களை என்னைவிட்டு திருப்பு" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "உன் கண்களை என்னிடமாகத் திருப்பு" என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். உன்னுடைய விசுவாசமுள்ள கண்களையும், நேசமுள்ள கண்களையும் என்னிடமாகத் திருப்பு என்பது இந்த வாக்கியத்திற்குப் பொருளாகும்.

மணவாட்டியின் கண்கள் மணவாளனை வென்றுவிட்டது. மணவாட்டி மணவாளனைப் பார்க்கும்போது, மணவாளன் மிகவும் சந்தோஷமாயிருக்கிறார். அவளுடைய பார்வையில் ஆறுதலடைந்திருக்கிறார். நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கும்போது, அவர் நம்மை நோக்கிப் பார்க்கிறார். "கர்த்தாவே எங்களை நோக்கிப்பாரும்" என்று நாம் அவரிடத்தில் ஜெபம் பண்ணும்போது, "நீ என்னை நோக்கிப் பார்" என்று அவர் நம்மிடம் அன்போடு சொல்லுகிறார். நம்முடைய கண்கள் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய பார்வையில் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிற சுபாவம் காணப்படவேண்டும்.

மணவாளன் மணவாட்டியின் அழகை வர்ணிக்கிறார். அவர் மணவாட்டியை ஏற்கெனவே வர்ணித்த சம்பவம் உன் 4:1-3 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. மணவாளன் மணவாட்டியின் அளகபாரம், பற்கள், கன்னங்கள் ஆகியவற்றை ஏற்கெனவே வர்ணித்திருக்கிறார். இப்போது மணவாளன் மறுபடியுமாக அதே வார்த்தைகளைச் சொல்லி மணவாட்டியை வர்ணிக்கிறார்.

மணவாட்டி கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் போனபோதிலும், கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனபோதிலும், கர்த்தர் கதவைத் தட்டியபோது, கதவைத் திறக்காமல் தூங்கியபோதிலும், மணவாட்டியின்மீது மணவாளனுடைய அன்பு சிறிதும் குறையவில்லை. மணவாட்டியின் அன்பை இதற்கு முன்பு எப்படி வர்ணித்தாரோ, அப்படியே இப்போதும் அதே வார்த்தைகளைப் பயன்படுத்தி அவளை வர்ணிக்கிறார். கிறிஸ்துவின் அன்பு மாறாதது. அவர் நேற்றும் இன்றும், என்றும் மாறாதவர். கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியாகிய சபையின்மீது எப்போதுமே அன்பு கூருகிறார். அவர் நம்மீது வைத்திருக்கிற அன்பு ஒருபோதும் குறைந்துபோவதில்லை.

என் உத்தமியோ ஒருத்தியே உன் 6:8,9

உன் 6:8. ராஜஸ்திரீகள் அறுபது பேரும், மறுமனையாட்டிகள் எண்பதுபேருமுண்டு; கன்னியருக்குத் தொகையில்லை.

உன் 6:9. என் புறாவோ, என் உத்தமியோ ஒருத்தியே; அவள் தன் தாய்க்கு ஒரே பிள்ளை; அவள் தன்னைப் பெற்றவளுக்கு அருமையானவள்; குமாரத்திகள் அவளைக் கண்டு, அவளை வாழ்த்தினார்கள்; ராஜஸ்திரீகளும் மறுமனையாட்டிகளும் அவளைப் போற்றினார்கள்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியைப் பார்க்கும்போது, அவளை பூரண அழகுள்ளவளாகக் காண்கிறார். மணவாட்டியினிடத்தில் எல்லா அழகும் நிரம்பியிருக்கிறது. அவள் பரிபூரண அழகுள்ளவளாகயிருக்கிறாள். அவர் மணவாட்டியைப்பற்றிச் சொல்லும்போது, "என் புறாவோ, என் உத்தமியோ, ஒருத்தியே" என்று சொல்லி வர்ணிக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் எஸ்தர் மிகுந்த சௌந்தரிமுள்ளவளாகயிருந்தாள். அரண்மனை மாடத்தில் ஏராளமான கன்னிகைகள் இருந்தாலும், அவர்களெல்லோரையும்விட, எஸ்தரே அழகில் சிறந்தவளாக விளங்கினாள். இதனால் அவள் பெர்சியா மேதியா தேசத்து ராஜாவாகிய அகாஸ்வேரு ராஜாவுக்கு பட்டத்து ராணியானாள். மணவாளனுக்கு ராஜஸ்திரீகள் அறுபதுபேரும் மறுமனையாட்டிகள் எண்பது பேரும் உண்டு. கன்னியருக்குத் தொகையில்லை. ஆனாலும் மணவாளனுடைய மணவாட்டியோ, உத்தமியாகயிருக்கிறாள். ராஜஸ்திரீகள் அறுபதுபேர்கள் இருந்தாலும் மணவாட்டி மாத்திரமே அவர்களில் உத்தமியாகயிருக்கிறாள். மணவாளனுடைய கண்களுக்கு மணவாட்டி மாத்திரமே புறாவைப்போல அழகாகயிருக்கிறாள்.

மற்ற ராஜஸ்திரீகளும், மறுமனையாட்டிகளும், கன்னியரும் தங்கள் பாவங்களினால் தங்களைக் கறைப்படுத்திக்கொண்டார்கள். கர்த்தருடைய பிள்ளைகளோ பாவத்திற்கு விலகி, தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்கிறார்கள். இதனால் கிறிஸ்துவின் பார்வையில் அவருடைய சபையார் உத்தமர்களாகயிருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் மாத்திரமே கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள். மணவாட்டி இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா ஜனங்களையும்விட மேன்மையுள்ளவளாகயிருக்கிறாள்.

இந்தப் பிரபஞ்சத்தில் ராஜாக்களும், பிரபுக்களும், அதிகாரிகளும், ஐசுவரியவான்களும் அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய உலகப்பிரகாரமான மேன்மையைக் குறித்து பெருமைப்படுகிறார்கள். தங்களுடைய மிகுந்த அதிகாரத்தினால் அவர்கள் ஆணவமாயிருக்கிறார்கள். இவர்களுக்கு உலகப்பிரகாரமான மேன்மை எவ்வளவு அதிகமாகயிருந்தாலும், கர்த்தருடைய பார்வையில், அவருடைய பிள்ளைகள் மாத்திரமே அழகுள்ளவர்கள். விசுவாசிகள் மாத்திரமே உத்தமர்கள். கிறிஸ்துவின் சபையார் மாத்திரமே அவருக்குப் பிரியமானவர்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான தலைவர்கள் சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள். பல யுத்தங்களை நடத்தி தேசங்களை ஜெயித்திருக்கிறார்கள். அவர்களுடைய மொழிகள் அழகாகயிருக்கலாம். அந்த மொழிகளில் ஏராளமான இலக்கியங்கள் வெளிவந்திருக்கலாம். அவர்களுடைய கலாச்சாரமும், நாகரீகமும் நேர்த்தியானதாகயிருக்கலாம். இவையெல்லாமே உலகப்பிரகாரமான அழகுதான். இந்த உலக அழகைவிட, பரிசுத்தமே மேன்மையான அழகு.

இந்த உலகத்தில் ஏராளமான சபைகள் உள்ளன. சில சபைகளில் அதிகமான அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். வேறு சில சபைகளில் விசுவாசிகளின் எண்ணிக்கை குறைவாகயிருக்கிறது. சில சபைகளில் வசதிகள் அதிகமாயிருக்கும். மற்ற சபைகளைவிட இவர்கள் உலகக்காரியங்களில் உயர்ந்திருப்பார்கள். இங்குள்ள விசுவாசிகள் படித்தவர்களாகயிருப்பார்கள். உத்தியோகம் பார்க்கிறவர்களாகயிருப்பார்கள். சில சபைகளில் படித்தவர்களும், உத்தியோகம் பார்க்கிறவர்களும் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள். சில சபைகளிலுள்ள விசுவாசிகள் விசேஷித்த வரங்களைப் பெற்றிருப்பார்கள்.

சபைகளுக்குள் வித்தியாசம் இருக்கும். இவையெல்லாம் உலகப்பிரகாரமான வித்தியாசங்கள். சபையின் தலையாகிய கிறிஸ்துவோ, தம்முடைய சபைகள் எல்லாவற்றையும் ஒரே சபையாகவே பாவிக்கிறார். இதை சொல்லும்போது, "என் உத்தமியோ ஒருத்தியே" என்று அறிக்கை செய்கிறார். கர்த்தருக்குப் பிரியமான விசுவாசிகளெல்லோருமே கள்ளம் கபடமில்லாத புறாவைப்போல இருக்கிறார்கள். சபைகளுக்குள் உலகப்பிரகாரமான வித்தியாசங்கள் இருந்தாலும், கர்த்தருடைய பார்வையில் அவருடைய விசுவாசிகள் எல்லோருமே, அவருடைய பிள்ளைகளாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவானவரே எல்லா சபைகளையும் இணைக்கிற மையமாகயிருக்கிறார்.

தம்முடைய மணவாட்டி மற்ற எல்லா ராஜஸ்திரீகளையும்விட சிறந்தவள் என்று மணவாளன் புகழ்ந்து சொல்லுகிறார். சாலொமோன் ராஜா தன் தகப்பனுக்குப் பிரியமான குமாரனும், தன் தாய்க்கு மிகவும் அருமையான ஒரே பிள்ளையுமானவர் (நீதி 4:3). அவளுடைய தாயாருக்கு அநேக பிள்ளைகள் இருந்தாலும், தனக்கு சாலொமோன் மாத்திரமே ஒரே பிள்ளையாக இருக்கிறார் என்று நினைக்குமளவுக்கு, சாலொமோன் விசேஷித்தவராகயிருந்தார்.

இந்த உலகத்தில் ஏராளமான ராஜ்யங்கள் இருக்கிறது. அவை உலகப்பிரகாரமான மேன்மையிலும், மகிமையிலும் சிறந்து விளங்குகிறது. இருந்தாலும் எல்லா ராஜ்யங்களையும் ஒன்று சேர்த்தாலும், அவை எல்லாமே கிறிஸ்துவின் ராஜ்யமாகிய அவருடைய சபைக்கு இணையாகாது, ஒப்பாகாது.

மணவாட்டியை எருசலேமின் குமாரத்திகள் ஆச்சரியத்தோடு பார்த்து, அவளைப் புகழ்ந்து சொல்லுகிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல ராஜஸ்திரீகளும் மறுமனையாட்டிகளும் மணவாட்டியைப் புகழ்ந்து பேசுகிறார்கள். அவர்களோடு கன்னிகைகளும் சேர்ந்து மணவாட்டியைப் போற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள்.

எருசலேமின் குமாரத்திகளோ, ராஜஸ்திரீகளோ, மறுமனையாட்டிகளோ, கன்னியரோ மணவாட்டியின்மீது பொறாமைப்படவில்லை. மணவாட்டி தங்களுக்கு போட்டியாகயிருக்கிறாள் என்றும் நினைக்கவில்லை. அவர்களெல்லோருமே மணவாட்டியைக் கண்டு, அவளை வாழ்த்துகிறார்கள். அவளைப் போற்றுகிறார்கள். அவளைப் பற்றி உயர்ந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்.

மனச்சாட்சியில் சுத்தமுள்ளவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளை வாழ்த்துவார்கள், போற்றுவார்கள். விசுவாசிகளுக்கு விரோதமாகத் தூஷணமான வார்த்தைகளைப் பேசமாட்டார்கள். அவர்களைப்பற்றி நன்மையான வார்த்தைகளையே பேசுவார்கள். விசுவாசிகளின் நன்மையை விரும்புவார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களை கனப்படுத்துகிற ஜனங்கள்மீது கர்த்தரும் பிரியமாயிருக்கிறார். தம்முடைய பிள்ளைகளில் சிறியவர்களாகயிருக்கிறவர்களுக்கு கூட யாரும் இடறல் உண்டுபண்ணக்கூடாது என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்குத் தீங்கு வருவதை கர்த்தர் அனுமதிப்பதில்லை.

அருணோதயம் போல் உதிக்கிற இவள் யார்
உன் 6:10

உன் 6:10. சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம் போல் உதிக்கிற இவள் யார்?

மணவாளன் மணவாட்டியைப்பற்றி இன்னும் புகழ்ந்து பேசுகிறார். அவர் மணவாட்டியை தமக்குச் சொந்தமானவளாக அங்கீகரித்திருக்கிறார். "அருணோதயம்போல் உதிக்கிற இவள் யார்'' என்று கேட்கிறார். இந்த வாக்கியம் உலகத்திலுள்ள சபையைக் குறிக்கிறது. சபையின் இருதயத்திலுள்ள கிருபையைக் குறிக்கிறது. விசுவாசிகள் இந்த உலகத்தில் விளக்காகவும், வெளிச்சமாகவும் இருக்கவேண்டும். இருளடைந்திருக்கும் இந்த உலகத்தில் சபையின் விசுவாசிகள் அருணோதயம் போல் உதிக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்களுக்கு மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. அவர்கள் உன்னதத்திலிருந்து உதிக்கும் அருணோதயத்திற்காக வாஞ்சையாய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். மேசியா அருணோதயம் போல் உதிக்கும்போது இப்பிரபஞ்சத்திலுள்ள இருள் நீங்கும், வெளிச்சம் வரும் என்று எதிர்பார்த்தார்கள்.

யூதருடைய சபை சந்திரனைப்போல அழகாகயிருக்கிறது. யூதமார்க்கத்தின் சடங்காச்சார பிரமாணங்கள் பரிபூரணமான வெளிச்சத்தைக் கொடுக்கவில்லை. அது களங்கமுள்ள அரைகுறையான வெளிச்சத்தையே கொடுத்தது. சூரியனின் வெளிச்சத்தை சந்திரன் பிரதிபலிக்கிறது. சந்திரனுக்குத் தனியாக வெளிச்சம் எதுவுமில்லை. சந்திரனால் ஒரு பகல் பொழுதை உண்டுபண்ணமுடியாது. நீதியின் சூரியன் உதிக்கும்போதுதான் பூமிக்கு பகல்பொழுது வரும்.

கிறிஸ்துவின் சபையார் சூரியனைப் போல பிரகாசமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இருளில் அமர்ந்திருக்கிற ஜனங்களுக்கு, சபையின் விசுவாசிகள் சூரியனின் வெளிச்சத்தைப் போல, பிரகாசமாயிருக்கிறார்கள். சபையும், சபையிலுள்ள விசுவாசிகளும் கொடிகள் பறக்கும் படையைப்போல கெடியுள்ளவர்களாகயிருக்கிறார்கள். இதுவே சபையின் அழகு. இந்த உலகத்திலுள்ள சபையானது ஒரு படையைப்போல, தேவனுடைய சேனையாகயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருந்தபோது, அவர்கள் மகாபெரிய சேனையைப்போல இருந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் சத்துருக்களும், சத்துருக்களின் தேசத்தாரும் இருந்தார்கள். இஸ்ரவேல் தேசத்தாருக்கு எப்போதும் நெருக்கமும், யுத்தமும் உண்டாயிற்று. இஸ்ரவேல் ஜனங்களோ கொடிகள் பறக்கும் படையைப்போல வனாந்தரத்திலே அணிவகுத்து நின்றார்கள். இதுவே இஸ்ரவேல் ஜனத்தாரின் அழகு.

விசுவாசிகளாகிய நாமும் கிறிஸ்துவின் சேனையில் போர்வீரர்களாகயிருக்கிறோம். நம்முடைய சேனைக்கு கொடிகள் உண்டு. கிறிஸ்துவின் சுவிசேஷமே நம்முடைய கொடி. "ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்" (ஏசா 11:12).

சேனையிலுள்ள போர்வீரர்கள் மிகுந்த கட்டுப்பாடோடிருப்பார்கள். ஒழுக்கத்தைக் கடைபிடிப்பார்கள். எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமமுமாகச் செய்வார்கள். கிறிஸ்துவின் சபையார் கெடியுள்ளவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் பயங்கரமானவர்களாக யிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு மாத்திரமே பயங்கரமானவர்கள்.

சபையின் விசுவாசிகளாகிய நாமும் கொடிகள் பறக்கும் படையைப்போல, கிறிஸ்துவின் யுத்தவீரர்களாகயிருக்க வேண்டும். நம்முடைய சத்துருக்களுக்கு நாம் பயங்கரமானவர்களாயிருக்கவேண்டும். சபையானது தன்னுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்தமில்லாமல் தேவனைத் தரிசிக்க முடியாது. தேவனில்லாமல் யுத்தத்தில் வெற்றி பெறமுடியாது. நாம் பரிசுத்தத்தோடு தேவனைக் கனம்பண்ணும்போது, கர்த்தர் நமக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். யுத்தம் கர்த்தருடையது.

கிறிஸ்துவின் சபை சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமுமுள்ளது. அதே வேளையில் அது கொடிகள் பறக்கும் படையைப்போல திரளானது. கிறிஸ்துவின் விசுவாசிகள் கர்த்தருக்கு மாத்திரமே பணிந்திருப்பார்கள். சத்துருவை எதிர்த்து நிற்பார்கள். விசுவாசிகள் கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்களாகவும், சத்துருவுக்குப் பயங்கரமானவர்களாகவும் இருக்கிறார்கள்.

தோட்டத்துக்குப் போனேன்
உன் 6:11

உன் 6:11. பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்கவும், திராட்சச்செடிகள் துளிர்விட்டு, மாதளஞ்செடிகள் பூத்ததா என்று அறியவும், வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன்.

கிறிஸ்துவானவர் இப்போது தம்முடைய மணவாட்டியினிடத்திற்கு திரும்பி வந்திருக்கிறாள். மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் இடையே ஏற்பட்டிருந்த முறிவு இப்போது சீர்படுத்தப்பட்டிருக்கிறது. மணவாளன் தம்முடைய மணவாட்டியோடு ஒப்புரவாகியிருக்கிறார். மணவாட்டியின் தப்பிதங்களை மன்னித்து மறந்துவிட்டார். கிறிஸ்துவானவர் தமக்கும் தம்முடைய மணவாட்டிக்கும் இடையே ஏற்பட்டிருந்த பிரிவினையை இங்கு தெளிவுபடுத்துகிறார். அத்தோடு மணவாட்டியோடு தாம் ஒப்புரவாகியிருப்பதையும் விவரிக்கிறார்.

கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியாகிய சபையை விட்டு சிறிதுகாலம் பிரிந்திருந்தாலும், அவருடைய கண்கள் எப்போதும் அவருடைய தோட்டத்தின் மீதே கவனமாயிருந்திருக்கிறது. கிறிஸ்துவே தம்முடைய தோட்டத்தைப் பராமரிக்கிறவர். பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்க தம்முடைய வாதுமைத் தோட்டத்திற்குப் போனதாக மணவாளன் சொல்லுகிறார். ஒரு கரிசனையோடு அவர் அங்கு போகிறார். தமக்குச் சொந்தமானதைப் பார்ப்பதற்காகப் போகிறார்.

கிறிஸ்துவானவர் மணவாட்டியை விட்டுப் பிரிந்துபோயிருந்தாலும், தம்முடைய தோட்டத்தைவிட்டு அவர் தூரமாய் விலகிப்போய்விடவில்லை. தம்முடைய தோட்டத்தில் திராட்சச்செடிகள் துளிர்விட்டு, மாதுளஞ்செடிகள் பூத்ததா என்று அறிவதற்காக மணவாளன் தம்முடைய தோட்டத்திற்குப் போகிறார். திராட்சச்செடிகள் சரியாகத் துளிர்விடவில்லையென்றாலோ, மாதளஞ்செடிகள் சரியாகப் பூக்கவில்லையென்றாலோ, அதைப் பராமரிப்பதற்கு தேவையான காரியங்களைச் செய்வதற்காக மணவாளன் தம்முடைய வாதுமைத் தோட்டத்திற்குப்போகிறார்.

கிறிஸ்துவானவர் தம்மை விசுவாசிக்கிற ஒவ்வொரு ஆத்துமாவிலும் தம்முடைய கிருபையின் நற்கிரியையை ஆரம்பித்து வைக்கிறார். அந்த ஆரம்பம் நன்றாயிருக்கிறதா என்பதை கிறிஸ்துவானவர் கவனித்துப் பார்க்கிறார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிற ஆத்துமா, தன்னுடைய ஆத்தும நேசர்மீது ஆரம்பகாலத்திலிருந்தே அன்பாயும் பிரியமாயும் இருக்கும். விசுவாசிக்கிற ஆத்துமா கிறிஸ்துவைப்பற்றிக்கொள்ளும். கிறிஸ்துவானவரும் தம்மை விசுவாசித்து தம்மைப்பற்றிக்கொள்கிற ஆத்துமாக்கள்மீது பிரியமாயிருக்கிறார்.

திராட்சச்செடிகள் துளிர்விடுவதைப் பார்ப்பதில் மணவாளன் பிரியப்படுகிறார். மாதுளஞ்செடிகள் பூத்திருப்பதைப் பார்ப்பதில் கிறிஸ்துவானவர் சந்தோஷப்படுகிறார். நாம் பூப்பூக்கிற வசந்தகாலத்திலிருக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பூ பூக்கவேண்டும். ஆரம்பத்தில் பூ பூத்தால்தான் பின்பு அது கனிகொடுக்கும். கிறிஸ்துவானவர் நம்முடைய விசுவாச ஜீவியத்தின் ஆரம்ப முதலேயே நம்மீது கரிசனையாயிருக்கிறார். நம்முடைய ஆவியிலே நாம் பூ பூக்கிற காலத்திலேயே நம்மைப் பராமரிக்கிறார். அப்போதுதான் நம்முடைய ஜீவியத்தில் நம்மால் ஆவியின் கனியை ஏற்ற காலத்தில் கொடுக்க முடியும்.

அம்மினதாபின் இரதங்கள்
உன் 6:12

உன் 6:12. நினையாததுக்குமுன்னே என் ஆத்துமா என்னை அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாக்கிற்று.

மணவாளன் மணவாட்டியைத் தேடிவந்து கதவைத் தட்டுகிறார். அவளோ மணவாளனுக்குக் கதவைத் திறக்காமல் தூக்கத்திலிருக்கிறாள். மணவாளன் தன் மணவாட்டியின்மீது பிரியமில்லாதவராக அவ்விடத்தைவிட்டுப் போய்விடுகிறார். கிறிஸ்துவானவர் தம்மை விசுவாசிக்கிற ஆத்துமாக்களிடம் எப்போதும் கோபமாயிருப்பதில்லை. தம்முடைய சபையைவிட்டு அவர் எப்போதும் தூரவிலகி போய்விடுவதில்லை.

கிறிஸ்துவே சபைக்குத் தலையாகயிருக்கிறவர். தம்முடைய பிரசன்னம் சபைக்குத் தேவையாகயிருப்பதை அவர் அறிந்திருக்கிறார். மணவாட்டியும் மணவாளனைக் காணாமல் துக்கத்தோடு தேடிக்கொண்டிருப்பதை அவர் கவனித்துப் பார்க்கிறார். மணவாட்டியின்மீது தமக்கு உண்டாயிருந்த கோபத்தை நீக்கிவிட்டு, அவர் மறுபடியுமாய் மணவாட்டியினிடத்திற்கு வருகிறார். கிறிஸ்துவானவர் சபையின் அழுகையையும், புலம்பலையும் கேட்டு, மனதுருகி, தம்முடைய பிள்ளைகளுக்கு உதவிசெய்வதற்காக, தம்முடைய சபைக்குத் திரும்பி வருகிறார்.

என் ஆத்துமா என்னை அமினதாபின் இரதங்களுக்கு ஒப்பாக்கிற்று என்று மணவாளன் சொல்லுகிறார். இனிமேலும் மணவாளனால் மணவாட்டியைப் பிரிந்து தூரமாய் விலகிப்போகமுடியவில்லை. தாம் நேசிக்கிற தம்முடைய மணவாட்டியிடம் சீக்கிரமாய்த் திரும்பி வந்துவிடவேண்டுமென்று மணவாளன் தீர்மானிக்கிறார். மணவாட்டியின் அழுகைக் குரலும், துக்கத்தோடு கூடிய விண்ணப்பத்தின் குரலும் மணவாளனின் செவிகளில் எட்டிற்று. உடனே மணவாளன் அமினதாபின் இரதங்களைப்போல, தம்முடைய மணவாட்டியிடம் விரைந்து வருகிறார். அமினதாபின் இரதங்கள் அழகானவை. வேகமாக ஓடக்கூடியவை.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் அவரிடத்தில் வந்து சேருவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும். விசுவாசிகள் தங்கள் பாவத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும், கிறிஸ்துவைவிட்டுத் தூரமாய் விலகிப்போய்விட்டாலும், தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்தவேண்டும். கிறிஸ்துவை முழுஆத்துமாவோடும், முழுமனதோடும், முழுபலத்தோடும் தேடவேண்டும். தேடுகிறவர்கள் மாத்திரமே கண்டுபிடிப்பார்கள். நாம் கிறிஸ்துவைத் தொடர்ந்து தேடும்போது, அவர் மீது தொடர்ந்து அன்புகூரும்போது, அவரை தொடர்ந்து நேசிக்கும்போது, அவர் ஏற்றகாலத்தில் நம்மிடத்தில் திரும்பி வருவார். அவர் சிறிதுகாலம் நம்மைவிட்டுப் பிரிந்துபோயிருந்தாலும், அவர் ஒருபோதும் நம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துபோய்விடுவதில்லை. ஏற்ற வேளை வரும்போது, நாம் நேசிக்கிற நம்முடைய ஆத்தும நேசர், நம்மிடத்தில் விரைந்து வருவார்.

சூலமித்தியே

உன் 6:13

உன் 6:13. திரும்பிவா, திரும்பிவா, சூலமித்தியே! நாங்கள் உன்னைப் பார்க்கும்படிக்கு, திரும்பிவா, திரும்பிவா. சூலமித்தியில் நீங்கள் என்னத்தைப் பார்க்கிறீர்கள்? அவள் இரண்டு சேனையின் கூட்டத்துக்குச் சமானமானவள்.

மணவாளன் இப்போது மணவாட்டியினிடத்திற்குத் திரும்பி வந்திருக்கிறார். மணவாட்டியும் தம்மிடத்திற்குத் திரும்பி வருமாறு அவளை அன்போடு அழைக்கிறார். மணவாட்டி மணவாளனைத் தேடி, அவரைக் காணமுடியாமல் மிகவும் சோர்ந்துபோயிருக்கிறாள். இந்த சோர்வுகளுக்கு மத்தியிலும், அவள் தன்னுடைய மணவாளனிடம் திரும்பி வரவேண்டும். அவளுடைய ஆத்தும நேசரிடம் அவள் திரும்பி வரும்போது அவளுடைய ஆத்துமாவுக்கு ஆறுதலும், இன்பமும் உண்டாகும்.

கிறிஸ்துவின் சபையானது இங்கு சூலமித்தி என்று அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தை "சாலேம்" என்னும் வார்த்தையைக் குறிக்கிறது. சாலேம் மணவாட்டியின் பிறந்த ஊர். அதுதான் அவள் வாசம்பண்ணுகிற ஊர். சூனேம் ஊரைச் சேர்ந்தவள். "சூலமித்தி" என்று அழைக்கப்படுகிறாள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு பரலோகமே அவர்களுடைய சாலேம். அதுவே அவர்கள் பிறந்த ஊர். கர்த்தருடைய பிள்ளைகள் பரலோக வாசிகள். அவர்கள் பரமதேசத்தைச் சேர்ந்தவர்கள். இந்தப் பூமி நமக்கு நித்திய வாசஸ்தலமல்ல. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம்.

தம்முடைய வாசஸ்தலத்திற்கு திரும்பி வருமாறு மணவாளன் மணவாட்டியை அன்போடு அழைக்கிறார். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் செய்கிற பாவிகளை, கர்த்தரிடத்திற்கு வருமாறு அன்போடு அழைக்கவேண்டும். அவர்களைத் திரும்ப திரும்ப அழைக்கவேண்டும். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள் எல்லோரையும் தம்மிடத்திற்கு வருமாறு கர்த்தர் அன்போடு அழைக்கிறார். பாவிகளும் கர்த்தரிடத்திற்கு மனந்திரும்பி வரவேண்டும். கர்த்தரைவிட்டுப் பிரிந்து பின்வாங்கிப்போயிருக்கிற அவிசுவாசிகளும் கர்த்தரிடத்திற்குத் திரும்பி வரவேண்டும்.

தம்மிடத்திற்கு வருமாறு கர்த்தர் எல்லோரையும் திரும்பத் திரும்ப அழைக்கிறார். "திரும்பி வா, திரும்பி வா" என்று மறுபடியும் மறுபடியுமாகத் தம்முடைய மணவாட்டியை அழைக்கிறார். "நாங்கள் உன்னைப் பார்க்கும்படிக்கு, சூலமித்தியே, திரும்பி வா, திரும்பி வா" என்று மணவாளன் தம்முடைய மணவாட்டியை அன்போடு அழைக்கிறார்.

"என் ஆத்துமாவே, நீ எனக்குள் ஏன் தியங்குகிறாய்" என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார். நம்முடைய ஆத்துமா கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்குத் தயங்கக்கூடாது. கர்த்தரைத் தேடும் முயற்சியில் நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தர் நம்மைப் பார்க்கும்படிக்கு விரும்புகிறார். தம்முடைய மணவாட்டி தம்மிடத்தில் திரும்பி வந்தபின்பு, மணவாளன் அவளுடைய முகத்தைப் பார்க்குமாறு விரும்புகிறார். "நாங்கள் உன்னைப் பார்க்கும்படிக்கு திரும்பி வா, திரும்பி வா" என்று அன்போடு அழைக்கிறார்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனிடம் வந்தபின்பு, துக்கமாயிருப்பதுபோல, அவள் தன்னுடைய முகத்தை முக்காடிட்டுக் கொள்ளக்கூடாது. கர்த்தரிடத்தில் வந்தபின்பு நமக்கு துக்கம் இருக்காது. நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறும். தம்முடைய பிள்ளைகள் உற்சாகமாயும், சந்தோஷமாயும், மனத்தாழ்மையோடும் இருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நம்முடைய முகம் கர்த்தருக்குள் பிரகாசமாயிருக்கவேண்டும். நம்முடைய பரிசுத்தத்தின் அழகை கர்த்தர் பார்க்க விரும்புகிறார்.

இங்கு ஒரு கேள்வியும் அதற்குரிய பதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. "சூலமித்தியில் நீங்கள் என்னத்தைப் பார்க்கிறீர்கள்" இது கேள்வி. "அவள் இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமானவள்" இது அந்தக் கேள்விக்கான பிரதியுத்தரம். வேதபண்டிதர்கள் இந்தக் கேள்விக்கும் பதிலுக்கும் இரண்டுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

1. மணவாட்டி தன்னைப்பற்றிக் கூறுகிறாள். தன்னுடைய நிலமையை பரிதாபமாகச் சொல்லுகிறாள். தன்னிடத்தில் பார்ப்பதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை என்பதை மனத்தாழ்மையோடு அங்கீகரிக்கிறாள். தான் இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமானவள் என்று சொல்லுகிறாள். இரண்டு சேனைகள் சந்தித்து யுத்தம்பண்ணும்போது அங்கு இரத்தம் சிந்துதலும், மரணமும், மரண ஓலமும் அதிகமாயிருக்கும்.

நகரத்தின் காவலாளர்கள் மணவாட்டியை அடித்துப் போட்டார்கள். அந்தக் காயத்தின் தழும்பு மணவாட்டியின் முகத்திலிருக்கிறது. மணவாட்டியைப் பார்க்கும்போது அவள் யுத்தத்தின் காயங்களும் அதன் வடுக்களும் நிரம்பியவளாகயிருக்கிறாள். மணவாட்டி தன்னைப்பற்றிச் சொல்லும்போது "நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்" (உன் 1:6) என்று சொன்னாள். அதுபோலவே இப்போது "நான் இரத்தம் தோய்ந்த முகத்தோடு இருப்பதாக பாராதேயுங்கள்" என்று சொல்லுகிறாள்.

2. மணவாளன் தம்முடைய மணவாட்டியைப் புகழ்ந்து இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார். "சூலமித்தியிடம் நீங்கள் என்னத்தைப் பார்க்க முடியும் என்று நான் சொல்லுகிறேன்" என்று மணவாளன் சொல்லுகிறார். அவள் இராஜகம்பீரமுள்ளவள். இரண்டு சேனையின் கூட்டத்திற்குச் சமானமானவள். அவள் ஒரே சேனையிலுள்ள இரண்டு பிரிவுகளாகயிருக்கிறாள். இவ்விரண்டு சேனையின் கூட்டமும் ஒன்றுக்கொன்று விரோதமாக யுத்தம்பண்ணாது. இவ்விரண்டும் சேர்ந்து இணைந்து சத்துருவோடு யுத்தம்பண்ணும். இரட்டிப்பான வலிமையோடு யுத்தம்பண்ணும்.

யாக்கோபு தேவதூதர்களைப் பார்த்து இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு "மக்னாயீம்" என்று பேரிட்டார். மணவாட்டி மக்னாயிமைப்போல இருக்கிறாள். இரண்டு சேனையின் கூட்டத்திற்கு சமானமாயிருக்கிறாள். தேவதூதர்களின் கூட்டமாகயிருக்கிறாள். பரிசுத்தவான்களின் கூட்டமாகயிருக்கிறாள். பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்கிற தேவதூதர்களின் கூட்டமாகயிருக்கிறாள்.

கிறிஸ்துவின் சபையானது யுத்தம்பண்ணுகிற சபை. கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய போர்வீரர்களாகயிருக்கிறார்கள். சபை ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயம் பெறும். கிறிஸ்துவானவர் ஜெயக்கிறிஸ்துவாகயிருப்பது போல, அவருடைய சபையும் ஜெயம் கொள்ளுகிற சபையாகவே இருக்கும்.

7 அதிகாரம்

கிறிஸ்துவே ராஜரீக மணவாளன். அவர் தம்முடைய மணவாட்டியாகிய சபையின் அழகை விவரிக்கிறார். கிறிஸ்து தம்முடைய சபையின்மீது அன்பாகயிருக்கிறார். கிறிஸ்துவின் அன்பு உன்னதமானது. அது பரிபூரணமானது (உன் 7:1-9). மணவாட்டியாகிய சபை கிறிஸ்துவினிடத்தில் பிரியமாயிருக்கிறது. கிறிஸ்துவில் மகிழ்சியடைகிறது. கிறிஸ்துவோடு எப்போதும் ஐக்கியமாயிருக்க வேண்டுமென்று சபையானது வாஞ்சையோடிருக்கிறது (உன் 7:10-13).

ராஜகுமாரத்தியே
உன் 7:1

உன் 7:1. ராஜகுமாரத்தியே! பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது; உன் இடுப்பின் வடிவு விசித்திரத் தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது.

மணவாளனாகிய கிறிஸ்து தம்முடைய சபையாகிய மணவாட்டிக்கு புதிய பெயரைக் கொடுக்கிறார். சபையை "ராஜகுமாரத்தியே" என்று அழைக்கிறார். இந்தப் பெயர் சங்கீதப்புஸ்தகத்தில் சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பெயரோடு ஒத்துப்போகிறது. "ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள்; அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது" (சங் 45:13). கிறிஸ்துவின் சபை ராஜாவின் குமாரத்தி என்று அழைக்கப்படுகிறாள்.

சபை புதிதாகப் பிறந்திருக்கிறது. இந்தப் பிறப்பு பரலோகத்திலிருந்து வந்திருக்கிறது. சபை தேவனால் பிறந்திருக்கிறது. சபையானது தேவனுடைய கிரியை.

இது அவருடைய கை வண்ணம். சபையானது ராஜாதி ராஜாவாகிய கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சபையை வழிநடத்துகிறார்.

மணவாட்டியாகிய சபை மணவாளனாகிய கிறிஸ்துவோடு கலியாண ஒப்பந்தத்தில் நிச்சயம் பண்ணப்பட்டிருக்கிறது. இதன் மூலமாகவும் மணவாட்டியாகிய சபை ராஜாவின் குமாரத்தியாகயிருக்கிறாள். கிறிஸ்துவானவர் தம்முடைய சபையைத் தமக்காக நிச்சயம் செய்துகொண்டிருக்கிறார். மணவாட்டியினிடத்தில் சில குறைகள் காணப்பட்டாலும், கிறிஸ்துவானவர் தம்முடைய சபையாகிய மணவாட்டியை ராஜாவின் குமாரத்தியாக ஏற்படுத்தியிருக்கிறார்.

கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியின் அழகை வர்ணிக்கிறார். இந்த வார்த்தை கிறிஸ்துவின் வாயிலிருந்து புறப்பட்டு வருகிறது. மணவாட்டியின்மீது கிறிஸ்து வைத்திருக்கிற அன்பு சிறிதும் குறையவில்லை (உன் 4:1; 6:5,6). அவள்மீது தாம் வைத்திருக்கிற அன்பை வெளிப்படுத்தும் வண்ணமாய், மணவாளன் மணவாட்டியின் அழகை வர்ணிக்கிறார்.

இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்முடைய மணவாட்டியை வர்ணித்திருக்கிறார். அவளுடைய அழகை நேர்த்தியாக ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே சொல்லப்பட்ட ஒப்புமைக்கும், இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஒப்புமைக்கும் வித்தியாசமுள்ளது. மணவாட்டியிடம் இயற்கையான அழகைவிட ஆவிக்குரிய அழகு தாராளமாயிருக்கிறது. பரிசுத்தமே சபையின் மெய்யான அழகு.

கிறிஸ்துவானவர் தம்முடைய மணவாட்டியை புகழ்ந்து பேசியவுடன், அவளை தமக்கு மணவாட்டியாக நிச்சயம் செய்து கொள்கிறார். மணவாட்டியைப் புகழ்ந்தவுடன் தம்முடைய கலியாண நாளைப்பற்றியும், மனமகிழ்ச்சியின் நாளைப்பற்றியும் சந்தோஷமாய்ச் சொல்லுகிறார் (உன் 3:11).

மணவாட்டி மணவாளனோடு கலியாண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும், மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் இடையே பிரிவு உண்டாயிற்று. மணவாளன் மணவாட்டியை விட்டுப் பிரிந்துவிட்டார். மணவாட்டி தன்னுடைய மணவாளனைத் தேடுகிறாள். மணவாளன் தம்முடைய மணவாட்டியின்மீது இரக்கம் காண்பித்து, அவள் செய்த தப்பிதத்தை மன்னித்து மறந்து, அவளைத் தம்மிடத்தில் திரும்பி வருமாறு அழைக்கிறார். மணவாட்டி தம்முடைய மணவாளனாகிய கிறிஸ்துவிடம் திரும்பி வருகிறாள். அதன் பின்பு மணவாளன் மணவாட்டியின் அழகை மறுபடியுமாக வர்ணிக்கிறார்.

கிறிஸ்து தம்முடைய ஜனத்தின்மீது எப்போதுமே அன்புகூருகிறார். கிறிஸ்துவின் அன்பு ஒருபோதும் மாறுவதில்லை என்பதை, அவர் தம்முடைய மணவாட்டியின் அழகை மறுபடியும் வர்ணிப்பது தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்து நம்மீது அன்புகூர்ந்து, நம்மை முடிவுபரியந்தம் வழிநடத்துகிறவர்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனின் அழகை ஏற்கெனவே வர்ணித்திருக்கிறாள். அவருடைய சிறப்பான பத்து அம்சங்களை மணவாட்டி தெளிவாகச் சொன்னாள் (உன் 5:11). இப்போதோ மணவாளன் தம்முடைய மணவாட்டியிடம் காணப்படுகிற ஏராளமான அம்சங்களை சிறப்பாக எடுத்துச் சொல்லுகிறார். மணவாளன் தம்முடைய சபையை தாராளமாய் வர்ணிக்கிறார். சபையின் அழகில் கிறிஸ்துவானவர் பிரியமாயிருக்கிறார்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியின் அழகை வர்ணிக்கும்போது, அவளுடைய பாதத்திலிருந்து சிரசு வரையிலும் வர்ணிக்கிறார். சபை பூரண அழகுள்ளது. விசுவாசிகளின் பாதங்களிலிருந்து, சிரசுகள் வரையிலும் எல்லாமே கர்த்தருடைய பார்வையில் அழகாயிருக்கிறது.

மணவாளன் மணவாட்டியை "ராஜகுமாரத்தியே" என்று அழைத்து, "பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது" என்று சொல்லுகிறார். சபையாரின் கண்களில் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரரின் பாதங்கள் மிகவும் அழகானவை. "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன" (ஏசா 52:7).

மணவாட்டியின் பாதங்கள் கிறிஸ்துவின் கண்களுக்கும் அழகாயிருக்கிறது. "பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது" என்று மணவாளன் தம்முடைய மணவாட்டியின் பாதங்களின் அழகை வர்ணிக்கிறார். விசுவாசிகள் பாவத்தின் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். அப்போது அவர்களுடைய பாதங்களில் பாதரட்சைகள் தொடுத்துக்கொள்ளப்படும். பாதரட்சை என்பது சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ஆயத்தமாயிருப்பதைக் குறிக்கிற வார்த்தை.

பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தபோது, தேவதூதன் அங்கு வந்து, பேதுருவை நோக்கி, "உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்" (அப் 12:8) என்று சொன்னார். சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஆயத்தமாகயிருக்கிறவர்கள், தங்கள் பாதங்களில் ஆயத்தம் என்னும் பாதரட்சைகளைத் தொடுத்திருப்பார்கள். இவர்கள் சுவிசேஷத்தின் பாதையில் நேராக நடப்பார்கள். சத்தியத்தை விட்டு வழிவிலகி போகமாட்டார்கள். அவர்களுடைய நடையில் உறுதியிருக்கும். இப்படிப்பட்ட பாதங்களையே, மணவாளன், "பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது" என்று சொல்லுகிறார்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியின் இடுப்பையும் வர்ணிக்கிறார். "உன் இடுப்பின் வடிவு விசித்திர தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது" என்று சொல்லுகிறார். பூஷணம் ஒரு பொன்னாபரணம். இதை சாதாரண தொழிலாளிகளால் செய்ய முடியாது. அதிக திறமையுள்ள, தொழிலில் தேர்ச்சி பெற்றுள்ள விசித்திர தொழிற்காரரால் மாத்திரமே அழகான பூஷணங்களைச் செய்ய முடியும். அவர்கள் செய்கிற பூஷணம் மிகவும் நேர்த்தியாகயிருக்கும்.

மணவாட்டியின் இடுப்பில் எலும்புகளும் மூட்டுகளும் இசைவாய் இணைக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அழகான பொன்னாபரணம்போல நேர்த்தியாய் இணைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சரீரம் கணுக்களாலும் கட்டுகளாலும் இசைவாகவும், நேர்த்தியாகவும் இணைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் சூட்சம சரீரம் இவ்வாறு இசைவாக கட்டி இணைக்கப்பட்டிருப்பதை அப்போஸ்தலர் பவுலும் தன்னுடைய நிருபத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்.

"அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும்இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது" (எபே 4:16).

"கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல், மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" (கொலோ 2:18,19).

கிறிஸ்துவின் பார்வையில் சபையினுடைய இடுப்பின் வடிவு பரிசுத்த அன்பினாலும், ஒற்றுமையினாலும் இசைவாய் இணைக்கப்பட்டிருக்கிறது. அன்பினால் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. ஒரு பூஷணம்போல ஒன்றுக்கொன்று இசைவாயிருக்கிறது. கிறிஸ்துவின் சபையிலுள்ள விசுவாசிகள் ஒருவருக்கொருவர் இசைவாய் இணைத்து கட்டப்பட்டிருக்கிறார்கள்.

நாபி
உன் 7:2

உன் 7:2. உன் நாபி திராட்சரசம் நிறைந்த வட்டக்கலசம்போலிருக்கிறது; உன் வயிறு லீலிபுஷ்பங்கள் சூழ்ந்த கோதுமை அம்பாரம்போலிருக்கிறது.

மணவாட்டியின் நாபியைப்பற்றியும் மணவாளன் வர்ணிக்கிறார். நம்முடைய சரீரத்தின் தொப்புளைக் குறிப்பதற்கு "நாபி" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "உன் நாபி திராட்சரசம் நிறைந்த வட்டக்கலசம் போலிருக்கிறது" என்று சொல்லுகிறார். கர்த்தருக்குப் பயந்து தீமையைவிட்டு விலகுவதே நம்முடைய நாபிக்கு ஆரோக்கியம். அதுவே நம்முடைய எலும்புகளுக்கு ஊன் (நீதி 3:8).

மணவாட்டியின் வயிறு லீலிபுஷ்பங்கள் சூழ்ந்து கோதுமை அம்பாரம்போலிருக்கிறது என்று மணவாளன் சொல்லுகிறார். மணவாட்டி மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறாள். கோதுமை தானியத்தினாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறாள். லீலிபுஷ்பங்கள் அழகானவை. கோதுமை நம்முடைய போஜனத்திற்கு உதவியாயிருப்பவை. சபையிலுள்ள ஒவ்வொரு அம்சமும் விசுவாசிகளுக்கு லீலி புஷ்பங்களைப்போல அழகாகவும், கோதுமை அம்பாரம்போல பிரயோஜனமாயும் இருக்கிறது.

சரீரத்தில் வயிற்றுப் பகுதியில்தான் ஜீரணம் நடைபெறுகிறது. வயிறு அழகாகயிருக்கிறது என்னும் வார்த்தை "விசுவாசிக்கு ஆவிக்குரிய போஜனம் நேர்த்தியாய்க் கிடைக்கிறது" என்பதைக் குறிப்பிடுகிறது. சபையிலுள்ள விசுவாசிகள் நேர்த்தியாகப் போஜனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் ஆரோக்கியமாயிருக்கிறது. சபையின் விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றவர்களாயிருக்கவேண்டும். இதுவே சபையின் அழகு.

கழுத்து
உன் 7:3-5

உன் 7:3. உன் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டைக் குட்டிகளுக்குச் சமானமாயிருக்கிறது.

உன் 7:4. உன் கழுத்து யானைத்தந்தத்தினால் செய்த கோபுரத்தைப்போலவும், உன் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப்போலவும், உன் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும் லீபனோனின் கோபுரத்தைப்போலவும் இருக்கிறது.

உன் 7:5. உன் சிரசு கர்மேல் மலையைப் போலிருக்கிறது; உன் தலைமயிர் இரத்தாம்பரமயமாயிருக்கிறது; ராஜா நடைக்காவணங்களில் மயங்கிநிற்கிறார்.

மணவாட்டியின் இரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரட்டைக்குட்டிகளுக்கு சமானமாயிருக்கிறது என்று மணவாளன் வர்ணிக்கிறார். இந்த வர்ணனை ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது (உன் 4:5). மணவாளன் மணவாட்டியின் கழுத்தை ஏற்கெனவே வர்ணித்தபோது "அது தாவீதின் கோபுரம் போலிருக்கிறது" என்று சொன்னார் (உன் 4:4). தாவீதின் கோபுரத்தில் பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுதசாலை இருக்கிறது.

இப்போது மணவாட்டியின் கழுத்து யானைத்தந்தத்தினால் செய்த கோபுரத்தைப்போல இருப்பதாக மணவாளன் சொல்லுகிறார். மணவாட்டியின் கழுத்து வெண்மை நிறத்தில், யானைத்தந்தம் போல வழவழப்பாகயிருக்கிறது. பரிசுத்தவான்களின் விசுவாசம் கழுத்துபோல இருக்கவேண்டும். கழுத்து சரீரத்தை தலையோடு இணைக்கிறது. கிறிஸ்துவாகிய தலையோடு விசுவாசிகளாகிய நாம் நம்முடைய விசுவாசத்தினால் இணைக்கப்படவேண்டும்.

மணவாட்டியின் கண்கள் எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்களைப்போல இருப்பதாக மணவாளன் சொல்லுகிறார். இவை இயற்கையான மீன் தடாகங்கள். இது எருசலேமிலுள்ள வாசலண்டையில் அல்லது எஸ்போனிலுள்ள வாசண்டையிலிருக்கிறது. இந்த இடம் எஸ்போனிலே பத்ரபீம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வாக்கியத்திற்கு "திரளான மக்களைப் பெற்ற குமாரத்தி" என்று பொருள். இந்த வாசல் ஒரு பெரும்பாதையைப் போலிருக்கிறது. சபையிலுள்ள விசுவாசியின் நோக்கங்கள், தெளிவாகயிருக்கவேண்டும். எஸ்போனிலே பத்ரபீம் வாசலண்டையிலிருக்கும் குளங்கள் பளிங்குபோல தெளிவாகயிருக்கும். அதுபோலவே விசுவாசிகளின் மனச்சாட்சியும் சுத்தமாயும் தெளிவாயும் இருக்கவேண்டும்.

மணவாட்டியின் மூக்கு தமஸ்குவின் திசையை நோக்கும் லீபனோனின் கோபுரத்தைப்போல இருக்கிறது என்று மணவாளன் சொல்லுகிறார். "கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன்" (ஏசா 50:7). சபையின் முகம் கற்பாறையைப்போல கடினமாயும், உறுதியாயும் இருக்கவேண்டும். நம்மிடத்தில் பரிசுத்தமான தைரியம் நிரம்பியிருக்கவேண்டும். லீபனோனின் கோபுரம் உறுதியாகயிருக்கும். அதுபோலவே விசுவாசிகளும் கர்த்தருக்குள் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும்.

லீபனோனின் கோபுரம் தமஸ்குவின் திசையை நோக்கியிருக்கிறது. தமஸ்கு சீரியா தேசத்தின் தலைநகரம். சீரியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சத்துருக்களாகயிருந்தார்கள். லீபனோனின் கோபுரமோ தன்னுடைய சத்துருவாகிய தமஸ்குவைத் தைரியமாய் நோக்கிப் பார்க்கிறது. கர்த்தருடைய சபையாரும் தங்கள் சத்துருவாகிய சாத்தானை தைரியமாக எதிர்க்கவேண்டும். அவனைத் தைரியமாய் நோக்கிப் பார்க்கவேண்டும். சத்துருவைப் பார்த்து பயந்துவிடக்கூடாது.

மணவாட்டியின் சிரசு கர்மேல் மலையைப்போலிருக்கிறது என்று மணவாளன் சொல்லுகிறார். விசுவாசியின் தலைகள் அவர்களுடைய சத்துருக்களைவிட உயர்ந்திருக்கவேண்டும். "இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும்; அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுவேன்" (சங் 27:6).

கர்மேல் மலையின் கீழே புயல்காற்று அடித்தாலும், கர்மேல் பர்வதம் அசையாது. அது பரலோகத்தை கெம்பீரமாய் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும். விசுவாசிகளாகிய நாமும் கர்மேல் மலையைப்போல கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எத்தனை பிரச்சனைகள், போராட்டங்கள் வெள்ளம் போலவும், புயல்காற்று போலவும் வந்தாலும், நாம் கர்மேல் மலையைப்போல அசையாமல் உறுதியாய் நிற்கவேண்டும்.

மணவாட்டியின் தலைமயிர் இரத்தாம்பரமயமாயிருக்கிறது என்று மணவாளன் சொல்லுகிறார். தலைமயிர் கலைந்திருக்கக்கூடாது. அது ஒழுங்காக படிந்திருக்கவேண்டும். விசுவாசிகளும் கர்த்தருடைய பார்வையில் பணிவுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கலந்த தலைமயிரைப்போல தாறுமாறாக ஜீவிக்கக்கூடாது.

தன்னை பரிசுத்தத்தினால் அலங்கரித்திருக்கிற சபை கர்த்தருடைய பார்வைக்கு அழகாயிருக்கிறது. கர்த்தரோ தம்முடைய கிருபையுள்ள வார்த்தையினால் சபையின் அழகைப் புகழ்ந்து பேசுகிறார். கர்த்தரின் புகழ்ச்சி சபையின் அழகை அதிகரிக்கிறது. கர்த்தர் தம்முடைய சபையைப் பார்ப்பதில் பிரியப்படுகிறார். ராஜா நடைக்காவணங்களில் மயங்கி நிற்கிறார். கர்த்தர் தம்முடைய சபையைப் பார்த்து, அதன் அழகில் திகைத்து நிற்கிறார். சபையின் பரிபூரணமான அழகை ரசித்துக் கொண்டிருக்கிறார். கர்த்தருக்கு தம்முடைய சபையைவிட்டு வேறு எங்கும் போகமனதில்லை. அவர் சபையின் நடைக்காவணங்களில் மயங்கி நிற்கிறார். அங்கு சபையிலுள்ள தம்முடைய விசுவாசிகளோடு ஐக்கியமாயிருக்கிறார்.

நீ எவ்வளவு ரூபவதி
உன் 7:6-9

உன் 7:6. மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே! நீ எவ்வளவு ரூபவதி, நீ எவ்வளவு இன்பமுள்ளவள்.

உன் 7:7. உன் உயரம் பனைமரத்தொழுங்கு போலவும், உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலவும் இருக்கிறது.

உன் 7:8. நான் பனைமரத்திலேறி, அதின் மடல்களைப் பிடிப்பேன் என்றேன்; இப்பொழுதும் உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போலவும், உன் மூக்கின் வாசனை கிச்சிலிப்பழங்கள்போலவும் இருக்கிறது.

உன் 7:9. உன் தொண்டை, என் நேசர் குடிக்கையில் மெதுவாயிறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளைப் பேசப்பண்ணுகிறதுமான, நல்ல திராட்சரசத்தைப்போலிருக்கிறது.

மணவாளன் தம்முடைய மணவாட்டியாகிய சபையின் அழகைப் பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கியிருக்கிறார். "மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே! நீ எவ்வளவு ரூபவதி, நீ எவ்வளவு இன்பமுள்ளவள்" என்று மணவாளன் ஆச்சரியத்தோடு கேட்கிறார். மணவாட்டி பிறக்கும்போது ரூபவதியாகப் பிறக்கவில்லை. கிறிஸ்துவானவர் தம்முடைய சபைக்குக் கொடுத்திருக்கிற அழகினால், சபையானது அழகு மிகுந்ததாகயிருக்கிறது.

தம்முடைய சபையோடு தொடர்ந்து ஐக்கியமாயிருக்கவேண்டுமென்று மணவாளன் தீர்மானம்பண்ணுகிறார். மணவாட்டியின் தோற்றத்தை பனை மரத்தோடு ஒப்பிடுகிறார். "உன் உயரம் பனைமரத்தொழுங்கு போலிருக்கிறது" என்று ஆச்சரியத்தோடு சொல்லுகிறார். பனைமரம் நேராக, உயரமாக, வலிமையாக இருப்பதுபோல, மணவாட்டியும் உயரமாகவும், வலிமையாகவும் இருக்கிறாள். பனைமரத்தில் ஏராளமான பனங்காய்கள் காய்த்து தொங்கும். அது பார்ப்பதற்கு மிகுந்த அழகோடிருக்கும். அதுபோலவே சபையும் அழகாகயிருக்கிறது. சபை பெருகியிருக்கும்போது அது சபைக்கு விசேஷித்த அழகு. சபைக்குத் துன்பம் பெருகும்போதும் அப்போதும் அது அழகாகவே இருக்கிறது. பனைமரத்தில் ஏராளமான மட்டைகள் விரிந்து பறந்திருக்கும். அது பனைமரத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியைக் காண்பிக்கிறது. அதுபோலவே சபையானது கிளைகள்விட்டு, பல சபைகளாகப் பிரிந்திருக்கும்போது, அதுவும் சபைக்கு மிகுந்த அழகாகயிருக்கிறது.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபையைப்பற்றிச் சொல்லும்போது, "நான் பனைமரத்திலேறி, அதின் மடல்களைப் பிடிப்பேன்" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவானவர் பனைமரத்தின் நிழலில் ஓய்வெடுக்க விரும்புகிறார். அதன் மடலைப் பிடித்து, அதன் அழகை ரசிக்கிறார்.

மணவாளன் தம்முடைய மணவாட்டியின் ஸ்தனங்களைத் திராட்சக்குலைகளுக்கு ஒப்பானவையாகக் காண்கிறார். திராட்சப்பழங்கள் பார்ப்பதற்கு அழகானவை. சுவைப்பதற்கு இனிமையானவை. மணவாட்டியின் ஸ்தனங்களைப்பற்றி தாம் ஏற்கெனவே சொன்னதை, மணவாளன் மறுபடியும் சொல்லுகிறார். "இப்பொழுதும் உன் ஸ்தனங்கள் திராட்சக்குலைகள் போல இருக்கிறது" என்று அதன் அழகை வர்ணிக்கிறார். திராட்சப்பழங்கள் மணவாளனுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

மணவாளன் பனைமரத்திற்கு வந்து, அந்த மரத்திலேறி, அதின் மடல்களைப் பிடிக்கிறார். மணவாட்டியினுடைய மூக்கின் வாசனை கிச்சிலிப்பழங்கள் போல இருக்கிறது. இது மனதிற்கு இன்பமாயிருக்கிறது. உள்ளத்திலிருக்கிற சோர்வுகளை நீக்குகிறது. இருதயத்தைப் புதுப்பிக்கிறது. மணவாட்டியின் தொண்டை நல்ல திராட்சரசத்தைப் போல இருக்கிறது. மணவாட்டி ஆவியினால் நிரம்பி, தேவனோடும், மனுஷரோடும் இன்பமான வார்த்தைகளைப் பேசுகிறாள். இந்த வார்த்தைகள் மணவாட்டியின் தொண்டையிலிருந்து புறப்பட்டு வருகிறது. மணவாட்டியின் வார்த்தைகள் மணவாளனுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

மணவாட்டியின் ஜெபம் மணவாளனுக்குப் பிரியமாயிருக்கிறது. நல்ல திராட்ச ரசத்தைக் குடிக்கும்போது அது தொண்டையில் மெதுவாயிறங்கும். அதுபோலவே தேவனுடைய ஆறுதலின் வார்த்தைகள், கிருபையுள்ள ஆத்துமாவிற்குள் மெதுவாக இறங்குகிறது. கிறிஸ்துவின் ஆவியானவர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் பிரசன்னமாயிருக்கிறார். அவர் ஜனங்களைப் புதுப்பிக்கிறார். ஜனங்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் தருகிறார்.

நல்ல திராட்சரசம் உறங்குகிறவர்களின் உதடுகளை பேசப்பண்ணும். மனந்திரும்பாத பாவிகள் உறங்குகிறவர்களைப் போலவே இருக்கிறார்கள். பரிசுத்தவான்கள்கூட தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் சோர்ந்துபோய் அரை தூக்கத்திலிருக்கிறார்கள். அரை மயக்கத்திலிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஆவியானவரும், அவருடைய வார்த்தையும் ஆத்துமாவுக்கு ஜீவனையும் பெலத்தையும் கொடுக்கிறது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது.

நான் என் நேசருடையவள் உன் 7:10

உன் 7:10. நான் என் நேசருடையவள், அவர் பிரியம் என்மேலிருக்கிறது.

சபையாகிய மணவாட்டி இந்த வார்த்தைகளைப் பேசுகிறாள். இது கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஆத்துமாவின் வார்த்தைகளாகும். மணவாட்டி கிறிஸ்துவோடு ஐக்கியமாகயிருக்கிறாள். இந்த ஐக்கியம் அவளுக்கு ஜெயஐக்கியமாகயிருக்கிறது. இந்த ஜெயத்தை நினைத்து அவள் மிகுந்த சந்தோஷத்தோடு இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறாள். மணவாட்டியின் வார்த்தைகளில் பரிசுத்தமுள்ளது.

"நான் என் நேசருடையவள்" என்று மணவாட்டி தன்னுடைய அன்பை வெளிப்படுத்துகிறாள். இனி அவள் அவளுக்குரியவளல்ல. அவள் தன்னை முழுவதுமாகவே தன்னுடைய நேசருக்கு அர்ப்பணித்துவிட்டாள். அவளுடைய நேசரே இப்போது அவளை பூரணமாய் ஆளுகை செய்கிறார். அவளை முழுவதுமாய் ஆட்கொள்கிறார்.

தான் தன்னுடைய நேசருடையவள் என்று மணவாட்டி சொல்லும்போது, இந்த வாக்கியம் அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இதில் அவள் மகிமைப்படுகிறாள். இனிமேல் அவள் தன்னுடைய நேசருக்கு மாத்திரமே உரியவள். தன் நேசரை மாத்திரமே அவள் சேவிப்பாள். இந்த வார்த்தைகளினால் மணவாட்டி தன்னை ஆறுதல் படுத்துகிறாள்.

மணவாளனின் பிரியம் மணவாட்டியின் மேலிருக்கிறது. தாம் தெரிந்துகொண்ட ஜனத்தின்மீது கர்த்தர் பிரியமாயிருக்கிறார். கர்த்தர் பரலோகத்திலிருந்து இந்தப் பூமிக்கு வந்து, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத் தேடிக்கண்டுபிடித்து, அவர்களை இரட்சிக்கிறார். இது விசுவாசிகளுக்கு ஆறுதலான சத்தியம். யாரெல்லாம் தங்களை கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கிறார்களோ, அவர்கள் எல்லோரையும் கிறிஸ்துவானவர் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார். கிறிஸ்துவின் பிரியம் தமக்குச் சொந்தமானவர்கள் மேலிருக்கிறது. கிறிஸ்து தம்முடைய ஜனத்தின்மீது வைத்திருக்கிற பிரியத்தினால் அவர் மறுபடியும் பரலோகத்திலிருந்து பூமிக்குத் திரும்பி வருவார். தம்முடைய பிள்ளைகளை மறுபடியுமாக தம்மிடத்திலே கூட்டிச் சேர்த்துக்கொள்வார்.

வாரும் என் நேசரே உன் 7:11

உன் 7:11. வாரும் என் நேசரே! வயல்வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனோடு ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். தன்னுடைய விருப்பத்தை மிகுந்த மனத்தாழ்மையோடு அவரிடத்தில் சொல்லுகிறாள். "வாரும் என் நேசரே" என்று தன்னுடைய மணவாளனை அன்போடு அழைக்கிறாள். தாங்கள் இருவரும் இணைந்து நடக்கவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள். மணவாட்டி தன்னுடைய மணவாளனோடு கூட நடக்கும்போது, அவருடைய ஆலோசனைகளையும், புத்திமதிகளையும், ஆறுதல்களையும், வழிநடத்துதல்களையும் பெற்றுக்கொள்ள முடியும். தன்னுடைய மனதிலுள்ள ஏக்கங்களையும், துக்கங்களையும், விருப்பங்களையும் மணவாட்டியால் மணவாளனிடம் சொல்ல முடியும். இருவரும் சேர்ந்து ஒன்றாய் நடக்கும்போது, அவர்களுக்கு இடையில் யாரும் இருக்கமாட்டார்கள். மணவாட்டி தன் மணவாளனோடு எந்தவித தடையுமில்லாமல் தாராளமாய்ப் பேசலாம்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, எம்மாவு என்னும் ஊருக்குப் போகிற வழியிலே, தம்முடைய சீஷர்கள் இருவரோடு நடந்துபோனார். அவர்களோடு நடக்கும் போது, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவானவர், அவர்களோடு பேசிக்கொண்டே போனார். அப்போது அவர்களுடைய இருதயங்கள் அவர்களுக்குள் கொழுந்துவிட்டு எரிந்தது. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் நம்முடைய இருதயத்தைச் சென்றடையும் போது, அது கொழுந்துவிட்டு எரியும்.

மணவாட்டி தன் மணவாளனோடு வயல்வெளிகளுக்கும், கிராமங்களுக்கும் போகவேண்டுமென்று விரும்புகிறாள். "வயல்வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம்" என்று சொல்லுகிறாள். அங்கு தன்னுடைய மணவாளனோடு அவளால் நெருங்கிய ஐக்கியத்திலிருக்க முடியும். கிறிஸ்துவோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க விரும்புகிறவர்கள், பரபரப்பான இந்த உலகத்தைவிட்டு, சற்று அமைதியான இடங்களுக்குப் போகவேண்டும். ஆரவாரமில்லாத, சந்தடியில்லாத இடங்களில் கர்த்தரோடு தனிமையிலிருக்கவேண்டும்.

நம்முடைய மனதை திசை திருப்பும் எந்தக் காரியமும் நம்முடைய ஜெபத்திற்குத் தடையாகயிருக்கக்கூடாது. நமக்கும் கிறிஸ்துவும் இடையில் வேறு எந்த தடையும், தொந்தரவும் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட இடங்களில் நம்மால் கிறிஸ்துவோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க முடியும்.

திராட்சத்தோட்டங்கள்
உன் 7:12

உன் 7:12. அதிகாலையிலே திராட்சத் தோட்டங்களுக்குப் போவோம்; திராட்சக்கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ என்றும், மாதளஞ்செடிகள் பூப்பூத்ததோ என்றும் பார்ப்போம்; அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனிடம், "அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம்" என்று கூப்பிடுகிறாள். தன்னுடைய நேசரோடு இன்னும் நெருங்கிய ஐக்கியத்திலிருக்கவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள். மணவாளனோடு ஐக்கியமாகயிருப்பதற்கு உதவியாயிருக்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கிறாள். வயல்வெளிகளுக்கும், கிராமங்களுக்கும் போனாலே போதுமானது. அங்கே அவளால் தன்னுடைய நேசரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க முடியும். மணவாளனின் பிரசன்னமே அவளுக்கு சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுக்கும்.

கிறிஸ்துவின் பிரசன்னம் சபைக்கு மனமகிழ்ச்சியையும், தெம்பையும், சந்தோஷத்தையும் கொடுக்கும். நாம் எந்த சூழ்நிலையிலிருந்தாலும், நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவோடு நெருக்கமாயிருக்க வேண்டும். நாம் இருக்கும் சூழ்நிலையிலேயே தேவனோடு ஐக்கியமாயிருக்க பழகிக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவோடு கூடயிருப்பதே நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம்.

மணவாட்டியோ வயல்வெளியையும், கிராமங்களையும்விட இன்னும் நெருக்கமான இடத்தில், தன்னுடைய நேசரோடு அதிக நெருக்கமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறாள். தன்னுடைய ஆத்துமாவை தன் நேசரிடத்தில் ஊற்றவேண்டுமென்று பிரியப்படுகிறாள். இதற்காக "திராட்சத்தோட்டங்களுக்கு அதிகாலையில் போவோம் வாருங்கள்" என்று மணவாட்டி தன்னுடைய மணவாளனை அன்போடு அழைக்கிறாள். அங்கு திராட்சக்கொடி துளிர்த்து, அதின் பூ மலர்ந்ததோ என்று பார்ப்போம் என்று சொல்லுகிறாள்.

நம்முடைய சொந்த ஆத்துமாக்களே நம்முடைய திராட்சத்தோட்டங்களாக யிருக்கிறது. இந்த திராட்சத்தோட்டங்களுக்கு நாம் காவற்காரர்களாகவும், வேலையாட்களாகவும் இருக்கிறோம். நம்முடைய பொறுப்பிலிருக்கும் திராட்சத்தோட்டத்தை அடிக்கடி கவனிக்கவேண்டும். அதைச் சோதித்துப் பார்க்கவேண்டும். அதன் தேவையை சந்திக்கவேண்டும். நம்முடைய சொந்த ஆத்துமாவை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்து, அதை நன்றாய் பராமரிக்கவேண்டும். திராட்சக்கொடி துளிர்த்திருக்கிறதா என்பதையும், அதின் பூ மலர்ந்திருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்முடைய ஆத்துமாவில் நீதியின் கனிகள் முளைக்கவேண்டும்.

திராட்சக்கொடியில் பூ மலர்ந்தால் மாத்திரம் போதாது. அது பிஞ்சு விடவேண்டும். கனிகொடுக்கவேண்டும். திராட்சத்தோட்டத்திலே மாதுளஞ்செடிகளும் இருக்கிறது. அவைகளும் பூ பூத்ததோ என்று போய்ப்பார்ப்போம் என்று மணவாட்டி தன்னுடைய மணவாளனை அழைக்கிறாள். திராட்சக்கொடிகளும், மாதுளஞ்செடிகளும் பசுமையாகவும், இளமையாகவும், மொட்டாகவும், மலராகவும் இருக்கும்போதே, அவற்றைப் போய்ப்பார்த்து பராமரிக்க வேண்டும். அதிகக் கவனம் செலுத்தி அவற்றைப் பாதுகாக்கவேண்டும்.

திராட்சக்கொடிகள் நற்கனிகளைக் கொடுப்பதற்கும், மாதளஞ்செடிகளில் நல்ல பழங்கள் பழுப்பதற்கும், நாம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். நம்மை நாமே சோதித்துப் பார்ப்பது நமக்கு நல்லது. பரிசுத்த ஆவியானவரும் நம்மைச் சோதித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய ஆவியையும் ஆத்துமாவையும் சோதித்துப் பார்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிபுரிவார். நம்மை நாமே நிதானித்து அறியவேண்டும்.

அதிகாலையிலே திராட்சத் தோட்டங்களுக்குப் போவோம் என்று மணவாட்டி தன் மணவாளனை அன்போடு அழைக்கிறாள். அங்கே தன்னுடைய நேசத்தின் உச்சிதங்களை மணவாளனுக்குத் தருவதாக வாக்குப்பண்ணுகிறாள்.

என் நேசர் உன் 7:13

உன் 7:13. தூதாயீம் பழம் வாசனை வீசும்; நமது வாசல்களண்டையிலே புதியவைகளும் பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு; என் நேசரே! அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன்.

மணவாளன் அதிகாலையிலே தன்னோடு திராட்சத்தோட்டத்திற்கு வந்தால், தான் அவர்மீது மிகுந்த அன்பாயிருக்கப்போவதாகவும், அவரை நன்றாகக் கவனித்துக்கொள்ளப்போவதாகவும் மணவாட்டி வாக்குப்பண்ணுகிறாள். நம்முடைய நேசர் நமக்குள் பிரவேசிக்கும்போது அவர் நம்மோடுகூட போஜனம்பண்ணுகிறார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி 3:20).

மணவாட்டி தன்னுடைய நேசத்தின் உச்சிதங்களை, தன்னுடைய மணவாளனுக்குத் தருவதாக வாக்குப்பண்ணுகிறாள். தன்னுடைய மேன்மையான பராமரிப்புக்களை தன் மணவாளனுக்குத் தருவதாகவும் மணவாட்டி வாக்குப்பண்ணுகிறாள். திராட்சத் தோட்டத்திலே தூதாயீம் பழம் வாசனை வீசும். அவை நறுமணத்தைக் கொடுக்கும். திராட்சத்தோட்டத்திலே நாவுக்கு சுவையான நல்ல போஜனமும் இருக்கிறது. கண்களின் பார்வைக்கு இனிமையான மலர்களும் இருக்கிறது.

"நமது வாசல்களண்டையில் புதியவைகளும், பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு" என்று மணவாட்டி தன் மணவாளனுக்குச் சொல்லுகிறாள். நாம் வெளிப்படுத்துகிற ஆவியின் கனி நம்முடைய கர்த்தருக்கு மிகவும் பிரியமானது. நாம் கர்த்தர்மீது விசுவாசம் வைத்து நன்மை செய்யவேண்டும். இதை கர்த்தர் விரும்புகிறார். நாம் நற்கனிகளைக் கொடுக்கவேண்டுமென்றும், நற்கிரியைகளைச் செய்யவேண்டுமென்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரியப்படுகிறார்.

நாம் செய்கிற எல்லா நற்கிரியைகளும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நம்முடைய நற்கனிகளெல்லாம் தேவனுடைய ஊழியத்திற்குப் பயன்படவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்களாகவும் இருக்க வேண்டும். பிரயோஜனமானவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய எப்போதுமே ஆயத்தமாயிருக்க வேண்டும். சகலவித அருமையான கனிகளும் வாசல்களண்டையில், நம்முடைய நேசரைப் பிரியப்படுத்த ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கனிகளில் வித்தியாசமுண்டு. வகை வகையான கனிகள் உண்டு. இவையெல்லாமே அருமையான கனிகள். நம்முடைய ஆத்துமாவில் சகலவித அருமையான கனிகளும் சேமித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லா சூழ்நிலைகளுக்கும் தேவையான கிருபைகள் நம்மிடத்தில் தாராளமாயிருக்க வேண்டும். கிறிஸ்துவை மெய்யாகவே நேசிக்கிறவர்கள், தங்களிடத்தில் அருமையான கனிகள் உள்ளதை அங்கீகரிப்பார்கள். தங்களிடத்தில் உள்ள கனிகளை, கிறிஸ்துவுக்கு மனப்பூர்வமாய் அர்ப்பணிப்பார்கள்.

திராட்சத்தோட்டத்திலே சகலவித அருமையான கனிகள் உண்டு என்றும், "அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன்" என்றும் மணவாட்டி தன்னுடைய மணவாளனுக்குச் சொல்லுகிறாள். மணவாட்டியிடம் உள்ளது எல்லாமே மணவாளனுக்குரியது. "நான் என் நேசருடையவள்" என்றும், "அவர் பிரியம் என்மேலிருக்கிறது" என்றும் சொல்லி மணவாட்டி ஏற்கெனவே தன்னை தன்னுடைய மணவாளனுக்கு முழுமையாய் அர்ப்பணித்திருக்கிறாள். சபையாரும் தங்களை, தங்களுடைய மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு பூரணமாய் அர்ப்பணிக்கவேண்டும். "நாங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்" என்றும், "அவர் பிரியம் எங்கள் மேலிருக்கிறது" என்றும் சபையார் விசுவாசத்தோடு அறிக்கை செய்யவேண்டும்.

8 அதிகாரம்

கிறிஸ்துவுக்கும் அவருடைய சபையாகிய மணவாட்டிக்கும் இடையேயுள்ள அன்பும் நேசமும் உன்னதப்பாட்டு புஸ்தகத்தின் கடைசி அதிகாரத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மணவாட்டி தன்னுடைய மணவாளனோடு இன்னும் அதிக நெருக்கமான, அந்நியோன்னியமான ஐக்கியத்தில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறாள் (உன் 8:1-3). தன்னுடைய நேசரோடு தான் ஐக்கியமாயிருக்கும்போது, எருசலேமின் குமாரத்திகள் தங்களை தொந்தரவு பண்ணக்கூடாது என்று மணவாட்டி அவர்களுக்கு ஆணையிட்டுச் சொல்லுகிறாள் (உன் 8:4). மணவாட்டி தன்னுடைய மணவாளன்மீது நெருங்கிய ஐக்கியத்திலிருப்பதைப் பார்த்து எருசலேமின் குமாரத்திகள் மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள்.

மணவாளன் தம்முடைய கிருபையினால், தன்மீது வைத்திருக்கிற அன்பை உறுதிபண்ணவேண்டுமென்று, மணவாட்டி மணவாளனிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறாள் (உன் 8:6,7). மணவாட்டி தன்னுடைய மணவாளனிடம் மற்றவர்களுக்காகவும் பரிந்து பேசுகிறாள். மணவாளன் அவர்களையும் பராமரிக்கவேண்டுமென்று மணவாட்டி விண்ணப்பம்பண்ணுகிறாள் (உன் 8:8,9).

பாகால் ஆமோனிலே மணவாளனுக்கு ஒரு திராட்சத்தோட்டமுள்ளது. அந்தத் தோட்டத்திற்கு மணவாட்டி தன்னைக் காவலாளியாக ஒப்புக்கொடுக்கிறாள் (உன் 8:11,12). உன்னதப்பாட்டு புஸ்தகத்தின் முடிவில் மணவாளனும் மணவாட்டியும் ஒருவருக்கொருவர் தங்களுடைய அன்பையும், நேசத்தையும் பரிமாறிக்கொள்கிறார்கள். மணவாளன் தம்முடைய மணவாட்டியின் சத்தத்தை அடிக்கடி கேட்கவேண்டுமென்று விரும்புகிறார் (உன் 8:13). மணவாளன் தன்னிடத்தில் தீவிரமாய்த் திரும்பி வரவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள் (உன் 8:14).

என் சகோதரன்
உன் 8:1

உன் 8:1. ஆ, நீர் என் தாயின் பால்குடித்த என் சகோதரனைப் போலிருந்தீரானால், நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன்; என்னை நிந்திக்கவுமாட்டார்கள்.

மணவாட்டி தன்னுடைய மணவாளனோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறாள். சபை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விடுதலையோடு ஆராதிக்க வேண்டுமென்று விரும்புகிறது. மணவாட்டி தன்னுடைய மணவாளனுக்கு அருகில் இருக்கும்போது சற்று வெட்கப்படுகிறாள். இதனால் அவள் தன் மணவாளனிடமிருந்து சற்று தூரத்தில் விலகியே இருக்கிறாள். மணவாளன் தன்னை மணவாட்டியாகப் பாவிக்காமல், சகோதரியாகப் பாவித்தால், தன்னுடைய வெட்கம் நீங்கிப்போய்விடும் என்று எதிர்பார்க்கிறாள்.

ஒரு சகோதரி தன் சகோதரனிடம் நெருங்கிப் பழகுவதுபோல, மணவாட்டியும் தன்னுடைய மணவாளனோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கவேண்டுமென்று விரும்புகிறாள். சகோதரனுக்கும் சகோதரிக்கும் இடையேயுள்ள அன்பு தூய்மையானது. கற்புள்ளது. கள்ளம் கபடமில்லாதது. எல்லா விசுவாசிகளுமே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு, பரிசுத்தமான ஐக்கியத்தில் நெருங்கியிருக்கவேண்டும்.

ஒரு சகோதரி தன் சகோதரனோடு நெருங்கியிருக்கும்போது, அவளை யாரும் நிந்திக்கமாட்டார்கள். விசுவாசிகள் தங்களுடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிப்பைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பரிசுத்த ஐக்கியத்தில் கிறிஸ்துவானவர் விசுவாசிகளுடைய சகோதரராகயிருப்பார். நாமும் அவருடைய சகோதரர்களாயிருப்போம். நாம் கிறிஸ்துவுக்கு சகோதரராயிருக்கும்போது, கிறிஸ்துவானவருடைய கிருபையினால், அவருடைய தெய்வீக சுபாவத்திற்கு பங்காளிகளாகவும் இருப்போம்.

"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்: உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்; நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்" (எபி 2:11-13).

இப்போது மணவாட்டி தன்னுடைய மணவாளனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறாள். மணவாளன் தன்னுடைய சகோதரனாயிருக்கும்போது, தன்னுடைய ஐக்கியம் இதைவிட நெருக்கமாயிருக்கும் என்று மணவாட்டி வாக்குப்பண்ணுகிறாள். "நான் உம்மை வெளியிலே சந்தித்து முத்தமிடுவேன்" என்று சொல்லுகிறாள். "வெளியிலே" என்னும் வார்த்தைக்கு, "எல்லா இடங்களிலும்" என்றும், "எல்லோருக்கும் முன்பாகவும்" என்றும் பொருள்படும். ஒரு சகோதரி தன்னுடைய சகோதரனை முத்தமிடுவதுபோல, மணவாட்டி தன்னுடைய மணவாளனை எல்லோருக்கும் முன்பாக முத்தமிட ஆயத்தமாயிருக்கிறாள்.

கிறிஸ்துவானவர் இந்த உலகத்தில் மனிதராக அவதரித்தார். அவர் மனுஷசாயலைப் பெற்றுக்கொண்டு, இந்தப் பூமியிலே நம்மைப்போல ஒரு மனுஷரானார். சபையானது கிறிஸ்துவிடம் ஐக்கியமாயிருக்கவேண்டும். இதற்கு முன்பு இருந்ததைவிட, இப்போது கிறிஸ்துவைத் தனக்கு அதிக சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும்.

மேசியா இந்த உலகத்தில் வருவதற்கு முன்பாக யூதர்கள் அவரை ஆவலாய் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தார்கள். மேசியாவை விசுவாசிக்காதவர்களோ, விசுவாசிக்கிறவர்களையும், மேசியாவையும் ஏளனம்பண்ணினார்கள். இப்போதோ எதிர்பார்த்த மேசியா வந்துவிட்டார். அவருக்காக காத்திருந்த கர்த்தருடைய பிள்ளைகள், முன்பு அவர்மீது அன்புகூர்ந்ததைவிட, இப்போது அவர்மீது இன்னும் அதிகமாய் அன்புகூரவேண்டும்.

கிறிஸ்துவானவர் நம்முடைய சகோதரராயிருக்கிறார். அவரை நாம் எங்கே பார்த்தாலும், அங்கே அவர்மீது நாம் வைத்திருக்கிற நம்முடைய அன்பை வெளிப்படுத்தவேண்டும். எல்லா இடங்களிலும் அவரோடு ஐக்கியமாயிருக்க நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். தன்னுடைய மணவாளன் தனக்கு ஒரு சகோதரனைப்போல இருக்கவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள். மணவாட்டி தன்னுடைய விருப்பத்தைச் சொல்லும்போது "ஆ, நீர் என் தாயின் பால்குடித்த என் சகோதரனைப்போலிருந்தீரானால்" என்று சொல்லுகிறாள்.

தாயின் வீடு
உன் 8:2

உன் 8:2. நான் உம்மை கூட்டிக்கொண்டு, என் தாயின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவேன்; நீர் என்னைப் போதிப்பீர், கந்தவர்க்கமிட்ட திராட்சரசத்தையும், என் மாதளம்பழரசத்தையும் உமக்குக் குடிக்கக்கொடுப்பேன்.

மணவாளன் தன்னுடைய சகோதரனாகயிருக்கும்போது, அவரோடு இன்னும் நெருங்கிய ஐக்கியத்திலிருப்பதற்கு தனக்கு வாய்ப்பு உண்டாகும் என்று மணவாட்டி வாக்குப்பண்ணுகிறாள். ஒரு சகோதரி தன்னுடைய சகோதரனை அழைத்துக்கொண்டு போவதுபோல, "நான் உம்மைக் கூட்டிக்கொண்டு, என் தாயின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோவேன்" என்று சொல்லுகிறாள். தாயின் வீடு என்பது கிறிஸ்துவின் சபையைக் குறிக்கிற வார்த்தை. இங்கு கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தேவனுடைய பிரசன்னத்தில் ஒன்றுகூடி வருகிறார்கள்.

சபையைக் குறிப்பதற்கு "தாயின்வீடு" என்னும் வார்த்தையை மணவாட்டி ஏற்கெனவே பயன்படுத்தியிருக்கிறாள். "நான் அவர்களை விட்டுக் கொஞ்சதூரம் கடந்துபோனவுடனே, என் ஆத்தும நேசரைக் கண்டேன்; அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்" (உன் 3:4).

மணவாளன் தம்முடைய சபையிலே தம்முடைய மணவாட்டிக்குப் போதிப்பார். கிறிஸ்துவின் பிரசன்னத்தில், அவருடைய சபையில் கூடிவந்திருக்கிற எல்லா விசுவாசிகளுக்கும், கிறிஸ்துவின் வார்த்தை போதிக்கப்படும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவருடைய நியமங்களைப் பற்றிச் சொல்லப்படும். மணவாளன் தனக்குப் போதிக்கவேண்டுமென்று மணவாட்டியும் விரும்புகிறாள், எதிர்பார்க்கிறாள். "நீர் என்னைப் போதிப்பீர்" என்று வாஞ்சையோடு சொல்லுகிறாள்.

மணவாட்டி தன்னிடத்திலுள்ள நேர்த்தியானவைகளை தன்னுடைய மணவாளனுக்குக் கொடுப்பதாக வாக்குப் பண்ணுகிறாள். அவரை வரவேற்கிறாள். "கந்தவர்க்கமிட்ட திராட்சரசத்தையும், என் மாதளம் பழரசத்தையும் உமக்கு குடிக்கக்கொடுப்பேன்" என்று அன்போடு சொல்லுகிறாள். மணவாட்டி தன்னுடைய மணவாளனை அன்போடு வரவேற்கிறாள்.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற கிருபைகளைப் பயன்படுத்தவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கடமைகளை சரியாய் செய்து முடிக்கவேண்டும். இதுவே தேவனுக்குப் பிரியமானது. திராட்சரசம், மாதளம்பழரசம் ஆகியவை நம்முடைய நற்கிரியைகளையும், சாட்சியுள்ள ஜீவியத்தையும், ஜெபத்தையும் குறிக்கிற வார்த்தைகளாகும். நாம் கர்த்தருடைய சமுகத்திலே வெறுங்கையோடு போகக்கூடாது. துதிகளோடும், ஸ்தோத்திரங்களோடும், நற்கிரியைகளோடும் அவருக்கு முன்பாக நிற்கவேண்டும்.

எருசலேமின் குமாரத்திகளே உன் 8:3,4

உன் 8:3. அவர் இடதுகை என் தலையின் கீழிருக்கும், அவர் வலதுகை என்னை அணைக்கும்.

உன் 8:4. எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்க உங்களை ஆணையிடுகிறேன்.

மணவாளன் தன்மீது அன்பாகயிருக்கிறார் என்பதில் மணவாட்டி உறுதியாயிருக்கிறாள். இதில் மணவாட்டிக்கு சிறிதும் சந்தேகமில்லை. மணவாளனுடைய வல்லமை மணவாட்டிக்கு ஆறுதலைக் கொடுக்கிறது. அவருடைய வல்லமை அவளைத் தாங்குகிறது. அவளை அணைத்துக்கொள்கிறது. மணவாளனுடைய இடதுகை மணவாட்டியின் தலையின் கீழிருக்கிறது. அவருடைய வலதுகை அவளை அணைத்துக்கொள்கிறது. இந்த நேசத்தினால் மணவாட்டி ஆறுதலடைந்திருக்கிறாள்.

நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும்போது, அவருடைய வலதுகரம் நம்மைத் தாங்கிக்கொள்ளும். "என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது; உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது" (சங் 63:8). கர்த்தருடைய கரம் பெலமானது. அது நித்தியபுயம். கர்த்தருடைய நித்தியபுயத்தின் கீழ் ஆறுதல் பெறுகிறவர்கள் சந்தோஷமாயும், சமாதானமாயும் இருப்பார்கள். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு அவருடைய நித்திய புயமே ஆதாரம்.

மணவாட்டி தன்னுடைய தாயின் வீட்டில், மணவாளனோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறாள். தங்களுடைய ஐக்கியத்திற்கு எருசேலமின் குமாரத்திகள் இடையூறாக இருக்கக்கூடாது என்று அவர்களுக்கு ஆணையிடுகிறாள். சபையானது விசுவாசிகளெல்லோருக்கும் பொதுவான தாயைப்போல இருக்கிறது. சபையில் கிறிஸ்துவின் பிரசன்னம் இருக்கவேண்டும். அவர் நம்மோடுகூட இருப்பதுதான் நமக்கு ஆசீர்வாதம். நம்முடைய பாவத்தினாலும், அவிசுவாசத்தினாலும், முரட்டாட்டத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும் நம்முடைய சமுகத்திலிருந்து கிறிஸ்துவின் பிரசன்னத்தை புறம்பே தள்ளிவிடக்கூடாது.

நம்முடைய பொதுவான தாயாகிய சபையானது, இந்த விஷயத்தில் நம்மை எச்சரித்துச் சொல்லுகிறது. மணவாட்டியும், எருசலேமின் குமாரத்திகளிடம் "எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலும் இருக்க உங்களை ஆணையிடுகிறேன்" என்று சொல்லுகிறாள்.

இவள் யார்
உன் 8:5

உன் 8:5. தன் நேசர்மேல் சார்ந்துகொண்டு வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்? கிச்சிலி மரத்தின்கீழ் உம்மை எழுப்பினேன்; அங்கே உமது தாய் உம்மைப் பெற்றாள்; அங்கே உம்மைப் பெற்றவள் வேதனைப்பட்டு உம்மைப் பெற்றாள்.

மணவாட்டியைச் சுற்றிலுமிருக்கிற எருசலேமின் குமாரத்திகள் அவளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் இந்த வாக்கியம் அடைப்புக் குறிக்குள் எழுதப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தின் கிருபையினால் இந்த அடைப்புக்குறி நீக்கப்பட்டிருக்கிறது. அடைப்புக்குறிக்குள் இரகசியமாகப் புதைக்கப்பட்டிருக்கிற மறைபொருள்கள் எல்லாம், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் வெளியரங்கமாகிறது.

எருசலேமின் குமாரத்திகள் மிகுந்த ஆச்சரியத்தோடு "தன் நேசர்மேல் சார்ந்துகொண்டு வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார்" என்று ஆச்சரியத்தோடு கேட்கிறார்கள். எருசலேமின் குமாரத்திகள் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். மணவாட்டி அவர்களோடு பேசினாள். அவர்களும் மணவாட்டியைப் பார்த்தார்கள். இப்போது எருசலேமின் குமாரத்திகள் மணவாட்டியை ஆசீர்வதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்கள். தேவனுடைய தெய்வீக வல்லமையினாலும், அவருடைய கிருபையினாலும் இஸ்ரவேல் புத்திரர் வழிநடத்தப்படுகிறார்கள். பாதுகாக்கப் படுகிறார்கள். பராமரிக்கப்படுகிறார்கள்.

"கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம். பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தரவெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார்; அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறது போல, கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை" *(உபா 32:9-12)*.

கிறிஸ்துவின் சபையானது ஒரு தாழ்மையான நிலைமையிலிருந்து, உயர்ந்த நிலைமைக்கு உயர்த்தப்படுகிறது. நம்முடைய ஆரம்பம் அற்பமாயிருந்தாலும், கிறிஸ்துவானவருடைய கிருபையினால், நம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும்.

"அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப்பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிக பிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது" *(கலா 4:27)*.

ஒவ்வொரு விசுவாசியுமே ஆச்சரியமானவர்கள். அதிசயமானவர்கள். தேவனுடைய தெய்வீக கிருபை அவர்களுக்குள் கிரியை நடப்பிக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகளை ஆளுகை செய்கிறார். ஆட்கொள்கிறார். இதனால் சாதாரணமான ஜனங்கள்கூட ஆச்சரியமானவர்களாகவும், அதிசயமானவர் களாகவும் மாற்றப்படுகிறார்கள்.

விசுவாசிகள் வனாந்தரம் போன்ற இடங்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் தங்கள் நேசராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் சார்ந்துகொண்டு, பயபக்தியோடும், விசுவாசத்தோடும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருகிறார்கள். கர்த்தருடைய கரம் விசுவாசிகளை கரம்பிடித்து வழிநடத்துகிறது. கர்த்தருடைய கரமே நமக்குப் பாதுகாப்பு. அவருடைய கரமே நமக்கு ஆறுதல்.

நம்முடைய ஆத்துமா, கிறிஸ்துவின்மேல் சார்ந்திருக்கவேண்டும். அவரே நம்முடைய ஆத்துமாவின் நேசர். கிறிஸ்துவானவர் நம்முடைய ஆத்துமாவிற்குள் வாசம் பண்ணுவதுதான், நம்முடைய ஆத்துமாவுக்கு அழகு. நம்முடைய ஆத்தும நேசர் நமக்குள் வாசம்பண்ணும்போது, தேவனுடைய தெய்வீக கிருபைகள், நம்மூலமாக அற்புதங்களையும், அதிசயங்களையும் நடப்பிக்கும். நாம் அதிசயமானவர்களாகவும், அற்புதமானவர்களாகவும் இருப்போம். நாம் வனாந்தரத்திலிருந்து வந்தவர்களாகயிருந்தாலும், நாம் பரலோகத்திற்குப் போகிறவர்களாக யிருக்கிறோம். ஆரம்பம் அற்பமாகயிருந்தாலும், முடிவு சம்பூரண மகிமையாயிருக்கிறது.

மணவாட்டி தன்னுடைய மணவாளனோடு பேசுகிறாள். தன் மணவாளனோடு இதற்கு முன்பு, தனக்கு உண்டாயிருந்த அனுபவங்களையெல்லாம் நினைத்து, மணவாட்டி மிகுந்த ஆறுதலடைகிறாள். மணவாளன் மூலமாய் மணவாட்டிக்கும் ஆறுதல் உண்டாயிற்று. மணவாட்டியோடு கூடயிருந்தவர்களுக்கும் ஆறுதல் உண்டாயிற்று.

"கிச்சிலி மரத்தின்கீழ் உம்மை எழுப்பினேன்" என்று மணவாட்டி சொல்லுகிறாள். இந்த வாக்கியத்திற்கு, "நான் பல சமயங்களில் உம்மோடு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் போராடி ஜெயித்தேன்" என்பது பொருளாகும்.

மணவாட்டி கிச்சிலி மரத்தின்கீழ் தனிமையில் அமர்ந்து, தன் மணவாளனைப் பற்றித் தியானித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய தியானத்தோடு ஜெபமும் சேர்ந்திருந்தது. தனக்கு உதவி செய்யுமாறும், ஆறுதல் பண்ணுமாறும் மணவாட்டி தன்னுடைய மணவாளனிடம் ஜெபம்பண்ணினாள்.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஒரு சமயம் படவிலே, கடற்பிரயாணம் மேற்கொண்டார்கள். அப்போது பலத்த சுழல்காற்று உண்டாயிற்று. படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதிற்று. இயேசுகிறிஸ்து கப்பலின் பின்னணியத்தில் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரை எழுப்பி, "போதகரே நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா" என்று சொன்னார்கள் (மாற் 4:38). சீஷர்களைப்போலவே நாமும் நம்முடைய ஜெபத்தின் மூலமாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை எழுப்புகிறோம். இதுபோலவே மணவாட்டி கிச்சிலி மரத்தின்கீழ் தன்னுடைய ஆத்தும நேசரை எழுப்பினாள்.

இயேசுகிறிஸ்துவில் நமக்கு ஆறுதலும், ஆசீர்வாதமும் உண்டாயிருப்பது போல, அவரை விசுவாசிக்கிற எல்லோருக்குமே ஆறுதலும் ஆசீர்வாதமும் கிடைக்கும். மணவாட்டி தன்னுடைய ஆத்தும நேசரை கிச்சிலி மரத்தின்கீழ் எழுப்பி, அவருடைய ஆறுதலையும், ஐக்கியத்தையும் பெற்றுக்கொண்டாள். மணவாட்டியைப் போலவே, மணவாளன்மீது அன்பும், நேசமும், ஐக்கியமும் வைத்திருக்கிற எல்லோருக்கும் ஆறுதலும் ஆசீர்வாதமும் கிடைக்கும்.

"அங்கே உமது தாய் உம்மைப் பெற்றாள்" என்று மணவாட்டி சொல்லுகிறாள். தாய் என்னும் வாக்கியம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லா ஆத்துமாக்களையும் குறிக்கும் பொதுவான வார்த்தை. இது பொதுவான உலக சபையைக் குறிக்கிறது. அங்கு கிறிஸ்துவானவர் விசுவாசிகளிடத்தில் உருவாகுகிறார். "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" (கலா 4:19).

நம்முடைய பாவங்களினால் நாம் உணர்த்தப்பட்டு, நம்முடைய உள்ளம் வேதனையடையவேண்டும். பாவத்தினிமித்தம் கர்ப்பவேதனைப்படும்போதுதான் கிறிஸ்து நமக்குள் உருவாகுவார். வேதனைப்படுகிறவர்கள்தான் ஆறுதலைப் பெற்றுக்கொள்வார்கள். குழந்தை பிறக்கும்போது ஸ்திரீயானவள் தன் வேதனையை மறந்துவிடுவாள். பிறந்த குழந்தையைப் பார்த்து சந்தோஷப்படுவாள். அதுபோலவே கிறிஸ்து நமக்குள் உருவாகும்போது, நம்முடைய பாவத்தினாலும், குற்றவுணர்வுகளினாலும் உண்டான வேதனை நம்மை விட்டு நீங்கிப்போகும். கிறிஸ்துவினால் உண்டாகும் ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும், ஆசீர்வாதமும் நமக்குள் பெருகும்.

மணவாட்டி இதைப்பற்றிச் சொல்லும்போது "அங்கே உம்மைப்பெற்றவள் வேதனைப்பட்டு உம்மைப் பெற்றாள்" என்று சொல்லுகிறாள். பிள்ளையைப்பெறும்போது தாய்க்கு வேதனையும், பெற்ற பின்பு அந்தத் தாய்க்கு சந்தோஷமும் உண்டாகும்.

நேசவைராக்கியம் உன் 8:6

உன் 8:6. நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரையைப் போலவும், உமது புயத்தின்மேல் முத்திரையைப்போலவும் வைத்துக் கொள்ளும்; நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடிதாயிருக்கிறது; அதின் தழல் அக்கினித்தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது.

தாங்கள் ஐக்கியத்தில் இணைந்திருப்பது உறுதிபண்ணப்பட வேண்டும் என்று மணவாட்டி மணவாளனிடம் அன்போடு கேட்டுக் கொள்கிறாள். மேலும் தாங்கள் ஐக்கியமாகயிருப்பது தொடரவேண்டும் என்றும், அது இன்னும் அதிக நெருக்கமாய் இருக்கவேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறாள்.

"நீர் என்னை உமது இருதயத்தின்மேல் முத்திரையைப்போல வைத்துக்கொள்ளும்" என்று மணவாட்டி தன் மணவாளனிடம் கேட்கிறாள். இந்த வாக்கியத்திற்கு, "உம்முடைய இருதயத்தில் எனக்கு ஒரு இடம் கிடைப்பதாக" என்றும், "உம்முடைய அன்பில் நான் மகிழ்ச்சியடைவேனாக" என்றும் பொருள் சொல்லலாம். மேலும், "நீரே என்னுடைய பிரதான ஆசாரியராகயிருப்பீராக", என்றும், "உம்முடைய மார்பதக்கத்தில், உம்முடைய இருதயத்திற்கு அருகாமையில், என்னுடைய பெயர் எழுதப்பட்டிருப்பதாக" என்றும் பொருள் சொல்லலாம்.

மணவாட்டிக்கு மணவாளனுடைய அன்பும் தேவைப்படுகிறது, ஆதரவும் தேவைப்படுகிறது. மணவாளன் தம்முடைய பலத்த புயத்தினாலும், நித்திய புயத்தினாலும் தன்னைத் தாங்கி ஆதரிக்கவேண்டும் என்று மணவாட்டி விரும்புகிறாள். மணவாளன் மணவாட்டியினிடத்தில் அன்பாயிருக்கிறார். இந்த அன்பு உறுதிபண்ணப்படவேண்டும். மணவாளன் தன்னை தமது இருதயத்தின்மேல் முத்திரையைப்போல வைத்துக்கொள்வதுபோல, தமது புயத்தின் மேலும் தன்னை முத்திரையைப்போல வைத்துக்கொள்ள வேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள்.

மணவாட்டி தன் நேசர்மேல் சார்ந்துகொள்ளப் பிரியப்படுகிறாள். மணவாளனுடைய நேசக்கரம் தன்னை அணைத்துக்கொள்ளவேண்டுமென்றும், தன்னை வல்லமையாய் ஆளுகை செய்து ஆட்கொள்ளவேண்டுமென்றும் மணவாட்டி விரும்புகிறாள். மணவாளன் தம்முடைய வலதுகையினால் மணவாட்டியை அணைத்துக்கொள்வது அவளுக்கு ஆறுதலாயிருக்கிறது. அந்த ஆறுதல் தனக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள்.

தன்னுடைய விண்ணப்பத்தை வலியுறுத்தும் வண்ணமாக, மணவாட்டி நேசத்தின் வலிமையைப்பற்றி மணவாளனிடம் சொல்லுகிறாள். நேசம் மரணத்தைப்போல் வலியது. கிறிஸ்து நம்மீது வைத்திருக்கிற அன்பு மரணத்தைப்போல வலிமையானது. அவருடைய அன்பு மரணத்தின் ஊடாக ஊடுருவிப்பாய்ந்தது. கிறிஸ்து நம்மீது அன்புகூர்ந்தார். அவர் நமக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார்.

நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல கொடிதாயிருக்கிறது. பாதாளம் எல்லாவற்றையும் விழுங்குவதுபோல, நேசவைராக்கியமும் எல்லாவற்றையும் விழுங்கிப்போடுகிறது. நேசத்திற்கு முன்பாக எதுவும் நிற்கமுடியாது. எல்லாமே அதற்கு அடிமையாயிருக்கும். இயேசுகிறிஸ்துவின்மீது மெய்யாகவே அன்புகூருகிறவர்கள், அவர்மீது நேசவைராக்கியத்தோடிருப்பார்கள். தங்களைப் பூரணமாய் அவருக்கு ஒப்புக்கொடுப்பார்கள். அவர்களுக்கு இயேசுவைத் தவிர மற்றவையெல்லாமே அற்பமும் குப்பையுமாயிருக்கும்.

நேசவைராக்கியத்தின் தழல் அக்கினித்தழல் போலிருக்கிறது. அதின் ஜுவாலை கடும் ஜுவாலையாயிருக்கிறது. நேசத்தின் அக்கினி தழலுக்கு விரோதமாக எந்த வல்லமையாலும் எதிர்த்து நிற்கமுடியாது. அக்கினி தழல் எல்லாவற்றையும் பட்சித்துப்போடுவதுபோல, நேசவைராக்கியமும், எல்லாவற்றையும் பட்சித்துப்போடும். அக்கினிதழல் என்னும் வார்த்தை தேவனுடைய அக்கினித்தழலைக் குறிக்கும் என்றும் வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள். பரிசுத்தமான நேசம் அக்கினியைப்போன்றது. இந்த அக்கினியிலிருந்து தழல் வெளிப்படுவதுபோல, நம்முடைய ஆத்துமாவில் நேசவைராக்கியம் இருக்கும்போது, ஆத்துமாவிலிருந்து தழல் வெளிப்படும். அக்கினியின் ஜுவாலை கடும் ஜுவாலையாகயிருந்து எல்லாவற்றையும் பட்சித்துப்போடுவதுபோல, நம்முடைய ஆத்துமாவிலிருக்கும் நேசவைராக்கியமானது, அங்கிருக்கும் களிம்புகளையும் அசுத்தங்களையும் பட்சித்துப்போடும்.

திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது உன் 8:7

உன் 8:7. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்க மாட்டாது; ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டைபண்ணப்படும்.

நேசவைராக்கியம் வலியது. இதற்கு விரோதமாக எத்தனை சக்திகள் வந்தாலும், நேசவைராக்கியமே ஜெயம் பெறும். நேசவைராக்கியம் பரிசுத்தமானது. நம்முடைய ஆத்துமாவில் தேவனுடைய அன்பு ஆளுகை செய்யும்போது அது உறுதியாக நிலைத்திருக்கும். மரணமோ, ஜீவனோ எதுவந்தாலும் நேசமே நிலைத்திருக்கும்.

"உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங் களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோம 8:35-39).

கிறிஸ்துவின் அன்பு நம்மை ஆளுகை செய்யும்போது, மரணமோ அல்லது பாதாளமோ நம்மைப் பயமுறுத்தாது. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது. நேசத்தின் தழல் அக்கினித்தழலைப்போன்றது. அதன்மீது தண்ணீர் ஊற்றி நேசவைராக்கியத்தின் அக்கினித்தழலை அவிக்கமுடியாது. அதன்மீது வெள்ளம் வந்தாலும், அதுவும் நேசவைராக்கியத்தின் அக்கினித்தழலைத் தணிக்கமாட்டாது.

கிறிஸ்து நம்மீது வைத்திருக்கும் அன்பு நிலையானது. அது உறுதியானது. தண்ணீர்களோ அல்லது வெள்ளமோ கிறிஸ்துவின் அன்பை அவித்துப்போடாது. கிறிஸ்து நம்மீது வைத்திருக்கிற அன்பை எந்த வல்லமையாலும் அவிக்கவும் முடியாது. தணிக்கவும் முடியாது. குறைக்கவும் முடியாது. கிறிஸ்துவானவர் நம்மீதுள்ள அன்பினால் பல கஷ்டங்கள் வழியாகக் கடந்துசென்றார். நமக்காக, நம்மீது வைத்திருக்கிற அன்புக்காக, கிறிஸ்துவானவர் தம்முடைய இரத்தத்தையே சிந்தினார். கிறிஸ்துவின் இரத்தம் வெள்ளம் போல புரண்டு வந்தாலும், அது பெருங்கடலைப்போல இருந்தாலும், அவர் நம்மீது வைத்திருக்கிற அன்பு குறைவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின்மீது, அவருடைய அன்பு சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருக்கிறது.

கிறிஸ்துவின் அன்பு உறுதியாயிருப்பது போல, நாம் அவர்மீது வைத்திருக்கும் அன்பும் உறுதியாயிருக்கவேண்டும். நாம் கிறிஸ்துவின்மீது வைத்திருக்கும் அன்பை எந்த சக்தியும் பிரித்துவிடக்கூடாது. கிறிஸ்துவின்மீது அன்பு செலுத்துவதற்கு, இந்த உலகமோ, ஆடம்பர ஜீவியமோ, ஐசுவரியமோ நமக்குத் தடையாகயிருக்கக் கூடாது. உலகப்பிரகாரமான எந்தக் காரியமும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரித்துக்கொண்டுபோய்விடக்கூடாது.

நம்மிடத்தில் நேசவைராக்கியம் இருக்கும் போது, நாம் எல்லா சோதனைகளையும் தாங்கிக்கொள்வோம். எல்லா சோதனைகளிலும் ஜெயம் பெறுவோம். பாடுகளும், கஷ்டங்களும், வேதனைகளும் வரும்போது அவற்றை சந்தோஷமாகவும், தைரியமாகவும் மேற்கொள்வோம்.

சிறிய சகோதரி
உன் 8:8

உன் 8:8. நமக்கு ஒரு சிறிய சகோதரியுண்டு, அவளுக்கு ஸ்தனங்களில்லை; நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்?

கிறிஸ்துவானவரும் அவருடைய மணவாட்டியும் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பை பரஸ்பரம் பரிமாறிக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவர் தங்கள் நேசவைராக்கியத்தை உறுதிபண்ணிக் கொள்கிறார்கள். நேசம் மரணத்தைப்போல் வலியது. ஒருதரம் பிறப்பதும், ஒரு தரம் மரிப்பதும் எல்லோருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. யாரும் மரணத்திற்குத் தப்பிக்க முடியாது. மரணத்தைப்பற்றிய பிரமாணம் உறுதியானது. இது ஒரு மாறாத பிரமாணம். இந்த மரணத்தைப்போலவே நேசமும் வலியதாகவும், உறுதியானதாகவும் இருக்கிறது.

மணவாளனும் மணவாட்டியும் தங்களுடைய காரியங்களைப்பற்றி பகிர்ந்துகொள்கிறார்கள். ஒரே நுகத்தை சுமக்கிறவர்கள், தங்களுடைய காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள வேண்டும். இவர்களுடைய இருதயம் ஒத்துப்போகவேண்டும். இவர்கள் இருவருமே தங்களுடைய கழுத்தை ஒரே நுகத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இவர்களுடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும் ஒற்றுமையாயிருந்தால் தான், இவர்களால் பாரமான எல்லா பிரச்சனைகளையும் எளிதாக மேற்கொள்ள முடியும். இவ்விருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்குமென்றால், இவர்களால் சிறிய பாரத்தைக்கூட சுமக்க முடியாது. சிறிய பிரச்சனைகளைக்கூட சமாளிக்க முடியாது.

மணவாளனும், மணவாட்டியும் தங்களுடைய சகோதரியைப்பற்றி இங்கு பேசிக்கொள்கிறார்கள். அவள் அவர்களுக்கு ஒரு சிறிய சகோதரி. மணவாளனும் மணவாட்டியும் இதுவரையிலும் தங்களைப் பற்றி மாத்திரமே பேசிக்கொண்டிருந்தார்கள். இப்போது தங்களுடைய சிறிய சகோதரியைப்பற்றி பேச ஆரம்பிக்கிறார்கள். அவர்களுடைய சிறிய சகோதரிக்கு ஸ்தனங்கள் இல்லை. அவள் இன்னும் தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்து முதிர்ச்சி பெறவில்லை.

"நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்" என்று மணவாளனும் மணவாட்டியும் பேசிக்கொள்கிறார்கள். இந்த வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லுகிறார்கள். அவையாவன : 1. யூதமார்க்கத்தைச் சேர்ந்த இஸ்ரவேல் ஜனத்தார் இந்த வாக்கியத்தைப் பேசுகிறார்கள் என்றும், அவர்கள் புறஜாதி மார்க்கத்தாரைப்பற்றிப் பேசுகிறார்கள் என்றும் இந்த வாக்கியத்திற்கு ஒரு வியாக்கியானம் சொல்லப்படுகிறது. 2. சிறிய சகோதரி என்னும் வாக்கியம் கிருபையினால் தெரிந்தெடுக்கப்படுகிற எல்லா ஜனங்களையும் குறிக்கும் என்பது மற்றொரு வியாக்கியானம். இவர்கள் ஒருவேளை இன்னும் அழைக்கப்படாதவர்களாகவும் இருக்கலாம்.

மணவாளனாகிய கிறிஸ்து யூதஜனங்களெல்லோரையும் தம்முடைய மணவாட்டியாகத் தெரிந்துகொண்டார். இஸ்ரவேல் ஜனத்தாரோடு அவர் கலியாண உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு விசேஷித்த கிருபைகளையும், சிலாக்கியங்களையும், பாதுகாப்புக்களையும், பராமரிப்புக்களையும் கொடுத்து அவர்களை ஆதரிக்கிறார். இந்தப்பிரபஞ்சத்தில் இஸ்ரவேல் ஜனங்களைத்தவிர, புறஜாதி ஜனங்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்.

புறஜாதியாரைப்பற்றி இஸ்ரவேல் ஜனங்கள் நினைத்துப் பார்க்கிறார்கள். புறஜாதியாருடைய நிலமை பரிதாபமாகயிருக்கிறது. அவர்களிடத்தில் தேவனைப்பற்றிய ஞானமும் அறிவும் போதுமான அளவு இல்லை. ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதியாரை, “சிறிய சகோதரி” என்று சொல்லுகிறார்கள். “அவளுக்கு ஸ்தனங்கள் இல்லை”. அவளுக்கு தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு இல்லை. வேதவாக்கியம் இல்லை. ஊழியக்காரர்கள் இல்லை. அவளுக்கு ஆறுதலின் ஸ்தனங்கள் இல்லை. அவள் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு அந்நியமாகயிருக்கிறாள்.

“அவளுக்காக நாம் என்ன செய்வோம்” என்று மணவாளனும், மணவாட்டியும் தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். “நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்” என்று மணவாளனும் மணவாட்டியும் மிகுந்த கரிசனையோடு பேசிக் கொள்கிறார்கள்.

இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பாயிருக்கிற புறஜாதி ஜனத்திற்காக நாம் பரிதபிக்கவேண்டும். அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். கிறிஸ்துவானவர் புறஜாதியார்மீதும் அன்புகூர்ந்து, அவர்களையும் தம்முடைய மணவாட்டியாக அங்கீகரிக்கிறார். யாரெல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களெல்லோருமே தேவனுடைய காணியாட்சிக்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே கிறிஸ்துவின் சுதந்தரத்தில் பங்குள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் யூதரா, கிரேக்கரா என்னும் வித்தியாசமில்லை.

இக்காலத்தில் யூதர்களில் அநேகர் கிறிஸ்துவின் சபைக்கு அந்நியராயிருக்கிறார்கள். அவர்களை சபையில் மறுபடியும் அழைத்து வருவது விசுவாசிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கட்டளையாகும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மூத்த சகோதரி, மணவாளனுக்கு நெருக்கமாகயிருந்தாள். இப்போதோ இளைய சகோதரி மணவாளனுக்கு நெருக்கமாகயிருக்கிறாள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இளைய சகோதரிக்கு ஸ்தனங்களில்லை. மூத்த சகோதரிக்கு மாத்திரமே ஸ்தனங்களிலிருந்தது. இப்போதோ இளைய சகோதரிக்கு ஸ்தனங்கள் இருக்கிறது. மூத்த சகோதரிக்கு ஸ்தனங்களில்லை.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் தமக்கு சொந்தமானவர்களைத் தமக்கென்று தெரிந்துகொள்கிறார். அவர்கள் ஒருவேளை இன்னும் அழைக்கப்படாதவர்களாகயிருக்கலாம். அவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். ஆனாலும் தேவனோடு ஏதோ ஒரு வழியில் சம்மந்தமுள்ளவர்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவோடும், அவருடைய சபையோடும் ஏதோ ஒரு வழியில் தொடர்புள்ளவர்கள்.

இவர்கள் கிறிஸ்துவுக்குத் தூரத்து சொந்தக்காரர்கள். இவர்கள் கிறிஸ்துவுக்குத் தூரமாயிருப்பதுபோல, அவருடைய சபைக்கும் தூரமாயிருக்கிறார்கள். இந்த ஜனங்கள் மணவாளனாகிய கிறிஸ்துவுக்கும், அவருடைய மணவாட்டியாகிய சபைக்கும் சகோதரிகளாயிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கிறிஸ்துவானவர் இவர்களைப்பற்றிச் சொல்லும்போது, “இந்த தொழுவத்திலுள்ளவைகளெல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு” என்று சொல்லுகிறார்.

"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவா 10:16).

"இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்" (அப் 18:9,10).

விசுவாசிகளெல்லோருமே கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவருடைய கிருபையினால்தான் விசுவாசிகளெல்லோரும் அவருடைய தொழுவத்தில் கூட்டிச்சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் தொழுவத்தில் சேர்க்கப்படாத ஜனங்கள் இன்னும் அநேகர் இருக்கிறார்கள். தொழுவத்திற்குள் இருக்கிற விசுவாசிகள், தொழுவத்திற்கு வெளியேயிருக்கிற ஜனங்களைக் குறித்து கரிசனையுள்ளவர்களாகயிருக்க வேண்டும். அவர்களையும் கிறிஸ்துவின் தொழுவத்திற்குள் அழைத்துக்கொண்டு வருவதற்கு உதவிபுரியவேண்டும். சுவிசேஷத்தின் நற்செய்தியை அவர்களுக்கும் அறிவிக்கவேண்டும்.

அவர்களுடைய ஆத்துமாக்களும் கிறிஸ்துவாகிய மணவாளனோடு, கலியாண உடன்படிக்கையில் ஒப்பந்தப்பண்ணப்பட வேண்டும். இரட்சிக்கப்பட்ட பாவிகள், இரட்சிக்கப்படாத பாவிகளை கிறிஸ்துவினிடத்தில் அழைத்து வரவேண்டும். தாங்களும் ஒரு காலத்தில் கிறிஸ்துவின் காணியாட்சிக்குப் புறம்பாயிருந்தவர்கள்தான் என்பதை இரட்சிக்கப்பட்டவர்கள் நினைவுகூரவேண்டும். இந்த ஆத்தும பாரத்தோடு, இரட்சிக்கப்படாதவர்களை, கிறிஸ்துவின் காணியாட்சிக்குள்ளே அழைத்துவரவேண்டும்.

மதில், கதவு
உன் 8:9

உன் 8:9. அவள் ஒரு மதிலானால், அதின் மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டுவோம்; அவள் கதவானால், கேதுருப்பலகைகளை அதற்கு இணைப்போம்.

சிறிய சகோதரிக்காக என்ன செய்யவேண்டுமென்று மணவாளன் உடனடியாகத் தீர்மானம்பண்ணுகிறார். மணவாளனுடைய தீர்மானத்தை மணவாட்டியும் அங்கீகரிக்கிறாள். "அவள் ஒரு மதிலானால் அதின்மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டுவோம்" என்று இருவருமே சொல்லுகிறார்கள். புறஜாதியாரிடத்தில் நற்கிரியை ஆரம்பிக்கப்பட்டிருக்குமென்றால், கர்த்தர் அதின்மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்ட விரும்புகிறார்.

சிறிய சகோதரி சுவிசேஷத்திற்கு செவிகொடுத்தால், கர்த்தர் அவளையும் இரட்சிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு சிறிய சகோதரி செவிகொடுக்கவேண்டும். கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மீது அவள் தன்னை கட்டியெழுப்பவேண்டும். அப்போது கிறிஸ்துவானவர் அவள்மீது வெள்ளிக்கோட்டையைக் கட்டுவார்.

சிறிய சகோதரியின் ஜீவியத்தில் துவக்கப்பட்டிருக்கிற நற்கிரியையை, கிறிஸ்துவானவர் தொடர்ந்து நடத்துவார். சிறிய சகோதரி இப்போது ஒரு மதிலைப்போல, விசுவாசத்தின் ஆரம்ப நிலையிலிருக்கலாம். கிறிஸ்துவோ இந்த மதிலின்மீது ஒரு கோட்டையைக் கட்டுவதற்கு சித்தமுள்ளவராகயிருக்கிறார். கிறிஸ்துவின் கிருபையினால் மதிலானது கோட்டையாக கட்டியெழுப்பப்படும். மதில் கற்களால் கட்டப்பட்டிருக்கும். கிறிஸ்துவோ கற்களால் கட்டப்பட்டிருக்கிற மதிலின்மீது வெள்ளியினால் கோட்டையைக் கட்டுவார்.

சிறிய சகோதரி கிறிஸ்துவோடு தன்னை இணைத்துக்கொள்ளவேண்டும். அப்போது அவள் கிறிஸ்துவுக்குள் கட்டியெழுப்பப்படுவாள். புறஜாதியார் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டு, கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்போது கிறிஸ்துவானவர் அவர்களையும் தேவனுடைய பரிசுத்த ஆலயமாகக் கட்டியெழுப்புவார்.

"அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே 2:21,22).

கோட்டை கட்டி முடிக்கப்பட்ட பின்பு, அதற்கு கதவுகள் போட்டு பூட்டவேண்டும். மணவாளனும் மணவாட்டியும் தங்கள் சிறிய சகோதரியைப்பற்றிச் சொல்லும்போது, "அவள் கதவானால் கேதுரு பலகைகளை அதற்கு இணைப்போம்" என்று சொல்லுகிறார்கள். கிருபையின் ஆரம்பம் சிறியதாயிருக்கிறது. அதன் முடிவோ மிகவும் பெரியதாயிருக்கிறது. ஆரம்பத்தில் குறைவாயிருந்த கிருபை முடிவில் அதிகமாயிருக்கிறது. சிறிய சகோதரி ஆரம்பத்தில் ஒரு மதிலாக மாத்திரமே இருந்தாள். அதன்பின்பு அவள் வெள்ளிக்கோட்டையைப் போல கட்டப்படுகிறாள். அந்தக் கோட்டைக்கு கேதுரு பலகைகளால் கதவுகள் போடப்பட்டு அது பாதுகாக்கப்படுகிறது.

சபையிலுள்ள விசுவாசிகள் சபைக்கு வெளியிலிருக்கிற ஜனங்களைக் குறித்து கரிசனையோடிருக்கவேண்டும். அவர்களும் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நாம் ஊழியம் செய்யவேண்டும். கிறிஸ்துவே இரட்சிக்கிறவர். இரட்சிப்பு கர்த்தருடையது. நாம் கிறிஸ்துவின் தொழுவத்திற்குள்ளே, மற்ற ஜனங்களையும் அழைத்து வரவேண்டும். கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பது போலவே புதிய விசுவாசிகளையும் ஆசீர்வதிப்பார். பெரிய சகோதரியை ஆசீர்வதிப்பதுபோல, சிறிய சகோதரியையும் ஆசீர்வதிப்பார்.

கடாட்சம்
உன் 8:10

உன் 8:10. நான் மதில்தான், என் ஸ்தனங்கள் கோபுரங்கள்; அவருடைய கண்களில் கடாட்சம்பெறலானேன்.

மணவாளன் மணவாட்டியின்மீது பிரியமாயிருக்கிறார். மணவாளன் தன்மீது வைத்திருக்கிற அன்பை மணவாட்டி அங்கீகரித்து அவருக்கு நன்றி சொல்லுகிறாள். தன்னுடைய சிறிய சகோதரியைக் குறித்து மணவாட்டி தன் மணவாளனை நம்புகிறாள். மணவாளனுடைய கிருபையை மணவாட்டி ஏற்கெனவே அதிகமாய் அனுபவித்திருக்கிறாள். கடந்த நாட்களில் மணவாளனுடைய கிருபையும், அன்பும், நேசமும், பாதுகாப்பும், பராமரிப்பும் அவளுக்கு அதிகமாய்க் கிடைத்திருக்கிறது. இதுவரையிலும் தன் மணவாளனிடமிருந்து தான் பெற்ற எல்லா நன்மைகளுக்காகவும், அவள் அவருக்கு நன்றியுள்ளவளாகயிருக்கிறாள்.

"நான் மதில்தான், என் ஸ்தனங்கள் கோபுரங்கள்; அவருடைய கண்களில் கடாட்சம்பெறலானேன்" என்று தான் தன்னுடைய மணவாளனிடமிருந்து பெற்றுக்கொண்ட கடாட்சத்தை மணவாட்டி நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறாள். தேவன் நமக்குக் காண்பித்த அன்புக்கும், கிருபைக்கும் நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாகயிருக்க வேண்டும். மிகுந்த சந்தோஷத்தோடு தேவனுடைய கடாட்சத்தைப்பற்றி நாம் பேசவேண்டும். அதைக் குறித்து மற்றவர்களுக்கு சாட்சியாய் அறிவிக்க வேண்டும்.

கடந்த நாட்களில் நம்முடைய கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளையெல்லாம் நினைத்துப் பார்த்து, நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். நம்முடைய கர்த்தரைப்பற்றி நினைக்கும்போதே, நம்முடைய இருதயத்தில் ஆறுதலும், சந்தோஷமும், திருப்தியும் உண்டாயிருக்கவேண்டும். நம்முடைய கர்த்தரோடு நமக்கு விசேஷித்த அனுபவங்கள் உண்டாயிருந்திருக்கும்.

நம்முடைய கடந்தகாலத்தில் கர்த்தர் நமக்கு விசேஷித்த நாட்களையும், காலங்களையும் நியமித்திருந்திருப்பார். அப்போதெல்லாம் நாம் கர்த்தருடைய கண்களில் கடாட்சம் பெற்றோம். அந்த நாட்களை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

திராட்சத்தோட்டம்
உன் 8:11,12

உன் 8:11. பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத்தோட்டம் உண்டாயிருந்தது, அந்தத் தோட்டத்தைக் காவலாளிகள் வசத்திலே அதின் பலனுக்காக, ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டுவரும்படி விட்டார்.

உன் 8:12. என் திராட்சத்தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது; சாலொமோனே! உமக்கு அந்த ஆயிரமும், அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும்.

கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் தாங்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்கிற அன்பை உறுதிபண்ணிக் கொள்கிறார்கள். அவர்களுடைய அன்பு மரணத்தைப்போல வலிதாயிருக்கிறது. அவர்களுடைய நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது. அவர்களுடைய அன்பு உறுதியானது. இப்போது அவர்கள் தங்கள் தேசத்திலுள்ள ஒரு திராட்சத்தோட்டத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இந்தப் பூமியில் கிறிஸ்துவின் சபை ஒரு திராட்சத்தோட்டத்தைப்போல இருக்கிறது. பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத்தோட்டம் உண்டாயிருந்தது. அவருடைய திராட்சத்தோட்டம் கிறிஸ்துவின் சபைக்கு அடையாளமாகும்.

கிறிஸ்துவானவர் திராட்சத் தோட்டத்தைப் பற்றிய உவமையில், இந்த வசனங்களைப் புரிந்துகொள்வதற்கு நமக்குத் திறவுகோல்களைத் தருகிறார். நாம் நம்முடைய எஜமானுக்கு நன்றியுள்ள தோட்டக்காரராயிருக்கவேண்டும்.

"வேறொரு உவமையைக் கேளுங்கள்: வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்" *(மத் 21:33).*

திராட்சத்தோட்டம் காவலாளிகள் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவிடத்திலும் ஆயிரம் திராட்சச்செடிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வேலைக்காரரும் ஆயிரம் திராட்சச்செடிகளைப் பராமரிக்கவேண்டும். இதன் பலனை அவர்கள் அனுபவிக்கலாம். திராட்சத்தோட்டத்து எஜமானுக்கு, ஒவ்வொரு காவலாளியும், ஆயிரம் வெள்ளிக்காசுகளை கொண்டு வந்து கொடுக்கவேண்டும். "அந்நாளிலே, ஆயிரம் வெள்ளிக்காசு பெறும் ஆயிரம் திராட்சச்செடியிருந்த நிலமெல்லாம் முட்செடியும் நெரிஞ்சிலுமாகும்" *(ஏசா 7:23).*

கிறிஸ்துவின் சபையே அவருடைய திராட்சத்தோட்டம். அவருடைய சபை மனமகிழ்ச்சியான ஸ்தலம். கிறிஸ்துவானவர் தம்முடைய திராட்சத்தோட்டத்திலே சந்தோஷமாய் நடக்கிறார். அதன் கனிகளில் பிரியமாயிருக்கிறார்.

விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவிடத்திலும், கிறிஸ்துவானவர் தம்முடைய திராட்சத்தோட்டத்தின் ஒரு பகுதியை பொறுப்பாக ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் பொறுப்புக்களை நாம் நேர்த்தியாகச் செய்து முடிக்கவேண்டும். இது கர்த்தர் நம்மை நம்பி ஒப்படைத்திருக்கும் பொறுப்பு. இது பரிசுத்தமான நம்பிக்கை. விசுவாசிகள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். சபையின் ஊழியம் விசுவாசிகளின் ஊழியம். விசுவாசிகள் ஒவ்வொருவரும் தாங்கள் செய்யவேண்டிய ஊழியத்தை கர்த்தருடைய நாமமகிமைக்காக பயபக்தியோடு செய்யவேண்டும்.

கர்த்தர் தம்முடைய திராட்சத்தோட்டத்தின் ஒரு பகுதியை, தம்முடைய விசுவாசிகளுக்கு பொறுப்பாய் ஒப்புவிக்கும்போது, ஒவ்வொரு விசுவாசியும் ஒரு குறிப்பிட்ட தொகையை குத்தகையாக கர்த்தரிடம் கொடுக்கவேண்டும். கர்த்தரே திராட்சத்தோட்டத்திற்கு எஜமான். நாம் அந்தத் தோட்டத்திலே வேலை செய்கிற காவலாளிகள். கிறிஸ்துவானவர் தம்முடைய தோட்டத்திற்கு வந்து திராட்சப்பழங்களைப் பார்க்க விரும்புகிறார்.

நாம் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். நம்முடைய ஊழியத்தில் கர்த்தர் கனியைக் காணவேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தர் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாய்ச் செய்யும்போது நம்முடைய ஊழியத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிற கனி அதிகமாயிருக்கும்.

கிறிஸ்துவானவர் தம்முடைய திராட்சத்தோட்டத்தை காவலாளிகள் வசத்திலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆனாலும் திராட்சத்தோட்டம் இன்னும் கிறிஸ்துவினுடையதுதான். கிறிஸ்துவின் பார்வை எப்போதுமே தம்முடைய திராட்சத்தோட்டத்தின்மீதுதான் இருக்கும். கிறிஸ்துவானவர் தம்முடைய சபையாகிய திராட்சத்தோட்டத்தின் நன்மையை விசாரிக்கிறார்.

“என் திராட்சத்தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது” என்னும் வாக்கியத்தை கிறிஸ்துவானவர் பேசுவதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். கிறிஸ்து தம்முடைய சபைக்கு சொந்தக்காரரர். தம்முடைய சபையில் கிறிஸ்து வாசம்பண்ணுகிறார். அவருடைய சபை அவருக்கு அருகாமையிலிருக்கிறது. சபையிலுள்ளவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்து இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்திருக்கிறார். முடிவுபரியந்தம் அவர்களிடத்தில் அன்பு வைத்திருக்கிறார் (யோவா 13:1).

திராட்சத் தோட்டத்தின் ஆசீர்வாதங்களை சபை பயபக்தியோடு அனுபவிக்கலாம். திராட்சத்தோட்டம் எப்போதுமே சபைக்கு முன்பாகத்தான் இருக்கிறது. திராட்சத்தோட்டத்தைக் காவல் காக்கவேண்டுமென்றால், விழித்திருந்து மிகுந்த கவனமாயிருக்கவேண்டும். சிறிது நேரமும் அசந்துவிடாமல், எப்போதும் விழிப்பாயிருக்கவேண்டும்.

“என் திராட்சத்தோட்டம் எனக்கு முன்பாக இருக்கிறது” என்னும் வாக்கியத்தை மணவாட்டி சொல்லுவதாகவும் வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

“என்னை திராட்சத்தோட்டங்களுக்கு காவற்காரியாக வைத்தார்கள். என் சொந்த திராட்சத்தோட்டத்தையோ நான் காக்கவில்லை” (உன் 1:6) என்று மணவாட்டி ஏற்கெனவே வேதனையோடு சொன்னாள். ஆனால் இப்போதோ அவள் தன்னுடைய பொறுப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற திராட்சத் தோட்டத்தைக் கவனமாய்க் காவல் காக்கிறாள். நம்முடைய இருதயமே நமக்குத் திராட்சத்தோட்டம். நம்முடைய இருதயத்தை மிகுந்த காவலோடு காத்துக்கொள்ளவேண்டும்.

திராட்சத்தோட்டத்தின் எஜமான் தம்முடைய திராட்சத்தோட்டத்தை காவலாளிகள் வசத்தில் பராமரிப்புக்காக ஒப்புக்கொடுக்கிறார். காவலாளிகள் ஒவ்வொருவரும், எஜமானுக்கு ஆயிரம் வெள்ளிக்காசை குத்தகையாகக் கொடுக்கவேண்டுமென்று நியமித்திருக்கிறார். கிறிஸ்துவின் திராட்சத்தோட்டத்தில் ஊழியம் செய்கிற நாம், கர்த்தருக்கு கொடுக்கவேண்டிய பங்கைக் கொடுப்பதில் கவனமாயிருக்கவேண்டும்.

மணவாட்டி திராட்சத்தோட்டத்தைக் காவல் காப்பதற்கு, தான் கொடுக்கவேண்டிய குத்தகையைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறாள். “சாலொமோனே, உமக்கு அந்த ஆயிரம் சேரும்” என்று சொல்லுகிறாள். திராட்சத்தோட்டத்தில் முக்கிய பலன் கர்த்தரையே சேரும். திராட்சத்தோட்டத்தில் பழுத்திருக்கிற எல்லா கனிகளையும் நாம் கர்த்தருக்கு அற்பணிக்கவேண்டும். கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ண வேண்டும்.

சபையார் கிறிஸ்துவைக் கனப்படுத்த வேண்டும். அவரைத் துதிக்கவேண்டும். சபை கிறிஸ்துவினுடையது. திராட்சத்தோட்டத்தின் பலன் கிறிஸ்துவுக்கே உரியது. அதுபோலவே சபையில் ஏறெடுக்கப்படும் துதிகளும், ஸ்தோத்திரங்களும் கிறிஸ்துவுக்கே உரியது. நாம் கிறிஸ்துவுக்குரியதை செலுத்துவதற்கு கவனமாயிருக்கவேண்டும். அப்போது திராட்சத்தோட்டத்தின் பலனில், ஒரு பகுதியை கிறிஸ்துவானவர் நமக்கும் கொடுப்பார். இது நமக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். சபையானது கிறிஸ்துவை கனப்படுத்தும்போது, கிறிஸ்துவானவர் தம்முடைய பிள்ளைகளையும் கனப்படுத்துகிறார். நமக்கு ஆறுதலையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறார்.

திராட்சத்தோட்டத்தின் எஜமானுக்குரிய பங்கைக் கொடுக்கும்போது, அதன் காவலாளிக்கும் ஒரு பங்கு கிடைக்கும். காவலாளிகள் திராட்சத்தோட்டத்தை கொத்தி, எருபோட்டு, பண்படுத்தி, நீர்ப்பாய்ச்சி, பராமரித்து, பாதுகாத்தார்கள். காவலாளிகளின் வேலைக்குத் தகுந்த கூலி கொடுக்கப்படும். சாலொமோனுக்கு ஆயிரமும், அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் சேரும். காவல்காரருக்கு நூற்றுக்கு இருபது என்றும் வீதத்தில் பலன் கிடைக்கிறது. இது கர்த்தருடைய தோட்டத்தில் வேலை செய்கிறவர்களுக்குக் கிடைக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம்.

தோட்டங்களில் வாசம்பண்ணுகிறவளே உன் 8:13

உன் 8:13. தோட்டங்களில் வாசம்பண்ணுகிறவளே! தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள்; நானும் அதைக் கேட்கட்டும்.

கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியும் இங்கு சிறிதுகாலத்திற்கு பிரிந்து செல்கிறார்கள். மணவாட்டி இந்தப் பூமியிலுள்ள திராட்சத்தோட்டத்தில் சிறிதுகாலம் தங்கியிருந்து, அதைக் காவல் காக்கவேண்டும். அந்தத் தோட்டத்தில் அவளுக்கென்று ஒரு வேலை நியமிக்கப்பட்டிருக்கிறது. மணவாட்டி தன்னுடைய பொறுப்பைக் கவனமாய் நிறைவேற்றவேண்டும். மணவாளனோ பரலோகத்திற்குப் போய், அங்கு தம்முடைய ஊழியத்தைச் செய்யப்போகிறார். அவர் பிதாவின் சமுகத்திலே தம்முடைய மணவாட்டிக்காக பரிந்து பேசப்போகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யும்போது, கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் சமுகத்திலே நமக்காகப் பரிந்து பேசும் ஊழியத்தைச் செய்கிறார்.

மணவாளன் தன்னுடைய மணவாட்டியின் சத்தத்தை அடிக்கடி கேட்கவேண்டும் என்று விரும்புகிறார். இப்போது மணவாட்டி திராட்சத்தோட்டத்திலிருக்கிறாள். மணவாளன் அவளைக் கூப்பிடும்போது, "தோட்டங்களில் வாசம்பண்ணுகிறவளே" என்று கூப்பிடுகிறார். மணவாட்டி தோட்டத்திலே திராட்சச் செடிகளைப் பராமரிக்கிறாள். விசுவாசிகளாகிய நாம் இப்போது இந்தப் பூமிக்குரிய தோட்டத்தில் வாசம் பண்ணுகிறோம். இங்கு வாசம்பண்ணுகிற நாம், காலம் நிறைவேறும்போது, பரதேசிலே வாசம்பண்ணுவோம்.

இந்தப் பூமியிலிருப்பது சாலொமோனுடைய திராட்சத்தோட்டம். இதில் கர்த்தருடைய நியமங்களை ஆசரிக்கிறோம். விசுவாசிகளின் ஐக்கியம் ஒரு திராட்சத்தோட்டத்தைப்போல இருக்கிறது. சபையிலுள்ள விசுவாசிகள் எல்லாருமாகச் சேர்ந்து கர்த்தரைத் துதிக்கிறார்கள். தம்முடைய பிள்ளைகள் ஏறெடுக்கிற துதிகளின் சத்தத்தையும், ஸ்தோத்திர கீதங்களையும் கேட்கவேண்டுமென்று கர்த்தர் பிரியப்படுகிறார். "தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள், நானும் அதைக் கேட்கட்டும்" என்று மணவாளன் சொல்லுகிறார்.

பரிசுத்தவான்கள் ஐக்கியமாகயிருக்க வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும் என்பது கிறிஸ்துவின் பிரமாணம். நாம் ஒருவருக்கொருவர் அனுதினமும் புத்தி சொல்லி நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். சபையின் சத்தத்திற்கு நாம் செவிகொடுக்கவேண்டும். சபையின் சத்தமும் கிறிஸ்துவின் சத்தமும் ஒன்றாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் சிந்தையை சபை நிறைவேற்றவேண்டும்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்கவேண்டும். அதே வேளையில் நாம் கர்த்தரோடும் ஐக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தரோடு ஐக்கியமாகயிருப்பதையும், ஜெபிப்பதையும், அவரைத் துதிப்பதையும் அசட்டைபண்ணிவிடக்கூடாது. "தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் கர்த்தரைத் துதிப்பதை மற்ற விசுவாசிகள் கேட்கிறார்கள். நம்முடைய துதியின் சத்தத்தை மற்ற விசுவாசிகள் ஆர்வமாய்க் கேட்கும்போது, நம்முடைய கர்த்தரும் அந்த சத்தத்தைக் கேட்கவேண்டுமென்று விரும்புகிறார். "நானும் அதைக் கேட்கட்டும்" என்று சொல்லுகிறார். நம்முடைய ஜெபத்தின் விண்ணப்பங்களை கர்த்தர் கேட்கவேண்டும். நாம் போராடி ஜெபிப்பதையும், ஜெபத்தில் உறுதியாய் தரித்திருப்பதையும் கர்த்தர் பார்க்கவேண்டும். கர்த்தர் கேட்கவேண்டும்.

என் நேசரே
உன் 8:14

உன் 8:14. என் நேசரே! தீவிரியும், கந்தவர்க்கங்களின் மலைகள்மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்.

மணவாளன் தன்னிடத்திற்கு சீக்கிரமாய்த் திரும்பிவரவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள். "என் நேசரே, தீவிரியும்" என்று சொல்லுகிறாள். மணவாளன் தன்னிடத்தில் திரும்பி வரவேண்டுமென்றும், மணவாளன் தன்னை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் மணவாட்டி விரும்புகிறாள். கந்தவர்க்கங்களின் மலைகள் மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும் என்று மணவாட்டி மணவாளனைப்பற்றிச் சொல்லுகிறாள். மணவாட்டியைப்போலவே நாமும், "எங்கள் கர்த்தராகிய இயேசுவே, வாரும், சீக்கிரமாய் வாரும்" என்று சொல்லவேண்டும். மெய்யான விசுவாசிகள் கர்த்தருடைய நாள் சீக்கிரத்தில் வரவேண்டுமென்று விரும்புவார்கள்.

மணவாளன் இதுவரையிலும் மணவாட்டியோடு கூடயிருந்தார். இருவருக்கும் இடையே நெருங்கிய ஐக்கியமுண்டாயிருந்தது. இப்போது மணவாளன் தம்முடைய மணவாட்டியை விட்டு சிறிதுகாலம் பிரிந்து போகப்போகிறார். அவர்கள் இருவரும் பிரிந்தாலும், அவர்களுக்கு இடையேயுள்ள நேசவைராக்கியம் குறையவில்லை. பிரிவினால் வருத்தமுண்டாகிறது. ஆனாலும் தங்களுடைய நேசவைராக்கியத்தை நினைத்து அவர்களுக்கு சந்தோஷமுண்டாகிறது. வருங்காலத்தில் மணவாளனோடுள்ள தன்னுடைய ஐக்கியம் பூரணமாயிருக்கவேண்டுமென்று மணவாட்டி விரும்புகிறாள். ஐக்கியம் பூரணமாயிருந்தால் தான் சந்தோஷம் பூரணமாயிருக்கும். மணவாளனோடு கூடயிருப்பதுதான் மணவாட்டிக்கு சந்தோஷம். ஆகையினால் மணவாட்டி மணவாளனிடம் "என் நேசரே, தீவிரியும்" என்று சொல்லுகிறாள்.

தேவனுடைய மகிமை வெளிப்படுவதற்காக விசுவாசிகளாகிய நாம் காத்திருக்கிறோம். அதைக் காண வேண்டுமென்று நாம் பணிவான பெருமூச்சுகளை வெளியிடுகிறோம். நம்முடைய கர்த்தரை நாம் மறுபடியும் சந்திப்போம் என்னும் விசுவாசம் நமக்கு உண்டு. நம்முடைய விசுவாசத்தில் நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது.

BELLWETHER INTERNATIONAL

உன்னதப்பாட்டு - விரிவுரை
SONG OF SOLOMON - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

பரிசுத்தமான ஒய்வுநாளில் சபையாராகிய நாம் ஒன்றுகூடி வந்து கர்த்தரைத் துதிக்கிறோம். சபை கூடிவருகிற ஒய்வுநாளில், நம்முடைய நித்திய ஒய்வுநாளை நினைவுகூரவேண்டும். அந்த ஒய்வுநாளுக்கு முடிவு இருக்காது. இப்போது ஒவ்வொரு வாரமும் ஒய்வுநாள் வருவதுபோல, நித்திய ஒய்வுநாள் ஒவ்வொரு வாரமும் வராது. எல்லா நாளுமே ஒய்வுநாளாகயிருக்கும். எல்லா நாளும், நாம் கர்த்தருடைய சமுகத்தில், அவரை நன்றியோடு துதிக்கும் நாளாகயிருக்கும். நம்முடைய ஸ்தோத்திரங்களையும் துதிகளையும் எப்போதும் ஏறெடுக்கிற நாளாகயிருக்கும். அந்த நாளை நாம் ஆவலாய் நோக்கிப் பார்க்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய சபைக்கு இரண்டு நியமங்களைக் கொடுத்திருக்கிறார். ஒன்று கர்த்தருடைய பந்தி. மற்றொன்று தண்ணீர் ஞானஸ்நானம். நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போது, மகாநாளின் விருந்தைக் குறித்து தியானிக்கவேண்டும். அந்தப் பரிசுத்த நாளிலே, நாம் கர்த்தருடைய ராஜ்யத்தில், அவரோடு கூட அமர்ந்து, அவர் கொடுக்கும் விருந்தில் பங்குபெறுவோம். அது நமக்கு நித்திய விருந்தாகயிருக்கும்.

இந்தப் பிரபஞ்சத்தில் நம்முடைய சபைகளில் நடைபெறுகிற பரிசுத்த ஆராதனைகளெல்லாம், பரலோகத்தின் ஆராதனைக்கு ஒப்புமையாகயிருக்கிறது. நாம் இந்தப் பிரபஞ்சத்திலிருந்தாலும், பரலோகத்தின் ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.